தீண்டாதவனென்னும் தீட்டுக்காரனன்னத்தைச் சாப்பிட்டுக்கொண்டிருந்தால் அவன் பத்துநாள் தீட்டிருக்கவேண்டியது. அவனன்னத்தைச் சாப்பிடாமலும், அவன் வீட்டில் வாசஞ்செய்யாமலும் இருக்கிற பிணந்தூக்கினவனுக்கு ஒருநாள் தீட்டுண்டு. (கஅ)

శ్లో॥ అనుగమ్యచ్చయాప్రేతం జ్ఞాతిమజ్ఞాతిమేవవా ।
స్నాత్వానచేలఃస్పృష్ట్వాగ్నిం ఘృతంప్రాశ్యవిశుద్ధ్యతి ॥

பங்காளியாயிருந்தாலும் இல்லாவிட்டாலும் வேணுமென்றே இறந்த பிணத்தைப் பின்தொடர்ந்து போனால், கட்டின வஸ்திரத்துடன் ஸ்நானஞ்செய்து நெருப்பைத் தொட்டு நெய்யைச் சாப்பிட்டால் சுத்தனுவான். (கஅக)

శ్లో॥ నవిప్రస్యేషులిష్యన్తు మృతంశూద్రేణనాయయేత్ ।
అస్వర్గ్యాహ్యేషలోకస్యాస్య మృచ్ఛూద్రంస్పర్శదూషితా ॥

பிராமணன் முதலானோர் இறந்தால் அந்தச்சாதியர் இருக்கும்போது சூத்திரனைக்கொண்டு அப்பிணத்தை எடுக்கச்சொல்லக்கூடாது. அப்படி யெடுத்து தகனஞ்செய்தால் இறந்தவனுக்குப் புண்ணியலோகம் வராமற்போகும். (கஅச)

శ్లో॥ జ్ఞానంతపోగ్నిరాహారోమన్మనోవార్యుపాంజనం ।
వాయుఃకర్మార్కకాలౌచశుద్ధేఃకర్తృణిదేహినాం ॥

ஞானம்-தவம்-அக்கினி-அசுசு முதலிய ஆகாரம்-மண்-மனது-தண்ணீர்-பெருக்குதல்-மெழுகுதல்-காற்று-யாகாதிகர்மம்-சூரியன்-காலம் இவைகளெல்லாம் மனிதர்களுக்குச் சுத்தியைக்கொடுப்பவைகள். (கஅஞ)

శ్లో॥ సర్వేషామేవశౌచానామర్థశౌచంపరంస్మృతం ।
యోర్థేశుచిర్హిసశుచిర్నమృద్వారివశుచిశ్శుచిః ॥

இந்தச் சுத்திகளெல்லாவற்றையும்விட பொருள் கல்லதாக விருக்கிறது உயர்ந்த சுத்தி. எவனுக்குப் பொருள் நியாயமாகச் சம்பாதிக்கப்பட்டிருக்கிறதோ அவன்முன் பரிசுத்தன். மண்ணும் ஜலத்தாலும் கழுவுகிறதினால் மாத்திரம் சுத்தனல்லன். ()

శ్లో॥ క్షాంత్యాశుద్ధ్యంతివిద్వాంసోదానేనాకార్యకారిణః ।
ప్రచ్ఛన్నపాపాజప్యేనతపసావేదవిత్తమాః ॥

வித்துவான்கள் பொறுமையினாலும், அதிர்த்தியஞ் செய்தவர்கள் கொடையினாலும், இரகசியமாகப் பாவஞ்செய்தவர்கள் செபஞ்செய்வதினாலும், வேதமோதினவர்கள் தவத்தினாலும் பரிசுத்தாளாகிறார்கள். (கஅஎ)

శ్లో॥ మృత్తోయైశుద్ధ్యతేశోధ్యంనదీవేగేనశుద్ధ్యతి ।
రజసాస్త్రీమనోదుష్టాసన్న్యాసేనద్విజోత్తమః ॥

அசுத்தமான அங்கங்களெல்லாம் மண் - ஜலம் முதலியவற்றால் கழுவுகிறதினாலும், நதி-ஓட்டத்தினாலும், மானசவியபசாரமுள்ள ஸ்திரீ-தூமையினாலும், பிராமணர்கள் சந்நியாசத்தினாலும் சுத்தாளாகிறார்கள். (கஅஅ)

శ్లో॥ ఆద్భిర్గాత్రాణిశుద్ధ్యంతిమనస్సత్యేనశుద్ధ్యతి ।
విద్యాతపోభ్యాంభూతాత్మాబుద్ధిర్జ్ఞానేనశుద్ధ్యతి ॥

சரீரம்-ஜலத்தினாலும், மனம்-சத்தியத்தினாலும், ஜீவாத்மா-பிரம்மவித்தையை அப்பியசிக்கிறதினாலும், தவஞ் செய்கிறதினாலும், புத்தி-யதார்த்தக்கியானத்தினாலும் சுத்தியடைகிறது. ()

లోకశుద్ధి.

శ్లో॥ ఏషశౌచస్యవఃప్రోక్తఃశారీరస్యవినిర్ణయః ।
నానావిధానాంద్రవ్యాణాంశుద్ధేశ్శృణుతనిర్ణయమ్ ॥

இதுவரையில் உங்களுக்குச் சரீரசம்பந்தமான தீட்டைச் சொன்னேன்; இனிப் பலவித திரவியசுத்தியைச் சொல்லுகிறேன் கேளுங்கள். (கக0)

శ్లో॥ తైజసానామణీనాంచపర్వస్యాశ్మమయస్యచ ।
భస్మనాదిభిర్మృదాచైవశుద్ధిరుక్తాయథాస్థితిః ॥

காந்தியுள்ள தங்கப்பாத்திரம்-சகலாத்தினம் இவைகளுக்குச் சாம்பல் - ஜலம் - மண் இவைகளால் சுத்திசெய்யவேணுமென்று பெரியோர்கள் சொல்லுகிறார்கள். (கக்க)

ஸ்லோ॥ நிர்லேபகாஞ்சனம்பாண்டமத்பிர்சைவவிசுத்யதி ।
அப்ஜமுன்மயஞ்சைவ ராஜதஞ்சானுபஸ்கிருதம் ॥

சித்திரவேலை செய்யப்படாத தங்கப்பாத்திரம், வெள்ளிப் பாத்திரம், ஜலத்திலுண்டாகின்ற சங்கம், இரத்தினம் இவைகள் அழுக்கில்லாமலும், நெய்முதலிய வழுவழுப்பில்லாமலும் இருந்தால் அவைகளுக்கு ஜலத்திலேயே சுத்தியுண்டாகிறது. (கக்உ)

ஸ்லோ॥ ஆபாமக்னேச்சஸம்யோகாத்தேமரூப்யஞ்சநிர்மலம் ।
தஸ்மாத்தயோஸ்த்வயோன்யைவ நிர்ணேகோகுணவத்தரः ।

தங்கம்-வெள்ளி இவைகள், அக்கினி-ஜலம் இவைகள்சேர்ந்துண்டாகிறபடியால் அவைகளுக்கு ஜலத்தினாற் கழுவி ஒருப்பிற் காய்ச்சினால் உயர்ந்த சுத்தியுண்டாகிறது. (கக்ஙு)

ஸ்லோ॥ தாம்ரயஃகாம்ஸ்யரைத்யானாம்த்ரபுணஸ்ஸீஸகஸ்யச ॥
சாசமயதாஹ்யங்கர்த்தவ்யம் க்ஷாராம்லோதகவாரிபிः ॥

செம்பு-இரும்பு-வெண்கலம்-பித்தளை-தராய்-ஈயம் இவைகள் பாத்திரங்களுக்கு உப்பு-புளித்தண்ணீர்-சாம்பல்-சாணம்-சுத்த ஜலம் இவைகளால் அதற்குத் தக்கபடி சுத்திசெய்ய வேண்டியது. (கக்ச)

ஸ்லோ॥ த்ரவாணாம்சைவசர்வேஷாம் சுத்திருத்ப்லவனம்ஸ்மृதம் ।
ப்ரோக்ஷணம்ஸம்ஹதானாம்ச தாருவாணாம்சதக்ஷணம் ।

நெய் - எண்ணெய் இவைகள் காக்கை முதலானவைகளால் தொடப்பட்டால் இரண்டு கர்ப்பையினால் ஒருதரம் அப்பாலெடுத்துவிட்டால் சுத்தியாம். (கக்டு)

ஸ்லோ॥ மார்ஜனம்யஜ்ஞபாத்ராணாம் பாணினாயஜ்ஞகர்மணி ।
சமஸானாம்ச்ருவாணாம்ச சுத்திஃப்ரோக்ஷணேனது ॥

படிக்கை அசுத்தப்பட்டால் ஜலப்புரோக்ஷணத்தினாலும், மரப்பாத்திரம் சிவுதிறதினாலும், எக்கியபாத்திரம் கையாற்றுடைத்து ஜலத்தினால் எலம்புகிறதினாலும், விடு பெருக்கி மெழுகுகிறதினாலும் சுத்தியடைகிறது. (கக்கூ)

ஸ்லோ॥ சரூணாம்ப்ரும்ஸ்ருவாணாம்ச சுத்திருண்ணேனவாரிணா ।
ஸ்ருக்கபர்ஸகடானாம்ச முஸலோலூகலஸ்யச ॥

நெய் ஹோமஞ்செய்கிற சருக்கு-சுருவம் இவைகளை வெக்நீராலும், யூபஸ்தம்பம் - முறம் - பண்டி - உலக்கை - உரல் இவைகளைத் தண்ணீரினாலும் சுத்திசெய்யவேண்டியது. (கக்எ)

ஸ்லோ॥ அத்பிஸ்துப்ரோக்ஷணம்சைவம்பஹூனாம்தான்யவாஸஸாம் ।
ப்ரக்ஷாளனேனத்வல்பானாமத்பிர்சைவாசமவிதீயதே ॥

ஓராள்சுமைக்கு மேற்பட்ட நெல்-சோமன் மூட்டை இவைகள் அசுத்தப்பட்டால் ஜலப்புரோக்ஷணத்தினாலும், அதற்குக் குறைவான தானியம்-கழுவுதலினாலும் சுத்தியடைகின்றது. ()

ஸ்லோ॥ சேலவச்சர்மணாம்சுத்திர்க்ஷௌமவஸ்த்ரபலானாம்சதைவச ।
சாகமூலபலானாம்சபான்யவச்சுத்திருச்யதே ॥

மான்தோல்-புலித்தோல்-மரவுரி இவைகளை வஸ்திரத்தைப் போலவும், காய்-கிழங்கு-பழம் இவைகளை தானியத்தைப்போலவும் சுத்திசெய்யவேண்டியது. (கக்கூ)

ஸ்லோ॥ க்ஷாரேணாம்லிகயோர்மூத்ரைः குதபானாமரிஷ்டகைः ।
ச்ரீஃபலைரம்லபட்டானாம்க்ஷௌமாணாம்கௌரசர்ஷபைः ॥

புழுவினாலுண்டாக்கப்பட்ட பட்டுகள், ஆட்டுமயிரில் உண்டாக்கப்பட்ட கம்பளம் இவைகளை உழமண்ணினாலும், கோவாலத்தை கம்பளத்தை-வேப்பங்கொட்டையினாலும், சாதுவைவில்வப்பழத்தினாலும், வெண்பட்டை-வெண்கடுகினாலும் சுத்திசெய்யவேண்டியது. (கஉ0)

ஸ்லோ॥ க்ஷௌமவச்சங்கஶ்ருங்காணாமஸ்திதந்தமயஸ்யச ।
சுத்திர்விஜ்ஞாதாகார்யாமோத்ரேணோதகேனவா ॥

சங்கம்-தந்தம்-மான் முதலியவற்றின் கொம்பு இவைகளை வெண்கடுகுப் பொடியினாலும், கோமூத்திரம்-ஜலம் இவைகளாலும் சுத்திசெய்யவேண்டியது. (கஉக)

ஸ்லோ॥ ப்ரோக்ஷணாத்தृணகாஷ்டம்சபலாலம்சைனசுத்தியதி ।
மார்ஜனோபாஞ்சனைர்க்ஷ்வபுனஃபாகேனவாஸ்மயம் ॥

அசுத்தப்பட்ட விறகு-புல்-வைக்கோல் இவைகளை ஜலப்புரோக்ஷணத்தினாலும், வீட்டை-விளக்கி மெழுகுவதினாலும், மண்

மநுதர்மசாத்திரம்

பாத்திரங்களை மறுபடி சூளை போலெதினாலும் சுத்தி செய்யவே
ண்டியது. (கஉஉ)

ஸ்லோ॥ மத்ஸ்யைர்மூலைர்புரீஷை ர்வாஸ்தீவ நைஃபூயஶோணிதை:।
ஸம்ஸ்ருஷ்டம்ஸ்தைவ ஶுத்த்யேத புன:பாகேநவ்ருந்மயம்।

கள் - மூத்திரம் - மலம் - கோழை - சேதசு-சுவர்நீர்-இரத்தம்
இவைகளின் சம்பந்தத்தா லசுத்தமான மண்பாத்திரங்கள் மறு
படி சூளைபோடினும் பரிசுத்தமாகமாட்டாது. (கஉங)

ஸ்லோ॥ ஸம்மார்ஜநோபாஜநே நஸேகோல்லேக நேநச।
கூபாம்பரிவாஸேநபூமி ஶுத்த்யதிபஞ்சபி:॥

வீடு முதலானவற்றிற்குச் சண்டாளாதிகளால் அசுத்தம்
கேரிட்டபோது விளக்குதல்-மெழுகுதல்-கோமூத்திரந் தெளித்
தல்-கொஞ்ச மேல்மண்ணை யெடுத் தப்பாற் போடுதல்-பசுமாட
டை யொருநாள் வசிக்கும்படி செய்தல் இவ்வைந்தினாலும் அந்
தப் பூமி பரிசுத்தப்படுகிறது. (கஉச)

ஸ்லோ॥ பக்ஷிஜக்ஷ்கவாக்ராத மவக்ஷூதமமேத்யகம்।
தூஷிதம்கேஶகீடைஶ்சயுக்த்வா ஹோமேநஶுத்த்யதி॥

பக்ஷியினாலும்-பசுவினாலும் மோப்பப்படும், காகத்தால் மிதி
க்கப்பட்டும், தும்மின எச்சல்-மயிர்-புழு இவைகளினால் சம்பந்தப்
பட்டும் இருக்கிற அன்னம் மண்ணைக் கிளறி அதன்மேற் போடு
வதினால் சுத்தியடைகின்றது. (கஉரி)

ஸ்லோ॥ யாவந்நாபைத்யமேத்யாக்தந்தோஷோபஶ்சதத்க்ருத:।
தாவந்மृத்வாரிசாதேயம் ஸர்வாஸுத்ரவ்யஶுத்திஷு॥

அமேத்திய சம்பந்தப்பட்ட வஸ்துக்களை, அந்த அமேத்தி
யம், அகனுற்றம் இவைகள் போகிறவரையில் மண்போட்டு ஜல
த்தினாற் சுத்திசெய்யவேண்டியது. எந்தெந்தவிடத்தில் மண்ணி
னால் சுத்திசொல்லப்பட்டிருக்கிறதோ அந்தந்தவிடத்தில் ஜலமு
ங்கூட விட்டுச் சுத்திசெய்யவேண்டியது. (கஉக)

ஸ்லோ॥ த்ரீணிதேவ:பவித்ராணி ப்ராஹ்மணாநாமகல்பயத்।
அத்ருஶ்யமத்ருஶ்யாநாம் யச்சவாசாப்ரஶஸ்யதே॥

ஒருவிதத்தினாலும் கண்ணுக்குத் தெரியாதிருந்த பதார்த்
தம், அலம்பப்பட்டபதார்த்தம், பிராமணனால் பரிசுத்தமானதை

ன்று சொல்லப்பட்ட பதார்த்தம் இந்த மூன்றும் பிராமணர்களு
க்குப் பரிசுத்தமானவையென்று தேவர்கள் விதித்திருக்கிறார்கள்.

ஸ்லோ॥ அபஶ்யத்பூமிகதா பைர்மேக்யாஸுகோர்ஜிதம்।
அவ்யாப்தாஶ்சைவமேத்யேந கந்தவர்ணரஸாந்விதா:॥

மேகத்தினால் பூமியில் வருஷிக்கப்பட்டும், பசுமாடு குடிப்ப
தால் குறைவுபடாததாயுமிருக்கிற ஜலம் பரிசுத்தமானது. அது
வும் அமேத்திய சம்பந்தமில்லாமலும், வாசனை-நிறம்-ருசி இவை
களோடுகூடி இருக்கவேண்டியது. (கஉஅ)

ஸ்லோ॥ நித்யம்ஶுத்தகாருஹஸ்தாபணியம்யச்சப்ரஸாரிதம்।
ப்ரஹ்மசாரிகதம்சைவ நித்யம்மேத்யமிதிஸ்திதி:॥

தேவர்களுக்குப் பத்தியினால் புஷ்பங் கட்டுகிறவன், விற்ப
னைக்காகக் கடையில் பரப்பப்பட்ட வஸ்துக்கள், பிரமசாரிவாங்
கின பிக்ஷான்னம் இவைகள் எப்போதுஞ் சுத்தமுள்ளனவென்று
சாஸ்திரத்திற் சொல்லப்பட்டிருக்கின்றன. (கஉக)

ஸ்லோ॥ நித்யமாஸ்யம்ஶுசிஸ்த்ரீணாம்ஶகுநீ:஫லபாதநே।
ப்ரஸ்ரவேசஶுசிர்வத்ஸ:ஶ்வாம்ருகக்ரஹணேஶுசி:॥

ஸ்திரீகளின் முகம், காக்கைகள் முதலான பக்ஷிகளால் தள்
ளப்பட்ட பழம், பால் சுரக்கச்செய்யும் விஷயத்தில் ஊட்டுகிற
கன்றின் வாய், வேட்டை பிடிக்கிற விஷயத்தில் நாயின் வாய்
இவைகள் சுபாவத்திலேயே சுத்தியுள்ளன. (கஉ0)

ஸ்லோ॥ ஶ்வபிஹதஸ்யயந்தாஸம்ஶுசிதன்நுநரப்ரவீத்।
க்ரவ்யாதிஶ்சவகஸ்யாஸ்யைஶ்சண்டாலாத்யைஶ்சதஸ்யுபி:॥

வேட்டைநாய்-புலி-இராக்கதர்-சண்டாளர்-மாம்ஸவிற்பனை
செய்கிற வேட்டைக்காரன் - திருடன் இவர்களால் கொல்லப்ப
ட்ட மிருகத்தின் மாம்ஸத்தைப் பரிசுத்தமென்று மநு சொல்லி
யிருக்கிறார். (கஉக)

ஸ்லோ॥ ஊர்த்வம்நாபேர்மேத்யாநிவாநிதாநீமேத்யாநிசர்வஶ:।
யாந்யதஶ்சாந்யமேத்யாநி தேஹாச்சைவமலாஶ்சயா:॥

தொப்புளுக்கு மேற்பட்ட மனித விந்திரியங்கள் பரிசுத்த
மானது. அதற்குத் தாழ்ந்த விந்திரியங்களும், அதினின்றுமுண்
டான மலங்களும் அசுத்தமானவைகள். (கஉஉ)

ஜலபாதை மலபாதைக்குப்போய்ச் சுத்திபண்ணிக்கொண்ட பின்பும், வேதமோதும்போதும், அன்னம் புசிக்கும்போதும், மூன்றுதரம் ஆசமனஞ்செய்து கண்முதலிய இந்திரியங்களைத் துடைக்கவேண்டியது. (கசுஅ)

ஸ்லோ॥ த்ரிராசாமேதபஃபூர்வம் த்விஃப்ரமுஜ்ஜ்யாத்ததோமுகம் ।
சாரீரம்சௌசமிச்சத்ஃபிஸ்த்ரீசூத்ரஸ்துசகிருத்ஸகிருத் ॥

தேக பரிசுத்தத்தைக் கோருகிறவன் ஜலத்தை மூன்றுதரம் ஆசமனமந்திரத்துடன் சாப்பிட்டு, இரண்டுதரம் வாயைத்துடைக்கவேண்டியது. ஸ்திரீ சூத்திரன் ஒருதரம் துடைக்கவேண்டியது. (கசுக)

ஸ்லோ॥ சூத்ராணாமாஸிகம்கார்ய்யம்வபனம்ந்யாயவர்த்தினாம் ।
வைச்யவச்சோச்சகல்பஶ்சத்விஜோச்சிஷ்டம்சபோஜனம் ।

விதிப்படி பிராமணனுக்குப் பணிவிடைசெய்கிற சூத்திரன் மாதத்திலொருதரம் க்ஷவரஞ்செய்துகொள்ளவேண்டியது. வைசியனுக்குச் சொல்லியபடி பிறப்பிறப்புத் தீட்டிருக்க வேண்டியது. த்விஜாதிகளின் சேஷத்தைச் சாப்பிடவேண்டியது. (கச0)

ஸ்லோ॥ நோச்சிஷ்டம்குர்வீதமுகாத்பிப்ருஷாம்சோபதந்தியாஃ ।
நச்ரோணிகதான்யாந்யஸ்யனதம்தாம்பரதிஷ்டிதம் ॥

வாயிலிருந்து தேகத்தில்விழுந்த ஜலத்திவலை, வாயிற்பட்ட மீசை, இரண்டுபல்வரிசையிலொட்டப்பட்டவை இவைகளுக்கு எச்சலில்லையென்று பெரியோர்கள் சொல்லுகிறார்கள். (கசஉ)

ஸ்லோ॥ ஸ்ப்ருசேன்னிந்தவஃபாதாயஆசாமயதஃபரான் ।
பூமிகைஸ்தேசமாஜ்ஞேயானதைரப்ரயதோபவேத் ॥

ஒருவன் ஆசமனஞ்செய்த ஜலத்திவலை மற்றொருவன் முழங்காலிற்குக் கீழ்ப்பட்ட காலில் பட்டால் அது பரிசுத்தபூமியிலிருக்குஞ் ஜலத்திற்குச் சரியாகையால், அதனால் அபரிசுத்த மாட்டான். (கச2)

ஸ்லோ॥ உச்சிஷ்டேனதுசம்ஸ்ப்ருஷ்டோத்ரவ்யஹஸ்தஃகதஞ்சன ।
ஆநிதாமேவதத்த்ரவ்யமாசாம்தத்புசிதாமியாத் ॥

ஒரு பொருளைக் கையில் வைத்திருக்கும்போது தன்மேனியில் எச்சில் சம்பந்த முண்டானால் அதைக் கீழே வையாமலே ஆசமனஞ்செய்தால் அந்தப்பொருளுடன் பரிசுத்தனாகிறான். ()

ஸ்லோ॥ மக்ஷிகாவிப்ருஷச்சாயாகோரச்வாஹ்ன்யுரச்ரயஃ ।
ரஜோதூர்வாயரக்நிச்சஸ்ருக்மேத்யான்யநிர்திசேத் ॥

ஈ-ஜலத்திவலை-நிழல்-பசு-குதிரை-சூரிய காந்தி-தூளி-பூமி-காற்று - நெருப்பு இவைகள் மேலே படுகிறதினால் அசுத்தமுண்டாகமாட்டாது. (கசுக)

ஸ்லோ॥ விண்மூத்ரோத்ஸர்கசுத்ய்ர்த்தம்ம் த்வார்யாதேயமர்தவத் ।
தைஹிகானாம்மலானாம்ச சுத்திமத்வாதசச்வபி ॥

தேகத்திலுண்டான மேற்சொல்லப்போகிற பன்னிரண்டு மலங்களையும் ஜலம், மண் இவைகளினால் விதிப்படி அந்தந்தகாற்றம் போகிறவரையில் சுத்திசெய்யவேண்டியது. (கசுச)

ஸ்லோ॥ வஸாசுக்ரமஸ்ருட்மூத்ரஜ்ஜாமத்ர ஏட்கர்ணவிண்முகாஃ ।
ஸ்வேத்ஸ்த்ரோதூஷிகாஸ்வேதோ த்வாதசைதேனராணாம்மலாஃ ॥

சலர்த்தண்ணீர்-ரோகசு-இரத்தம்-சுண்டு-மூத்திரம்-மலம்-காதுகுரும்பி-நகம்-அழுக்கு-கண்ணீர்-மூக்கு-வியர்வு ஆக தேகமலங்கள் பன்னிரண்டு. (கசுடி)

ஸ்லோ॥ ஏகாலிங்கேகுதேத்ரஸ்ருத்திக்த்ரகரகேவச ।
உபயோஸ்ஸப்ததாத வ்யாம்ருத்சுத்திமபீப்ஸதா ॥

மலமூத்திர விசர்ச்சனஞ் செய்தபின்பு நெல்லிக்காய்ப் பிரமாணமுள்ள மண்ணை ஆண்குயியில் ஒருமுறையும், ஆசனத்தில மூன்றுமுறையும், இடதுகைக்கு பத்துமுறையும், இரண்டு கைகளையுஞ் சேர்த்து ஏழு முறையு மிட்டு ஜலத்தினால் சுத்திசெய்யவேண்டியது. (கசுசு)

ஸ்லோ॥ ஏதச்சௌசம்க்ருஹஸ்தானாம் த்விகுணம்ப்ரஹ்மசாரிணாம் ।
த்ரிகுணம்ஸ்யாத்வனஸ்தானாம் யதீனாம்சதுர்குணம் ॥

மேற்சொல்லிய சௌசம் கிரகஸ்தாஸ்ருக்கும் பிரமசாரிகளுக்கும் இதற்கு யிரட்டிப்பாகவும், வானப்பிரஸ்தாஸ்ருக்கு முன்று பங்காகவும், சன்னியாசிகளுக்கு நான்கு பங்காகவும் அறியவேண்டியது. (கசுள)

ஸ்லோ॥ க்ருத்வாமூத்ரம்புரீஷம் வாஸ்நாத்வாசாம்தஉபஸ்ப்ருசேத் ।
வேதமேத்வ்யஹுவாம்ஸ்சு ஆஸ்ரமம்ஸ்சம்ஸ்ருசேத்வா ।

శ్లో॥ వాంతోవిరిక్తఃస్నాత్వాతుభుక్త్వాప్రాశనమాచరేత్ ॥
ఆచామేదభుక్త్వాన్నం స్నానంమైథునినఃస్మృతం ॥

சாப்பிடுகிறதற்குமுன் வாந்தி செய்தால் ஸ்நானஞ் செய்து நெய் சாப்பிடவேண்டியது. சாப்பிட்டபின் வாந்திசெய்தால் ஆசமனஞ் செய்யவேண்டியது. மைதுனஞ் செய்தவன் ஸ்நானஞ் செய்யவேண்டியது. (கசச)

శ్లో॥ సుస్నాత్వాతుభుక్త్వాచక్షుక్త్వాచ నిష్ఠీవ్యోక్త్వానృతానిచ ।
పీత్వాపాద్యేస్యచమాంశ్చ ఆచామేత్త్రయతోపినఇ ॥

தூங்கினபின்பும், இருமினபின்பும், சாப்பிட்டபின்பும், காறியுமிழ்ந்தபின்பும், ஒரு காரணத்தைப்பற்றிப் பொய்சொன்னபின்பும், தீர்த்தஞ் சாப்பிட்டபின்பும், வேதம் ஓதப்போகிறபோதும் தான் பரிசுத்தனாகவிருந்தாலும் அந்தக் காலத்தில் ஆசமனஞ்செய்யவேண்டியது. (கசஞ)

శ్లో॥ ఏషశౌచవిధిఃకృత్స్నోద్రవ్యశుద్ధిస్తథైవచ ।
ఉక్తోవస్సర్వవర్ణానాంస్త్రీణాంధర్మాన్నిబోధత ॥

இதுவரையில் சகலமான சவுசவிதியும், திரவியசுத்தியும், எல்லா வருணத்தாருக்குஞ் சொல்லப்பட்டன. இனி ஸ்திரீகள் தருமத்தைக் கேளுங்கள். (கசட)

மாதரொழுக்கம்.

శ్లో॥ బాలయావాయువత్యావావృద్ధయావాపియోషిత ॥
నస్వాతంత్ర్యేణకర్తవ్యంకించిత్కార్యంగృహేష్వపి ॥

பாலியமாகவிருந்தாலும், யௌவனமாகவிருந்தாலும், வார்த்திபமாகவிருந்தாலும், ஸ்திரீகள் தன்றன்வீடுகளிலும் தன்மனம் போனபடி ஒரு காரியத்தையுஞ் செய்யக்கூடாது. (கசள)

శ్లో॥ బాల్యేపితుర్వశేతిష్ఠేత్పాణిగ్రాహస్యయౌవనే ।
పుత్రాణాంభర్తరిప్రేతేనభజేత్ స్త్రీస్వతంత్రతాం ॥

பாலியத்தில் தகப்பன் ஆஞ்ஞையிலும், யௌவனத்தில் கணவன் ஆஞ்ஞையிலும், கணவனிறந்தபின் பிள்ளைகள் ஆஞ்ஞை

பிலும், இருக்கவேண்டியதேயல்லது ஸ்திரீகள் தன்சுவாதீனமாக வொருபோது மிருக்கக்கூடாது. (கசஅ)

శ్లో॥ పిత్రాభర్త్రాసుతైర్వాపినేచ్ఛేద్విరహమాత్మనః ।
ఏషాంహివిరహేణస్త్రీగర్హ్యేకుర్యాదుభేకులే ॥

தகப்பன், கணவன், பிள்ளைகள் இவர்களில்லாமல் தான்மாத்திரந் தனியா யிருக்கவேண்டுமென்று ஒருபோதும் நினைக்கக்கூடாது. அவர்களில்லாமல் சுதந்திரியா யிருந்தால் பிறந்த குலம் புகுந்தகுலம் இரண்டையும் நிந்திக்கும்படி செய்துவிடுவாள்.

శ్లో॥ సదాప్రహృష్టయాభావ్యంగృహకార్యేషుదక్షయా ।
సుసంస్కృతోపస్కరయావ్యయేచాముక్తహస్తయా ॥

எப்போதும் தன்வீட்டுக் காரியத்தில் சமர்த்தையாயும், சந்தோஷமுள்ளவளாயும், வீட்டிலிருக்கிற வஸ்துக்களைப்பரிசுத்தப் படுத்துகிறவளாயும், அதிகச்செலவில் மனமில்லாதவளாயும் இருக்கவேண்டியது. (கஞ0)

శ్లో॥ యస్యైదత్యాపిత్వేనాభ్రాతావానుమతేపితుః ।
తంశుశ్రూషేతజీవంతంసంస్థితంచనలంఘయేత్ ॥

தகப்பன் அல்லது கூடப்பிறந்தவன் இவர்கள் இவளையாருக்கு விவாகஞ்செய்து கொடுக்கிறார்களோ, அவன் ஜீவிக்கிறவரையில் அவனுக்குப் பணிவிடை செய்யவேண்டியது. அவனிறந்தபின்னும் வியபசாரஞ்செய்யாமல் அவனுக்குச்சிரார்த்தமுதலிய வற்றைச் செய்துகொண்டிருக்க வேண்டியது. (கஞக)

శ్లో॥ మంగళార్థంస్వస్త్యయనంయజ్ఞశ్చాసాంప్రజాపతేః।
ప్రయుజ్యతేవివాహేషుప్రదానంస్వామ్యకారణమ్ ॥

ஸ்திரீகளுக்கு விவாககாலத்தில் சாந்திஹோமம், பிராஜாபத்தியஹோமம், இவைகளெல்லாம் இஷ்டசித்தியின் பொருட்டுச் செய்யப்படுகின்றன. நிச்சயதார்த்தத்தில் செய்யும்வாக்குத்தானமே கணவன் யஜமானனென்பதைக் காண்பிக்கின்றது. ()

శ్లో॥ అనృతావృతుకాలేచమంత్రసంస్కారకృత్పతిః ।
సుఖస్యనిత్యందాతేహపరలోకేచయోషితః ॥

ருதுகாலத்திலும், மற்றக்காலத்திலும், விதிப்படிவிவாகஞ் செய்த பர்த்தாவானவன், மாதர்களுக்கு இம்மையில் சுகத்தைக் கொடுக்கிறான். விதிப்படி அவனை யுபசரித்தால் மறுமையிலுஞ் சுகமுண்டாகிறது. (கருசு)

ஸ்லோ॥ விசீலஃகாமவ்ருத்தோவாகுணைர்வாபரிவர்ஜிதஃ ।
உபசர்யஃஸ்த்ரியாஸாத்வ்யாஸததம்தேவவத்பதிஃ ॥

கணவன் துராசார முள்ளவனாக விருந்தாலும், அன்னியஸ்திரீலோலனா யிருந்தாலும், நற்குணமில்லாதவனா யிருந்தாலும் பதிவிரதையானவள் அவனைத் தெய்வத்தைப்போற் பூசிக்க வேண்டியது. (கருச)

ஸ்லோ॥ நாஸ்திஸ்த்ரீணாம்பிருதக்யஜ்ஞோநவ்ரதம்நாப்யுபோஷிதம் ।
பதிம்சுஸ்ரூஷதேயேன தேனஸ்வர்கேமஹீயதே ॥

ஸ்திரீகளுக்குப் பஞ்சமஹாயஜ்ஞியம், உபவாசம், விரதம் இவைமுதலான தருமங்கள் கனியாகக்கிடையாது. கணவனுக்குச் சுசுரூஷை செய்வதினாலேயே சுவர்க்கத்திற் பெருமை பெறுகிறார்கள். (கருடு)

ஸ்லோ॥ ப்ராணிக்ராஹாஸ்யஸாத்வ்ஸ்த்ரீஜீவதோவாம்ருதஸ்யவா ।
பதிலோகமபீப்ஸந்தீநாசரேத்கிஞ்சிதப்ரியம் ॥

பரலோகத்தில் விருப்பமுள்ள ஸ்திரியானவள் தன்கணவனிருந்தாலும் இறந்தாலும் அவனுக்கு விரோதமான காரியத்தைச்செய்யக்கூடாது. (கருஎ)

ஸ்லோ॥ காமந்துக்ஷபயேத்தேஹம்புஷ்பமூலபலைஃசுபைஃ ।
நதுநாமாபிகிருஹ்ணீயாத்பத்ர்யேப்ரேதேபரஸ்யது ॥

கணவனிறந்தபின்பு பரிசுத்தமான இலுங்கு-பழம் - புஷ்பம் இப்போக்கொத்த சொற்ப ஆகாரத்தினால் காலத்தைப்போக்க வேண்டியது. காமவிச்சையால் மற்றொரு புருஷன்பேரையுஞ் சொல்லக்கூடாது. (கருஏ)

ஸ்லோ॥ ஆஸீதாமரணாத்க்ஷாந்தாநியதாப்ரஹ்மசாரிணீ ।
யோதர்மஏகபத்னீநாம் காங்க்ஷந்தீதமனுத்தமம் ॥

கணவனிறந்த பின்பு தானிருக்கிறவளாயில் பொறுமையுள்ளவளாயும், பரிசுத்தையாயும், பிரம்மசரியமான மூன்றவளாயும், மதுமாம்ஸபக்ஷணஞ் செய்யாதவளாயும், மேன்மை பதிவிரதையின் தருமத்தை விரும்புகிறவளாயும் இருக்கவேண்டியது. ()

ஸ்லோ॥ அனேகானிஸஹஸ்ராணி குமாரப்ரஹ்மசாரிணாம் ।
திவம்கதானிவிப்ராணா மகுத்வாகுலஸந்ததிம் ॥

அநேகங்கோடி மாதர்கள், பாலியத்திலும், பிரமசரியத்திலும், இறந்து புத்திரசந்ததியில்லாமலே சுவர்க்கமடைந்திருக்கிறார்கள். ஆதலாலிவளுக்குப் பிள்ளையில்லை யென்கிற வருத்தம் வேண்டியதில்லை. (கருக)

ஸ்லோ॥ ம்ருதேபர்தரிஸாத்வ்ஸ்த்ரீ ப்ரஹ்மசர்யவ்யவஸ்திதா ।
ஸ்வர்கங்கச்சத்யபுத்ராபி யதாதேப்ரஹ்மசாரிணஃ ॥

கணவனிறந்தபின் பிரமசரிய விரதமுள்ள பதிவிரதா ஸ்திரீயானவள் பிள்ளையில்லாம லிருந்தபோதிலும் பாலகில்லியர்-ஜனகாதி பிரமசாரிகளைப்போல மோக்ஷமடைவாள். (கரூ0)

ஸ்லோ॥ அபத்யலோபாத்யஃஸ்த்ரீ பர்தாரமதிவர்ததே ।
ஸேஹநிந்தாமவாப்நோதி பதிலோகாச்சஹீயதே ॥

எந்த ஸ்திரீயானவள் சுவர்க்கலோகமடைகிறதற்காகப் பிள்ளைவேண்டுமென்று கணவனிறந்தபின் மற்றொருவனைப் புணர்க்கி செய்கிறாளோ, அவள் இவ்வுலகத்தில் நிந்திக்கப்படுவாள். அப்படிப் பிறந்த பிள்ளையால் புண்ணியலோகத்தையுஞ் சேரமாட்டாள். (கரூக)

ஸ்லோ॥ நான்யோத்பன்னாப்ரஜாஸ்த்ரீஹனசான்யஸ்யபரிக்ரஹே ।
நத்விதீயஶ்சஸாத்வ்நாம்க்வசித்பர்தோபதிஶ்யதே ॥

ஸ்திரீக்கு தன் கணவனைவிட மற்றொருவனை யுண்டாக்கப்பட்ட பிள்ளையும் சாஸ்திரத்தி லொப்புக்கொள்ளப்பட்ட பிள்ளையன்று. உண்டு பண்ணுகிறவனுக்கும் உபயோகமில்லை. பதிவிரதாஸ்திரீகளுக்கு இரண்டாவது விவாகமும் ஒரு சாஸ்திரத்திலுஞ் சொல்லப்படவில்லை. (கரூஉ)

శ్లో॥ పతింహిత్వాపకృష్టంస్వముత్కృష్టంయానిషేవతే ।
నింద్యైవసాభవేల్లోకేపరపూర్వేతిచోచ్యతే ॥

தாழ்ந்தவனை தன் புருஷனை நீக்கி உயர்ந்தவனை மற்றொருவனை எந்த ஸ்திரீயடைகிறாளோ, அவள் நிந்திக்கப்படுவாள். மற்றொருவனோடு சேர்ந்தவளென்றும் சொல்லப்படுகிறாள். ஒருவராலும் கொண்டாடப்பட மாட்டாள். (கசுசு)

శ్లో॥ వ్యభిచారాత్తుభర్తుఃస్త్రీలోకే ప్రాప్నోతినింద్యతామ్ ।
సృగాలయోనింప్రాప్నోతి పాపరోగైశ్చపీడ్యతే ॥

ஸ்திரீ வியபசாரஞ் செய்கிறதினால் உலகத்தில் நிந்திக்கப்படுகிறது மல்லாமல், இறந்தபின் குள்ளநரியாகவும் பிறந்து வெண்குட்ட முதலிய கர்மவியாதியையும் அனுபவிக்கிறாள். (கசுச)

శ్లో॥ పతింయానాభిచరతి మనోవాగ్దేహసంయతా ।
సాభర్తృలోకమాప్నోతి సద్భిస్సాధ్వీతిచోచ్యతే ॥

எந்தஸ்திரீ மனம்-வாக்கு-தேகம் இவைகளை யடக்கிக்கொண்டு வியபசாரஞ் செய்யாமலிருக்கிறாளோ, அவள் பதிலோகத்தையு மடைவாள். பெரியோர்களால் பதிவிரதை யென்றுஞ்சொல்லப்படுவாள் (கசுஞ)

శ్లో॥ ఆనేననారీవృత్తేనమనో వాగ్దేహసంయతా ।
ఇహాగ్ర్యాంకీర్తిమాప్నోతి పతిలోకంపరత్రచ ॥

இப்போது சொல்லிவந்த விதிப்படி மனம்-வாக்கு - காயம் இவைகளால் பரிசுத்தையானவள் இம்மையிற் புகழையும் மறுமையிற் பதிலோகத்தையும் அடைகிறாள். (கசுசு)

శ్లో॥ ఏవంవృత్తాంసవర్ణాంస్త్రీం ద్విజాతిఃపూర్వమారిణీమ్ ।
దాహయేదగ్నిహోత్రేణ యజ్ఞపాత్రైశ్చధర్మవిత్ ॥

இவ்விதக் கடையுள்ளவளாயும், தன்ஜாதியாயுமிருக்கிற பத்தினிகள் முன்ன மிறந்துவிட்டால் அவர்களைத் துவிஜாதிகள் விதிப்படி வைதிகாக்கினியாலுலே தகனஞ்செய்து மற்றக்கருமங்களையுஞ் செய்யவேண்டியது. (கசுள)

శ్లో॥ భార్యామపూర్వమారిణీం దత్త్వాగ్నీనంత్యకర్మణి ।
పునర్దారక్రియాంకుర్యాత్పునరాధానమేవచ ॥

இந்தப்படி தனக்கு முன்னிறந்த ஸ்திரீக்கு வைதிகாக்கினியால் தகனஞ் செய்தால், மறுபடி மற்றொருபெண்ணைக் கலியாணஞ்செய்துகொண்டு, அக்கினிஹோத்திராதி காரியங்களை கடத்தவேண்டியது. (கசுஅ)

శ్లో॥ అనేనవిధినానిత్యంపంచయజ్ఞాన్నహాపయేత్ ।
ద్వితీయమాయుషోభాగంకృతదారోగృహేవసేత్ ॥

மனைவி யிறந்துபோனால் விதிப்படி இரண்டாவது கலியாணஞ் செய்துகொண்டு, தினந்தோறும் பஞ்சமஹா எக்கியங்களை நிறுத்தாமல், தன்வயதின் இரண்டாம் பாகத்தைக் கிரகஸ்தாசிரமத்தில் இருந்து போக்கடிக்கவேண்டியது. (கசுக)

ஐந்தாவது அத்தியாயம் - முற்றிற்று.
ஆக - அத்தியாயம் - டுக்கு - சுலோகம் - கo அசு.

சு - வது அத்தியாயம்.

வானப்பிரஸ்தாசிரம தருமம்.

శ్లో॥ ఏవంగృహాశ్రమేస్థిత్వావిధివత్స్నాతకోద్విజః ।
వనేవసేత్తునియతోయథావద్విజితేంద్రియః ॥

விரதானுஷ்டானமுள்ள துவிஜன் இந்தப்படி கிரகஸ்தாசிரமத்திலிருந்து பரிசுத்தனாய் இந்திரியங்களை யடக்கிக்கொண்டு வானப்பிரஸ்தாசிரமத்தை அடைந்து தபோவனத்தில் வசிக்கவேண்டியது. (க)

శ్లో॥ గృహస్థస్తుయదాపశ్యేద్వలీపలితమాత్మనః ।
అపత్యస్యైవచాపత్యంతదారణ్యంసమాశ్రయేత్ ॥

கிரகஸ்தன் தன்றேகத்தில் நரையையும், தன் பிள்ளைக்குப் பிள்ளையையும், எப்போது பார்ப்பானோ, அப்படிக்கொத்த வயதுவந்தபின்பு வானப்பிரஸ்தாசிரமத்தை யடையவேண்டியது.

மதுதர்மசாத்திரம்.

శ్లో॥ సంత్యజ్యగ్రామ్యమాహారంసర్వంచైవపరిచ్ఛదమ్ ।
వుత్తేషుభార్యాంనిక్షిప్యవనంగచ్ఛేత్సహైవవా ॥

ஊரிலுண்டான சகல ஆகாரங்கள்-போகங்கள்-வேலிக்காரர்கள், இவர்களை நீக்கிவிட்டு மனைவியைப் பிள்ளையினிடத்தொப்புவித்தாவது, அல்லது அவளுக்குக் கூடவர இஷ்டமிருந்தா லிட்டுக்கொண்டாவது, வனத்திற்குப் போகவேண்டியது. (ஈ)

శ్లో॥ అగ్నిహోత్రంసమాదాయ గృహ్యంచాగ్నిపరిచ్ఛదమ్ ।
గ్రామాదరణ్యంనిష్పృత్య నివసేన్నియతేంద్రియః ॥

அக்கினி ஹோத்திரத்தையும் சுருக்கு-சுருவமுதலிய ஹோமபாத்திரங்களையும் எடுத்துக்கொண்டு ஊரிலிருந்து வனத்திற் பிரவேசித்து ஜிதேந்திரியனாயிருக்க வேண்டியது. (உ)

శ్లో॥ మున్యన్నైర్వివిధైర్మేధ్యైశ్శాకమూలఫలేనవా ।
ఏతానేవమహాయజ్ఞాన్నిర్వపేద్విధిపూర్వకమ్ ॥

சாமியன்னம்-பலபலகாய்-கிழங்கு-பழம் இவைகளால் கிரகஸ்தாசிரமத்திற் சொல்லிய பஞ்ச மஹாவெக்கியங்களை விதிப்படிச் செய்யவேண்டியது. (ஊ)

శ్లో॥ వశీతచర్మనీరంవాసాయం స్నాయాత్ప్రతేతథా ।
జటాశ్చబిభృయాన్నిత్యం శ్మశ్రులోమనఖానిచ ॥

மான்றோல் முதலியவற்றையாவது மரவுரியையாவது தரிக்கவேண்டியது. காலையிலும் மாலையிலும் ஸ்நானஞ்செய்யவேண்டியது. சடை - மீசை - தாடி - நகம் இவைகளை வளர்க்கவேண்டியது. (ஈ)

శ్లో॥ యద్భక్ష్యంస్యాత్తతోదద్యా ద్బలింభిక్షాంచశక్తితః ।
అమ్మూలఫలభిక్షాభిరర్చయే ద్వాశ్రమాగతాన్ ॥

இவன் எதைச்சாப்பிடுகிறானே அதனாலேயே பலி-பிக்ஷை இவைகளைத் தன்சக்திக்குத்தக்கபடி கொடுக்கவேண்டியது. ஜலம்-கிழங்கு-பழம் இவைகளால் தன்னாசிரமத்துக்கு வந்தவர்களைப் பூசிக்கவேண்டியது. (எ)

శ్లో॥ స్వాధ్యాయేనిత్యయుక్తస్స్యా ద్దాంతోమైత్రస్సమాహితః ।
దాతానిత్యమనాదాతా సర్వభూతానుకంపకః ॥

எப்போதும் வேதமோதுவதில் சாக்கிரதை யுள்ளவனாயும், குளிர்-கானல் இப்படிக்கொத்த சுகதுக்கங்களைப் பொறுக்கிறவனாயும், சகல பிராணிகளுக்கும் இஷ்டனாயும், எப்போதுங் கொடுப்பவனாயுந், தான் வாங்காதவனாயும் இருக்கவேண்டியது. (அ)

శ్లో॥ వైతానికంచజుహుయాదగ్నిహోత్రయథావిధి ।
దర్శమస్యందయేత్పర్వ పౌర్ణమాసంచయోగతః ॥

அக்கிஹோத்திரம்-தரிசனம் - பௌர்ணமாசம் இவைகளை மனைவியின்றி வந்திருந்தபோதிலும் விடாமற் றன் சக்திக்குத்தக்கபடி செய்யவேண்டியது. (ஆ)

శ్లో॥ ఋక్షేష్ట్యాగ్రాయణంచైవచాతుర్మాస్యానిచాహరేత్ ।
ఉత్తరాయణంచక్రమశోదాక్షుస్యాయనమేవచ ॥

நக்ஷத்திரயாகம் - ஆக்கிரயணம் - சாதுர்மாசியம் - உத்தராயணம்-தக்ஷிணாயணம்-இவைகளை உதிர்நெல் பொறுக்கிச் சம்பாதித்து அதனாற் செய்யவேண்டியது. (இ)

శ్లో॥ నాసంతశారదైర్మేధ్యైర్మున్యన్నైశ్చస్వయమాహృతైః ।
పురోడాశాంశ్చరుంశ్చైవవిధివన్నిర్వపేత్పృథక్ ॥

வசந்தருது-சரத்ருது இந்தக் காலங்களில் காட்டிலுண்டானதாயும் பரிசுத்தமாயும் இருக்கிற சம்பாநெல்-கார்நெல் இவைகளைத் தானுகவே பொறுக்கிவந்து அதன் அரிசியினால் * புரோடாசம் + சரு இவைகளைச் செய்யவேண்டியது. (ஈ)

శ్లో॥ దేవతాభ్యస్తుతద్ధుత్వావన్యంమేధ్యతరంహవిః ।
శేషమాత్మనియుంజీతలవణంచస్వయంకృతమ్ ॥

காட்டிலுண்டான பரிசுத்தமான அரிசியினாற் செய்யப்பட்ட புரோடாசம் - சரு இவைகளைத் தேவர்களுக்கு ஹோமஞ்செய்

---

* புரோட்சம் என்பது ஹோமத்திற்காக மாவினால் உப்பில்லாமல் தட்டி சுடப்பட்ட அடை.

+ சரு - எ - து - வறுத்த அரிசியினால் உப்பின்றி சமைத்த வன்னம்

து மிருதியைத் தான் புசிக்கவேண்டியது. தனக்கு உப்பு தானாகவே உவர்மண்ணுலே காய்ச்சிக்கொள்ள வேண்டியது, (கஉ)

ஸ்லோ॥ ஸ்தலஜோதகஶாகானிபுஷ்பமூலபலானிச ।
மேத்யவ்ருக்ஷோத்பவான்யாஹுஸ்நேஹாம்ஶ்சபலஸம்பவான் ॥

பூமி-ஜலம் இவைகளி லுண்டான புஷபம்-கிழங்கு-காய்-பழம்-மணிப்புன்கு முதலான கல்லவிருக்ஷத்தின் பழத்திலுண்டான தேன் இவை முதலியவற்றைப் புசிக்கலாம். (கஊ)

ஸ்லோ॥ வர்ஜயேந்மதுமாம்ஸஞ்ச பௌமானிகவகானிச ।
ஶுக்தானிஶிக்ருகம்நைவ ஸ்நேஹ்நாதகபலானிச ॥

ஈயினற் கட்டப்பட்ட தேன்-மாம்ஸம்-பூமியிலும், மாத்திலுண்டான காளான் - * பூஸ்நிரணம் - + குருகம் - அழிஞ்சிற் பழம் இவைகளை நீக்கவேண்டியது. (கச)

ஸ்லோ॥ த்யஜேதாஶ்வயுஜேமாஸி முன்யன்நம்பூர்வஸஞ்சிதம் ।
ஜீர்ணானிசைவவாஸாம்ஸி ஶாகமூலபலானிச ॥

வருஷந்தோறும் ஐப்பசிமாதத்தில் முன்சம்பாதிக்கப்பட்ட உகிர்நெல்-கிழிந்தபுனி-முதல்நாள் சம்பாதித்த காய் கிழங்கு-பழம் இவைகளை முழுமையும் கள்ளிப்போட வேண்டியது. ()

ஸ்லோ॥ நஷாலகுஷ்டமஶ்நீயா துத்பந்நமபிகேனசித் ।
நக்ராமஜாதான்யாந்யோபி மூலானிசபலானிச ॥

காட்டில் உழுதபூமியில் விளைந்த நெல்லானது பயிரிட்டலுல் நிராகரிக்கப்பட்டிருந்தாலும், அதைத்தான் நிராகரிக்கக்கூடாது. ஊரில் உழாதபூமியிற் பயிரானாலும் காய்-கிழங்கு-பழம் இவைகளைத் தனக்குத் துன்பம் நேரிட்டிருந்த போதிலும் புசிக்கக்கூடாது. (கஎ)

ஸ்லோ॥ அக்நிபக்வாஶநோவாஸ்யா தகாலபக்வபுகேவவா ।
அஶ்மகுட்டப்ரவேத்வாபி தம்போலூகலிகோபிவா ॥

* பூஸ்நிரணமென்பது - மானவதேசத்திலும், + குருகம் - என்பதி - பால் ஹிதேசத்திலு மண்டாமெ ஓர் பதார்த்த விசேஷம்.

காய்-கிழங்கு முதலானவைகளை நெருப்பிற் பாகஞ்செய்தாவது, தானே பழுத்தபின்பாவது, கல்லினல் உடைக்கியாவது, பற்களாற் கடித்தாவது புசிக்கலாம். (கள)

ஸ்லோ॥ ஸத்யஃப்ரக்ஷாளகோவாஸ்யா ந்நாஸஸஞ்சயிகோபிவா ।
ஷண்ணாஸநிசயோவாஸ்யாத்ஸமாநிசயஏவவா ॥

தனக்குபயோகமான ஆகாரத்தைத் தினந்தோறுமாவது, ஒரு மாதத்திற்காவது, ஆறுமாதத்திற் காவது, ஒருவருஷத்திற் காவது சம்பாதித்துக் கொள்ளலாம். (கஅ)

ஸ்லோ॥ நக்தஞ்சான்னமஶ்நீயாத்திவாவாஹார்யஶக்திதஃ ।
சதுர்த்தகாலிகோவாஸ்யாத்நாந்யாவ்ருத்திமகாலிகஃ ॥

மேற்சொன்ன ஆகாரங்களைத் தன் சக்திக்குத் தக்கபடி சம்பாதித்து, இரவிலாவது - பகலில் காலாவது பாகத்திலாவது, ஒருநாளுபவாசமிருந்து மறுநாள் சாயுங்காலமாவது, மூன்றுநாள் உபவாசமிருந்து நாலாநாள் சாயுங்காலமாவது, தன் சக்திக்குத் தக்கபடி புசிக்கலாம். (கக)

ஸ்லோ॥ சாம்த்ராயணவிதாநைர்வாஶுக்லேகிருஷ்ணேசவர்த்தயேத் ।
பக்ஷாந்தயோர்வாப்யஶ்நீயாத்யவாகூம்கர்த்திதாம்ஸகிருத் ॥

இல்லாவிட்டால் கிருஷ்ண பக்ஷத்திலும்-சுக்கிலபக்ஷத்திலும்-சாந்திராயண விரதத்திலாவது-காலத்தைப் போக்கவேண்டியது. அல்லது, பதினைந்துநாளுக் கொருவிசை சுடுகையான கஞ்சிய ஒருவேளையாயினும், இரண்டுவேளையாயினும், புசிக்கலாம். எப்படியாவது விஷய விச்சையை யடக்கவேண்டியது. சாந்திராயண விரதத்தைப் பதினைராவது அத்தியாயத்திற் காண்க. (உ0)

ஸ்லோ॥ புஷ்பமூலபலைர்வாபிகேவலைர்வர்த்தயேத்ஸதா ।
காலபக்வைஸ்ஸ்வயம்ஶீர்ணைர்வைகாநஸமதேஸ்திதஃ ॥

அல்லது வானப் பிரஸ்தாச்சிரம நியமப்படி மரத்திற்றானே கப்பழுத்த பழங்களினாலும், தானேவுதிர்ந்த புஷ்பங்களினாலும், தானேவுலர்ந்த கொடியுள்ள கிழங்குகளினாலும், விரதத்தைக் கெடுக்காமல் தினந்தோறும் ஜீவிக்கலாம். (உக)

ஸ்லோ॥ ஶுசாவபரிவர்தேதஸ்மிந்வ்யாப்ரபத்தேர்திநம்।
ஸ்நானாதனாப்யாம்விஹரேத்ஸ்வதேஹோபயன்னபஃ॥

இலேப்பாக இருக்தால் பரிசுத்தமான பூமியில் படித்துக் கொண்டு புரளலாம். ஆசனத்தில் லுட்காந்துகொண் டானலும் இருக்கலாம். அல்லது - உலாத்தினலு முலாத்தலாம். நாடோறும் திரிகாலத்திலும் ஸ்நானஞ் செய்யவேண்டியது. (உஉ)

ஸ்லோ॥ க்ரீஷ்மேபஂசதபாஸ்துஸ்யாத்வர்ஷாஸ்வப்ராவ்ருதாஶ்ரயஃ।
ஆர்த்ரவாஸாஸ்துஹேமம்தேத்ரமஶ்னீயாதயஂஸ்தபஃ॥

தன் தபசு கிரமமாக விருத்தியாகும்பொருட்டு கிரீஷ்மகாலத்தில் பஞ்சாக்கினி மத்தியிலிருந்துகொண்டும், மழைகாலத்தில் மழையிலிருந்துகொண்டும், பனிக்காலத்தில் ஈரத்துணியைப் போர்த்துக்கொண்டும் தவஞ் செய்யவேண்டியது. (உங)

ஸ்லோ॥ உபஸ்ப்ருஶஂஸ்த்ரிஷவணமபித்யாஞ்ச தேவாஂஶ்சதர்பயேத்।
தபஶ்சரஂஶ்சோத்தரஂஶ்சயேத்தேஹமாத்மவஃ॥

தினந்தோறும் திரிகாலத்திலும் ஸ்நானஞ்செய்து, தேவருஷி பிதுர்க்களுக்குத் தர்ப்பணஞ் செய்யவேண்டியது. பகேஷாபவாசம் - மாதோபவாசம் இவைகளால் தன்தேகத்தை யொடுக்கவேண்டியது. (உச)

ஸ்லோ॥ அக்நிஂஶ்சாத்மன்யதைதான்ஸமாரோப்யயதாவிதி।
அனக்நிரனிகேதஸ்யாமுனிர்மூலபலாஶனஃ॥

இக்கப்படி ஆறுமாதகமானபின்பு வேதத்திற் சொல்லிய மூன்றக்கினிகளையும் ஆத்ம சமாரோமணஞ்செய்து வீடில்லாதவனும், அக்கினிஹோத்திர மில்லாதவனுமாய் பழமூலகளானவற்றைப் புசித்துக்கொண்டு மரத்தின்கீழே மௌனமாய் வசித்தாலும் வசிக்கலாம். (உரி)

ஸ்லோ॥ அப்ரயத்னஸ்ஸுகார்தீஸ்யாத்ப்ரஹ்மசாரீத்ருடாஶயஃ।
ஶரணேஷ்வமமஶ்சைவ வ்ருக்ஷமூலனிகேதனஃ॥

நல்ல பழஞ் சாப்பிடவேண்டுமென்றும், ருளிர்வெய்யலில் லாம விருக்கவேண்டுமென்றும், தோற்றுகிற சுகப்பிரயோசனத்தில் விருப்பமில்லாதவனும், புணர்ச்சியில்லாதவனும், தனசில் படுக்கிறவனும், கோடுகிற மரத்தடியில் மமதையின்றி வாசஞ் செய்யவேண்டியது. (உசு)

ஸ்லோ॥ தாவஸேஷ்வவரிப்ரேஷு யாத்ரஂதைர்யாசிதஃக்வசித்।
க்ருஹமேதிஷுசாஸ்யேஷு த்விஜேஷுவனவாஸிஷு।

காய் - கிழங்குமுதலியவை அகப்படாவிட்டால் வானப்பிரஸ்த பிராமணரிடத்திலும், அவர்க ளில்லாவிட்டால் வனவாசஞ்செய்கிற கிரகஸ்தாளிடத்திலும், தன் பிராணதாரத்துக்கு உபயோகமானமட்டில் பிக்ஷை யெடுத்துக்கொள்ள வேண்டியது. ()

ஸ்லோ॥ க்ராமாதாஹ்ருத்யனீ யாதத்பக்ராஸாதவாவஸேத்।
ப்ரதிக்ருஹ்யபுடேனைவ பாணினாஶகலேனவா॥

அவர்களு மில்லாதபோது ஊரிற்போய் இரண்டுகையிலாவது, மரப்பாத்திரத் தொன்னையிலாவது, 'எட்டுக்கவள வன்னம் வாங்கிப் புசிக்கவேண்டியது. (உஅ)

ஸ்லோ॥ ஏதாஶ்சான்யாஶ்சஸேவேத தீக்ஷாவிப்ரோவனேவஸன்।
விவிதாஶ்சோபனிஷதீர்தர்ம ஸம்சித்தயேஶ்ருதீஃ॥

இப்போது சொல்லிவந்த விரதங்களையும், இன்னம் அகேக விரதங்களையும், அனுஷ்டித்துக்கொண்டு தான் நற்கதியையடையும்பொருட்டு, உபனிஷத்து - வேதாந்தம் இவைகளால் பிரம்மதத்தைத் தியானித்துக்கொண் டிருக்கவேண்டியது. (உக)

ஸ்லோ॥ ருஷிபிர்ப்ரஹ்மணைஶ்சைவ க்ருஹஸ்தைரேவஸேவிதாஃ।
வித்யாதபோவிவ்ருத்யர்தம் ஶரீரஸ்யசஶுத்தயே।

இருஷி - சன்னியாசி - கிரகஸ்தன் - பிரமசாரி இவர்களால் தன் ஞானவித்தியா தபோவிர்த்திக்காகவும், சரீர சுத்திக்காகவும், மேற்சொன்ன உபனிஷத்து முதலிய வேதாந்தங்கள் ஓதப் படுகின்றன. (ஙo)

ஸ்லோ॥ அபராஜிதாஂவாஸ்தாய ப்ரஜேத்திஶமஜிஹ்மகஃ।
அனிபாதாச்சரீரஸ்ய யுக்தோவார்யனிலாஶனஃ॥

அதிக வயதானபின்பு ஈசானியதிக்கில் பரிகத்தனையத் தன் தேகம் அழிகிறவரையில் ஜலத்தையும், காற்றையும், புசித்துக் கொண்டு மஹாப் புரஸ்தானமாயும் போகலாம். (ஙக)

ஸ்லோ॥ அஸ்மாமஹர்ஷி சர்யாணாம் த்யக்த்வாவ்ருத்தமயாதனும்।
பிதாலோகப்ரபோவிப்ரோ ப்ரஹ்மலோகேமஹீயதே।

இந்தப்படிச் சொல்லிவந்த மஹாமுனி விரதத்தில் எதையாவதொன்றை அநுஷ்டித்துத் தன்சரீரத்தை விடுகிறவன் பயம்-துக்கம் இவைகளில்லாதவனாய் பிரம்மலோகத்தில் மேலானசுகத்தை யடைவான். (க.2)

ஸ்லோ॥ வநேஷ்வேவவிஹரேத்துதீயம்பாகமாயுஷ:।
சதுர்த்தமாயுஷோபாகமித்யக்த்வாஸங்கான்பரிவ்ரஜேத்।

அல்லதுஇந்தப்படிக் காட்டில் தன்னுயுளின்மூன்றும்பாகத்தைப் போக்கடித்துவிட்டு, நாலாவதுபாகத்தில் ஆசையொழிந்தபின், சம்சாரசம்பந்தங்களை முழுதும் துறந்துவிட்டுச் சந்நியாச ஆசிரமத்தை அடையவேண்டியது. (க.க)

ஸந்நியாச தருமம்

ஸ்லோ॥ ஆச்ரமாதாச்ரமம்கத்வாஜிதேஹோமோஜிதேந்த்ரியஃ
பிக்ஷாபலிபரிச்ராந்தஃப்ரவ்ரஜந்ப்ரேத்யவர்த்தே॥

பிரமசரிய ஆசிரமத்திலிருந்து கிரகஸ்தாசிரமத்தையும், அதிலிருந்து வானப்பிரஸ்தாசிரமத்தையும், அடைந்து அந்தந்த ஆசிரமத்திற் செய்யவேண்டிய ஹோமம் - பலி - பிக்ஷாபோஜனம் இவைகளைச் செய்துசெய்து அவற்றால் இளைப்படைந்தவனாய் அவைகளை நீக்கிச் சந்நியாசஞ் செய்துகொண்டால் மேலான சுகத்தை யடைவான். (க.ச)

ஸ்லோ॥ ருணானித்ரீண்யபாக்ருத்யமநோமோக்ஷேநிவேசயேத்।
அநபாக்ருத்யமோக்ஷந்துஸேவமாநோவ்ரஜத்யதஃ॥

இருஷிகள் - பிதுர்க்கள் - தேவர்கள் இவர்களுக்குக் கடன் காரணங்காமல் சந்நியாசத்தில் மனம்வைக்கவேண்டியது. இல்லாவிட்டால் நாகத்தையடைவான். (க.டு)

ஸ்லோ॥ அதீத்யவிதிவத்வேதாந்புத்ராம்ச்சோத்பாத்யதர்ம்மதஃ।
இஷ்ட்வாசயக்ரதுபிர்ந்யாயோமோக்ஷேநிவேசயேத்॥

தேவர்-இருஷி-பிதுர்க்களிடத்தில் மூன்றுகடனுடன் மனிதன் பிறக்கிறான். அவைகளில் எக்கியத்தால் தேவர்களுக்கும், பிள்ளைபெறுவதால் பிதுர்க்களுக்கும், வேதமோதுவதால் ருஷிகளுக்குங் கடனைநீர்த்துஜோதிஷ்டோமமுதலிய யாகாதிகளையும், சக்திக்குத் தக்கபடிசெய்து, பின்பு மோக்ஷத்திற்குபயோகமான சந்நியாசத்தில் மனம்வைக்கவேண்டியது. (க.சு)

ஸ்லோ॥ ஆநதீத்யத்விஜோவேதாநநுத்பாத்யததாஸுச।
அநிஷ்ட்வாதைவயஜ்ஞைஸ்தோமோக்ஷமிச்சந்வ்ரஜத்யதஃ॥

வேதமோதாமலும், பிள்ளைபெறாமலும், யாகஞ்செய்யாமலும் மோக்ஷத்திற்கு முயற்சிசெய்கிறவன், நரகத்தையடைவான்

ஸ்லோ॥ ப்ராஜாபத்யாம்நிரூப்யேஷ்டிம்ஸர்வ்வவேதஸதக்ஷிணாம்।
ஆத்மந்யக்நீம்ஸமாரோப்யப்ராஹ்மணஃப்ரவ்ரஜேத்க்ருஹாத்॥

எவன்வேதத்தில் சொல்லிய எல்லாப் பொருள்களையும் தக்ஷிணையாகவுடைய பிராஜாபத்திய இஷ்டியைச்செய்து, அக்நியை ஆத்ம சமாரோபணஞ் செய்துகொண்டு கிரகஸ்தாசிரமத்திலிருந்தே சந்நியாசஞ் செய்துகொள்ளலாம். (க.அ)

ஸ்லோ॥ யோதத்ஸர்வ்வபூதேப்யஃப்ரவ்ரத்யபயங்க்ருஹாத்।
தஸ்யதேஜோமயால்லோகாபவந்திப்ரஹ்மவாதிநஃ॥

எவன் சகலபிராணிகளையும் பயப்படுத்தாமல் கிரகஸ்தாசிரமத்தில் நின்றும் ஸந்நியாசஞ் செய்து கொள்ளுகிறானே அவன் தேஜோரூபமானலோகங்களை யடைகிறானென்று தெரிந்தவர்கள் சொல்லுகிறார்கள். (க.கூ)

ஸ்லோ॥ யஸ்மாத்பசோ:ப்ரபீதாநாந்விஜாந்நோத்யத்யபயம்।
தஸ்யதேஹாத்விமுக்தஸ்யபயந்நாஸ்திகுதஶ்சந॥

எந்த துவிஜனிடத்திலிருந்து ஒருபிராணிக்கும் சிறிதும் பயமுண்டாகவில்லையோ, அவனுக்கு இறந்தபின் ஒருவரிடத்திலும் பயமில்லை. (சo)

ஸ்லோ॥ ஏகாகாதபிநிஷ்பந்நாத்பவித்ரோபசிதோமுநிஃ।
ஸமுபோ஢ஷுரோமேஷு நிரபேக்ஷஃபரிவ்ரஜேத்॥

ஸந்நியாச ஆசிரமஞ் செய்துகொண்டவன் பரிசுத்தமான-கமண்டலம் - தண்டம் - பவித்திரம் இவை முதலானவற்றைக் கரத்துக்கொண்டு ஒருவராலும் கொடுக்கப்பட்டாலும், விஷயபோகங்களில் விருப்பமில்லாதவனாய் மௌனவிரதத்தோடிருக்கவேண்டியது. (சக)

மநுதர்மசாத்திரம்.

ஸ்லோ॥ ஏகோவசக்நிர்த்ரவ்யம் சிஷ்யர்ருத்விக்ஸஹாயவான் ।
பிண்டமேகஸ்யநாபஸ்யேந்ந ஜாதாநபிபேயத் ।

ஒருவர் சகாயமின்றி யேகாவ்கியாய் பரமாத்துமாவைசசிக்கிறவனுக்கு மோக்ஷசித்தி யுண்டாகிறதை கன்ருக அறிந்து தானுமப்படியே தனியாய்ச் சஞ்சரிக்கவேண்டியது. அப்படியிருந்தால் ஒருவருடைய சேர்க்கை, பிரிவு இவைகளால் இவனுக்குச் சுகதுக்கநேரிடாது. (சஉ)

ஸ்லோ॥ அநக்நிரநகேதஸ்யாந்க்ராம மந்நார்த்தமாச்ரயேத் ॥
உபேக்ஷகோ(அ)நபுஸுகோ முநிர்பாவஸமாஹித: ।

அக்கினியில் பாகஞ்செய்யாதவனையும், வீடில்லாதவனையும் இருந்துகொண்டு நாடோறும் பிக்ஷாந்நத்திற்காக கிராமத்திற் பிரவேசிக்கவேண்டியது. ஒருபொருளிலும் விருப்பமில்லாதவனையும், மோகநிவர்த்திக்காக ஔஷதமஞ் சாப்பிடாதவனையும், ஸ்திரபுத்தியாயும், பிரம்ம சிந்தனையுடையவனையும், இரவும்பகலுங்காடிலும் வசிக்கவேண்டியது. (நக)

ஸ்லோ॥ கபாலம்வ்ருக்ஷமூலாநிகுசேலமஸஹாயதா ।
ஸமதாபைவஸர்வஸ்மிந்நேதந்முக்தஸ்யலக்ஷணம் ॥

மண்பாத்திரம் வைத்துக் கொள்ளுதல், மரத்தினடியில் வசித்தல், கந்தைத்துணியைக் கட்டிக்கொள்ளுதல், ஏகாங்கியாயிருத்தல், சத்துருமித்திராதின்றி யெல்லோரையுஞ் சமமாய்ப் பாராளம். இவையெவ்லாம் மோக்ஷத்தை விரும்பினவனுக் குடையன. (சக)

ஸ்லோ॥ நாபிநந்தேதமரணம் நாபிநந்தேஜீவிதம் ॥
காலமேவப்ரதீக்ஷேத நிர்தேசம்பருதோயதா ॥

தான் ஜீவித்திருப்பதையும், இறப்பதையும் சந்தோஷிக்கக் கூடாது. வேலைக்காரனெவன் தனக்கு யஜமானன் சம்பளங்கொடுக்கிற நாளை எதிர்பார்த்திருக் கிறதுபோல தன் தேகநாச காலத்தை எதிர்பார்த்திருக்க வேண்டியது. (சடு)

ஸ்லோ॥ த்ருஷ்டிபூதம்ந்யஸேத்பாதம் வஸ்த்ரபூதம்ஜலம்பிபேத் ॥
ஸத்யம்பூதாம்வதேத்வாசம் மந:பூதம்ஸமாசரேத் ॥

நடக்கும்போது பூமியைத் தன் கண்ணினாற் பார்த்து, காலை வைக்கவேண்டியது. தண்ணீரைத் தணியிலால் வடிகட்டிச் சாப்பிடவேண்டியது. உண்மையாகப் பேசவேண்டியது. அந்தராத்மாவுக்குச் சந்தோஷமான காரியத்தைச் செய்ய வேண்டியது. (சகு)

ஸ்லோ॥ அதிவாதாம்ஸ்திதிக்ஷேத நாவமந்யேதகஞ்சந ।
நசேமந்தேஹமாச்ரித்ய வைரம்குர்வீதகேநசித் ॥

ஒருவன் அக்கிரமமாகத் தன்னைத் திட்டினாலும், அதைப் பொறுக்க வேண்டியது. ஒருவனையும் தான் அவமானஞ் செய்யக்கூடாது. அநித்தியமாயும் ரோகத்துக் கிருப்பிடமாயு மிருக்கிற இந்தத் தேகத்தைக்குறித்து ஒருவனுடனும் விரோதிக்கக்கூடாது, (சஎ)

ஸ்லோ॥ க்ருத்யந்தேநப்ரதிக்ருத்யே தாக்ருஷ்டஸ்சுலம்பதேத் ।
ஸப்தத்வாராவகீர்ணஞ்ச நவாசமநமாசரேத் ॥

தன்னை யொருவன் கோபித்தாலுய், தான் கோபிக்கலாகாது. ஒருவன் திட்டினாலும் தானல்ல வார்த்தையாகப் பேசவேண்டியது. பஞ்சசேந்திரியம் - மனது - புத்தி-இந்தவேழினாலும் அறியப்பட்ட உலக விவகாரத்தையும், அழிவுள்ளதான தர்மார்த்த காம விஷயமான வார்த்தையையும் பேசக்கூடாது. (சஅ)

ஸ்லோ॥ அத்யாத்மரதிராசீநோநிரபேக்ஷோநிராமிஷ: ॥
ஆத்மநைவஸஹாயேந ஸுகார்தீவிசரேதிஹ ॥

பிரமக்கியானியாயும் தண்டகாஷாயத்திலும் அதிக விருப்பமில்லாதவனையும், யோகாசன முள்ளவனையும், விஷயசம்பந்தமில்லாதவனையும், தன் தேகத்தைமாத்திரம் சகாயமாக விற்றுக் கொண்டு மோக்ஷத்தை விரும்புகிறவனையும், உலகத்திற் சஞ்சரிக்கவேண்டியது. (சகூ)

ஸ்லோ॥ நசோத்பாதநிமித்தாப்யாம்நநக்ஷத்ராங்கவித்யயா ।
நாநுசாஸநவாதாப்யாம்பிக்ஷாமிச்சேத்கதாசந ॥

ஆகம்பத்தைச் சொல்லுகிற சாஸ்திரம், கண்துடித்தல் முதலான வற்றைச் சொல்லும் நிமித்தசாஸ்திரம், வயித்தியம் - சோதிடம் - தர்க்கம் இவைகளைக் சொல்லி பிக்ஷை சம்பாதிக்கக்கூடாது. (அ)

ஸ்லோ॥ நதாபஸைர்ப்ராஹ்மணைர்வாவயோபிர்விவாஶ்ரயி ।
ஆர்ணம்பித்வாவ்ரதைராகாரமுபஸம்ப்ரவேத் ॥

ஒரு வீட்டில் பிரமசாரி-வானப்பிரஸ்தன் இவர்கள் பிசை க்கு வந்திருக்கும்போதும், பக்ஷி-நாய் இவைகள் சோறுதின்று கொண்டிருக்கும்போதும், அந்த வீட்டில் தான் பிசைக்குப் போகக்கூடாது. (நக)

శ్లో॥ క్లృప్తకేశనఖశ్మశ్రుఃపాత్రీదండీకుసుంభవాన్ ।
బహిశ్చరేన్నియతోనిత్యంసర్వభూతాన్యపీడయన్ ॥

தலைமயிர்-நகம்-மீசை இவைகளை கூவரஞ்செய்துகொண்டு கமண்டலம், திரிதண்டம், கருப்பை, காஷாயம் இவைகளைத் தரித்துக்கொண்டு யாரையும் துன்பப்படுத்தாமல் ஜிதேந்திரியனாய் நிடத்திலும் நிலைபெற்றிராமல் தேசசஞ்சாரஞ் செய்யவேண்டியது. (நஎ)

శ్లో॥ అలాబుదారుపాత్రంచ మృన్మయంత్రైదళంతథా ।
ఏతానియతిపాత్రాణి మనుస్స్వాయంభువోబ్రవీత్ ॥

தேங்காய்ப் பாத்திரம்-சுரைக்காய்-மரப்பாத்திரம் தொன்னை-மண்பாத்திரம்-மூங்கிற்பாடி இவைகளைச் சன்னியாசியின் பாத்திரங்களென்று சுவாயம்புவ மநு சொல்லியிருக்கிறார். (ஏ)

శ్లో॥ ఏకకాలంచరేద్భైక్షం నప్రసజ్జేతవిస్తరే ।
భైక్షేప్రసక్తోహియతి ర్విషయేష్వపిసజ్జతి ॥

ஒருவேளை பிசைக்கையெடுக்க வேண்டியது. அதையும் அதிக மாக வெடுக்கக்கூடாது. சன்னியாசி அதிகபிசைக்கு யெடுத்துப் புசித்தால் ஸ்திரீமுதலிய விஷயத்திலுஞ் சம்பந்தப்படுவான். ()

శ్లో॥ విధూమేసన్నముసలేవ్యంగారే భుక్తవజ్జనే ।
వృత్తశరావసంపాతే భిక్షాంనిత్యంయతిశ్చరేత్ ॥

புகையில்லாமலும், உலக்கைச் சத்தமில்லாமலும், அடுப் பெரியாமலும், அதிதிகள் சாப்பிடப்பட்டு மிருக்கிற இரகஸ்தன் வீட்டில் ஸந்நியாசி பிசைக்குப்போகவேண்டியது. (நசு)

శ్లో॥ అలాభేనవిషాదీస్యాల్లాభైశ్చైవనహర్షయేత్ ।
ప్రాణయాత్రికమాత్రస్స్యాన్మాత్రాసంగాద్వినిర్గతఃII

பிசைக்ஷயகப்படாவிட்டால் வியசன முள்ளவனாயும், அகப் பட்டால் சந்தோஷமுள்ளவனாயு மிராமல் பிராணயாத்திரை மாத்திரங் காப்பாற்றுகிறவனாய் பரமாணுவளவிலும், ஆசையில்லாதவனா யிருக்கவேண்டியது. (நள)

శ్లో॥ అభిపూజితలాభాంస్తుజుగుప్సేతైవసర్వశః ।
అభిపూజితలాభైశ్చయతిర్మోక్షేపిబధ్యతే ॥

தன்னையொருவன் பூசித்துப் பிசைக்ஷகொடுத்தால் அதைத் தான் தடுக்கவேண்டியது. அந்தப்பூசையில் ஸந்நியாசி விருப்பங் கொண்டால் மோக்ஷமடையுஞ் சமயமாயிருந்தாலும் ஜன்மாந்த ரத்தையடைவான். (நஅ)

శ్లో॥ అల్పాన్నాభ్యవహారేణరహస్థానాసనేనచ ।
హ్రియమాణానివిషయైరింద్రియాణినివర్తయేత్ ॥

கொஞ்சமாகப் புசிப்பதினாலும், ஏகாந்தத்தில் வசித்தலா லும், விஷயங்களா விழுக்கப்படுகிற இந்திரியங்களை நல்லவழியி ற்நிருப்பவேண்டியது. (நக)

శ్లో॥ ఇంద్రియాణాంనిరోధేనరాగద్వేషక్షయేనచ ।
అహింసయాచభూతానామమృతత్వాయకల్పతే ॥

இந்திரிய நிக்கிரகத்தாலும், இராகத் துவேஷமில்லாமையா லும், ஜந்து ஹிம்சை செய்யாமையாலும், மோக்ஷமடைகிற தற்கு யோக்கியனாவான். (கூ0)

శ్లో॥ అవేక్షేతగతీర్నౄణాంకర్మదోషసముద్భవాః ।
నిరయేచైవపతనంయాతనాశ్చయమక్షయే ॥

இந்திரிய நிக்கிரகமில்லாத மனிதர்களுக்குப் பாபகர்மத்தி னால் வரும் பசுமுதலிய பிறப்பையும், நரகத்தில் விழுவதையும், இயமலோகத்திலுண்டான வாதனையையும், சொல்லுகிற சாஸ்தி ரத்தைப் பார்க்கவேண்டியது. (கூக)

శ్లో॥ విప్రయోగంప్రియైశ్చైవసంయోగంచతథాప్రియైః ॥
జరయాచాభిభవనంవ్యాధిభిశ్చోపపీడనమ్ ॥

పిన్నుం ఇష్టార్థములోడు విరోధియుం, శత్రుక్కళోడు పழகుతలియుం, మిழத்தனத்தாலும் - వియాధియినాలుం వరుత్తుం పత్తైయుం. (౫౭)

శ్లో॥ దేహాదుత్క్రమణంచాస్యపునర్గర్భేచసంభవమ్।
యోనికోటిసహస్రేషు తిర్యక్స్థావరసంజ్ఞకే ॥

ఇంత్తదేహత్తై విట్టిట్టు పోన్డాల్ ఉడంబుక్కుళ్ళాల మరణవస్తైయుం, మరుపడి పిరవిత్తత్తైయుం, ఇవ్వుడంబాల్ నాయ్ముదలియ ఆయిరం పాపియోనిగళిల్ పిఱందిరుప్పతైయుం యోసిక్కవేండియదు. (౫౮)

శ్లో॥ అధర్మప్రభవంచైనదుఃఖయోరంగరీరిణామ్ ।
ధర్మార్థప్రభవంచైవసుఖసంయోగమక్షయమ్ ॥

పిన్నుం అధర్మంచెయ్వదినాల్ పిరాణికళుక్కువరుం తున్బత్తైయుం, పిరమజ్ఞానత్తినాలుం ఇండ్రాన అழிవిల్లా మోక్షసుకత్తైయుం. (౫౯)

శ్లో॥ సూక్ష్మతాంచాన్వవేక్షేతయోగేనపరమాత్మనః ।
దేహేషుచసముత్పత్తిముత్తమేష్వధమేషుచ ॥

పరమాత్మా సర్వాంగినియామియాయ్ ఉయిర్గళిడత్తిలుం, తాழ్ందవర్కళిడత్తిలుం, రూపవ్యత్యాసముళ్ళవనాగప్ పిరవేశిత్తు అవరవర్కళుక్కుచ్ చుకదుక్కంగళైక్ కొడుత్తుక్కొండిరుక్కిఱతైయుం, ఞానదృష్టియినాల్ యోసిక్కవేండియదు. (౫౧)

శ్లో॥ దూషితోపిచదేద్ధర్మ్యంయత్రతత్రాశ్రమేరతః ।
సమస్సర్వేషుభూతేషునలింగంధర్మకారణమ్ ॥

ఒరువన్ ఒరు ఆశ్రమత్తిలిరుత్తు అన్త ఆశ్రమత్తుక్కురుత్తాన కణ్డకమండలముదలియ అడైయాళంగళిల్లామ లిరున్తాలుం, ఎల్లాప్పిరాణికళిడత్తిలుం సమబుద్ధియుడైయవనాయ్త్ తర్మంచెయ్యవేండియదేయన్ఱి, కాషాయత్తరిత్తల్ ముదలియవేడమాత్తిరత్ తర్మత్తుక్కుక్ కారణమాకమాట్టాదు. (౫౫)

శ్లో॥ ఫలంతకవృక్షస్యయద్యప్యంబుప్రసాదకమ్ ।
నానామగ్రహణాదేవతస్యనారిప్రసీదతి ॥

అదెప్పడియెన్ఱాల్ తేత్తాంగొట్టై ఎప్పడియుంతణ్ణీరైత్ తెళివిక్కిఱదుదాన్. ఆనాలుం అదైత్ తణ్ణీరిల్ తెయ్క్కామల్ పెయరైచ్ చొన్నవుడనే తణ్ణీర్ తెళియుమా.()

శ్లో॥ సంరక్షణార్థంజంతూనాం రాత్రావహనివాసదా ।
శరీరస్యాత్యయేనైవ సమీక్ష్యవసుధాంచరేత్ ॥

ఇరవిలేనుం - పగలిలేనుం - మత్తవేళైయిలేనుం- తన్ పిరాణన్పోగిఱ సమయమాగిరున్తాలుం - భూమియై నన్ఱుగప్పార్త్తు ఒరుజీవన్దువుం తున్బప్పడామ లిరుక్కుంపడి నడక్కవేండియదు. (౫౫)

శ్లో॥ అహ్నోరాత్ర్యాశ్చయోర్ జంతూన్హినస్త్యజ్ఞానతోయతిః।
తేషాంస్నాత్వావిశుద్ధ్యర్థంప్రాణాయామాన్షడాచరేత్ ॥

ఇరవిలుం - పగలిలుం - తనక్కుత్ తెరియామైయాల్ యాదావదు ఒరుజీవన్దు ఇఱన్దుపోగిఱదిన్ఱు ఖుండాన పావంపోగిఱదర్కాగ స్నానంచెయ్దవుడనే సంగియాసి ఆఱుపిరాణాయామంచెయ్యవేండియదు. (౫౬)

శ్లో॥ ప్రాణాయామాబ్రాహ్మణస్యత్రయోపివిధివత్కృతాః ।
వ్యాహృతిప్రణవైర్యుక్తాత్వివిజ్ఞేయంపరంతపః ॥

పిరామణన్ వియాక్కిరుది - గాయత్తిరి - పిరణవం ఇవైగళోడు కూడియ పిరాణాయామత్తై మూన్ఱుదరం చెయ్దాలుం అదువే అవనుక్కు ఉయర్న్త తపచక్తిచ్చరియెన్ ఱఱియవేండియదు. (౭౦)

శ్లో॥ దహ్యంతేధ్మాయమానానాంధాతూనాంహియథామలాః ।
తథేంద్రియాణాందహ్యంతేదోషాఃప్రాణస్యనిగ్రహాత్ ॥

చువర్ణం ముదలానవైయిన్ అழுక్కు నెరుప్పిల్ కాయ్చినాలెప్పడిప్ పోయ్విడుమో అప్పడియే తేగత్తైచ్చార్న్త ఇన్ద్రియ తోషంగళెల్లాం పిరాణాయామత్తాల్ పోయ్విడుం.

శ్లో॥ ప్రాణాయామైర్దహేద్దోషాన్ధారణాభిశ్చకిల్బిషమ్ ।
ప్రత్యాహారేణసంసర్గాన్ధ్యానేనానీశ్వరాన్గుణాన్ ॥

பிராணயாமத்தினால் இந்திரியதோஷங்களையும், பரமாத்மாவினிடத்தில் மனம்வைப்பதினால் பிரார்த்தகர்மத்தையும், இந்திரிய நிக்கிரகத்தால் விஷயசம்பந்தங்களையும், பிரமத்தியானத்தினால் காமக்குரோதங்களையும், போக்கடிக்கவேண்டியது. ()

శ్లో॥ ఉచ్చావచేషుభూతేషుదుర్జ్ఞేయామకృతాత్మభిః ।
ధ్యానయోగేనసంపశ్యేద్గతిమస్యాంతరాత్మభిః ॥

சாஸ்திரம் படியாதவர்களால் காணக்கூடாததான ஜீவாத்மாவினுடைய தேவ மனுஷிய பசுவாதி யோநிப்பிரவேசத்தைத் தான் தியானத்தினாலறிந்து பிரம்மநிஷ்டனாயிருக்கவேண்டியது.

శ్లో॥ సమ్యగ్దర్శనసంపన్నఃకర్మభిర్ననిబధ్యతే ।
దర్శనేనవిహీనస్తుసంసారంప్రతిపద్యతే ॥

பிரம்ம சாக்ஷாத்காரஞ் செய்தவனுக்குக் கர்மபந்தம் வராமட்டாது. அதாவது ஜநந மரண ரூபமான ஸம்ஸார சக்கரத்தில் தன்பப்பட மாட்டானென்பது கருத்து. பிரம்மத்தியானமில்லாவிட்டால் மறுபடி ஜநமரணத்தை யடைகிறான். (எச)

శ్లో॥ అహింసయేంద్రియాసంగైర్వైదికైశ్చైవకర్మభిః ।
తపసశ్చరణైశ్చోగ్రైస్సాధయంతీహతత్పదమ్ ॥

ஹிம்ஸை செய்யாமையாலும், இந்திரியங்களுக்கு விஷயப்பற்றில்லாமையாலும், நித்தியகர்மானுஷ்டானஞ் செய்வதாலும், சாந்திராயணாதி தவஞ்செய்வதினாலும், பெரியோர்களில்லாலகத்தில் மோக்ஷத்தைச் சாதிக்கிறார்கள். (எடு)

శ్లో॥ అస్థిస్థూణంస్నాయుయుతంమాంసశోణితలేపనమ్ ॥
చర్మావనద్ధందుర్గంధిపూర్ణంమూత్రపురీషయోః ॥

தூண்போன்ற எலும்பையுடைத்தாயும், கயறுபோன்ற நரம்பையுடைத்தாயும், மாம்ஸம் - இரத்தம் இவைகளாலிறபூசசையுடைத்தாயும், தோலாலிற போர்வையை யுடைத்தாயும், மலமூத்திரங்களினால் பூரணமாயும், துர்க்கந்தமுள்ளதாயும். (எசு)

శ్లో॥ జరాశోకసమావిష్టంరోగాయతనమాతురమ్ ।
రజస్వలమనిత్యంచభూతావాసమిమంత్యజేత్ ॥

கிழத்தனம்- துக்கம்- நோய் இவைகளால் வாசஞ்செய்யப்பட்டும், பசி - தாகம் - குளிர் - கானல் இவைகளால் பயத்தையுண்டுபண்ணுகிறதாயும், பெரும்பாலும் இரஜோகுணமுள்ளதாயும், பஞ்சபூதங்களுக்கு இருப்பிடமாயும், ஸ்திரமில்லாததாயுமிருக்கிற இந்தச்சரீரமாகிற வீட்டை இவனுத்மா மறுபடியடையாமலிருக்கும்படிச் செய்யவேண்டியது. (எஎ)

శ్లో॥ నదీకూలంయథావృక్షోవృక్షంవాసకునిర్యథా ।
తథాత్యజన్నిమందేహంకృచ్ఛ్రాన్నాహోద్విముచ్యతే ॥

ஆற்றங்கரையிலிருக்கிற விருக்ஷத்திற்கு ஆற்றினீரினால் நாசம்வருவதுபோல், கர்மயோகஞ் செய்கிறவனுக்கு பிரார்த்தகர்மம் ஒழிந்தவுடனே மோக்ஷமுண்டாகிறது. ஞானயோகஞ்செய்கிறவனுக்குப் பக்ஷியானது தான் வாசஞ்செய்கிற மரத்தைத்தானேவிடுவதுபோல் தனக்கிஷ்டமானபோது பீஷ்மாதிகளைப்போலில் தேகத்தியாக முண்டாகிறது. இவருக்கும் சம்சாரமாகிற முதலியினால் பயம்நேரிடுகிறதில்லை. அதாவது மறுபிறப்பில்லையென்பது கருத்து. (எஅ)

శ్లో॥ ప్రియేషుస్వేషుసుకృతమప్రియేషుచదుష్కృతమ్ ।
విసృజ్యధ్యానయోగేన బ్రహ్మభ్యేతిసనాతనమ్ ॥

பிரமக்கியானியானவன் தன்னிஷ்டர்களிடத்தில் தன்புண்ணியத்தையும் தன் துவேஷிகளிடத்தில் தன்பாபத்தையும்விட்டு விட்டு அழிவற்ற பிரம்மானந்தத்தை யடைகிறான். (எக)

శ్లో॥ యదాభావేనభవతి సర్వభావేషునిస్స్పృహః।
తదాసుఖమవాప్నోతి ప్రేత్యచేహచశాశ్వతమ్ ॥

எப்போது பிரம்மத்தியானத்தால் தோஷத்தையே யுண்டுபண்ணுகிறதான சகலவிஷயங்களிலும் ஆசையை நீக்குகிறானோ அப்போது இம்மையிலும் மறுமையிலும் அழிவற்ற சுகத்தையடைவான். (அ0)

శ్లో॥ అనేనవిధినాసర్వాంస్త్యక్త్వాసంగాన్శనైశ్శనైః ।
సర్వద్వంద్వవినిర్ముక్తో బ్రహ్మణ్యేవావతిష్ఠతే ॥

சகலமான புத்திரமித்திராதி சமூசார சம்பந்தங்களில் மெல்லமெல்ல மமதையைநீக்கி மானவமானமுதலிய தொந்தவியாகியினின்றும் நீங்கியிருக்கிறவன் ஞானயோகம் அல்லது கர்மயோகம் இவைகளால் பிரம்ம சாயுச்சியத்தை யடைகிறான். ()

ஸ்லோ॥ த்⁴யானிகம்ஸர்வமேவைதத்³யதே³தத³பி⁴ஶப்³தி³தம் ।
நஹ்யனத்⁴யாத்மவித்-கஶ்சித் க்ரியாஃபலமுபாஸ்னுதே ॥

மேற்சொன்ன மமதையை விடுகிறது முதலானவைகளெல்லாம் பிரம்மத்தியானஞ் செய்பவனுக்குமாத்திரம் பலனைக்கொடுக்குமே தவிர ஆத்மத்தியான மில்லாதவனுக்கு ஒரு கர்மமும் பலனைக் கொடுக்காது. (அ2.)

ஸ்லோ॥ அதி⁴யஜ்ஞம்ப்³ரஹ்மஜபேதா³தி⁴தை³விகமேவச ।
ஆத்⁴யாத்மிகஞ்சஸததம்வேதா³ந்தாதி⁴ஹிதஞ்சயத் ॥

இத்தச் சந்நியாசி வேதாந்தவாக்கியத்தால் அதிபௌதிகம்-அதிதெய்வம்-அத்தியாத்மம் என்று சொல்லப்பட்ட பிரமசுவரூபத்தை எப்போதும் தியானிக்க வேண்டியது. (அசு)

ஸ்லோ॥ ஏதத³ம்ஶரணமஜ்ஞானாமிதமேவவிஜானதாம் ।
ஏதமன்விச்ச²தாம்ஸ்வர்க³மிதமானந்த்யமிச்ச²தாம் ॥

இந்த வேதாந்தமானது அதன் பொருள் தெரியாமலோதுகிறவனையும்-காப்பாற்றுகிறது. அதன் பொருளறிந்தவர்களையோ சேஷமாய்க் காப்பாற்றுகிறது. கைவல்லியத்தை விரும்பினவர்களுக்கும் மோக்ஷத்தை விரும்புகிறவர்களுக்கும் இதுதான் கதியாக விருக்கிறது. (அச)

ஸ்லோ॥ அனேனக்ரமயோகே³ன பரிவ்ரஜதியோத்³விஜஃ ।
ஸவிதூ⁴யேஹபாப்மானம் பரம்ப்³ரஹ்மாதி⁴க³ச்ச²தி ॥

இந்த விதிப்படி எந்தத்துவிஜன் ஸந்நியாசஞ் செய்துகொள்ளுகிறானோ அவன் சகலபாபங்களையும் இம்மையிலேயே நீக்கி விட்டு மேலான பிரமசுவரூபத்தை யடைகிறான். (அடி)

ஸ்லோ॥ ஏஷதோ⁴நுதி³ஷ்டோவோ யதீ⁴நாந்நியதாத்மனாம் ।
வேத³ஸன்ந்யாஸிகானாந்து கர்மயோக³ந்நிபோ³த⁴த ॥

இது வரையில் மஹாத்மாக்களான சந்நியாசிகளின் பொதுவான தர்மங்களைச் சொல்லிவந்தேன். இனி வேதத்திற்சொல்லிய கர்மங்களைச் செய்துகொண்டு சம்சாரசம்பந்த மில்லாமல் விட்டிலேயே வசிக்கிற சந்நியாசி பேதத்தின் தர்மத்தைச் சொல்லப் போகிறேன் கேண்மின். (அசு)

ஸ்லோ॥ ப்³ரஹ்மசாரீக்ருஹஸ்தஶ்ச வானப்ரஸ்தோ²யதிஸ்ததா² ।
ஏதேக்ருஹஸ்தப்ரப⁴வாஶ்சத்வாரஃபுத்²கா³ஶ்ரமாஃ ॥

தனித்தனியாய்ச் சொல்லப்பட்டிருக்கிற பிரமசாரி-கிரகஸ்தன்-வானப்பிரஸ்தன்-சந்நியாசி இந்த நால்வர்களும் கிரகஸ்தனிடமிருந்தே யுண்டாகிறது. (அள)

ஸ்லோ॥ ஸர்வேபிக்ரமஶஸ்தேஸ்மின் யதா²ஶாஸ்த்ரநிஷேவிதாஃ ।
யஸ்தோ³க்தகாரிணம்விப்ரம் நயந்திபரமாம்க³திம் ॥

சாஸ்திரப்படி அவனவன் கர்மங்களை நடத்திவந்தால் இந்த நால்காசிரமங்களும் தனித்தனியாகவே மோக்ஷத்தைக் கொடுக்கின்றன. (அஅ)

ஸ்லோ॥ ஸர்வேஷாமபிசைதேஷாம் வேத³ஸ்ம்ருதிவிதா⁴னதஃ ।
க்³ருஹஸ்த²உச்யதேஜ்யேஷ்ட²ஃ ஸஸ்ருத்யர்தா²ஹ்யபி⁴ர்ஹிஸஃ ॥

நால்காசிரமிகளுக்குள்ளே வேதம்-தர்மசாஸ்திரம்-இவைகளில் சொல்லுகிற கர்மானுஷ்டானஞ் செய்கிற கிரகஸ்தன் மற்ற மூவரையும் பிரைஷ கொடுத்துக் காப்பாற்றுகிற படியால் அவன் உயர்ந்தவனென்று சொல்லப்படுகிறான். (அசு)

ஸ்லோ॥ யதா²நதீ³நதா³ஸ்ஸர்வே ஸாக³ரேயாந்திஸம்ஸ்தி²திம் ।
ததை²வாஶ்ரமிணஸ்ஸர்வே க்³ருஹஸ்தே²யாந்திஸம்ஸ்தி²திம் ।

* நதி - + நதம் இவைகள் சமுத்திரத்தைச் சேருகிறதுபோல பிரமசாரி-வானப்பிரஸ்தன்-ஸந்நியாசி இவர்கள் கிரகஸ்தனையே பிரைஷக்காகச் சேருகிறார்கள். (கo)

---

* பிழக்குமுகமாய் ஓடுகிற ஆற்றுக்கு நதியென்றும்

× மேற்குமுகமாய் ஓடுகிற ஆற்றுக்கு நதம் என்றும் பெயர்.

శ్లో॥ చతుర్భిరపి చైవైతైర్నిత్యమాశ్రమిభిర్ద్విజైః ।
దశలక్షణకో ధర్మఃసేవితవ్యఃప్రయత్నతః ॥

இந்த நால்வராலும் பத்துவிதமாகமேற் சொல்லப்போகிற தருமமானது முயற்சியினுலடையத் தக்கது. (கூக)

శ్లో॥ ధృతిఃక్షమాదమోస్తేయంశౌచమింద్రియనిగ్రహః ।
ధీర్విద్యాసత్యమక్రోధోదశకంధర్మలక్షణమ్ ॥

அவைகளாவன சந்தோஷம்-தனக்கொருவன பகாரஞ் செய்தாலும் பிரதிசெய்யாமை - மனோநிக்கிரகம் - அந்நியாயமாய்ப் பொருள் கேடாமை-நல்லொழுக்கம்-இந்திரிய நிக்கிரகம்-சாஸ்திரக்கியானம்-பிரமக்கியானம் - உண்மை - கோபமில்லாமை ஆகப்பத்து. (கூ)

శ్లో॥ దశలక్షణాధర్మస్యయేవిప్రాస్సమధీయతే ।
అధీత్యచానుర్తంతేతేయాంతిపరమాంగతిమ్ ॥

இந்தப் பத்துவித தர்மங்களோ எவர்களிருந்து அந்தப்படி நடத்துகிறார்களோ அவர்கள் மேலான மோக்ஷத்தை யடைகிறார்கள். (கூஈ)

శ్లో॥ దశలక్షణకంధర్మమనుతిష్ఠన్సమాహితః ।
వేదాంతంవిధివచ్ఛ్రోత్వాసన్న్యసేదనృణోద్విజః ॥

பத்துவித தர்மங்களையும் அனுஷ்டித்து இந்திரிய நிக்கிரகமுள்ளவனிருக்கிற விசுஸ்தன் மூக்கடையும் தீர்த்து, பின்பு வேதாந்தார்த்தங்களைக் குருவினிடத்தில் கேட்டு, ஸந்நியாஸஞ் செய்துகொள்ள வேண்டியது. (கூஉ)

శ్లో॥ సన్న్యాసర్వక్ర్తాణికర్మదోషానపానుదన్ ॥
నియతోవేదమభ్యస్యవైశ్వర్యేసుఖంవసేత్ ॥

விசுஸ்தாசிரமத்திற் செய்யத்தக்க சகலகர்மங்களையும் நீக்கிவிட்டுப், பிராணயாம முதலானவற்றால் தனக்கு அஞ்ஞானகிருதமான பாவங்களையும் போக்கடித்து, பரிசுத்தனாய் வேதாந்தத்தை யோதிக்கொண்டு, புத்திரனிடத்திலேயே வஸ்திரம்-பிக்ஷை இவைகளை வாங்கிக்கொண்டு, சுகமாக வாசஞ்செய்யலாம். இது தான் குடிச்சாரமென்னும் சன்னியாசி பேதத்தின் தர்மம். (கூடு)

శ్లో॥ ఏవంసన్న్యస్యకర్మాణిస్వకార్యపరమోస్పృహః ।
సన్యాసేనాపహైనసః ప్రాప్నోతిపరమాంగతిమ్ ॥

இப்படிப்பிரகாரம் ஸமஸ்த கர்மங்களையும் நீக்கிவிட்டுத் தானற்சுதியை யடையும்பொருட்டு முயற்சியுள்ளவனுய் ஒன்றிலும் பற்றில்லாதவனுய் ஸந்நியாசஞ்செய்துகொள்ளுகிறவன் பாவத்தைப் போக்கடித்து மேலானகதியை யடைகிறான். (கூசு)

శ్లో॥ ఏషధర్మోభిహితోధర్మ్యో బ్రాహ్మణస్యచతుర్విధః ।
పుణ్యోక్షయఫలఃప్రేత్య రాజ్ఞాంధర్మంనిబోధత ॥

இதுவரையில் பிராமணருடைய நாலுவித ஆசிரமங்களின் தருமங்களை யுங்களுக்குச் சொல்லிவந்தேன் இனி பரிசுத்தமாயும் சுவர்க்கத்தைக் கொடுக்கிறதாயும்இருக்கிற பட்டாபிஷேகஞ் செய்யப்பட்ட அவர்களின் தருமங்களைச் சொல்லுகிறேன் கேளுங்கள். (கூஎ)

ஆறுவது அத்தியாயம் - முற்றிற்று.

ஆக - அத்தியாயம் - சு க்கு - சுலோகம் - ககஅ0.

எ - வது அத்தியாயம்.

இ ராஜ தர்மம்.

శ్లో॥ రాజధర్మాన్ప్రవక్ష్యామియథావృత్తోభవేన్నృపః ।
సంభవశ్చయథాతస్య సిద్ధిశ్చపరమాయథా ॥

முதலாவது—அரசர்கள் இம்மைக்கும்-மறுமைக்கும் - உபயோகமாக நடத்தவேண்டிய தர்மங்களையும், அவர்களுற்பத்தியையும், அவர்களுக்குண்டான பலனையும், விதிப்படி கேளுங்கள்:

శ్లో॥ బ్రాహ్మణంప్రేత్యసంస్కారం క్షత్రియేణయథావిధి ।
సర్వస్యాస్యయథాన్యాయం కర్తవ్యంపరిరక్షణమ్ ॥

வேதத்திற்சொல்லிய உபநயநமுதலான சமுஸ்காரங்கள்செய்து கொண்டவனுயிருக்கிற சுத்திரியனுலே இவ்வுலகம் விதிப்படி காப்பாற்றத்தக்கது. (உ)

அ ர சன் இ ற ப் பு.

ஸ்லோ। அராஜகேஹிலோகேஸ்மிந்-சர்வதோவித்ருதேபயாத் ।
ரக்ஷார்தமஸ்யஸர்வஸ்யராஜானமஸ்ருஜத்ப்ரபுஃ ।

உலகத்தில் அரசனில்லாமற் போனால் பலபுல்லர்களினிடத்தும் பலமில்லாதவர்கள் பயந்து நடுங்கி ஓடிப்போவார்கள். ஆகையினால் இவ்வுலகமெல்லாம் அழியாமலிருக்கும் பொருட்டு, கர்மியானவர் அரசனை உண்டாக்கினார். (க)

ஸ்லோ। இந்த்ராநிலயமார்காணாமக்நேச்சவருணஸ்யச ।
சந்த்ரவித்தேசயோஸ்சைவமாத்ராநிஹ்ருத்யசாச்வதீஃ

இந்திரன் - வாயு - இயமன் - சூரியன் - அக்கினி - வருணன் - சந்திரன் - குபேரன் - இவர்கள் அம்சங்களினாலேயே அரசனை உண்டாக்கப் பட்டான். (உ)

ஸ்லோ। யஸ்மாத்ஏஷாம்ஸுரேந்த்ராணாம் மாத்ராப்யோநிர்ஹ்ருதோஸ்யஃ
தஸ்மாதபிபவத்யேஷஸர்வபூதாநிதேஜஸா ॥

இப்படிக்கொத்த தேவர்களின் அம்சமாகையினால், அரசன் சகல மனிதர்களினிடத்தும் அதிகமான தேஜஸ்வியாயும், அவர்களால் ஆளத்தக்க விரியாதிபனாயும் இருக்கிறான். (ஙி)

ஸ்லோ। தபத்யாதித்யவச்சைவசக்ஷூம்ஷிசமநாம்ஸிச ।
நசைநம்புவிசோல்லோகே சக்தமப்யபிவீக்ஷிதும் ।

இந்தவரசன் சூரியன்போல் கண்களாலும் மனதாலும் கண்களிலும் மனதிலும் தகிக்கிறபடியால் பூமியிலுள்ள ஒருவனும், அவனுக்கெதிராக நின்று பார்க்கக் கூடாதவன் களாயிருக்கிறார்கள். (ங)

ஸ்லோ। ஸோக்நிர்பவதிவாயுச்ச ஸோர்கஸ்ஸோமஸஸோர்யமாட் ।
ஸகுபேரஸ்ஸவருணஸ்ஸ மஹேந்த்ரஃப்ரபாவதஃ ।

அவ்வரசன் தன் மகிமையினால் சமயத்துக்குத் தக்கபடி அக்கினியாகவும், வாயுவாகவும், சூரியனாகவும், சந்திரனாகவும், இயமனாகவும், குபேரனாகவும் வருணனாகவும், தேவேந்திரனாகவும் இருப்பான். (ச)

ஸ்லோ। பாலோபிநாவமந்தவ்யோ மநுஷ்யஇதிபூமிபஃ ।
மஹதீதேவதாஹ்யேஷா நரரூபேணதிஷ்டதி ॥

அவ்வரசன் சிறுவனாக விருந்தபோதிலும் அவனை மனிதனென்று அவமானஞ் செய்யக்கூடாது. எனெனில் மேலானதேவர்களின் கூட்டமே அந்தவரசனுருவமாக விருக்கிற தல்லவா?

ஸ்லோ। ஏகமேவதஹத்யக்நிர்நரமநுபஸர்பிணம் ।
குலம்பஹதிராஜாக்நிஃ ஸபசுத்ரவ்யஸஞ்சயம் ॥

அக்கினியானது அஜாக்கிரதையாய்த் தன்னருகுவந்தவனை மாத்திரம் தகிக்கும். அரசனுகிற அக்கினி கோபித்துக்கொண்டால், குலம் தானியம் புத்திர பித்திரகளத்திராதிகளோடும் அழித்துவிடும். (ஙூ)

ஸ்லோ। கார்யம்சோபேக்ஷ்யக்ஷிப்ரம்ச தேசகாலோசபத்தத்வதஃ ।
குருதேதர்மஸித்த்யர்தம் விஶ்வரூபம்புநஃபுநஃ ॥

அவ்வரசன் காரியாகாரியங்களையும், தன் சக்தியையும் தேசகாலங்களையும், நன்றாகயோசித்துத்தருமசித்தியின் பொருட்டு அநேகம் ரூபத்தை யெடுத்துக் கொள்ளுகிறான். அதாவது: தன்னுக்குப் பலஹீன காலத்தில் அடங்கி யிருப்பான் - பலமுள்ளபோது போர்க்கு வருவான். (ரு0)

ஸ்லோ। யஸ்யப்ரஸாதேபத்மாஶ்ரீர்விஜயஶ்சபராக்ரமே ।
மிருத்யுஶ்சவஸதிக்ரோதேஸர்வதேஜோமயோஹிஸஃ ॥

எந்தவரசன் தயையிலுல் பொருளும், சத்துருஜயமும் உண்டாகிறதோ, எவன் துவேஷத்தினுல் மரண முண்டாகிறதோ, அவன் தேஜோரூபனல்லவா? ஆகலால் பொருளை விரும்பினவனும், சத்துருஜயத்தை விரும்பினவனும், ஜீவித்திருப்பதை விரும்பினவனும், அவனை யெதிர்க்கக்கூடாது. (ரூ)

ஸ்லோ। தமயந்த்வேஷ்டிஸம்மோஹாத்ஸவிநஶ்யத்யஸம்ஶயம் ।
தஸ்யஸ்யுஃக்ஷயவிநாசாயராஜாப்ரகுருதேமநஃ ।

அவ்வரசனிடத்தில் எவன் புத்தியில்லாமையால் துவேஷித்துக் கொள்ளுகிறானோ அவன் முழுகவே யழிந்துபோகிறான். அரசனும் அவனழிகிறதைக் குறித்து யோசிக்கிறான். (ரூ0)

ஸ்லோ। தஸ்மாத்தத்ஸமுத்தேஷு ஸம்வ்யவஸ்யேந்நராதிபஃ ।
அநிஷ்டஞ்சாப்யநிஷ்டேஷு தம்தமஸ்நவிசாலயேத் ।

ஆகலால் - அவ்வரச னெனைகயணுஷ்டிக்கும்படியாயும், எனைகநீக்கும்படியாயும், ஏற்பாடு செய்கிறானோ அதை யொருவரும் தடுக்கக்கூடாது. (ரூக)

மனுதர்மசாத்திரம்.

தண்டப்பிரசம்சை.

ஸ்லோ॥ தஸ்யார்தே ஸர்வபூதானாம் கோப்தாரம் தர்மமாத்மஜம் ।
ப்ரஹ்மதேஜோமயம் தண்ட மஸ்ருஜத்பூர்வமீச்வரः ॥

பிரமா - அவ்வரசன் சகல பிராணிகளையும் காப்பாற்றுவதற்குபயோகமாயும், தர்ம சுவரூபமாயும், பிரம்ம தேஜசுள்ளதாயும் இருக்கிற தண்டத்தை ஏற்படுத்தினர். (கச)

ஸ்லோ॥ தஸ்யஸர்வாணிபூதானிஸ்தாவராணிசராணிச ।
பயாத்போகாயகல்பந்தேஸ்வதர்மான்னசலந்திச ॥

அந்தத் தண்டத்தினிடத்தில் பயத்தினால் சராசரங்களெல்லாம் சுகத்தை யனுபவிக்கிறதுமன்றி, தன்தன் தருமங்களைவிடாமலும் அனுஷ்டிக்கின்றன. (கஙி)

ஸ்லோ॥ தம்தேசகாலௌசக்திஞ்சவித்யாஞ்சாவேக்ஷ்யதத்த்வதः ।
யதார்ஹதஸ்ப்ரணயேன்ன்ருஷ்வஸ்யாயனர்திஷு ॥

குற்றஞ்செய்கிற மனிதர்களுக்குத் தண்டனை செய்யும்போது தேசம்-காலம்-சாமர்த்தியம்-வித்தை இவைகளையெல்லாம் யோசித்துப்பார்த்து அரசன் தக்கபடி சிக்ஷை செய்யவேண்டியது. (கசு)

ஸ்லோ॥ ஸராஜாபுருஷோதண்ட ஸ்நேதாசாஸிதாசஸः ।
சதுர்ணாமாச்ரமாணாஞ்ச தர்மஸ்யப்ரதிபூஸ்ம்ருதः ।

அந்தத் தண்டனையானது அரசனுக்குப் பெருமையையுண்டாக்குவதால் அரசனாகவும், சமஸ்தப் பிராணிகளையும் தண்டித்தலால் புருஷத்தன்மையுள்ளதாயும், சமஸ்தகாரியங்களையும் வெளிப்படுத்தவும், அடக்கவும், சாமர்த்தியமுள்ளதாயிருப்பதால் பிரமசரிய முதலிய நான்கு ஆசிரமங்களின் தருமம் நடப்பதற்குப் பிரதிநிதியாகவும் இருக்கிறது. (கஎ)

ஸ்லோ॥ தண்டஸ்சாஸ்தி ப்ரஜாஸ்ஸர்வா தண்டஏவாபிரக்ஷதி ।
தண்டஸ்ஸுப்தேஷுஜாக்ருதி தண்டம்தர்மம்விதுர்புதாः ॥

தண்டமானது எல்லாப் பிரஜைகளையும் ஆஞ்ஞை செய்கிறது. எல்லாரையுங் காப்பாற்றுகிறது. தூங்குகிறவர்களிடத்தில் விழித்துக்கொண்டிருக்கிறது. ஆகையால் தருமத்தையே தண்டஸ்வரூபமாகப் பெரியோர்கள் சொல்லுகிறார்கள். (கஅ)

ஸ்லோ॥ ஸமீக்ஷ்யஸதிதஸ்ஸம்யக் ஸர்வாரம்பயதேஜகத் ।
அஸமீக்ஷ்யப்ரணீதஸ்து விநாசயதிஸர்வத ॥

நிருத்திக்கப்பட்ட மற்ற சரக்குகளை பொருளாசையால் விற் கிற பிராமணன் எழுதினத்தில் வைசியத்தன்மையை அடைகிறான்.

ஸ்லோ॥ ரஸாரஸைரஸாமான்யாத்வ்யவஹாரோவிதீயதே ।
க்ருதாந்நஞ்சாக்ருதான்நேநதிலாஶ்சாந்யேனதத்ஸமாஃ ॥

தயிரிடத்தில் விருக்கிற வெல்லம் முதலிய இரசங்களை நெய் முதலிய இரசங்களால் மாற்றிக்கொள்ளவேண்டியது. உப்பை மாத்திரம் வேறேசரக்கினால் மாற்றிக்கொள்ளக்கூடாது. எலுமிச் கை அன்னத்தை அரிசியினாலும், எள்ளை சரியான அரிசிமுதலிய தானியத்தாலும் மாற்றிக்கொள்ளவேண்டியது. (கூச)

க்ஷத்திரிய ஆபத்தருமம்.

ஸ்லோ॥ ஜீவேத்தேனராஜன்யஸ்ஸத்வேஷ்டாந்யனயம்கதஃ ।
நத்வேவஜ்யாயஸீம்வ்ருத்திமபிமஸ்யேதகர்ஹிசித் ॥

க்ஷத்திரியன் வைசியனிலும் விருத்தியிலும் பிராமணனுக்கு
விருத்தியிலும் பிழைக்கக்கூடாதபோது, இர
ண்டு மூதலான வியாபாரஞ்செய்தாவது, பிழைக்கலாமேயல்ல
செய்த ஆபத்திலும் தனக்கு மேலான ஜாதியான் தொழிலைச்
செய்ய எண்ணங்கொள்ளக்கூடாது. (கூடு)

ஸ்லோ॥ யோலோபாததர்மோஜாதாஞ்ஜீவேதுதத்ருஷ்டகர்மபிஃ ।
தம்ராஜாநிதநம்க்ருத்வாக்ஷிப்ரமேவப்ரவாஸயேத் ॥

தாழ்ந்த ஜாதியான் பொருளாசையால் தனக்குமேலான
ஜாதியான் தொழிலைச்செய்தால் அவன் பொருண்முழுமையும்
அரசன் கைதக்கொண்டு அவனையும் உடனே ஊராவிட்டோ
ட்டுக. (கூசு)

ஸ்லோ॥ வரம்ஸ்வதர்மோவிகுணோநபாரக்யஃஸ்வநுஷ்டிதஃ ।
பரதர்மேணஜீவந்ஹிஸத்யஃபததிஜாதிதஃ ॥

தனக்குறைய நடத்தினாலும் தன் ஜாதிதருமமே மேலானது
அன்னிய ஜாதி தருமத்தை நன்றாக அனுஷ்டித்தாலும் அதுதாழ
ந்தது. ஒருஜாதியின் தொழிலாற் பிழைக்கிறவன் உடனே அந்த
ஜாதியிலிருந்து பதிதனாவான். (கூள)

வைசியன் ஆபத்தருமம்.

ஸ்லோ॥ வைஶ்யஜீவந்ஸ்வதர்மேணசூத்ரவ்ருத்த்யாபிவர்த்தயேத் ।
அநாசரந்நகார்யாணிநிவர்தேச்சக்திமாந்ந ॥

வைசியன் தன் ஜாதித்தொழிலால் ஜீவிக்கக்கூடாத சம
யத்தில் சூத்திரன் தொழிலினால் ஜீவிக்கலாம். ஆனால்செய்யக்
கூடாததான உச்சிட்டபோஜனமுதலியகாரியங்களைக்கூடுமானவ
ரையில் விடவேண்டியது. கொஞ்சம் சௌக்கிய முண்டானவுட
னே சூத்திரன்தொழிலை விட்டுவிடவேண்டும். (கூஅ)

சூத்திரன் ஆபத்தருமம்.

ஸ்லோ॥ அகுர்வந்விஹிதம்கர்மநிந்திதம்சாபிஸேவயந் ।
ப்ரதிஷேதாந்ஸ்மரம்ஸ்தாத்மாக்ஷீணஜீவீபவேந்நரஃ ॥

சூத்திரன் பிராமணனுக்கு பணிவிடை செய்வதலால் தன்
மனையாள் மைந்தன் முதலானவர்களின் பசியைத்தீர்க்கக் கூட
விடில் பலகார முதலியவற்றைச் செய்து விற்றுப் பிழைக்க
லாம். (கூக)

ஸ்லோ॥ யைஃகர்மபிஃப்ரசரிதைஶ்சூத்ரஸ்யம்தேத்விஜாதயஃ ।
தாநிகாருகர்மாணிஶில்பானிவிவிதாநிச ॥

பின்னும் எந்தத் தொழிலினால் துவிஜாதிகள் உபசரிக்கப்ப
டுவார்களோ அவ்விதமான சிற்பவேலை-தச்சுவேலை இவைகளைச்
செய்தும் ஜீவிக்கலாம். (கூ00)

பிராமணன் ஆபத் தொழில்.

ஸ்லோ॥ வைஶ்யவ்ருத்திமநாதிஷ்டஃ ப்ராஹ்மணஃக்ஷத்ரியோபிவா ।
அவ்ருத்திகர்ஶிதஸ்தீந்நிமம் தர்மம்ஸமாசரேத் ॥

ஜீவன மில்லாமல் வருத்தப்படுகிற பிராமணன்-க்ஷத்திரிய
வைசிய ஜாதித்தொழிலை யனுசரியாமல் தன்ஜாதித் தொழிலினைப்
பிழைக்க நினைத்தால் மேற்சொல்லுகிற தருமப்படி நடத்தலே
ண்டும். (கூ0க)

ஸ்லோ॥ ஸர்வதஃப்ரதிக்ருஹ்ணீயாத்ப்ராஹ்மணஸ்த்வநயம்கதஃ ।
பவித்ரம்துஷ்யதீத்யேதத்தர்மதோநோபபத்யதே ॥

விருத்தியில்லாமல் துன்பப்படுகிற பிராமணன் சங்கராஜாதி
யர் முதலான தகாதவரிடத்திலும் தானம் வாங்கலாம். அதனால்
அவனுக்கு தோஷம்வராது. (உதாஹரணம் பரிசுத்தமான கங்கா
ஜல முதலானவற்றில் தெருத்தண்ணீர்முதலானது விழுவதனால்
தோஷமுண்டாகு மென்பது நியாயமாய் ஒப்புக்கொள்ளத் தக்க
தன்றல்லவா?) (கூ02)

ஸ்லோ॥ நாத்யாபநாத்யாஜநாத்யாக்ரஹீதாத்யாப்ரதிக்ரஹாத் ।
தோஷோபவதிவிப்ராணாம்ஜ்வலநாம்புஸமாஹிதே ॥

விருத்தியில்லாமல் வருத்தப்படுகிற பிராமணனுக்கு தகாத
வனுக்கு ஓதிவைத்தல் - யாகஞ்செய்வித்தல் - நிந்திக்கத்தக்கதா

சாதாரணமல்லாதது இவைகளினால் தோஷமில்லை. அவன் நீர் கேரும்பு இவைகளைப்போல் சுபாவத்தில் பரிசுத்தனல்லவா?

ஸ்லோ॥ ஜீவிதாத்யயமாபன்னோ யோऽந்நமத்தியதஸ்ததஃ ।
ஆகாசமிவபங்கேநநஸபாபேநலிப்யதே ॥

பிராமணன் போகும்படியான ஆபத்தையடைந்தவன் பிரதிலோம ஜாதியான் முதலான எவனுடைய அன்னத்தைச் சாப்பிட்டபோதிலும் ஆகாசத்தில்லெறிந்த சேறுபோல் அவனிடத்திற் பாபமொட்டாது. (க0ச)

உதாஹரணம்.

ஸ்லோ॥ அஜீகர்தச்ஸுதம்ஹந்தும் மாபாஸர்பத்புபுக்ஷிதஃ ।
ஸசாலிப்யதபாபேந க்ஷுத்ப்ரதீகாரமாசரத் ॥

அஜீகர்த்தனென்னும் முனி பசியினால் வருத்தப்பட்டு சுனச்சேபன் என்னும் தன்பிள்ளையை நூறு பசுவை வாங்கிக்கொண்டு எக்கிய பசுவாகக் கொல்லும்படி தானேவிற்றார். பரிக்குமாற்றஞ் செய்தபடியால் அவருக்கு அதனால் பாபம் கேரிடவில்லை. ()

ஸ்லோ॥ ஸ்வமாம்ஸமிச்சந்நாத்மோத்தும்தர்மாந்நமவிசக்ஷணஃ ।
ப்ராணாநாம்பரிரக்ஷார்த்தம் வாமதேவோநலிப்யதா ॥

தருமத்தையும், அதருமத்தையும், நன்றாகவறிந்த வாமதேவரும் பசியினாற் கஷ்டப்பட்டு பிராணனைக் காப்பாற்றும் பொருட்டு நாயின் மாம்ஸத்தைச் சாப்பிட யத்தனித்தார். அதனால் அவருக்குப் பாபம்வரவில்லை. (க0ஞ)

ஸ்லோ॥ பரத்வாஜஃக்ஷுதார்தஸ்து ஸபுத்ரோவஜநேவநே ।
பஹ்வீர்கோஃப்ரதிஜக்ராஹ புஷ்டோ ஸ்ருக்ஷ்மோமஹாதபாஃ ॥

தபமிருந்த பரத்துவாஜமஹாமுனி புத்திரனுடன் நிர்மானுஷ்யமான காட்டில் அதிகபசிகொண்டு விருதுவென்னும் தச்சனிடத்தில் அநேக பசுக்களைத் தானம்வாங்கினார். (க0எ)

ஸ்லோ॥ க்ஷுதார்தஶ்சித்ரமத்யாகாத் த்விஷ்வாமித்ரஃஶ்வஜாகுநீம் ।
நிஷாதஹஸ்தாதாதாய தர்மாதர்மவிசக்ஷணஃ ॥

தருமா தருமங்களையறிந்த விசுவாமித்திரன் பசியினால் துன்பப்பட்டு சண்டாளன் கையிலிருந்த நாயின் முழங்கால் மாம்ஸத்தை வாங்கிச்சாப்பிட யத்தனித்தார். அதனால் அவருக்குப்பாபமுண்டாகவில்லை. (க0அ)

ஸ்லோ॥ ப்ரதிக்ரஹாத்யாஜநாச்சாபி தைவாத்யாபநாதபி ।
ப்ரதிக்ரஹஃஸ்ரேயாம்ஸம் ப்ரேத்யேஹப்ரத்யகாஹ்ருதஃ ॥

கெட்டவனிடத்தில் தானம்வாங்குதல் ஓழுக்கமில்லாதவனுக்கு யாகஞ்செய்விப்பது-ஓதிவைப்பது இம்மூன்றில் முதற் சொல்லியது நாம்ந்தது. அதுபிராமணனுக்கு நரகமேயதுவாகும். (க0க)

ஸ்லோ॥ யாஜநாத்யாபநேநித்யம் க்ரியாதேஸம்ஸ்ருதாத்மநாம் ।
ப்ரதிக்ரஹஸ்துக்ரியதே சூத்ராதப்யந்த்யஜந்மநஃ ॥

ஏனென்றால் யாகஞ்செய்விப்பதும்-ஓதிவைப்பதும்-உபநயனமுதலிய சமஸ்காரமுள்ளவனுக்கே செய்விக்கப்படும். தானம் வாங்குவது சம்ஸ்காரமில்லாத சூத்திரனிடத்திலும்-சண்டாளனிடத்திலும் வாங்கப்படுமாதலால் அதுதாழ்ந்தது. (க0)

ஸ்லோ॥ ஜபஹோமைரநைர்நோயாஜநாத்யாபநைஸ்ததா க்ருதம் ।
ப்ரதிக்ரஹநிமித்தம்துத்யேநதப்யதேவச ॥

தகாதவனுக்குச் செய்துவைத்த எக்கியம்-ஓதல் இவைகளாலுண்டான பாபம் ஜபஹோமங்களால்போக்கடிக்கப்படும். தகாதவனிடத்தில் தானம்வாங்கினபாபம் அத்தப்பொருளைத் தானஞ்செய்தாற்றான் தீரும். (க0க)

ஸ்லோ॥ ஶிலோஞ்சமப்யாததீதப்ரோஜீவந்யத ஸ்ததஃ ।
ப்ரதிக்ரஹாச்சிலஃஶ்ரேயாம்ஸ்தோஹ்யுஞ்ச்யஃப்ரஶஸ்யதே ॥

பிராமணனென்றிறலும் ஜீவிக்கக்கூடாதபோது * சிலத்தினாலாவது † உஞ்சத்தினாலாவது ஜீவிக்கலாம். கெட்டதானம் வாங்குவதைவிட சிலம் மேலானது. அதைவிட உஞ்சம் மேலானது. (க0ஙஎ)

---

* சென்னை கதிர்கொல்லப் பொறுக்குவது சிலம்.
† சென்னை கனிகொல்லப் பொறுக்குவது உஞ்சம்.

శ్లో॥ బ్రాహ్మణక్షత్రయోర్వాపివృద్ధింనైవప్రయోజయేత్ ।
కామంతుఖలుధర్మార్థందద్యాన్నాపీయసేస్వికామ్ ॥

முக்கியமாய் பிராமணனும் க்ஷத்திரியனும் வட்டி வாங்கக் கூடாது. ஆனால் வட்டிப்பொருளை தருமத்துக் குபயோகப்படுத்தலாம். அதிலவிஷயத்தில் கால்வட்டி அல்லது அரைவட்டி வாங்கலாம்.

ஆபத்காலத்தில் தரிய க்ஷத்திரியஜாதித் தொழில்.

శ్లో॥ చతుర్థమాదదానోపిక్షత్రియోభాగమాపది ।
ప్రజారక్షాపరంక్ష్వేడ్యైపాత్ప్రతిమచ్యతే ॥

க்ஷத்திரியன் மிகுந்த ஆபத்காலத்திலும் பிரஜைகளைக் காப்பாற்றுகிற படியால் நூற்றிலொன்று தானியத்தீர்வை வாங்கிக்கொண்டாலும் தோஷத்தை யடையமாட்டான். (ககஅ)

శ్లో॥ స్వధర్మోవిజయస్తస్యనాహవేస్యాత్పరాఙ్ముఖః ।
శస్త్రేణవైశ్యాన్రక్షేత్తైర్వాదద్యాత్పశూన్కృషిమ్ ॥

அந்த க்ஷத்திரியனுக்குச் சத்துருவை ஜயிப்பது ஜாதிதருமம் சண்டையில் பயத்தினால் திரும்பிவரக் கூடாது. ஆயுதமெடுத்து வைசியனைக் கிருடனிடத்திலின்றும் காப்பாற்றித்தருமப்படி மேற்சொல்லும் விகமாக கப்பம் வாங்கவேண்டும். (பொரும்பாலும் வைசியரே பணக்காரராயும், வியாபாரியாயும், இருப்பார்கள் ஆகலால் இங்கு அவர்களைக்குறித்துக் காட்டியது.) (ககக)

శ్లో॥ ధాన్యేష్టమంవిశాంశుల్కంవిశంకాప్యపణావరమ్ ।
కర్మోపకరణాన్మూల్యాత్కారయఃశిల్పినస్తథా ॥

தானிய வியாபாரஞ்செய்கிற வைசியர்களிடத்தில் அந்தவர்பத்தில் இருபதில் எடுப்பதுபோலும், ஐம்பதிலொன்று வாங்கவேண்டிய ருக்கலாபத்தில் இருபதிலொன்றும் வாங்கிக்கொள்ளலாம். எப்போதும் தொழில்செய்கிற சூத்திரர்களிடத்திலும், தச்சன்-கருமான்-முதலிய தொழிலாளிகளிடத்திலும், தினவை வாங்கக்கூடாது. மேற்சொன்னபடி வேலை வாங்கிக்கொள்ளுதல் (கஉ.0) நியாயம்.

శ్లో॥ వైశ్యాశిల్పంభృతిస్సేవాశూద్రంవిప్రేణకృషిః ।
భృతిశ్చభక్ష్యంకుసీదంచదశజీవనహేతవః ॥

வைசியனுக்கு தர்க்கமுதலிய வித்தை-சிற்பவேலைசெய்வது-அடிமைவேலை செய்வது-பசு சுவர்க்கணை-வர்த்தகம்-பயிர்-தயிர் விற்கிறதை யெடுப்பது-வட்டிவாங்குவது இந்த ஜீவனத்துக்குக்காரணமா யிருக்கின் (ககக)

ஸ்லோ॥ நசூத்ரேபாதகம்கிஞ்சின்ன சஸம்ஸ்காரமர்ஹதி ।
வாஸ்யாதிகாரோதர்மேஸ்தி நதர்மாத்ப்ரதிஷேதனம் ॥

சூத்திரனுக்கு சாப்பிடத்தகாத முள்ளங்கிமுதலிய வஸ்துக்களைச் சாப்பிட்டதால் தோஷமில்லை. அவனுக்கு உபநயனமுதலிய சம்ஸ்காரமும் அக்நிஹோத்திர முதலியவும் இடையாது. ஆனால் பாகயஜ்ஞ முதலிய தருமகாரியங்கள் மாத்திரம் அவனுக்கு (கூடுக)
நீக்கப்படவில்லை.

ஸ்லோ॥ தர்மேஸ்யவஸ்துதர்மஜ்ஞா ஸ்தாம்வ்ருத்தமனுஷ்டிதாஃ ।
பஞ்சவர்ஜம்நமஸ்யந்தி ப்ரசஸ்தாம்ப்ராப்னுவந்திச ॥

தன்னுடைய தருமமறிந்த சூத்திரர்கள் துவிஜாதிகளின் தருமமான பாகயஜ்ஞமுதலியதை அனுஷ்டிக்கும்போது வேதமந்திரமில்லாமல் நமஸ்காரமந்திரத்தால் பஞ்சயஜ்ஞங்களோ குலவழக்கப்படி அனுஷ்டித்தால் உலகத்தாரால் நிந்திக்கப்படாமல் கம் (கூடுஎ)
புகழையும் அடைவார்கள்.

ஸ்லோ॥ யதாயதாஹ்யஸத்வ்ருத்தமாத்மனஃ ஸம்பரிக்ரஹம் ।
தத்தாதேவபஞ்சாமம் சலோகம்ப்ராப்னோத்யனிந்திதஃ ॥

சூத்திரன் எப்படி எப்படி புறத்திலுள்ள குணத்தைத் தனக்கு இயல்பாயில்லாதிருந்தாலும் நல்லொழுக்கமாக நடந்துகொள்ளுகிறானோ அப்படியே இம்மையில் புகழப்பட்டவனும் மறுமை (கூடுஅ)
யில் சுகத்தையும் அடைகிறான்.

ஸ்லோ॥ சக்தோபிஹ்யூத்ரவ்ருத்திர்னகார்யோத்தனஸஞ்சயஃ ।
சூத்ரோஹ்யதனமாஸாத்யப்ராஹ்மணான்பாதிபத்ததே ॥

சூத்திரன் பொருள் சம்பாதிக்கத் தக்கவனாயிருக்காலும் குடும்பத்திற்குபயோகமானதைவிட மிகவும் அதிகமாகப் பொருளைச் சம்பாதிக்க கூடாது. அப்படி சம்பாதித்தால் தன்னை உபசரிக்கத்தக்க பிராமணர்களையே நிர்மூலம் செய்யவேண்டிவரும். (கூடுஉ)

ஸ்லோ॥ ஏதேசதுர்ணாம்வர்ணானாமாபத்கர்மப்ரகீர்த்திதாஃ ।
யான்ஸம்யகனுதிஷ்஠ந்தோ ப்ரஜந்திபரமாங்கதிம் ॥

ஸ்லோ॥ சூத்ரஸ்துவ்ருத்திமாகாங்க்ஷன்க்ஷத்ரமாராதயேத்ப்ரபும் ।
தனிநம்வைச்யமாராத்ய வைச்யஃ சூத்ரோஜிஜீவிஷேத் ॥

சூத்திரன் பிராமண சுசுருஷையால் ஜீவிக்கக் கூடாதபோது க்ஷத்திரியனை யாவது, தனிகனான வைசியனையாவது அடுத்து ஜீவிக்கலாம். (கூடுக)

ஸ்லோ॥ ஸ்வர்கார்தமுபயார்தம்வாவிப்ரானாராதயேத்ப்ரபுஃ ।
ஜாதப்ராஹ்மணசப்தஸ்யஸாஹ்யஸ்யக்ருதக்ருத்யதா ॥

சூத்திரன் சுவர்க்கத்திற்காகவாவது, ஜீவனத்திற்காகவாவது, அல்லது இரண்டிற்குமாவது, பிராமணனையே தொழவேண்டும். இவன் பிராமணனையடுத்த சூத்திரனென்று ஒருவனுக்குப்பெயர் வந்தால் அதேயவனுக்குப் பாக்கியம். (கூடுஉ)

ஸ்லோ॥ விப்ரஸ்ஸேவைவசூத்ரஸ்ய விசிஷ்டம்கர்மகீர்த்யதே ।
யதஸ்தோன்யத்கிகுருதே தத்பவத்யஸ்யநிஷ்பலம் ॥

ஆதலால் பிராமணனை யுபசரிப்பதே சூத்திரனுக்கு எல்லாத்தொழிலையும்விட மேலான தருமமென்றும், மற்றவையெல்லாம் பயனில்லாதவையென்றும், தருமகாண்டத்திற் சொல்லியிருக்கிறது. (ஆனால் இங்கு அவனுக்கு பிராமண சுசுருஷையை தவிர செய்த விஷயமெல்லி மற்றதை நிந்திக்கிற விஷயமன்று.) ()

ஸ்லோ॥ ப்ரகல்ப்யைதஸ்யவ்ருத்தீஸ்தாஃ ஸ்வகுடும்பாத்யதார்ஹதஃ ।
க்ஷிப்ரம்சாவேக்ஷ்யசாத்மானம்ச பர்த்யுர்நாம்சபரிக்ரஹம் ॥

பிராமணனும் தனக்கு வேலைசெய்கிற சூத்திரன் சக்தியையும், அவன்செய்யும் பணிவிடையையும் அவன்காப்பாற்றவேண்டிய குடும்பத்தையும் யோசித்து, ஜீவனத்திற்குத் தக்கபடி கூலி (கூடுச)
நியமிக்கவேண்டும்.

ஸ்லோ॥ உச்சிஷ்டமன்னம்தாதவ்யம் ஜீர்ணாநிவஸனானிச ।
புலாகாம்சைவதான்யம் நாம்ஜீர்ணாம்ஶ்சைவபரிச்சதாஃ ॥

பின்னும் சூத்திரனுக்குக்கொடுக்கவேண்டியவை-பழையவஸ்திரம்-கொய் முதலிய தானியம்-பழுதுபட்டபாத்திரம் இவைமுதலானவற்றை சூத்திரனுக்குக் கொடுக்கவேண்டும். (கூடுஇ)

க்குப் பொருளில்லாவிடில் அவரவர் வித்தைக்குத் தக்கபடியெ (கூ)
ன்முதலிய தானங்கொடுக்கவேண்டும்.

ஸ்லோ॥ ஏகேப்⁴யோஹ்யேவிப்ராப்⁴யோ ப்⁴யோ³யமன்னம்ஸதக்ஷிணம் ।
இதரேப்⁴யோபஹ்ரியதி கிருதான்னம்தேயமாப்⁴யதே ॥

பிராமண ஒமோஷ்டர்களான இந்த ஒன்பதுபேருக்குமாத்திரம் எக்கிய * வேதிகையில் தக்ஷிணையுடன் அன்னம்போடலாம். மற்ற (கூ)
வர்களுக்கு வேதிக்கு வெளியில் அன்னம் போடவேண்டும் இது சா
ன்திர மரியாதை.

ஸ்லோ॥ ஸர்வரத்னானிராஜாது யதாஹ்யம்ப்ரதிபாதயேத் ।
ப்³ராஹ்மணாம்ஸ்வேதவிதுஷோ யஜ்ஞார்த்தஞ்சைவதக்ஷிணாம்॥

யாகஞ்செய்யும்போது அதற்கு உபயோகமான மணி - முத்து
முதலிய எல்லா திரவியங்களையும் யாகதக்ஷிணைக்குப் போதுமான
பொருளையும் வேதமோதின பிராமணர்களுக்குத் தன்னிடத்தில் வாங் (ஸ)
கிக்கொள்ளும்படி அரசன் வேண்டிக்கொள்ள வேண்டியது.

ஸ்லோ॥ க்ருதவாரோபரத்வாரத்⁴யாத்வாயோதிரச்சதி ।
ரதமாத்ரம்ஹலம்தஸ்ய த்³ரவ்யவாத்ஸ்துரம்ஸதிஃ ॥

ஒருவன் விவாகஞ்செய்துகொண்டு பிள்ளைபிறந்தபின் காமத்தி
னால் ஒருவனிடத்தில் பொருளாசாரித்து மறுபடி விவாகஞ்செய்து
கொண்டால் அவனுக்கு அந்த ஸ்திரியிடத்தில் புணர்ச்சிதானே பிர
யோசனம். அவனுக்குப்பிறந்த மைதர்கள்செய்யும் திருப்பணிகளுந்
லிய காரியங்கள் பொருள்கொடுத்தவனுடையசாரும். இல்லாகாமத்தி
னால் யாசித்து மறுபடி விவாஹஞ்செய்யக் கூடாதென்பதையும் அவ
னுக்குப் பொருள் கொடுத்தவனுக்கு பலனில்லை யென்பதையும் (ஹ)
சொன்னதேயன்றி சந்ததிவிஷயமன்று.

ஸ்லோ॥ தனானிதஸ்யயாவந்தி ப்ரேஷ்யேஷுப்ரதிபாதயேத் ।
வேதவித்ஸுவிஶேஷேணஶ்ரோத்ரியேஷ்வக்³ர்யஸம்ஸ்தி²தே ॥

பசு - பூமி - பொன்-முதலியவற்றை வேதமோதினவர்களாயும்,
பிள்ளை மனையாள் முதலானவர்களிடத்தில் அதிகப்பற்றில்லாதவர்க
ளாயும் இருக்கிற பிராமணரிடத்தில் தன் சக்திக்குத் தக்கபடி தா (ஸ)
னஞ்செய்தால் சுவர்க்கசுகத்தை யடைவான்.

* வேதியென்பது - யாகசாலைக்குள் அக்னி குண்டமிருக்கும் மேடை.

ருணத்தாருக்கும் ஆபத்தருமம் சொ
ல்லியிருக்கிறது. ஆபத்துக்காலத்தில் இந்தத் தருமங்களை சரியாக
நடத்தவல்லவர்களே சக்தியடையவர்கள். (கூ0)

ஏஷஉத்தமஸாவித்ரஃப்ரோக்தஸ்தவ மயானக⁴ஃ ।
அதஃபரம்ப்ரவக்ஷ்யாமிப்ராயஶ்சித்தவிதிம்ஶுப⁴ம் ॥

இவ்வரையில் தான்கு வருணத்தாருக்கும் ஆசாரவிதியை
முழுதும் சொன்னேன். இனி கோரிட்ட பாபத்தைப்போ
க்குதல் பலமான பிராயச்சித்த விதியை சொல்லப் போகி (கூக)
றேன்.

பத்தாவதத்தியாயம்-முற்றிற்று.

* அத்தியாயம் - கo க்கு - சுலோகம் உக்ஷகூ.

கக - வது அத்தியாயம்.

பிராயச்சித்த விதி.

ஸ்லோ॥ ஸம்ஸாதகம்யஜ்ஞ்யமானமத்⁴வர்யுஃஸர்ஸவேதஸம் ।
ஸர்வஷ்டம்பித்ருமாத்ரஷ்டம் ஸ்வாத்⁴யாயாத்⁴வர்யுபதாபினஃ ॥

தக்ஷிணை விருத்தியின் பொருட்டு கலியாணத்துக்காக யாசிப்ப
வனையும், பிராயச்சித்தமாக மேல் விதிக்கப்போகிற படி
அத்தானம் கொடுக்கத்தக்கவர்களை முன்பு சொல்லுகிறார்.
செய்யவேண்டிய ஜோதிஷ்டோமாதி யாகத்திற்காக யாசி
செய்யப்போகிறவன், குரு சகதர்மிணிக்கும் தாயைக்காப்பாற்ற
காப்பாற்றவும்-வேதமோதவும் - யாசிப்பவர்கள், (க)

ஸ்லோ॥ ஸ்நாதகாஸ்தத்ரவித்³யாத்³ ப்³ராஹ்மணாத்⁴வர்யவஸ்ததா ।
ஏஷ்வேவ்ஹ்யோத்³தே³யமேதேப்⁴யோ தானம்வித்³யாவிஶேஷதஃ ॥

இந்தவேதபண்டிதர்களையும் ஸ்நாதகப்பிராமணரென்றும், தரு
மபத்தினிகளையும் ஸ்நாதகப்பிராமணிகளென்றும், அறிந்து அவர்களு

శ్లో॥ యో వైశ్యస్యాద్బహు పశుహీనక్రతురసోమపః ।
కుటుంబాత్తస్యతద్ద్రవ్య మాహరేద్యజ్ఞసిద్ధయే ॥

அதிகபசு முதலியவற்றால் செல்வமுடையவனையும், யாகஞ் செய்யாதவனையும், * ஸோமபானம் பண்ணுதவனையும் இருக்கின்றவைசியன் வீட்டிலிருந்து கேட்டுகொடாவிடில் வலிமைசெய்தாவது - களவுசெய்தாவது - அந்தயாகத்திற்குவேண்டிய திரவியத்தை யாகஞ்செய்வோன் கொண்டுவரலாம். (கஉ)

శ్లో॥ ఆహరేత్త్రీణివా ద్వేనా కామంశూద్రస్యవేశ్మనః ।
నహిశూద్రస్యయజ్ఞేషు కశ్చిదస్తిపరిగ్రహః ॥

அவ்விதவைசிய னில்லாவிடில் யாகத்திற்கு இரண்டு மூன்று அல்லது அதிக அங்கக்குறைந்தாலும் செல்வமுள்ள சூத்திரன் வீட்டிலிருந்து யதேஷ்டமாக போசனையின்றிக் கேளாமலும் வலிமையினால் கொண்டுவரலாம். ஏனென்றால் அவனுக்கு (கக)
ருயாகத்திலுஞ் சம்பந்தமில்லையல்லவா?

శ్లో॥ యోనాహితాగ్నిశ్శత గురయాజ్వాచసహస్రగుః ।
తయోరపికుటుంబాభ్యా మాహరేదవిచారయన్ ॥

பின்னும் அவ்வித சூத்திரனில்லா விட்டாலும் அக்கினி ஹோத்திரஞ் செய்யாத பிராமணன் நூறுபசுவைக் காப்பாற்றுகிறவனாகவும் - யாகஞ்செய்யாதவன் ஆயிரம் பசுவைக்காப்பாற்றுகிறவனாகவும் இருந்தால் அவர்கள் வீட்டிலிருந்தும் மேற் சொல்லிய அங்கங்களை விசாரிக்காமல் கொண்டுவரலாம். (கச)

శ్లో॥ ఆదాననిత్యాచ్చాదాతురాహరేదప్రయచ్ఛతః ।
తథాయజ్ఞప్రసక్తేధర్మ్యైశ్చవప్రవదన్నితే ॥

தினந்தோறுந் தான்தானம் வாங்குகிறவனையும் தானெருவனுக்குந் தானங்கொடாதவனையும் இருக்கிறவனை மேற்சொல்லிய யாகத்திற்காக வேண்டியபொருளைக் கேழ்க்க. கொடாவி

---

* ஸோமபானமென்பது - ஓர்யாகவிசேஷம்; அது இருவகைப்படும் தீக்ஷியமென்றும் - காம்யமென்றும். தீக்ஷி சந்தியாவந்தனஜபம்போல் அவயம் செய்யவேண்டியது தீக்ஷியம். ஒருபலனை விரும்பிச்செய்வது காம்யம்.

శ్లో॥ యజ్ఞార్థేద్విజాతిభిర్దేయా దక్షిణాయజ్ఞవృద్ధయే ।
అధికంవాపివ్యయతస్సోమంపాతుమర్హతి ॥

எவனுக்கு மூன்றுவருஷத்திற்காவது அல்லது அதற்கு மேற்பட்டாவது குடும்ப சம்ரக்ஷணைக்குப் போதுமான திரவியமிருக்குமோ, அவன் காம்யஸோமபானஞ் செய்யலாம். நித்தியஸோமபானத்திற்கு இக்கவேற்பாடில்லை. (ஏ)

శ్లో॥ అతఃస్వల్పీయసిద్రవ్యేయస్సోమంపిబతిద్విజః ।
సపీతసోమసుల్పోపీనతస్యాప్నో త్యతిఫలమ్ ॥

மேற்சொன்ன வகைக்குக்குறைந்த பொருளுள்ளவன் காம்ய ஸோமபானஞ்செய்தால் அவன் அதற்குமுன் செய்த நித்திய ஸோமபானத்தின் பலனையும் அடையமாட்டான. (அ)

శ్లో॥ శక్తపరజనేచాత్మాన్యజనేదుఃఖజీవని ॥
మధ్వాపానోవిషాన్యేదఃసదర్శ్నస్యూషకః ॥

அதிகபொருளுள்ள எவன் தன் தாய்தந்தைமுதலிய பந்துக்கள் வறுமையினால் கஷ்டப்படும்போது இம்மையில் புகழுக்காக அன்னியருக்குத் தானங்கொடுக்கிறானே அந்தத்தானம் தருமமன்று. அது முன்னம் தேன்போல் ருசியுள்ளதாயும், பின்பு விஷம்போல் துன்பப்படுத்துகிற தாயுமிருக்கும். அதாவது யமதூதர்பார்க்கச்சேர்ந்தவுடனே பிரேதம் முன்னம் தேன்போல் ருசியுள்ளதாயும் பின்பு ஈரக முண்டாகுமென்று சொல்லுதல். (கூ)

శ్లో॥ భృత్యానాముపరోధేనయత్కుర్యాద్భృత్యదైవతమ్ ।
తద్భవత్యసుఖోదర్కంజీవతశ్చమృతశ్చయత్ ॥

பின்னும் எவன் பிள்ளை மனைவிமுதலிய அவசியம் போஷிக்கவேண்டியவர்களைத் துன்பப்படுத்திப் பரலோகத்திற்காகத்தானஞ் செய்கிறானே அந்தத்தானமும் அவனுக்கு இம்மையிலும் மறுமையிலும் உபத்திரவத்தையே யுண்டுபண்ணும். (கo)

శ్లో॥ యజ్ఞార్థేపశవశ్శృష్టాస్స్వయమేవస్వయంభువా ।
యజ్ఞస్యభూత్యైసర్వస్యతస్మాద్యజ్ఞేవధోవధః ॥

யாகஞ்செய்கிற கூத்திரியனுக்கும், அதிலும் விசேஷமாய் பிராயாகத்திற்கு எல்லா அங்கமுமிருந்து யாதாவது ஒரு அப்போது அரசனும், தருமிஷ்டனாகவிருந்தால்.

வது அபகரித்தாவது யாகஞ்செய்கிற சத்புருஷனுக்குக் கொடுப்பானே அவன் தன்னை யோடமரக்கி பொருட்காரணையும் யாகஞ் செய்கிறவனையும் காயேற்றி வைக்கிறான். (அதாவது பொருள் நல்ல விஷயத்தில் உபயோகமானதாலும் பொருளில்லாதவனுண்டான துன்பம் நீங்கினதாலும் இருவருக்கும் முறையே முண்டாகிறது.) (கக)

శ్లో॥ యద్ధనంయజ్ఞశీలానాందేవస్వంతద్విదుర్బుధాః ।
అయజ్వనాంతుయద్విత్తమాసురస్వంతదుచ్యతే ॥

யாகஞ்செய்கிறவன் பொருளை தேவதைகளின் பொருளென்றும், பெரியோர்கள் சொல்லுகிறார்கள். ஆதலால் ஆசுரப்பொருளை தேவப்பொருளாக்குவது தருமமாகும். (உ0)

శ్లో॥ నతస్మిన్ధారయేద్దండంధార్మికఃపృథివీపతిః ।
క్షత్రియస్యహిచాలిన్యాబ్రహ్మణస్సీదతిక్షుధా ॥

தருமசிக்தையுள்ள அரசன் இவ்விதமாக திருடிவந்து யாககாரியஞ்செய்கிற பிராமணனை தண்டிக்கக்கூடாது. அரசன் மூடத்தன்மையால் பிராமணன் பசியினால் துன்பத்தை யடைகிறான்.

శ్లో॥ తస్యభృత్యజనంజ్ఞాత్వాస్వకుటుంబాన్మహీపతిః।
శ్రుతశీలేచవిజ్ఞాయవృత్తింధర్మ్యాంప్రకల్పయేత్ ॥

ஆதலால் அரசனந்தப் பிராமணன் குடும்பத்தையும் தருமகடையையும், ஓதினவேதத்தையும், ஒழுக்கத்தையும் பார்த்துத்தன் அரண்மனையிலிருந்து அவனுக்குப் போதுமான ஜீவனவிருத்தியை ஏற்படுத்தவேண்டும். (உ2)

శ్లో॥ కల్పయిత్వాస్యవృత్తించరక్షేదేనంసమంతతః ।
రాజాహిధర్మషడ్భాగంతస్మాత్ప్రాప్నోత్యరక్షితాత్ ॥

அந்தப் பிராமணனுக்கு ஜீவனமுண்டாக்கி நாலுபக்கத்திலும் அவனைக் காத்தால், அவன் செய்கிற தருமத்தில் ஆறிலொன்று அரசனுக்குவரும். (உக)

శ్లో॥ నయజ్ఞార్థధనంశూద్రాద్విప్రోభిక్షేతకర్హిచిత్ ।
యజమానోహ్యభిక్షిత్వాచండాలఃప్రేత్యజాయతే॥

டில் வரவழைத்தாவது - களவுசெய்தாவது - அவன் வீட்டிலிருந்து கொண்டுவரலாம். இப்படிசெய்தால் தருமம் வளரும். (அதாவது அந்தப் பொருளுடையவனுக்கும் நற்கதியுண்டாகுமாதலால் இது தருமமிருந்தி.) (கஐ)

శ్లో॥ తస్మైవస్వమేభక్తేభక్తానివదనశ్మతా ।
భశ్వస్తనవిధానేనహర్తవ్యంహీనకర్మణః ॥

அப்படியே மூன்றுதினம் உபவாசமிருந்து அவனுக்கு நாலானுள் போஜனத்திற்காகப் பொருளில்லாவிடில் தானதருமஞ்செய்யாதவனிடத்திலின்றும் ஒரு தினத்திற்குப் போதுமான பொருளை களவுசெய்தாவது கொண்டுவரலாம். (கக)

శ్లో॥ ఫలాత్క్షేత్రాదగారాద్వాయతోవాప్యుపలభ్యతే ।
భభ్యాహృతవ్యంతత్తస్మైపృచ్ఛతేయదిపృచ్ఛతి ॥

யாகஞ்செய்யாதவன் தானியம் - களம் - கழனி-வீடு இவற்றில் எவ்விடத்தில் அகப்படுகிறதோ அவ்விடத்திலின்றுமெடுத்துக்கொள்ளலாம். உடையவன் ஏன்றிருடினாயென்று கேட்டால் தான் செய்யும் யாகாதிதருமகாரியத்தை அவனுக்குச் சொல்லவேண்டும். (கள)

శ్లో॥ బ్రాహ్మణస్వంనహర్తవ్యంక్షత్రియేణకదాచన ।
దస్యునిష్క్రియయోస్తుస్వమజీవన్హర్తుమర్హతి ॥

க்ஷத்திரியனுக்கு இவ்வித ஆபத்து நேரிட்டாலும் அவன் ஒருபோதும் பிராமணன் பொருளை யபகரிக்கக்கூடாது. வேறு எந்தவிதத்தாலும் பொருளைப் பட்டதான மிகுந்த ஆபத்து அவனுக்கு வந்தால் சந்தியாவந்தன முதலிய திருத்தியத்தைச் செய்யாமலும், திருடுதல்முதலிய அகிர்த்தியத்தைச் செய்கிறவனும் இருக்கிற பிராமணன் க்ஷத்திரியன் இவர் பொருளை யபகரிக்கலாம். (கஅ)

శ్లో॥ యోసాధుభ్యోధనమాదాయసాధుభ్యస్సంప్రయచ్ఛతి।
సకృత్వాప్లవమాత్మానం సంతారయతితావుభౌ ॥

தான்யாகஞ்செய்யாமலிருக்கிறானும் எவன் யாகமுதலிய தருமஞ்செய்கிற ஸ்ரேஷ்டனிடத்திலிருந்த பொருளை வாங்கியா

ஸ்ரீ॥ விசைவ்யேச்சைவைஸ்யாத்யைச்சப்ராஹ்மணைச்சமுக்யைர்வா ।
ஆபத்ஸுசரணாஸ்தைர்வைர்வ்யோ: ப்ரதிநிதிக்ருதோ: ॥

விசுவதேவர் - சாத்தியர் - பிராமணர் - மகரிருஷிகள் இவர்க
ளனைவருங்கூடி ஆபத்காலத்திலும் முக்கிய தருமத்தையே பய
ஷ்டித்தால் மாஸும் சேரிடமேயென்று பயந்து முக்கியமான தரு
மத்திற்குப் பதிலாக கெளணதருமத்தை ஆபத்திற் கேற்பாடு செ
ய்தார்கள். ஆதலால் நோதகாலத்திற்கு மாத்திரம் தோஷமில்லை.

ஸ்ரீ॥ ப்ரபுர்ப்ரதமகல்பஸ்ய யோநுகல்பேநவர்ததே ।
நசாம்பராயிகம்தஸ்ய துர்மதிர்வித்யதேபலம் ।

ஆதலால் முக்கிய அநுஷ்டானத்திற்கு அதிகாரியாயிருந்து
கொண்டு அநுஷ்டானத்தைச் செய்தால் அந்தப் புத்திகெட்டவன் (கூ0)
மறுமையிற் பலனை யடைகிறதில்லை.

ஸ்ரீ॥ நக்ராஹ்மணோபயஞ்சி ராஜநிதர்மவித் ।
ஸ்வவீர்யேணைவதாச்சிஷ்யா ந்மாநவாநபகாரிண: ॥

தருமமறிந்த பிராமணன் அரசனிடத்தில் ஒருவழக்குஞ்
சொல்லிக்கொள்ள வேண்டியதில்லை. தனக்கபகாரஞ் செய்பவர்
களை தானே யபிசார மந்திரத்தின் வீரியத்தினால் சிக்ஷிக்கலாம்.
அதாவது இந்த தனக்கு அன்னியாயம் செய்பவனை தானும்
சிக்ஷிக்கலாமென்று கருத்தேதவிர அரசனிடத்தில் அறிவிப்ப (கூக)
தை நிந்திக்க விஷயமன்று.)

ஸ்ரீ॥ ஸ்வவீர்யாத்ராஜவீர்யாச்ச ஸ்வவீர்யம்பலவத்தரம் ।
தஸ்மாத்ஸ்வேநைவவீர்யேண நிகுர்ய்யாத்தரிதத்விஜ: ॥

சுவாதீனமான தன்சக்தி பராதீனமான அரசன்சக்தி - இவ்
விரண்டில் தன்னுடையசக்தியே மேலானது. ஆகையால் பிரா
மணன் தன்சக்தியிலேயே சத்துருக்களையடக்கவேண்டும். அவ
ர்களின் சக்தியை பின்னால் முறைசெய்கொண்க. (கூஉ)

ஸ்ரீ॥ ஸ்ருதிரதர்வாங்கிரஸீ: குர்யாதித்யவிசாரயந் ।
வாக்சஸ்த்ரம்வைப்ராஹ்மணஸ்ய தேநஹந்யாதரிதத்விஜ: ॥

அதர்வணவேதத்திற் சொல்லிய ஆங்கிரசமுதலிய அபிசார
மந்திரங்களை யோசியாமற் பிரயோகிக்கலாம். அந்தமந்திர முன்

செய்தால் சண்டாளனைப் பிறப்பான். கோமாம விருக்கும்போ
தும் வேறுயில் அவன் கொடுத்ததை வாங்கினால் குற்றமில்லை.
மேல் பாசஞ் செய்யும்போது மத்தியில் பொருளில்லாதிருந்
தால் ஸ்ரோத்ரன்பொருளை உபயோகப் படுத்தலாமென்று சொல்
லியது. இங்கு முக்கியமாய் எல்லாப்பொருளையும் வாங்கக்கூடா
தென்பது. (உச)

ஸ்ரீ॥ யஜ்ஞார்தமர்தஞ்சிக்ஷித்வாயோநசர்வம்ப்ரயச்சதி ।
சயாதேபாசதாம்ப்ராஹ்மகாதாம்வாசதம்சமா: ॥

ஒரு பிராமணன் யாகத்திற்காக யாசித்து வாங்கினபொருளை
முழுதும் அந்த யாகத்தில் தானஞ்செய்யாவிடில் அந்தப் பிராம
ணன் பாசப்படி அல்லது காகமாகவாவது பிறந்து நூறுவருஷ
மிருப்பான். (உடு)

ஸ்ரீ॥ ஜீவந்ப்ராஹ்மணஸ்வம்வாலோபேநோபஹிநஸ்தியய: ।
சபாபாத்மாபரேலோகேக்ருத்தோச்சிஷ்டேநஜீவதி ॥

ஆசையினால் தேவசொத்தையாவது பிராமணன் சொத்தை
யாவது அபகரித்த பாபியானவன் மறுபிறப்பில் கழுகுதின்ன மா
மிசமீதியினால் ஜீவிப்பான். (உசு)

ஸ்ரீ॥ ஐஷ்டிம்வைச்யாக்நேரிம்நித்யம்நிர்வபேத்பசுபர்யயே ।
ஸ்ரீப்தாநாம்பசுஸோமாநாம்நிர்ம்ருத்யுர்ஹரணம்சம்ஸவேத் ॥

மேற்சொல்லியபடி நித்திய சோமயாகஞ் செய்யகூடாவி
னால் அதற்குப் பிராயச்சித்தமாக வருஷந்தோறும் சித்திரை மா
சத்தில் ஒருவிசை வைசுவானர எஷ்டியையாவது செய்யவே
ண்டியது. (உஎ)

ஸ்ரீ॥ ஆபத்யப்யேநயோதர்மம்குருதேநாபதிர்த்விஜ: ।
ஸநாப்நோதிபலம்தஸ்யபரத்ரேதிவிசாரிதம் ॥

பிராமணனவன் தனக்கு ஆபத்தில்லாதபோது ஆபத்கால
தருமத்தையநுஷ்டித்தால் பரலோகத்தில் அதன்பயனை யடை
யாதென்று பெரியோர்கள் நிச்சயஞ் செய்திருக்கிறார்கள்.

னிகாரிய மறிக்கவனுயு மிருக்கிறவனே ஹோமஞ் செய்யவேண்டு
மெம். ஆதலால் தனக்கு அலக்ஷ்மிபம் கேரிட்டபோது தக்கவர்
களைக் கொண்டே ஹோமஞ்செய்யச் சொல்லவேண்டியது. ()

ஸ்லோ॥ ப்ராஜாபத்யமதஸ்வாஶ்ய மக்ன்யாதேயஸ்யதக்ஷிணாம் ।
அனாஹிதாக்னிர்பவதி ப்ராஹ்மணோவிபவேஸதி ॥

ப்ராமணன் பொருளுள்ளவனைகவிருந்து அக்னி * ஆதா
னஞ் செய்துகொள்ளும்போது ப்ராஜாபதியைத் தேவதையாகவு
டைய அசுவத்தை தக்ஷிணையாகக் கொடாவிடில் ஆஹிதாக்னி
யாகமாட்டான். ஆதலால் ஆதானகாலத்தில் அசுவத்தை தானம்
செய்யவேண்டியது. (சுஎ)

ஸ்லோ॥ புண்யான்யன்யானிகுர்வீத ச்ரத்தாதோஜிதேந்த்ரியஃ ।
நஶ்வலபக்ஷிணைர்யஜ்ஞைர்ய ஜேதேஹகதஞ்சன ॥

புண்ணியகாரியத்தில் அன்புள்ளவன் இந்திரியங்களை யடக்
கிக்கொண்டு தீர்த்தயாத்திரை முதலான புண்ணியங்களை அன்
போடு செய்யக்கடவனே யல்லது ஒருபோதும் கொஞ்சக் தக்ஷி
ணையையுடைய யாகத்தைச் செய்யக்கூடாது. (சுஅ)

ஸ்லோ॥ இந்த்ரியாணியஶஃஸ்வர்க மாயுஃகீர்திம்ப்ரஜாஃபஶூன் ।
ஹந்த்யல்பதக்ஷிணோயஜ்ஞ ஸ்தஸ்மான்னாலுதனோயஜேத் ॥

கக்ஷிணை கொஞ்சமாகக் கொடுத்து யாகஞ்செய்தால் கண்
முதலிய இந்திரியங்கள் இம்மையில் யஸஸ் - புத்திரர் - பசுக்
கள் - ஆயுள், மறுமையிற் கீர்த்தி - சுவர்க்கம் இவையெல்லாம்
அழிந்துபோய்விடும். ஆகையால்சொற்ப தனமுள்ளவன் யாகஞ்
செய்யக்கூடாது. (சூ0)

ஸ்லோ॥ அக்நிஹோத்ர்யவிதுஷ்யாத ப்ராஹ்மணஃகாமகாரதஃ ।
சாந்த்ராயணஞ்சரேன்மாஸம் பீர்ஹத்யாஸமம்ஹிதத் ॥

அக்னிஹோத்ரியான ப்ராமணன் காமகாரத்தினல் இர
ண்டு காலம் ஹோமஞ் செய்யாவிட்டால் அது புத்திர ஹத்திக்

* ஆதானமென்பது - அக்னிஹோத்ரி செய்யவேண்டிய ஓர் கரும
விசேஷம்.

காரத்தேதிராமனைவுக் காயுதமாகையால் அதைக்கொண்டே
பகவன் சத்துருவை ஜயிக்கவேண்டும். (சுக)

ஸ்லோ॥ க்ஷத்ரியோபாஹவீர்யேண தரேதாபதமாத்மனஃ ।
தனேனவைஶ்யஶூத்ரௌதுஜபஹோமைர்த்விஜோத்தமஃ ।

க்ஷத்திரியன் தன்புஜபலத்தினல் தன்னுடைய ஆபத்தைப்
போக்கவேண்டும். வைசிய சூத்திரர்கள் தன்பொருளைக் கொடுத்
தாதி தங்கள் ஆபத்தைப் போக்கிக்கொள்ளவேண்டும். ப்ராம
ணன் மேற்சொன்னபடி அகோரமந்த்ரத்தினல் செய்யப்படுகிற
செபஹோமங்களால் ஆபத்தைப் போக்கிக்கொள்ள வேண்டும்.

ஸ்லோ॥ வேதாதாஶ்ராவிதாவக்தாமைத்ரோப்ராஹ்மணஉச்யதே ।
தஸ்மைனாகுஶலம்ப்ரூயான்னாஶுஶ்ரூஷாங்கிரமேத் ॥

சாஸ்திரத்தில் விதித்தகர்மங்களை அனுஷ்டிக்கிறவனையும்,
சிஷ்டியாதிகளை சிக்ஷிக்கிறவனையும், ப்ராயச்சித்தமுதலிய தரு
மத்தை விதிக்கிறவனையும், யாவருக்கும் மித்திரனையும் இருக்கிற
ப்ராமணன் மித்திரப் ப்ராமணனெனறு சொலலப்படுகிறான்.
ஆதலால் அவனுக்கு அனிஷ்டமானதைச் சொல்லவும் அவனைத்
தூச்சமாய்ப் பேசவும் நினைக்கவுங்கூடாது. (சுஞ)

அக்னிஹோத்ரி விஷயம்.

ஸ்லோ॥ நவைதான்யாநயவதிராலுவிதோ்நபாலிஶஃ ।
ஹோதாஸ்யாதக்னிர்ஹோத்ரஸ்யவார்தோநாஸம்ஸ்ருத ஸ்ததா ॥

விவாகமாகாதகன்னிகை - புத்ரி - அம்பவித்தையுள்ளவன் -
மூடன் அல்லது சிறுவன் - துக்கமுள்ளவன் - பிணியினன் - உப
நயனமுதலிய சம்ஸ்கார மில்லாதவன் இவர்கள் ஒருவனுடைய
ஹவிர்காக்னியில் அவனுக்காக ஹோமஞ்செய்யக்கூடாது. ()

ஸ்லோ॥ நரக்ஷிபஶுந்த்ர்யேஜ்ஜுஹ்வத்ஸ்ருசயஸ்ருதத் ।
தஸ்மான்னைவேதானஶ்ருலோர்ஹோதாஸ்யாத்வேதபாரகஃ ॥

ராஜாவுக்காக ஹோமஞ்செய்தால் அக்னிக் குடையவனுடன்
ராஜாவுக்கும் பாபமுண்டாகும். ஆகையால் வேதமறிந்தவனையும், அதிக

ஸ்லோ॥ அகாமதஃகृதம்பாபம் வேதாப்⁻யாஸேனசுத்⁻யதி ।
காமதஸ்துகृதம்மோஹா த்ப்⁻ராயச்சித்தைஃபृதக்விதைஃ ॥

இவ்வளவு பாபம் வருமென்று தெரியாமையால் செய்த பாபம் வேதாத்⁻யயனத்⁻தினாற் போய்விடும். தெரிந்து வேண்டுமென்று மூடத்தனத்தால் செய்தபாவம் தர்மம் தவம்முதலிய பல பல பிராயச்சித்தங்களால் போகும். (சசு)

ஸ்லோ॥ ப்⁻ராயச்சித்⁻தீயதாம்ப்⁻ராப்⁻ய நைவாத்பூர்வக்ருதேனஹ ।
நஸம்ஸர்க³ம்வ்ரஜேத்தைஃ ப்⁻ராயச்சித்தைக்ருதேத்விஜஃ ॥

பிராமணன் முதலியவர்கள் முன் ஜனனத்தில் செய்த வினையாலாவது இந்த ஜனனத்தில் தெய்வகதியாலாவது பிராயச்சித்தங்கள் செய்துகொள்ளும்படியான பாபம்நேரிட்டால், செய்துகொள்ளுகிறவரையில் பெரியோர்களுடன் யஜனயாஜனாதி காரியங்களில் சேராமலிருக்கவேண்டும். (சஎ)

ஸ்லோ॥ இஹதுச்சரிதைஃகேசித்கேசி த்பூர்வக்ருதைஸ்ததா ।
ப்ராபுஃனவந்திதுராத்மானோ நராரூபவிபர்யயம் ॥

சில துராத்துமாக்கள் இப்பிறவியின் வினையினாலும், சில துராத்துமாக்கள் முன் செய்த வினையாலும், விகாரரூபத்தை யடைகிறார்கள். (சஅ)

பாபசுவரூபம்.

ஸ்லோ॥ ஸுவர்ண-சோரஃகானத்⁻யம் ஸுராபஃத்⁻யவபந்தகாம் ।
ப்³ரஹ்மஹத்யரோகித்வம் தாச்சர்ம்⁻யம்குருதல்பகஃ ॥

முன்பிறப்பில் சுவர்ணந் திருடினவன் கோண நகத்தையும், சுராபானஞ் செய்தவன் சொற்றைப்பல்லையும், பிரம்மஹத்தி செய்தவன் க்ஷயரோகத்தையும், குருபத்தினியைப் புணர்ந்தவன் பீஜமில்லாமையையும். (சக)

ஸ்லோ॥ பிசுனஃபூதினாஸிக்⁻யம் ஸூசகஃபூதிவக்த்ரிகாம்।
தான்⁻யசோரோங்கஹீனத்வ மாதிரைக்த்⁻யம்துமித்ரகஃ ॥

ஸ்லோ॥ அகாமதஃகृதம்பாபம் வேதாப்⁻யாஸேனசுத்⁻யதி ।
காமதஸ்துகृதம்மோஹா த்ப்⁻ராயச்சித்தைஃபृதக்விதைஃ ॥

இவ்வளவு பாபம் வருமென்று தெரியாமையால் அதற்கு பிராயச்சித்தமாக ஒருமா[illegible] விதமிருக்கவேண்டும். (சச)

ஸ்லோ॥ ஹீனூத்ரோததி⁻கம⁻ர்த்த மக்³னிஹோத்ரமுபாஸதே ।
஋த்விஜாஸ்தேஹீனூத்ரோணாம் ப்³ரஹ்மாவாதிஷுகர்ஹிதாஃ ॥

அந்தப் பிராமணர்கள் சூத்திரனிடத்திற் பொருளை தானம் வாங்கி அக்னி ஹோத்திரஞ் செய்கிறார்களோ அவர்கள் அந்த சூத்திரனுக்கு நித்துவிக்குளாகச் சொல்லப்படுவார்களே அதின் பயனை யடையமாட்டார்கள். பின்னும் பிரமவாதிகளால் பழிக்கப்படுவார்கள். (சஎ)

ஸ்லோ॥ தேஷாம்ஸதத⁻மஜ்ஞானாம்வ்ருஷலாக்³ர்⁻யஸேவினாம் ।
பதாமஸ்துக்ரமாக்ரம்⁻யதாதாதுர்க³ணிஸம்தரேத் ॥

அவ்விதமாக சூத்திரன்பொருளால் அக்னி ஹோத்திரஞ் செய்கிற அந்தமூடனை பிராமணன் நடுவழியில் பொருள்கொடுத்த சூத்திரனவன் காலிலைவத்தேறி பரலோகத்தில் கல்லு கஷ்டங்களை காண்கிறான். (சஅ)

ஸ்லோ॥ அகுர்வன்விஹிதங்கர்மநிந்தி தஞ்சஸமாசரன் ।
ப்ரஸக்தஶ்சேந்த்⁻ரியார்தே²ஷுப்ராயச்சித்தீ⁻யதேநரஃ ॥

காரியமும் செய்யத்தக்க சந்தியாவந்தன ஹோத்தியங்களையும் செய்யாதவனும், ஜீவஹிம்சை முதலிய அதிர்த்தியங்களையும் செய்பவனும், மனம்போனபடி விஷயப் பற்றுள்ளவனுமிருப்பவனும் பிராயச்சித்தஞ் செய்துகொள்ளத் தக்கவனாவான். (சச)

ஸ்லோ॥ அகாமதஃகृதேபாபே ப்ராயச்சித்தம்விது³ர்பு³தா: ।
காமகாரம்கृதேப்⁻யாஹுரேகேஶ்ருதினிதர்ஶனாத் ॥

தெரியாமையால் செய்த பாவத்திற்கு பிராயச்சித்த முண்டென்று பெரியோர்கள் சொல்லுகிறார்கள். சிலர் காமகாரமாகச் செய்த பாவத்திற்கும் பிராயச்சித்த முண்டென்று வேத திருஷ்டாந்தமாய்ப் பாவஞ்செய்து பிராயச்சித்தஞ் செய்து [illegible] (சஅ)

ஒருவனிடத்திலிருக்கிற தோஷத்தைச் சொன்னவன் நாற்ற மூக்கையும், இல்லாத தோஷத்தைச்சொன்னவன் நாற்ற வாயையும், தானியத்திருடினவன் அங்கக்குறைவையும், நல்ல தானியத்தில் கெட்டதைக்கலந்து விற்றவன் அதிகவங்கத்தையும். (கூ0)

ஸ்லோ॥ அன்னஹர்த்தாமயாவித்வம் நூக்ஷ்யம்வாஅபஹாரகஃ ॥
வஸ்த்ரோபஹாரகஃவைத்ரம்பங்குதாமஶ்வஹாரகஃ ॥

சோறுதிருடினவன் அக்கினிபுஷ்டியில்லாமையையும், குருவுக்குத் தெரியாம லோகினவன் ஊமைத் தன்மையையும், வஸ்திரந் திருடினவன் வெண்குஷ்டத்தையும், குதிரைதிருடினவன் கொண்டித் தன்மையையும், மறுபிறப்பில் அடைவான். (கூக)

ஸ்லோ॥ ஏவங்கர்மவிஶேஷேணஜாயந்தேஸத்விகாதிஷு ।
ஜடமூகாந்தபதிராபிகுதாகுதயஸ்ததா ॥

இவ்விதமான கருமபேதங்களால் ஜடனையும் - ஊமையாயும் - குருடனையும் - செவிடனையும் பிறந்து விகார மூள்ளவர்களாயும் - பெரியோர்களால் நிந்திக்கப் பட்டவர்களாயும் - முன் அனுபவித்ததுபோக மிகுதி இருக்கிறதை யனுபவிக்கிறார்கள்.

ஸ்லோ॥ சரிதவ்யமதோநித்யம்ப்ராயஶ்சித்தம்விஶுத்தயே ।
நிந்தைர்ஹிகலுபுண்யைர்யுக்தாஜாயந்தேநிகுதைனஸஃ ॥

ஆகையால் எப்போதும் செய்த பாபங்களுக்குப் பிராயச்சித்தஞ் செய்துகொள்ள வேண்டும். இல்லாவிடில மறுமையில் நரகத்தை யனுபவித்தும் பழிக்கத்தக்க அடையாளங்களோடும் பிறப்பார்கள். (கூக)

ஸ்லோ॥ ப்ரஹ்மஹத்யாஸுராபானம்ஸ்தேயங்குர்வன்னராமஃ।
மஹாந்திபாதகான்யாஹுஸ்ஸம்ஸர்கஶ்சாபிதைஸ்ஸஹ ॥

ப்ரமஹத்தி - சுராபானம் - சுவர்ணம் - திருட்டு - குருபத்தினியைப் புணர்தல், இவர்களோடு தனித்தனியே சேர்ந்திருத்தல், ஆக இவ்வைவகும் மஹா பாதகங்கள். (கூச)

ஸ்லோ॥ அனுதஞ்சஸமுத்க்ஷேபராஜாமிசபைஶுனம் ।
குரோஶ்சாலீகநிபந்தஶ்சமானிப்ரஹ்மஹத்யயா ॥

பெரியோரிடத்துப் பொய்சொல்லுதல் - அரசனிடத்தில் ஒருவனுக்கு பிராணஹானி வரும்படி கோட்சொல்லுதல்-குருவுக்குப் பொய்யாக வொரு தோஷத்தைக் கற்பித்தல் இவைகள் பிரமஹத்திக்குச் சரியானவைகள். (கூஎ)

ஸ்லோ॥ ப்ராஹ்மணஸ்யாவதஶ்சிந்தா கோடஸாக்ஷ்யம்சுஹார்த்தஹஃ ।
கர்ப்பஶாதனத்யோஜக்தி ஸ்சுராபானசமானிஷட் ॥

ஒதினவேதத்தை மறப்பது - தர்க்கசாஸ்திர யுக்தியைக் கொண்டு வேதத்தை நிந்திப்பது - பொய்சாக்ஷி சொல்லுதல்-மித்திரனைக் கொல்வது - நிந்திக்கப்பட்டவைகளான மல முதலியவற்றைச் சாப்பிடுதல் இந்த ஆறும் சுராபானத்திற்குச் சரியானது. (கூசு)

ஸ்லோ॥ நிக்ஷேபஸ்யாபஹரணம் நராஶ்வரஜதஸ்யச ।
பூமிவஜ்ரமணீனாஞ்சருக்மஸ்தேயசமம்ஸ்மிருதம் ॥

நிக்ஷேபம் - மாணுடன் வெள்ளி - குதிரை - பூமி-வச்சிரம் மணி இவைகளைத்திருடுவது சுவர்னத்திருட்டுக்குச் சரியானவை.

ஸ்லோ॥ ரேதஸ்ஸேகஃஸ்வயோனிஷுகுமாரீஷ்வந்த்யஜாஸுச ।
ஸக்யுஃபுத்ரஸ்யசஸ்த்ரீஷுகுருதல்பசமம்விதுஃ ॥

தன் சகோதரிகள் - கன்னியாஸ்திரீகள் - சண்டாளஸ்திரீ - தோழன் - பிள்ளை இவர்களின் மனையாள் இவர்களைப்புணர்வது குருபத்தினியைப் புணர்ந்ததற்குச் சரியானது. (கூஅ)

உபபாதகம்.

ஸ்லோ॥ கோவதோயாஜ்யஸம்யாஜ்யம்பாரதார்யாத்மவிக்ரயம்।
குருமாத்ருபிதுத்யாகஃஸ்வாத்யாயாக்நிஸுதஸ்யச ॥

கோஹத்தி, ஈனனுக்கு யாகஞ்செய்வித்தல், ஒருவன் மனையாளைப் புணர்தல், தன்னைவிற்றல், குரு - தாய்-தந்தை-வேதம்-அக்கினி - புத்திரன் இவர்களை உபசரியாமல் நீக்குதல், பிரமஎக்கியம் செய்யாமை. (கூக)

ஸ்லோ॥ பரிவித்திதானுஜேனபரிவேத்தனமேவச ।
தயோர்தானஞ்சகன்யாயாஸ்தயோரேவசயாஜனம் ॥

சக்தி யிருந்து அக்கினி ஹோத்திரஞ் செய்யாமை போல் நிந்தகலாக மற்றவைகளை திருடுகை, கடனைத் தீர்க்காமை, கெட்ட சாஸ்திரத்தை யோதுதல், கூத்தாடுதல், பாடுதல். (கூடி)

ஸ்லோ॥ தான்யகுப்யபசூஸ்தேயம் மத்யபஸ்த்ரீநிஷேவணம் ।
ஸ்த்ரீசூத்ரவிட்க்ஷத்ரவதோ நாஸ்திக்யம்சோபபாதகம் ॥

தானியம் - லோகம் - பசு இவைகளைத் திருடுதல், குடிக்கிற மதுவாயினைப் புணர்தல், ஸ்திரீ - சூத்திரன் - வைசியன் - க்ஷத்திரியன் இவர்களைக் கொல்லுதல், இவையெல்லாம் தனித்தனியே உபபாதகமென்றறிக. (கஉ)

ஜாதிப் பிரம்சகரம்.

ஸ்லோ॥ ப்ராஹ்மணஸ்யருஜஃகர்த்தா சூத்ரஸ்த்ரியமத்யயோஃ ।
மைத்ர்யம்சமைதுனம்பும்ஸி ஜாதிப்ரம்சகரம்ஸ்மृதம் ॥

பிராமணனுக்கு நோயுண்டாக்குதல், கள்-வெண்காயம்-மலம் இவைகளை முகருதல், புருஷன்வாயில் மைதுனஞ் செய்தல் இவையெல்லாம் தனித்தனியே ஜாதிப் பிரம்சகரங்களாம். (கஎ)

ஸங்கரீ கரணம்.

ஸ்லோ॥ கராஶ்வோஷ்ட்ரம்ருகோஜாநா மஜாவிகவதஸ்ததா ।
ஸங்கரீகரணம்ஜ்ஞேயம் மீநாஹிமஹிஷஸ்யச ॥

கழுதை - குதிரை - ஒட்டகம் - மிருகம் - யானை - வெள்ளாடு - செம்மறியாடு - மக்சம் - பாம்பு - எருமைக்கிடா இவைகளைக்கொல்லுதல் தனித்தனியே ஸங்கரீகரணமாகும். (கஅ)

அபாத்ரீ கரணம்.

ஸ்லோ॥ நிந்திதேப்யோ(அ)தனாதானம் வாணிஜ்யம்சூத்ரஸேவனம் ।
அபாத்ரீகரணம்ஜ்ஞேயம ஸத்யஸ்யசபாஷணம் ॥

க்ஷத்திரியன் கர்மகாரத்தினாலே பிரம்மஹத்தி செய்தால், தன்னை பிரமஹத்தி செய்தவனென்றறிந்து, ஒருவில்லாளி கொல்லும்படியாக அவன் பாணத்திற்குக் குறியாகக்கடவன். அந்தப்பாணத்தாலடிபட்டு இறக்காலும், பிழைத்தாலும், பரிசுத்தனாவான். அல்லது எரிகின்ற நெருப்பில் தலைகீழாக மூன்றுவிசை விழக்கடவன். (எட)

ஸ்லோ॥ யஜேதாஸ்வமேதேனஸ்வர்ஜிதாகோஸவேனவா ।
அபிஜிதிவிஸ்வஜிதாப்யாம்வாத்ரிவிதாகிஷ்டிதாபிவா ॥

மூன்றுவருணத்தாரும் அக்கியானத்தால் பிரம்மஹத்திசெய்தால் அசுவமேதம் - சுவர்ஜித்து - கோமேதம் - அபிஜித்து - விஸ்வஜித்து - திரிவிருத்து - அக்நிஷ்டுத்து இவைகளிலொரு யாகமாவது செய்யவேண்டும். (எச)

ஸ்லோ॥ ஜபன்வான்யதமம்வேதம்யோஜனானாம்சதம்வ்ரஜேத் ।
ப்ரஹ்மஹத்யாபனோதாயமிதிஹஜிஷ்ணுர்யதேந்த்ரியஃ ॥

வேத மோதினவர்களாயும், அக்நி ஹோத்திரிகளாயும் இருக்கிறமூன்று வருணத்தாரும் ஒழுக்கமில்லாத பிராமணனை அக்கியானத்தாற் கொன்றுவிட்டால் அந்தத் தோஷனீங்குவதற்காக, ஜிதேந்திரியனாய் கொஞ்சமாகப்புசித்துக்கொண்டு, நூறுயோசனை தூரம், வாயில் புண்ணியயாத்திரை செய்யவேண்டும்.

ஸ்லோ॥ சர்வஸ்வம்வேதவிதுஷேப்ராஹ்மணாயோபபாதயேத் ।
தனம்வாஜீவனாயாலம்க்ருஹம்வாஸபரிச்சதம் ॥

ஜாதிமாத்திர பிராமணனை அக்நியானத்தால் தனிகனுனபிராமணன்கொன்றால் வேதமோதின பிராமணனுக்குதன்னுடையசகல ஆஸ்திகளையும் தானஞ்செய்யவேண்டும்; அல்லதுஅவன்ஜீவனத்துக்குப் போதுமான விருத்தியை சுபித்து பாத்திரமுதலிய சாமக்கிரியைகளோடு வீட்டையாவது கொடுக்க வேண்டும்

ஸ்லோ॥ ஹவிஷ்யபுக்வானுஸரேத்ப்ரதிஸ்ரோதஸ்வரஸ்வதீம் ।
ஜபேத்வானியதாஹாரஸ்த்ரிர்வைவேதஸ்யஸம்ஹிதாம் ॥

ஜாதிமாத்திர பிராமணனை தீணமுள்ள பிராமணன் கொன்றால் காட்டுநெல்லிப் பொறுக்கிச் சாப்பிட்டுக்கொண்டு நதிக்கரையில் வசித்து நெய்சாதம் புசித்து மூன்றுவிசை வேதத்தை ஜபிக்கவேண்டும்.

இரக்கிக்கப் பட்டவனிடத்துப் பொருள்வாங்குதல், வர்த்தகஞ்செய்தல், குத்திரசேவை பண்ணுதல், பொய்சொல்லுதல், இவையெல்லாந் தனித்தனியே அபாத்திரீகரணம். (சுசு)

மலினீ காரணங்கள்.

ஸ்லோ॥ க்ரிமிகீடவயோஹத்யா மத்யானுகதபோஜனம் ।
ஸ்தேயதாகுசுமஸ்தேய மதைர்யஞ்சமலாவஹம் ॥

புழு - பூச்சி - பக்ஷி இவைகளைக் கொல்லுதல், கள்ளுக்கடையில் வைத்துக்கொண்டுவந்த காய்முதலியவற்றைச் சாப்பிடுதல், பழம் - விறகு - புஷ்பம் இவைகளைத்திருடுதல், சொற்பவியாபகத்தில் லகிமமாக வியசனப்படுதல் இவையெல்லாந் தனித்தனியேமலினீ காரணங்கள். (சஅ)

ஸ்லோ॥ ஏதான்யேனாம்சிஸர்வாணி யதோக்தானிபிருதக்பிருதக் ।
மைரைர்வ்ரதைரபோஹ்யந்தே தானிசம்யக்நிபோதத ॥

இப்போது சொல்லிவந்த பிரமஹத்தி முதலிய பாபங்களெல்லாம் எந்தெந்தப் பிராயச்சித்தத்தால் போக்கடிக்கப்படுமோ அதை நன்முகவறியுங்கள் (எக)

பிரமஹத்தி பிராயச்சித்தம்.

ஸ்லோ॥ ப்ரஹ்மஹாத்வாதசசமாஃ குடீம்க்ருத்வாவனேவஸேத் ।
பைக்ஷ்யாஶாத்மவிஸுத்தர்தம் க்ருத்வாசவசிரோத்வஜம் ॥

குணமுள்ள பிராமணன் அஜ்ஞானத்தால் பிரம்மஹத்தி செய்து விட்டால் அந்தப் பிராமணன் மண்டையோடு-அல்லது மற்றொரு மண்டை யோட்டையாவது கையில் அடையாளமாகவைத்துக்கொண்டு நாடோறும் ஏழுவீட்டில் பிக்ஷை யெடுத்துப்புஜித்துத் தான் பரிசுத்தனாகும் பொருட்டுப் பன்னிரண்டுவருஷம் காட்டில் குடிசைபோட்டுக்கொண்டு வாசஞ் செய்யவேண்டும். (கஉ)

ஸ்லோ॥ அப்யம்சஸ்ருபிருதாம்ஜாஸ்யே த்விதுபாமிச்சயாத்மனஃ ।
[illegible] தானமுகாஸானமித்தேத்ரிரவாக்சிராஃ ॥

இவ்விதமாக நாடோறும்உறுதியானவிரதமுள்ளவனுய்மன தை யடக்கிக் கொண்டு பன்னிரண்டு வருஷம் வரையில் ஸ்தீரீ போகமில்லாமல் பிசகூயெடுத்துஜீவித்தால் பிரம்மஹத்திதோ ஷத்தினின்று நீங்குவான். (அக).

ஸ்லோ॥ க்ஷத்ரியாவாஹூமி தேவானாம்நர தேவசமாகமே ।
ஸ்வமேனோவபிருதஸ்நானதோஹ்யமேதேவிமுச்யதே ॥

நற்குணமுள்ள பிராமணன் வேதமோதாத ஒருபிராமணனை அஞ்ஞானத்தில் கொன்றுவிட்டால் அசுவமேதஞ் செய்கிற அரசன் முன்பாக அந்த யாகத்தில் நிற்துவிக்காக விருக்கிற அநேகம் பிராமணருக்கெதிரில் தான்செய்த பிரமஹத்தியைச்சொல்லி அவர்களிடத்தில் ஆஞ்ஞை பெற்றுக்கொண்டு அந்த யாகமுடிவில் அவபிருத ஸ்நானஞ்செய்து தன்பாபத்தைப் போக்கடித்துக்கொள்ளலாம். (அஉ)

ஸ்லோ॥ தர்மஸ்யப்ராஹ்மணோமூலமக்ரம்ராஜன்யஉச்யதே ।
தஸ்மாத்ஸமாகமேதேஷாமேனோவிக்ஷ்யாப்யசுத்தயே ॥

ஏனென்றால் பிராமணன் தருமத்தை உபதேசிப்பதால் அதற்கு அடியாயும், க்ஷத்திரியன் தருமம் கெடாமல் காப்பாற்றுவதால் நுனியாயும், இருக்கிறார்கள். ஆதலால் அவ்விருவர் சமூகத்தில் தன்பாபத்தைத் தெரிவிப்பது அசுவமேதத்திலும் அவபிருத ஸ்நானஞ்செய்தால் பரிசுத்தனாகிறனென்று சொல்லப்பட்டது. (அங)

ஸ்லோ॥ ப்ராஹ்மணஸ்ஸம்பவேனைவதேவானாமபிதைவதம் ।
ப்ரமாணம்சைவலோகஸ்யப்ராஹ்மணைர்வசகாரணம் ॥

பிராமணன் பிறப்பினாலேயே தேவர்களுக்கும் பூசிக்கத்தக்கவனாக விருக்கிறான். மனிதர்களுக்குள் மிக்கும் உயர்ந்திருக்கிறான் என்பதில் கேள்க்கவேண்டியதில்லை. பின்னும் உலகத்தாருக்கு நம்பத் தகுந்த பிரமாணமாகவிருக்கிறான். இவ்விஷயத்தில் அவனுபதேசிக்கிற வேதமந்திரமே காரணம். (அச)

ஸ்லோ॥ தேஷாம்வேதவிதோப்ரூயாத்ஸ்த்ரியோஹ்யேனஃஸுனிஷ்க்ருதிம் ।
ஸாதேஷாம்பாவனாயஸ்யாத்பவித்ராவிதுஷாம்ஹிவாக் ॥

சொல்லி ஏகாக்ரசித்தனுய்க் கண்ணுக்குத் தெரிகிறதுவரைக்கும் அதனுற் பயனில்லாவிடில் பிரயாகத்திற்கு எதிராகப்போகவேண்டியதில்லை; நியமமாக மேற்சொன்னபடி புசித்துக்கொண்டு விரதத்தையும் முன்றுகரம் ஓகவேண்டும். (எஎ)

ஸ்லோ॥ க்ருத்வாபனோநிவஸேத்க்ராமாந்தேகோவ்ரஜேபிவா ।
ஆச்ரமீவ்ருக்ஷமூலேவாகோப்ராஹ்மணஹிதேரதஃ ॥

மேற்சொன்ன பன்னிரண்டு வருஷவனாயில் விதிப்படி சுபம் செய்துகொண்டு - ஊர் ஓரத்திலிருக்கப்பட்ட மாட்டுத் தொழும் அல்லது இருஷி ஆசிரமம் - மரத்தடி இந்தவிடத்திலிருக்கொண்டு பசு-பிராமணர் இவர்களுக்குபகாரஞ்செய்யவேண்டியது. (எஅ)

ஸ்லோ॥ ப்ராஹ்மணார்தேகவார்தேவாஸத்யப்ராணாந்பரித்யஜேத் ।
முச்யதேப்ரஹ்மஹத்யாயாகோப்தாகோப்ராஹ்மணஸ்யச ॥

அந்தப் பன்னிரண்டு வருஷத்துக்குள் பிராமணனுயாவது பசுவையாவது நீர்-நெருப்பு இவற்றிலிருந்து காப்பாற்ற வுத்தேசித்து ப்ராணனை விட்டாலும் அல்லது அவர்களைக் கள்ளரிடத்தினின்றும் மீட்டுக்கொடுத்து வேறெவிதத்திற் காப்பாற்றினாலும் பிரமஹத்தியினின்றும் நீங்குவான். (எக)

ஸ்லோ॥ த்ரிவாரம்ப்ரதிரோத்தாசாஸர்வஸ்வமபஜித்யவா ।
விப்ரஸ்யதத்நிவித்தேவாப்ராணாலாபேவிமுச்யதே ॥

அல்லது ஒருபிராமணனுடைய எல்லாப்பொருளையும் இருட்டுக்கொண்டுபோகிற திருட்டன் மூன்றுகரம் சண்டைசெய்து அந்தத்திருட்டைப் பிடித்தாலும், பிடியாவிட்டாலும், ஓடாடவையில் ப்போருக்குப்பிடித்தவந்துகொடுத்தாலும், பிரம்மஹத்தியினின்று நீங்குவான்; அல்லது அந்தப் பிராமணன் அந்தத்திருட்டைப் போன பிராணனை யத்தனித்தால் அந்தப் பிராமணனுடைய பொருளைக்கொடுத்தெ காப்பாற்றினாலும் பிரம்மஹத்தியினின்று நீங்குவான். (அ0)

ஸ்லோ॥ ஏவம்விஜ்ஞாயவ்ருத்தஸ்தஸ்யாத்ப்ரஹ்மசாரீசமாஹிதஃ ।
[illegible]
ப்ரஹ்மஹத்யாம்வ்யபோஹதி ॥

சுரா பானப் பிராயச் சித்தம்.

ஸ்லோ॥ சுராம்பீத்வாத்விஜோமோஹா தக்னிவர்ணாம்சுராம்பிபேத் ।
தயாசகாயேனிர்தக்தே நுச்யதேகில்பிஷாத்ததஃ ॥

துவிஜர்கள் காமகாரத்தில் பைஷ்டியென்னும் சாராயத்தை (கூ0)
க்குடித்தால் அதற்குப் பிராயச்சித்தமாக அந்தச்சாராயத்தையே
கொருப்பு நிறமாகக்காய்ச்சி குடிக்கக்கடவர். அதனால் அவனுடல்
வெந்துமீபாறல் பரிசுத்தனவான்.

ஸ்லோ॥ கோமூத்ரமக்நிவர்ணம் வாபிபேத்யுதகமேவவா ।
பயோகுருதம்னாமரணா த்கோசகுத்ரசமேவவா ॥

அல்லது நெருப்பு நிறமாகக் காய்ச்சப்பட்ட கோமூத்திரம், (கூக)
தண்ணீர், பசுவின்நெய், பால், சாணச்சலம் இவற்றிலொன்றை
தானிறக்கும்படி ஒருகாலமேனும் இரண்டுதரமேனும் சாப்பிட
வேண்டும்.

ஸ்லோ॥ க்ருணான்யாபக்ஷயேத்வர்ஷம் பிண்யாகம்வாஸகருந்நிசி ।
சுராபானாபனுத்யர்த்தம் வாலவாஸாஜடீத்வஜீ ॥

தெரியாமல் சுராபானஞ் செய்தவன் அந்தப்பாபத்தைப் (கூஉ)
போக்குகிறதற்காக கந்தைவஸ்திரம் - சடை இவைகளைத்தரித்
துக்கொண்டு - சாராயச் சட்டியை, கையில் அடையாளமாக
வைத்துக்கொண்டு-ஒருவருஷம்வரையில் கொய்யையாவதுபிண்
ணாக்கையாவது இரவிலொருவேளை சாப்பிட்டுக்கொண்டு இருக்க
வேண்டும்.

ஸ்லோ॥ சுராவைமலமன்னானாம் பஷ்மாசமலமுச்யதே ।
தஸ்மாத்ப்ராஹ்மணராஜன்யவைச்யாச்சனசுராம்பிபேத் ॥

பைஷ்டியென்னும் சாராயமானது, அரிசியின் மாவினால் (கூங)
செய்யப்படுகிறபடியால் அது அன்னங்களின்மலம்; அந்தமலத்
திற்கு பாபமென்றுபெயர். ஆகலால் மூன்றுவருணத்தாரிலொ
ருவனும் அதைக்குடிக்கக்கூடாது.

ஸ்லோ॥ கௌடீம்பைஷ்டீசமாத்வீச விஜ்ஞேயாத்ரிவிதாசுரா ।
யத்தைவைகாதசாசர்வா நபாதவ்யாத்விஜோத்தமைஃ ॥

ஆகலால் பிராமணர் எதிரில் தான்செய்த பாபத்தைச்சொ
ல்லிக்கொண்டால் அதற்கு மூன்றுக்குக்குறையாத வேதமோதி
ன பிராமணர், எந்தப் பிராயச்சித்தத்தை விதிப்பார்களோ, அ
தைச்செய்தால் அந்தப் பாபம் போய்விடும். ஏனென்றால் அவர்
கள் வாக்கே பரிசுத்தமான தல்லவா?

ஸ்லோ॥ அஜோஜ்ஞதமமாஸ்தாய விதிம்விப்ரஸ்சமாஹிதஃ ।
ப்ரஹ்மஹத்யாக்ருதம்பாபம் வ்யபோஹத்யாத்மவத்தயா ॥

பிரமஹத்திசெய்த பிராமணன், இப்போது சொல்லி வந்த (அடு)
பிராயச் சித்தங்களுக்குள் யாதாவதொன்றைப் பரிசுத்தமுடன் சா
க்ஷிரதையுடன் செய்தால் தோஷத்தினின்று நீங்குவான்.

ஸ்லோ॥ ஹத்வாகர்ப்பமவிஜ்ஞாத மேதத்வேவ்ரதஞ்சரேத் ।
ராஜன்யவைச்யசேஜானா வாத்ரேயீமேவசஸ்த்ரியம் ॥

பிராமண கருப்பத்தை யறிக்காதும், யாகஞ்செய்ய யுத்த (அக)
னித்திருக்கிற க்ஷத்திரியன் - வைசியன் - ருதுஸ்நாலஞ்செய்திருக்
கிற பிராமணப்பெண்ணிவர்களைக் கொன்றாலும் இந்தப்பிரம ஹத்
திக்கு விதித்த பிராயச் சித்தத்தையே செய்யவேண்டும்.

ஸ்லோ॥ உக்த்வாவைசானृதம்சாக்ஷ்யே ப்ரதிருத்த்யகுருந்ததா ।
அபஹ்ருத்யசநிக்ஷேபம் க்ருத்வாசஸ்த்ரீஹிரண்யஹ்ருத்வதம் ॥

பூமி - பொன் இவைமுதலிய விஷயத்தில் பொய்சாக்ஷிசொ (அஎ)
ன்னவனும், குருவுக்கு அபவாதங் கற்பித்தவனும், தோழமோக
கொன்றவனும், ஆஹிதாக்கினியான பிராமணனுடைய தருமபத
னியைக கொன்றவனும், பிரமஹத்தி பிராயசித்தமே செய்து
கொள்ளவேண்டும்.

ஸ்லோ॥ ஏயம்பைஸுத்திருதா ப்ரமாப்யாகாமதோத்விஜம் ।
காமதோப்ராஹ்மணவதே நிஷ்க்ருதிர்ன விதீயதே ॥

இதுவரையில் அக்கியானத்தால் பிராமண வதை செய்தத
ற்கு பிராயச் சித்தஞ் சொல்லப்பட்டது. அடங்கிஞல் வேறு
மொன்றுசெய்த பிரமஹத்திக்குப் பிராயச்சித்தமே விதிக்கப்பட
வில்லை. (அதாவது அதற்கு இந்தப் பிராயச் சித்தம் போராது.
இதற்குஇடப்பாயாவது மூன்றுபங்காயாவது செய்யவேண்டு
மென்று சொல்லி)

(அஅ)

சாராயம், *சௌடி-†பைஷ்டி-‡மாத்வி என மூவகைப்படும். இவற்றில் பைஷ்டிக்கும்மற்ற விரண்டுக்கும் ஒன்றுக்கொன்று பேதமில்லை; ஆகையால் இவையெல்லாவற்றையும் துவிஜாதிகள் குடிக்கக்கூடாது.

(கூச)

శ్లో॥ యక్షరక్షఃపిశాచాన్నం మద్యం మాంసం రాసవమ్ ।
తద్బ్రాహ్మణేనవాత్తవ్యం దేవానామశ్నతా హవిః ॥

அநேகவிதமான கள்-மாம்ஸம்-மூன்றுவித சாராயம் ¶ ஆகவும் இவைகள் இராக்கதர்-யக்ஷர்-பைசாசர்-அசுரர் இவர்களின் உணவு ஆதலால் தேவான்னமான ஹவிசைப்புசிக்கிற அந்தணர் புசிக்கக்கூடாது. (இதுபிராமணஸ்திரீகளுக்குக்தான்விதித்தது.)

శ్లో॥ అమేధ్యేవాపతేన్మత్తో వైదికంవాప్యుదాహరేత్ ।
అకార్యమన్యత్కుర్యాద్వా బ్రాహ్మణోమదమోహితః ॥

ஏனென்றால் அந்தணன் சாராயங் குடித்து மயக்கத்தை யடைந்தால், மலத்தில் விழுவான். அல்லது வேதமந்திரத்தை யாவது தகாதவிடத்திற்சொல்லுவான். அல்லது பிரமஹத்தி மூதலிய தகாத காரியங்களையாவது செய்வான். (இது அனேவரு க்கும் சரியானதாக விருந்தாலும் அந்தணனைக் குறித்தது பிரதானமையாலென்று அறிக)

(கூசு)

శ్లో॥ యస్యకాయగతంబ్రహ్మ మద్యేనాప్లావ్యతేసకృత్ ।
తస్యవ్యపైతిబ్రాహ్మణ్యం శూద్రత్వంచసగచ్ఛతి ॥

எவனிடதேகத்தில் வசிக்கிற அந்தரியாமியான பரப்பிரம்மமானது ஒருவிசையாவது சாராயத்தால் நனைக்கப்படுமோ அவனுக்குப் பிராமணத்தன்மைபோய் சூத்திரத்தன்மைவரும்; ஆதலால் ஒருபோதும் குடிக்கக்கூடாது.

(கூஎ)

శ్లో॥ ఏషావిచిత్రాభిహితా సురాపానస్యనిష్కృతిః ।
అతఊర్ధ్వంప్రవక్ష్యామి సువర్ణస్తేయనిష్కృతిమ్ ॥

---

*சௌடி என்பது வெல்லத்தால் செய்யப்பட்டது, † பைஷ்டி என்பது கோதுமையால் செய்யப்பட்டது, ‡ மாத்வி என்பது இலுப்பைப் பூவினால் செய்யப்பட்டது.

¶ இதனும் மற்றும் இதுபோல் வருவனவும் புதியபிரதிகள்.

இப்போது சுராபானத்திற்கு பலவிதமான பிராயச்சித்தமும் சொல்லப்பட்டது. இனி பொன்திருட்டுக்குப் பிராயச்சித்தமும் சொல்லப்போகிறேன்.

(கஅ)

பொன்திருட்டுக்குப் பிராயச்சித்தம்.

శ్లో॥ సువర్ణస్తేయకృద్విప్రో రాజానమభిగమ్యతు ।
స్వకర్మఖ్యాపయన్బ్రూయా న్మోభవాననుశాస్తివితి ॥

பொன்னைத் திருடின பிராமணன் அந்தப்பொன்னையுடையவனிடத்தில் கொடுத்துவிட்டு தன்தோளில் உலக்கையையைவைத்துக்கொண்டு அரசன்முன்பாகப்போய் தன்குற்றத்தைச்சொல்லி என்னை நீர் தண்டிக்கக்கடவீரென சொல்லவேண்டும்.

(கூக)

శ్లో॥ గృహీత్వాముసలంరాజా సకృద్ధన్యాత్తుతంస్వయమ్ ।
వధేనశుద్ధ్యతిస్తేనో బ్రాహ్మణస్తపసైవతు ॥

அரசன் தானே அந்த வுலக்கையைவாங்கி அவனை ஒரேதரமடிக்கவேண்டும். திருடன் அந்தவடிபட்டுச் செத்தாலும் பிழைத்தாலும் பரிசுத்தனாகிறான். அந்தத்திருடன் வேதமோதின பிராமணனாயிருந்து அவனை அரசன் அடிக்கமாட்டோமென்றால் தவத்தினால் பாபத்தைப் போக்கடிக்கவேண்டும்.

(கஅ)

శ్లో॥ తపసాపనుతుస్తస్తు సువర్ణస్తేయజంమలమ్ ।
చీరవాసాద్విజోరణ్యేచరే ద్బ్రహ్మహనోవ్రతమ్ ॥

பொன் திருடினதால் வந்தபாபத்தை தவத்தாற்போக்கமனதுள்ள அந்தணன் காட்டிற்போய் மரவுரி யுடுத்திக்கொண்டு பன்னிரண்டு வருஷம் பிரம்மஹத்திக்கு விதித்த விரதத்தைச் செய்யக்கடவன்.

(கஅக)

శ్లో॥ ఏతైర్వ్రతైరపోహేత పాపంస్తేయకృతంద్విజః ।
గురుస్త్రీగమనీయంతు వ్రతైరేభిర్వ్యపానుదేత్ ॥

பிராமணன் பொன்னைத் திருடினதால் வந்த பாபத்தை அந்தணனும் மற்றவர்களும் இப்போதுசொல்லிய பிராயச்சித்தங்களாற் போக்கடிக்கவேண்டும். குருமனையாளைப் புணர்ந்தவன் மேற்சொல்லும் விதிப்படி தன்பாபத்தைப் போக்கக்கடவன்.

மனுதர்மசாத்திரம்.

(குரு மனைவியோடு புணர்ந்தவனுக்கு பிராயச்சித்தம்.)

ஸ்லோ॥ குருதல்பவ்யபிகாமஸ்து ப்ரேஸ்யஸ்யாத்யதயோமமே ।
ஸூர்மீஞ்ஜ்வலந்தீம்ஸ்தாம் ஸ்தூல்யஸ்தல்பத்யுனாஸஹஸ்வபத்யுஸ்॥

காய் - அல்லது - குரு பத்தினியைப் புணர்ந்தவன் பிரமனைசபையில் தான் செய்த குற்றத்தைச்சொல்லி காய்ச்சப்பட்ட இருப்புப் பலகைமேல் படுக்கக்கடவன். அல்லது எரிகின்ற குறீரூபமுள்ள இருப்புத்தூணை தழுவிக்கொள்ளவேண்டும். இவ்விரண்டாலும் இறந்தால் பரிசுத்தனுவான். (கஅக)

ஸ்லோ॥ ஸ்வயம்வாசீர்ண வ்ருஷணோ வுத்ருத்யாத்யாயசாஞ்ஜலௌ ।
நைர்ருத்திம்திசமாஸ்தித்ய தானிபாதாதஜிஹ்மகஃ॥

அல்லது தானுகவே ஆண்குறி - விருஷணம் இவ்விரண்டை யுமறுத்து கையிலேந்திக்கொண்டு இறக்கிறவனாயில் நிருதியை யெய் பார்க்க நேராக ஓடவேண்டும். (கஅச)

ஸ்லோ॥ க்ருத்வாஞ்சீரவாஸாவாஸ்து ஸ்ரஸ்லோவிஜநேவநே ।
ப்ரேஜாபத்யஞ்சரேத்க்ருச்ரம் ப்ரஜேஷ்கம்மஸ்ஸ்தகஃ॥

தன்மனைவியென்று பிரமித்து அக்கியானத்தாற் குருபத்தினியைப் புணர்ந்தவன் மண்டையோட்டை கையிலெடுத்துக்கொண்டு மரவுரிதரித்து சடாதாரியாகி மனதையடக்கிக்கொண்டு ஒருவருஷம் பிராஜாபத்திய கிரிச்சிரவிரதஞ் செய்யவேண்டும்.

ஸ்லோ॥ சாம்ராயணம்வாத்ரிக மாஸாநப்யஸ்நன்யதேம்த்ரியஃ।
ஹவிஷ்யேணயவாகூவா குருதல்பாபநுத்தயே ॥

கற்பில்லாத குருபத்தினியையாவது சூத்திரிய ஜாதிஸ்திரீயை குருவதற்கு மனதை யடக்கிக்கொண்டு காட்டு நெல்லரிசிக் கஞ்சியிலாவது காய் கிழங்கிலாவது மூன்றுமாதம் வரையில்சாந்திராயண விரதஞ் செய்யவேண்டும். (கஅக)

ஸ்லோ॥ ஏதைர்வ்ரதைரபோஹாயம மஹாபாதகிநோமலம ।
உபபாதகிநஸ்த்வேவமே பூர்ணாவ்ருத்தைர்வ்ரதைஃ ॥

இப்போது சொன்ன பிராயச்சித்தங்களால் மஹாபாதகர்கள் பாபத்தைப் போக்கவேண்டும். உபபாதஞ் செய்தவர்கள் மேற்

சொல்லும் காலவிதமான விரதங்களால் பாபத்தைப்போக்கவேண்டும். (கஅஎ)

உபபாதகத்திற்குப் பிராயச் சித்தகம்.

ஸ்லோ॥ உபபாதகஸம்யுக்தோ மாஸம்மாஸம்யேனாபிபேத் ।
க்ருத்வாபாவஸேத்தோஷேசமுணா தேனஸம்வ்ருதஃ॥

கோவதஞ்செய்தவன் தலையை முண்டனஞ் செய்துகொண்டு அந்தப்பசுவின்மேலே வஸ்திரமாகப் போர்த்துக்கொண்டுகொயிரிசியை புசித்துக்கொண்டு ஒருமாதம் பசுமாட்டின் மேலுக்கிலவாசஞ் செய்யக்கடவன். (கஅஅ)

ஸ்லோ॥ சதுர்த்தகாலமஸ்நீயா தஸ்நாரலவணம்மிதம் ।
கோமூத்ரேணாசரேத்ஸ்நானம் த்ர்யஹமாஸாந்தியதேம்த்ரியஃ ।

மின்பு காரம் உப்பில்லாமல் இரண்டுமாதம் அன்னத்தை ஒன்றுயிட்டொருநாள் கொஞ்சமாகப் புசித்துக்கொண்டு அதிகோமூத்திலேயே வசிக்கவேண்டும். அந்த விரண்டு மாதமும் இரண்டு காலத்திலும் ஜிதேந்திரியனாய் கோமூத்திரத்தால் ஸ்நானஞ்செய்யவேண்டும். (கக0)

ஸ்லோ॥ திவாநுகச்சேத்தாந்தாம் திஷ்டந்தாந்த்வர்ஜயந்பதே ।
ஸ்ருஷ்டாஸ்வேநமஸ்க்ருத்ய ராத்ரௌவீராஸநம்வஸேத் ॥

பின்னும் பகலில் பசுக்கள் மேயப போகும்போது பின்னொடர்ந்து அவைகளின் காற்குளம்பில் நின்றும் உயரக்கிளம்புகிற தூளியை சாப்பிட்டுக்கொண்டு அந்தப் பசுக்களுக்குச் சொன்னதை முதலிய வுபசாரங்களையும் வந்தனத்தையுஞ் செய்து இரவில் சுவற்றில் சாய்ந்துகொண்டு வீராசனமாக விருக்கவேண்டும்.

ஸ்லோ॥ திஷ்டந்தீஷ்வநுதிஷ்டேத்து வ்ரஜந்தீஷ்வப்யமவ்ரஜேத் ।
ஆஸீநாஸுததாஸீநோ நியதோவீதமத்ஸரஃ ॥

பசுக்கள் நிற்கும்போது கோபமில்லாமல் தான் நின்றுகொள்ளும், நடக்கும்போது தான் நடந்துகொண்டும், படுக்கும்போது தானும் நியமமாக வுட்கார்ந்து கொண்டும், இருக்கவேண்டும்.

ஸ்லோ॥ ஏதத்தேவவ்ரதம்கர்யுரூப பாதகினோத்விஜாஃ।
அவகீர்ணிவ்ரஜ்ஞ்சுத்த்யர்த்தம் சாம்த்ராயணமதாபிமா ॥

மேற்சொல்லு மடையாளமுள்ள அவகீர்ணி நீங்கலாகமற்ற உபபாதகளானவரும் பரிசுத்தியின் பொருட்டு கோஹத்திக்குச் சொல்லிய பிராயச் சித்தத்தையேனும் அல்லது அந்தந்தப்பாப த்திற்குத் தக்கபடி சாந்த்ராயண விரதமேனும் செய்யவேண் டும். (ககள)

அவகீர்ணி பிராயச் சித்தம்.

ஸ்லோ॥ அவகீர்ணீதுகாணேன கர்தபேனசதுஷ்பதே।
பாகயஜ்ஞவிதானேன யஜேதநிர்ருதிம்நிசி ॥

அவகீர்ணியானவன் ஒற்றைக்கண்ணுள்ள கழுதையின் * வ பையினல் பாக எக்கியவிதிப்படி இரவில் நாற்சந்தியில் நிருதி தேவதையைக் குறித்து ஹோமஞ்செய்யவேண்டும். (ககஅ)

ஸ்லோ॥ ஹுதாவ்வாக்நெவிதிவத்தோ மானம்தத்ரசஸமேத்யர்சா ।
வாதேம்த்ரகுரவஹ்நானாம் ஜுஹுயாத்ஸர்பிஷாஹுதீஃ ॥

அக்கினியில் விதிப்படி நிருதி தேவதையைக் குறித்து கழு தையின் வபையினல் ஹோமஞ்செய்து பின்பு வாயு-பிரஹற்பதி இந்திரன்-அக்கினி இவர்களுக்கு வேத இருக்கினல் ஆஜ்யஹோ மம் செய்யவேண்டும். (ககசு)

ஸ்லோ॥ காமதோரேதஸஸ்சேகம் வ்ரதஸ்தஸ்யத்விஜன்மனஃ।
அதிக்ரமம்வ்ரதஸ்யாஹு ர்தர்மஜ்ஞாப்ரஹ்மவாதினஃ ॥

விரதானுஷ்டானமுள்ள பிரமசாரி ஸ்திரீயோனியில் இரே தலை விட்டால் அவன் விரதமழிந்து போவதால் அவனை அவ கீர்ணியென்று பெரியோர்கள் சொல்லுகிறார்கள். (கஉ0)

ஸ்லோ॥ மாருதம்புருஹூதம்ச குரும்பாவகமேவச ।
சதுரோவ்ரதினோப்யேதி ப்ராஹ்மம்தேஜோவகீர்ணினஃ ॥

---

* வபை என்பது வயிற்றின் நாபீக்குள் வெள்ளை வஸ்திரம் போன்ற புளையாயிய கொழுப்பு.

ஸ்லோ॥ ஆதுராயுதிஸ்தாம்வா சாரவ ஸ்க்ருஹாதிபிர்பயைஃ।
பதிதாம்பம்கிலக்நாம்வா ஸர்வ்வபாபைர்விமோசயேத் ॥

பசுக்கள் நோயினும் முன்பப் பட்டாலும், திருடன் - புலி முதலியவற்றும் பயத்தப்பட்டாலும், மேடுபள்ளமான பூமியில் விழுந்தாலும், சேற்றி லகப்பட்டுக் கொண்டாலும் தன் சக்திக் குத் தக்கபடி எல்லாவிதத்தாலும அவைகளைக் காப்பாற்றுக.

ஸ்லோ॥ ஜ்ஞேவஷ்டதிசிதேவாமாருதே வாதிவாபுஶம் ।
நகுர்வீதாத்மவஸ்த்ரீணம் கோரக்ருத்வாத்வுஶக்திதஃ ॥

உக்ரமமாய் வெய்யிற் காய்ந்தாலும், காற்றடித்தாலும், மழை பேய்ந்தாலும் குளிர்ந்தாலும், காற்றடித்தாலும், தன் சக்திக்குத் தக்கபடி பசு க்களைக் காப்பாற்றுமல் தன் தேகத்தை மாத்திரங் காப்பாற்றத் கூடாது. (ககக)

ஸ்லோ॥ ஆத்மனோயதவான்யேஷாம் க்ருஹேஷ்வேதேஷ்வனாதுலே ।
பக்ஷ்யம்தீனகதயேத்தி பம்தம்ப்ராஹ்வவத்ஸகம் ॥

தன்னுடையவேலும், அன்னியனுடையவேலும், வீடு-கள ம்-முனி இத்தவிடங்களில் தானியம்-பயிர் இவற்றை பசுக்கள் ப ஷிக்தாலும், கன்றுகளூட்டினாலும், காணேட்டாமலும்ஒருவனே யுசொல்லாமலும் இருக்கவேண்டும். (ககச)

ஸ்லோ॥ ஆனேனவிதினாயஸ்துகோ ஷ்நாகாமனுச்சதி ।
ஸகோஹத்யாக்ருதம்பாபம் த்ரிபிர்மாஸைர்வ்யபோஹதி ॥

கோஹத்தி செய்தவன் இவ்விதமாக மூன்று மாதம் வரை இந்த விரதத்தை யனுஷ்டித்தால் அந்தப் பாபம்போய் பரிசுத்த னாவான்.

ஸ்லோ॥ வ்ருஷபைகாதஶாஶ்சா தச்யாத்ஸுசரிதவ்ரதஃ ।
அவித்யமானேஸர்வ்வஸ்வே வேதவிதோ பூயஸிவேதயேத் ॥

[illegible] வகோமோஷி னல்லொழுக்கமுள்ள அக்கணனுக்கு ஒரு [illegible] பத்துப்பசுவை தானஞ் செய்யக்கடவன். அவ்வ [illegible] தனக்கில்லாவிட்டில் தன்பொருண் முழுதையும் அ [illegible] கொடுக்கடவன். (ககசு)

கூத்திரியன் முதலானவனைக் கொன்றதற்குப் பிராயச் சித்தம்.

ஸ்லோ॥ துரீயோப்ரஹ்மஹாத்யாயாக்ஷத்ரியஸ்யவதோஸ்ருதஃ ॥
வைஶ்யேஷ்டமாம்ஶோவ்ருத்தஸ்ஸோத்ரைஷ்டேயஸ்துஷோடஶஃ ॥

ஒருவன் குணமுள்ள கூத்திரியனை தெரிந்துகொன்றால் பிரமஹத்திக்குவிதித்த பனிரண்டுவருஷ பிராயச்சித்தத்தில் நாலிலொருபங்கும், குணமுள்ள வைசியனைக் கொன்றால் எட்டிலொன்றும், ஒழுக்கமுள்ள சூத்திரனைக்கொன்றால் பதினாறிலொன்றும், பிராயச் சித்தமாகும். (கஉசு)

ஸ்லோ॥ அகாமதஸ்துராஜன்யம்விநிபாத்யக்ஷ்விஜோத்தமஃ ।
வ்ருஷபைகஸஹஸ்ராகாதத்யாஸ்சரிதவ்ரதஃ ॥

அந்தணன் தெரியாமல் கூத்திரியனைக் கொன்றால் அதற்குப்பிராயச்சித்தமாக ஒரு இடபத்தோடு ஆயிரம் பசுக்களைத் தானஞ்செய்க. (கஉஎ)

ஸ்லோ॥ த்ர்யப்தம்சரேத்வாநியதோ ஜடீப்ரஹ்மஹணோவ்ரதம் ।
வஸன்தூரதரேத்க்ராமாத்வ்ருக்ஷமூலநிகேதனஃ ॥

அல்லது சடைதரித்து ஊருக்குவெளியில் மரத்தடியில் வாசஞ் செய்துகொண்டு மூன்றுவருஷம் பிரமஹத்திக்கு விதித்த விரதத்தை யநுசரிக்க. (மண்டையோடு தரிக்க வேண்டியதில்லை யென்பதற்காக மறுபடியும் சொல்லியது.) (கஉஅ)

ஸ்லோ॥ ஏதத்தேவசரேத்பப்தம் ப்ராயஶ்சித்தம்த்விஜோத்தமஃ ।
ப்ரமாப்யவைஶ்யம்வ்ருத்தஸ்தம் தத்யாச்சைகஶதம்கவாம் ॥

அந்தணன் நல்லொழுக்கமுள்ள வைசியனைத் தெரியாமற் கொன்றால் மேற்சொல்லியபடி ஒருவருஷம் இருக்க வேண்டும்; அல்லது ஒரு இடபத்தோடு நூறுபசுவைத் தானஞ் செய்க. ()

ஸ்லோ॥ ஏதத்தேவவ்ரதம்குர்யாத் ஷண்மாஸாம்ஶூத்ரஹாசரேத் ।
வ்ருஷபைகாதஶாவாபி தத்யாத்விப்ராயகாஸ்தாஃ ॥

அந்தணன் தெரியாமல் ஒழுக்கமில்லாத சூத்திரனைக்கொன்றால் மேற்சொல்லியபடி ஆறுமாதம்வரையில் விரதமிருக்க; அல்

அந்த அக்னிசாலையின் பிரம்மதேசத்தை, வாயு-பிரதேசத்தில் இருந்து-அக்னி இவைகளைச்சார்ந்திருக்கிறது. ஆதலால் அவர்களுக்குத்தோஷமில்லை செய்க. (கஉக)

ஸ்லோ॥ ஏதஸ்மின்னேனஸிப்ராப்தே வஸிதாவ்ரதபாஜினம் ।
ஸப்தாகாராம்ஶ்சரேத்பைக்ஷம் ஸ்வகர்மபரிகீர்தயன் ॥

இவ்விதமாக கர்த்தபயாகத்தால் பிராயச்சித்தஞ் செய்துகொண்டபின்பு அக்கழுதையின்றோலைத் தரித்துக்கொண்டு தன் குற்றத்தையனைவருமறியும் படியாகக் கூவிச் சொல்லிக்கொண்டு தன்வீட்டில் அன்னபிக்ஷையெடுக்க. (கஉஉ)

ஸ்லோ॥ தேப்யோலப்தேன்னபைக்ஷேணவர்தயன்னேககாலிகம் ।
உபஸ்ப்ருஶம்ஸ்த்ரிஷவணம் த்வக்தேனஸவிஶுத்யதி ॥

அவ்வேழு வீட்டிலெடுத்த பிக்ஷான்னத்தை ஒருவேளை புஜித்துக்கொண்டு திரிகாலங்களிலும் ஸ்நானஞ்செய்க; இவ்விதமாக ஒருவருஷஞ்செல்ல பரிசுத்தனாவான். (கஉஊ)

ஜாதிப் பிரம்சகர முதலிய பாபப் பிராயச்சித்தம்.

ஸ்லோ॥ ஜாதிப்ரம்ஶகரம்கர்ம க்ருத்வான்யதமமிச்சயா ।
சரேத்ஸாந்தபனம்க்ருச்ச்ரம்ப்ராஜாபத்யமனிச்சயா ॥

ஜாதிப் பிரம்சகர பாபங்களில் யாதாவதொன்றை வேண்டுமென்று செய்தால் சாந்த பநக்ருச்ர விரதத்தையும், அக்கியானத்தாற் செய்தால் ப்ராஜபத்திய க்ருச்ர விரதத்தையும் அனுஷ்டிக்கவேண்டும். (கஉச)

ஸ்லோ॥ ஸங்கராபாத்ரக்ருத்யாஸுமாஸம்ஶோதனமைந்தவம் ।
மரிஸிகரணீம்ஶ்மஶதப்தானாந்த்யாவக்ரம்க்ருஹம் ॥

ஸங்கீரணம் - அபாத்திரீகரணம் இவைகளில் எதையாவதொன்றைச் செய்தவனுக்கு ஒருமாதம் சாந்த்ராயண விரதமிருப்பதும், மரிஸிகரணஞ் செய்தவனுக்கு மூன்றுநாள் கொதிக்கிற [illegible] ஊற்பிட்டிருப்பதும் பிராயச்சித்தம். ()

யைக் கொன்றால் இரண்டுவருஷப் பசுவின் கன்றையும், இரெண்டு ஞ்சப் பக்ஷியைக்கொன்றால் மூன்றுவருஷக் கன்றையும் பிராமணனுக்குத் தானங்கொடுக்க. (கஉச)

ஸ்லோ॥ ஹத்வாஹம்ஸம்பலாகாஞ்சபகம்பர்ஹிணமேவச ॥
மேலுலகத்தி லிருப்பனென்பதையும், கவர்த்தவள் அவ்வளவு காலம ரகசத்தில்விழ்த்துடைப்பனென்பதையும்,இராசசபையிலிருக்கு மிலே க்களுலே பொருணிறை வுடையதாகவும், வழுவிய தொலவில்லதா கவும், எழுவாய் - செயப்படுபொருள்-பயனிலை-யிலையிற்றுத்தெ ழுதவித்து, இன்னவிடத்தி லிவ்வளவு நிலம்பொன்று மிவனுழைக்குக் கொடுக்கப்பட்டது; இது என் சமமதமென்று தன் னாமத்தை யெழுதி அவ்விலேக்கன் பெயரை யெழுதுவித்து தனது முத்திரையிட்டு - கொடுக்கப்பட்ட பூமியில், ஏற்றவனுக்குனடான வரிமேலை யெ ருவருந் தடைசெய்யாமையின் பொருட்டு, சிறப்புடைய அந்தணர் - அதிகாரியர் - குடும்பிகளான மற்றையருணைக்கார்-கணக்கன் - தூதன் வைத்தியனிவர்களும், மிலேச்சர்முதல் சகலரினும் வலையு முள்ளா செல்வாரும் அறியும்படி தான மேற்றவனுக்குக் கொடுப்பதாம்.

வெற்றிப்பத்திரமாவது:—முதலிலே வாதியின் பற்றுக்கூலை யும், பின்னர் எதிர்வாதியி லுத்தரத்தையும் இவ்விரண்டிலு மிரா ணையையும், இவ்விதமுதலான சாதனங்களினும் அவற்றின் விசார ணையையும் சான்றினரை விசாரித்த வகையும், பிரதியுத்தரமும், பிரா ட்டிவிவாகன் - சபையினர் - குலத்தினர் - ஆசன் இவர்களு முதலா னவர்களுடைய சம்மதமும் கையெழுத்து வெழுதப்பட்டதான் யிர சமுத்திரை யிடப்பட்டு வெற்றியடைந்தவனுக்குக் கொடுக்கப்படுவ தாம்.

காத்தியாயனர்.

மேலும், அபியோகம்பண்ணினவாதி கொண்டுவந்த விவகாரத் தை நடத்துதற்கு வாராது போகுதல்முதலான குற்றத்தா லினலு போதடக்கச்செய்கை யெழுதப்பட்டதும்,இராசமுத்துரையான வைகளை யுடையதுமாகப் பிரதிவாதிக்குக் கொடுக்கப்படுவதும் வெற் றிப்பத்திரமாம்.

வசிட்டர்.

ஆக்கினைப்பத்திரமாவது:—சாமந்தர் - பிரதானமாளர் - மாடலர் பல நிலவர்கள் முதலானவர்களுக்கு இக்காரியந் தெரிவிப்பதற்கு தெழுதப்படுங் கட்டளையாம்.

அறிக்கைப்பத்திரமாவது:—வேள்விக்கினையினர் - புரோகிதர் - ஆசாரியரிவர்கள் முதலான கண்ணுமூக்கத்தக்கவர்களுக்குக் காரியங் களை யறிவித்தற்பொருட் டெழுதப்படுவதாம்.

யாஞ்ஞவற்கியர்.

நிபந்தப்பத்திரமாவது:—அரசனுக்கினையினுலே வாணிகஞ்செய் பவர் முதலானவர்களால் தேவர்கட்கேனும் அந்தணர்க்கேனும் மா தக்தோறும், அல்லது வருடக்தோறு மிவ்வளவுபொருள் கொடுக்கத் தக்கதென் றெழுதப்பட்டுக் கொடுக்கப்படுவதாம்.

பிரகற்பதி.

அருள்புரிபத்திரமாவது:—அரசனுனவன் ஒருவனுடைய சேவ கஞ் சௌரியமுதலானவைகளை வியக்குகொண்டாடி, அவனுக்குக் கிராமமுதலானவைகளைக் கொடுத்து அதற்குச்சாதனமாக வெழுதிக் கொடுப்பதாம்.

பலமுனிவர்.

தேசத்தமைப்பு-தன்னைப்பத்திரமுதலாகப் பலவகைப்படும்.

அது, வருடம் - மாதம் - பக்கம் - திதி - கொடுத்தவன் - வாங்கி னவனிவர்களுடைய சாதி - கோத்திரம் - பெயர் - தந்தைமுதலான வர்கள் பொருளின்விதம் - அளவு- இருவரொப்பினுற்செய்த வட்டி - சான்றினர்பெயர் - ஒற்றி - தானம் - தேசாசாரம் - வரம்பு - அர ணுடைய மாபின்முறை - நிலையாயிருக்குமிடம் - அப்பொழுதிருக்கு மிட மிவைமுதலான விசேடணங்களை யுடையது.

இந்த விசேடணங்களிலே கடன்முதலான விடயங்களிலோ அவ் வவ்வற்றிற்கு வேண்டிய விசேடணங்களெல்லா மெழுதப்பட்ட பின் னர் இன்னுன் மைத்தனுகிய வெனக்கிதசம்மதமென்று வாங்கினவன் றன்பெயரைத் தன்கையாலும்,தேசவழக்கப்படி யிரட்டித்த தொகை யினராயேனும், ஒற்றைப்பட்ட தொகையினராயேனு மிருக்கின்ற சா ன்றினர் தங்களுக்கு வழக்கமான வெழுத்தினுலே யிவ்விடயத்தி லின் ணைமைத்தனு மின்ன பெயரினையுடையவனுமாகிய தான் சான்றின னென்பதை தனித்தனியே தங்கள் கையினுலும், இருவராலும் வேண் டப்பட்ட இன்னுனுகிய வென்னு லிஃதெழுதப்பட்டதென்று வாய்ப வனுலு மெழுதப்படவேண்டும்.

சான்றினனெழுதத் தெரியாதவனுனல் அயற் சான்றினு லெழு துவிக்க.

காத்தியாயனர்.

தன்கைப்பத்திரமாவது :—பொருளைவாங்கினவன் சான்றில்லா மல் தன்கையா லெழுதிக்கொடுப்பதாம்.

ஒப்புப்பத்திரமாவது:—கடன்கொடுத்தவன் கையாலெழுதக் கடன்வாங்கினவனுலே யொப்பப்படுவதாம்.

காரதர்.

ஈட்டுப்பத்திரமாவது:—தனிகர் அயலவனுடைய அசைக்கப்படு பொருளையேனும், அசைக்கப்படாத பொருளையேனும், தாக்கலைவைத்துக்கொண்டு தன்பொருளைக் கொடுக்கும்பொழுது அவ்வடமானவைத்த ஈட்டுப்பொருள் காக்கத்தக்கதென்றேனும் அழிக்கத்தக்கதென்றேனுமெழுதப்படுவதாம்.

பிரகற்பதி.

தொடரீட்டுப்பத்திரமாவது:—தனிகன் முன்பு காலவைத்துக்கொண்ட ஈட்டைக்கொடுத்து முன்புகொடுத்த நிலவரத்துக்காகவே நீட்டையேற்றுக்கொண்டதற்காக வெழுதப்படுவதாம்.

விலைப்பத்திரமாவது:—வீடு விளைநில முதலான தாவரப்பொருளேனும் மற்றெந்தப்பொருளேனும் விறகப்படும்பொழுது விற்றதற்காகத் தக்கவிலையுட னெழுதப்படுவதாம்.

காத்தியாயனர்.

விலைமைப்பத்திரமாவது:—வித்துவான்கள் - பதிலைஞ்சாதியர் - கணக்கினர் - பட்டணத்தாரிவர்கள் முதலானவர்களுக்குஞ் சுரிமையும் படித்தியவ்வுரிமை சித்திப்பதற்காக வெழுதப்படுவதாம்.

சேர்க்கைப்பத்திரமாவது :—சிறப்புடையோர்க்குப் பரிசொழி கேரிட்டபோது அது நீங்குதற்காக அவருடையபரிசனங்களை பிள்ளைகள் நன்றாக விளங்குதற்பொருட்டெழுதப்படுவதாம்.

பரிசுத்தபத்திரமாவது:—மாற்றாலே பரிகாரஞ்செய்யப்பட்டுப் பழிநீங்கியிருப்பவர்க்குச் சான்றினோடு கூடியதாக வெழுதப்படுவதாம்.

விபாகபத்திரமாவது:—தாயத்தார் தம்மிலொத்துப் பங்கிட்டுக்கொண்டதற்காக வொருவர்க்கொருவ ரெழுதிக்கொடுப்பதாம்.

பிரகற்பதி.

தானபத்திரமாவது :—ஒருவன் பூமிதானம் பண்ணும்பொழுது இது இரவிமதியுள்ளவரையு மனுபோகிக்கத்தக்கது இடையூறெனுஞ் செய்யத்தக்க தன்றென் றெழுதிக்கொடுப்பதாம்.

சம்மதபத்திரமாவது:—ஊராரேனும் சாட்டாரேனுந் தம்மிலொத்து அரசனுக்கு மாறுபாடுறாமல் தருமப்பொருட்டெழுதிவிப்பதாம்.

அடிமைப்பத்திரமாவது:—ஒருவன் ஆடையுணவின்றிவருத்தப்பட்டுக் கொடியவழியிற் போகும்போது தனது துன்பந்தீரும்பொருட்டு கானுலக்கடிமை யுன்பணியைச் செய்குவனென் றொருவனுக்கெழுதிக்கொடுப்பதாம்.

கடன்பத்திரமாவது:—வட்டியேற்படுத்திப் பொருளைக் கடனுகவாங்கினவனுலேனும், அவனுக்காக மற்றொருவனுலேனும் எழுதப்பட்டு ஞாபகத்தின்பொருட்டுத் தனிகனிடத்தில் வைக்கப்படுவதாம்.

காத்தியாயனர்.

எல்லைப்பத்திரமாவது:—எல்லைவழக்கைத்தீர்த்து அதற்காகவெழுதப்படுவதாம்.

விருத்திப்பத்திரமாவது :—கடன்வாங்கினவன் கடனைக்கொடுத்தபோது விழிக்கப்படவேண்டிய பத்திரச் தேசாந்திரத்திலிருப்பதினுலேனும், கேடுற்றதினுலேனும், சிறைபடாவிடில் கடன்தீர்த்தற்காகவெழுதப்படுவதாம்.

பற்றுப்பத்திரமாவது:—கடன்வாங்கினவன் சில பொருள்கொடுத்தபோது தனிகன் அத்தப் பொருளைப்பற்றிக்கொண்டதற்காவெழுதிக்கொடுப்பதாம்.

மேற்சொல்லிய பத்திரங்களில் கொடுத்தவன் - வாங்கினவன் - சான்றினிருவர் - வரைபவ ரிவ்வைவரு மேவப்பட்டிருப்பது பஞ்சாரூடபத்திர மெனப்படும்.

பத்திரப்பிரயோசனம்.

மரீசி.

தாவாவிடயத்தில் - விற்றல் - ஒற்றி - தானம் - விபாகமிவற்றிலும் கடன்முதலியவற்றிலும் பத்திரத்தாற் சித்தியையும் வழக்கின் மையையு மடைவர்கள்.

வேறுபத்திரம் பிறப்பித்தல்.

பலமுனிவர்.

பத்திரமானது:—தேசாந்தரத்திருப்பினும் வருத்தத்தா லறியத்தக்க வெழுத்துடையதாயிருப்பினும் கேடுறினும் கவரப்படினும் ஒடி

மிஞ்சு செல்லினும் இருவரினாயினும் வேலினும் அழுக்கு வெயர்வை
யென்று வெறுத்தாயினும் தினபடினும் தெருவோட்டப்பட்டுப்பழையதாயி
னும் - தேசாந்தரத்திருப்பதை யழைப்பித்தற் கேற்படுத்திய காலவ
ரை லவழுப்பிக்கப்படாவிடினும் வேறுபத்திரம் பிறப்பிக்கலாம்.

இலேக்கியபரிசோதனாம்.

காத்தியாயனர்.

அரசன் நிலையை யழைப்பித்துப் பத்திரத்தைப் பரிசோதித்
தறிந்தபின் அவ்வப்பத்திரங்கட்குக்காட்டிய விலக்கணங்களோடு கூடி
யிருக்கினும், அப்பொழுது நடக்கின்ற விவகாரவிடயங்களுக்கொப்பா
னவையுமாயிருக்கின்ற பத்திரங்களைச் சாதனங்களாகக் கொள்க.

பலமுனிவர்.

முன்னர் அரசனமைப்பு தேசத்தனமை யொழுங்கிலக்கியங்க
ளுக்குக்கூறிய விசேடணங்கள் மாறுபட்டிருப்பதும், வலியோரை
யும் - பயம் - மதம் - வஞ்சனை யிவற்றாற்செய்யப்பட்டதும், சற்றேனி
ருக்கவேண்டிய வெழுத்துக்களிடத்தப்பியும் விளக்கமில்லாதவிடத்தி
லும், ஐயப்படத் தக்கனவாகவும் இலக்கணம் வழுவினவாகவு மிருந்
தாலேயும், உடையவனல்லாதவனாற் பண்ணப்பட்டதும், காக்கைக்
காரிபோலக், நிறப்பட்டதும் நெடுகாடப்பட்டது விளக்கமாயிருந்தால
அழிந்தும்; லெகாட்பட்டது மழுங்கினதாயிருந்தாலுமாய், தொடும்
அழிவற்றுமிருக்கிற வெழுத்தையுடையதும், மரணமடைந்தோர் பொரி
வைத்தவன் - இறவன் - அச்சமுற்றவன் - பிடிக்கப்பட்டவன் - துக்கத்
தாற்துன்பமுற்றவன் - வழக்குத் தொடரப்பட்டவன் - உன்மத்தன்-
பெண் - உரிமையின்மையனிவர்களாற் செய்யப்பட்டதும் காரியசித்
திக்குச் சாதனமாகாது.

காத்தியாயனர்.

பத்திரத்திலெழுதப்பட்ட சான்றினன் கிடைக்கப்பெறாதவனையே
னும் கொடிய செய்கையுடையவனையேனு மிருந்தாலும அப்படியே
கொடுத்தவனும் - வாங்கினவனும் - வரைந்தவனுமிருந்தாலும் அத்தப்
பத்திரங்காரியசாதனமாகாது.

இத்தப் பத்திரத்திலெழுதப்பட்ட விலேக்கனவிலிருந்தெழுதப்பட்
டதன்றெனவும். இத்தச் சான்றினாலே யிதுகாணப்பட்டதன்றென
வெளிப்படுத்த இப்படிப்பட்ட குற்றங்களை வாதி

இப்படி வாதிசொன்ன குற்றத்தைச் சபையினர் எதிர்வாதிக்குத் தெரியப்படுத்தினபோது அவனத்தக் குற்றத்தைப் பொய்ப்படுத்தினால், வாதிக்குத் தண்டமும் - விவகாரத்தாழ்வு முண்டாம்.

இஃதென்னுடைய கையெழுத்தன்றெனவும், இத்தப் பத்திரமென்னாற்செய்யப்பட்ட தன்றெனவுஞ் சொல்லுத லாலேயமுற்றவிடத்தில் அத்தப் பத்திரத்திற்காட்டிய சான்றினர் - வரைந்தவனிவர்களாலவ்வையத்தை நீக்குக.

யூரிதர்.

தன் கைப்பத்திரமானால் அவனலெழுதப்பட்ட வேறொருபத்திரத் தெழுத்தோ டொப்புநோக்குதலானும் - செய்யுள்தொழில் - சம்பந்தம் - குறிகள்-இவனுக்கிவ்வளவு பொருளுண்டா யிருக்கலாமென்னு யுத்திபண்ணுத லிவைமுதலான வேதுக்களினாலும் - நிச்சயஞ்செய்க.

நாரதர்.

பத்திரத்திற் கையெழுத்திடாத சான்றினரிலும் - வாங்கினகையெழுத்து வலியுடையது.

காத்தியாயனர்.

கொடுத்தவன் - வாங்கினவன் - சான்றினர்-வரைந்தவனிவர்களெல்லாருமிறந்தபோது இவர்களுடைய கையெழுத்தினாலே நிச்சயஞ்செய்க.

அப்படியே இராசசாசனம் - வெற்றிப்பத்திர மிவை
சமுத்தினா கையெழுத்திவற்றாலே நிச்சயமாம்.

மிருணியத்தரம்.

உடையவன் பதினாறுவயதிற்கு மேற்பட்டவனும் - அறிவுடையவனும் - திறமுடையவனுமாயிருக்கும்பொழுது அவனுக்கெதிரே யிருபதுவருடக் கடையின்றிப் பூமியெழுதப்பத்திரத்தினாலனுபோகிக்கப்பட்டதோ அத்தப்பத்திரமும் அப்படியே யனுபோகிக்கப்பட்ட வெள்ளிப்பத்திரமும் பிரமாணமாகும்.

ஒற்றியோடுகூடிய கடன்பத்திரமானது - அதிலெழுதப்பட்ட சான்றினர் முதலானவெல்லாரு மிறந்தபோதைக்கும் அனுபோகமற்பமானாலும் பிரமாணமாகும்.

நாரதர்.

வெண்ணிலைக் கடன்பத்திரமானது தனிகன் - சில பொருளைப் பற்றிக்கொண்டும் - அடுத்தடுத்துப் பத்திரத்தைக்காண்பித்தும் - கேட்

வியாசர்.

ஒருவனுடைய பத்திர மொருவனிடத் திருத்தால் அத்தப்பத் திரம் தன்னிடத்தில் வந்ததற்குக் காரணத்தை யவன்சொல்லவேண் டும்.

பத்திரங்க ளொன்றோடொன்று மாறுபடமளவில் தன்கையா லெழுதப்பட்டது - பிறன்கையாலெழுதப்பட்டது - இராசபத்திரம் இராசசாசனமிலை குற்றமற்றிருந்தாலொன்றிலுமொன்று வலியுடை யது.

சம்வர்த்தனர்.

சான்றினலுடைய சொல்லினும் இலேக்கியம் வலியுடையது.

காத்தியாயனர்.

சான்றினலுந் திவ்வியத்தினலு மிலேக்கியந் தள்ளப்படாது.

பலமுனிவர்.

மூப்பதுவருடஞ்சென்ற பத்திரமும் முதற்பொருளின் றொகைக் குவட்டி சமப்படுமளவில் திறமுடையவனுகிய தனிகனனவன் பொரு ளுடையவனுகிச் சமீபத்திலிருக்கின்ற கடனுடையோனே கோசம லும் பத்திரத்தைக் காட்டாமலுமிருந்தா லத்தப்பத்திரஞ்சித்தியடை யாது.

உன்மத்தன் - மூடன் - இளமையன் - அரசனுக்கஞ்சினவன் - ஊனைவிட்டோடிப்போனவன் - திரமில்லாதவன் - பயத்தினலே பி டிக்கப்பட்டவனிவர்களுடைய பத்திரங்கள் நெடுங்காலங்கடப்பினுஞ் சாம்பலடையாது.

அனுபோகம்.

காசதர்.

அரசனனவன் உத்தரத்தைக்கேட்டுச் சாதனவிசாரணை செய் யும்போது சாமந்தர்க ளநித்திருக்கிற நெடுங்கால வனுபோகத்தைச் சாதனமாகக்கொள்க.

காத்தியாயனர்.

சாமந்தலிலக்கணமாவது:—வீடு வினைகிலமுதலியவற்றிற்குரிமை பாலினு மடித்திருக்கின்ற வீடு வினைகிலமுதலியவற்றிற் குடையவர்க ளாயிருத்தல.

காசதர்.

வீடு வினை கிலமிவற்றிற்கு அடுத்த சாமந்தர்களுடே நிச்சயஞ் செய்க.

பித்தும் வினைப்புண்டாக்கியுமிருந்தால் - சான்றின சிறப்பினும் பிரம ணனரும்.

பலமுனிவர்.

அயலவன் பெயராலெழுதப்பட்டபத்திரத்தைக் காத்தல்-எழு திறியாதபென் - இளமையன்-பிடிக்கப்பட்டவனெனுமிவர்களுடைய கை யுன்முதலான கற்றத்தாலிவர்களே வஞ்சித்துப்பிடுங்கொண்டபத் திரத்தைக்குறித்துஞ் சத்தேகம் வந்தபோது முன்னிலை நன்கொ லென்வாக்கல் முதலான சம்பந்தத்தினுலு நடுவு பத்தி இவற்றுலு நிச்சயஞ்செய்க.

காலதேச காரியங்களேயறிந்து கையெழுத்திற்கானப்படுகின்ற வுண்மையல்லாத வுருவமபோலவும், பொய்யான பத்திரம்போலவும் நிஜத்தைத் தருவம்போலவும், பொய்யைத்தருவதாயிருக்கின்ற மினடர்களும் மிருக்க பொருளாசையாற் காரியத்தை யாயிரத்தக் கிழேசர்களும் தட்டர்களுமிருக்கினுஞ் சான்றுகளை அறியாமற் பத்திரங்களேப்பார்த்து நூகம முதலியவற்றுலுந் தீர்க்கப்பட்ட திப்படிப்பட்ட பத்திரமென்று நிச்சயிக்க.

பிரசேதர்.

ஒருவன் பத்திரத்திலெழுதப்பட்ட வக்கரத்தை - பெயர் - [illegible] - சாதி குறிகளிலையுமுதலான வெல்லாவற்றையும் பார்த் [illegible] யிருக்கலாமன் றவனைப் பார்த்து [illegible] யாலவன் கலங்கவுமுதலான பொருளால் வெலிலே ஒருவிசாரித்தஞ் சம்பந்தப்பட்டவனல்லன் இதப்பற்றி சத்திலிருக்கிற கையெழுத் தென்னுலெழுதப்பட்டதென்னுமியாதொ சொல்லவல்லே சபையினர்க்குப் பலவகை [illegible] யுமுண்டாயிற் றினுஞ் சத்தேகத்தோதபோது அத்தப்பத்தி [illegible] மேற்பட்டதாயினும் அதைத்தள்ளித் தலையத்தலே நிச்ச யஞ் செய்க.

காத்தியாயனர்.

இத்தப் பத்திரம் பொய்யென்றறிஞர், சான்றின நூ, வினைத்தவ ரென்பெயரென்றறிஞர் சொல்லிச்சொன்னபடி யாயிருத்தலு, வாதியுத்தரகாரனிடம் விசிக்கப்படுமே.

[illegible] யத்தில் - விற்றல், தானஞ்செய்த லெனுமிவை பொய்யெ [illegible] சாமந்தலவனுக்கு அவனுடைய சாக்ஷியும் வகையு [illegible] நடமாட விசிக்கப்படும்.

காத்தியாயனர்.

[illegible] வெளித்தலைக்கடைவாயில் - கிப்போக்கு-இவைமுதலான வழக்கிலேதோற்றியவையத்தில் அனுபோகமே பெரிதாம். அவ்வனு போகத்திலேயே யவைகட்கு நிச்சயமாம்.

நாரதர்.

காலவிடயத்தில் பத்திராதிருப்பினும், சான்றினரிருப்பினும், அனுபோகமில்லையாயின் அஃதுமதியுடையதன்று.

பிரகற்பதி.

ஒரு சாசனத்திலெழுதப்பட்ட திரணம் - விளைநிலம் - தோட்ட மிவற்றுட் லெவற்றிற் கனுபோகமிருப்பினும், அவையெல்லா மனு போகிக்கப்பட்டனவேயாம்.

யாஞ்ஞவல்கியர்.

பூமிமுதலிய அசைக்கப்படாதபொருள் இருபதுவருடகாலமட்டும் அனுபவத்தில் கெடாதே காரணமின்றி யிருப்பதுடையவருமே கேட்கப் படாமலும், அவலவனுலனுபோகிக்கப்பட்ட விடயத்தில் விவாதத்தி லிருக்கும்போது இலேகியத்தாலாட்சி வியாதத்தி லுள்ளதும் அத்தப் பூமிமுதலிய பொருளும், அவற்றிலுண்டாகிய பலனுங்கடோம லுடையவனே யடையும்.

பூமிமுதலான அசைக்கப்படுபொருள் பத்துவருடகாலமும், [illegible] லியபடியே அனுபோகிக்கப்பட்டால் அதற்கும் அப்படியே யடையும்.

பலமுனிவர்

[illegible] மேலிருத்தற்குக் காரணமிருந்தால் எவ்வகைப் பொருளா யினுமவலவனுலெத்தனைகால மனுபோகிக்கப்பட்டாலும், அப் [illegible] டையவனே யடைதற்கோ சிறைபூமியில்லை.

[illegible] காட்டிய வேதக்களினுலே வலிதுறையாதலும், தருகியான [illegible] கூடியதுமாகிய பத்திரமும், சான்றும், வம் மினை [illegible] டியங்களிற் பிரமாணங்களாம்.

பிதாமகன்.

[illegible] :—ஆகமத்தோடு கூடியதும், நெடுங்காலமு [illegible] மொழிமுதலானவை யிலதே [illegible] வமத்தக்கனவையுடையதாம்.

நாரதர்.

ஆகமமானது - தந்தையிடத்தினின்றேனும், நிதிபெற்கண்டேடுத்தலினுலேனும் மனைவதும், தானத்தாலடைவதும், கிரயத்தாலடைவதும், சௌரியத்தாலடைவதும், மனேவியாலடைவதும், சந்ததியில்லாத தாயாதன் முதலானவனிடத்தினின் றடைவதுமென அறுவகைப்படும்.

பிரகற்பதி.

நெடுங்காலமுடையவனு போகமானது- மூப்பதுவருடத்திற்குக் குறையாத காலமுடையதாம்.

மூப்பத்தைத்துவ்ருட காலத்திற்கு புருடகாலமென்று பெயர்.

பலமுனிவர்.

ஒருவன் பூமிமுதலானவைகளின் விவாதத்திலே யனுபோகத்தைப் பிரமாணமாகச் சொல்லும்போது, அவ்வனுபோகம் மூப்புருடகாலமாகிய நூற்றைத்துவருடத்திற் குட்பட்டகாலத்திற்குள்ளே தொடங்கப்பட்டதானுல் அதை மேற்காட்டிய ஆகமத்தோடு கூடியதாகவே சொல்லவேண்டும்.

ஆகமத்தை இலிகிதத்தினுலேனும், சான்றினராலேனு மெய்ப்பிக்க.

அனுபோகமானது - நூற்றைத்துவருடத்திற்கு முற்பட்டகாலத்திலே தொடங்கப்பட்டதானு லவ்வனுபோக ஆகமவிருப்பில்லாமலே பிரமாணமாகும்.

ஆனல், அனுபோகத்தி னங்கங்களுக்கு விரோதமாகிய வாகம மின்மைமுதலானவைகளைக் குறித்துச் சம்சயந்தோற்றும்பொழுது ஆகமவிசாரணை செய்யலாம்.

ஆகமத்தோடுகூடிய வனுபோகமே பிரமாணமாம்-அனுபோகம்-ஆகமத்தை மூலமாகவுடையது, ஆகமம்மேல் - அனுபோகங்கினை - ஆகையால் வேறின்றிக் கினைதோன்றுது.

மேற்காட்டிய வைந்தங்கங்களு ளொன்றுகுறையினும்-அனுபோகம் பிரமாணமாகாது.

நாரதர்.

ஒருவன் ஆகமத்தைவிட் டனுபோகத்தைமாத்திரஞ்சொன்னுலவன் திருடனுவான்.

விவகாரசாரசங்கிரகம்.

ஆகமப்பத்திரமில்லாம லனுபோகத்தைச் சொல்பவன்-தானமு தலான வாகயத்தையும், தெய்வகாலமுறை முதலான வனுபோ கத்தையும், நிலத்தை யுழுகிறவர்களும், தொன்றுதொட்டுவருகிற தி ராமத்திலிவர்களும், கேத்திரசமக்கிருகிய தன்மனாலே தெரி யப்பட்டது.

ஒருவன் - இன்னனுக்குக் கொடுமென்று மற்றொருவன் கையிற் கொடுத்தலும், கவரப்பட்டதும், காப்பதற்காக வொரு நவனிடத்தில் வைக்கப்பட்டதும், அரசனுடைய சார்புதலான வலியாலாவது லனு போகிக்கப்பட்ட தராமம் விளைவுக் தொட்டு நிலைமுதலானவை ரும், நிரவலாகவாங்கபபட்டதும், உலை யவனுபோகமாவதுபோக்க ப்பட்டதுமாகிய விவைமுதலிய வெலாமெத்தனாகால மனுபோகி க்கப்படாத மிலைகளை யனுபோகித்தவாகளை யாக்கள்.

சம்வர்த்தர்.

அரசனுல் ஒருவனுடைய பூமி மற்றொருவனுக்கு கோபம் - உ லோபம்-வஞ்சனை யிவற்றாற்கொடுக்கப்பட்டதா, தூட்டறவில் கொ டுக்கப்பட்டதும், தெய்வகால மனுபோகிக்கபபடாதது, அவ்வனுபோக மற்றப் பூமித்தியின்பொருட்டுக் காரணமாகாது.

பிரகற்பதி.

மூன்றையே மூப்புருடக்காலமாகிய நூற்றைந்துவரை மனுபோகி க்கப்படாதும், அவ்வனுபோகம் சாசனத்திற்கு விரோதமாகிருப்பின் அது நிற்கியாது.

பலமுனிவர்.

விரோதப்பட்ட காரியத்தின்நிற்கிலே- முதற் நூலுறைப்புரு டனுக்கு ஆமேமும், நடுவி லிணடுதலிலுறைப்புரு னுக்கும், மூன் ரூதலிலுறைப் புருடனுக்கும், ஆகாத்தோங்கூடிய வனுபோகமும், காரூதலிலுறைப் புருடனுக் கிடைவிடாத தெய்வகால வனுபோக மொரு நிம் பிரமாணமாம்.

சான்றினிலக்கணம்.

பலமுனிவர்.

ஒருவன் அயலவனுடைய காரியத்தை யெதிரேபார்த்தலினலே னும், கேட்டலினலேனும் சான்றினனுவான்.

பொருளிவற்றிற் கத்தியும், கன்னெறிடை [illegible] - நற்புத்தி - இல்லாதிருத்தல் - மைத்

ருடைமை - பழிப்பின்மை - அறிவு - அறத்தெரிதல் - உண்மையுரை த்த லிவற்றினை யுடையராயும், பொருட்பேராசை - பகை - அழுக்கா றினை நீங்கினவராயு மிருப்பவர் மூவர்முதற் பதினெருவர்வரையுஞ் சான்றினராவார்.

இன்னருக்கின்னர் சான்றினர்.

காரதர்.

அத்தணர்முதலிய வருணத்தோருள்ளும், அனுலோமன் முதலிய சாதியோருள்ளும், பலவகைச்சாதியோருள்ளும், வருக்கத்தாருள்ளும், சேனைக்கூட்டத்தாருள்ளும், மேற்காட்டிய விலக்கணமுடையவராயி ருப்பவர்கள், அவர்களுக்கவர்களும், மாதர்க்குமாதரும், சான்றினாரவாகள்.

யாஞ்ஞவல்கியர்.

அல்லது - எல்லாருக்கு மெல்லாருஞ் சான்றினராகலாம்.

சான்றினரல்லாதார்.

பலமுனிவர்.

சுரோத்திரியன் - திருடன் - தானேபேசுவோன் - சொன்னிலை மையில்லாதவன் - மிருதாத்தரனென்னு மரித்த வாதியின் சான்றி னன் - இவ்வகையினருஞ் சான்றினராகார் - இவர்களைப்போலவே பிரமசரியன் - வானப்பிரத்தன் - சன்னியாசி - சாத்திரவிருத்தமான கருமஞ்செய்பவன் - தருமந்தவறினவர்கள் - மிருதிவசனங்களால் வி லக்கப்பட்டவர்க ளாகையாலும், அரசன் - காடுகளுர்புரக்கு மதிகாரி யர் - இராசமனுடனிவர்கள் பலகாரியக் கவலைமுதலியவற்றையுடைய வராகையாலும், தினத்தன் - கொடுந்தொழிற்செய்பவன் - மகாபாதக முதலான செய்கையினலே நிந்திக்கப்பட்டவன் - பதிதன் - விடமி டுபவன் - தெருப்பிடுபவன் - பகைவரிடத்திற் சஞ்சரிப்பவன் - வலி மைசெய்பவன் - கோட்சொல்பவன் - தங்தையுடன் வழக்காடுவோன் - தப்புச் சான்றுரைத்தவனென் றறியப்பட்டவன் - இவர்கள் கொடு மைமுதலான வன்செய்கையுடையவ ராகையாலும், தட்டான்முத லான சிற்பியர் - கூத்தன் - புகழ்வோன் - பாடுவோன் - தானுய்தற் குத் தன் மனையாளை வேசையாக்குவோன் - கள்விற்பவன் - தன்னை விற்பவன் - விடம் - புலால் - அன்னம் - அழுபழுதவான சிற்றுண்டி - மது - பால் - வெண்ணெய் - நெய் யிவைகளை விற்பவனும் - வட்டிப் பெருளா லுய்பவனுமாகிய வந்தண னிவர்கள் பொருளாசையுடைய



தன்னிச்சையில்வந்தவன் - காரியஞ்செய்யுமளவி லழைபயமற் றன்னிச்சையில் வந்தபோது சான்றினனாக நியமிக்கப்பட்டவன்.

கூடன் - மறைவிலிருந்து கடன்முதலான விடயமானசொல்லைக் கேட்பவன்.

உதாசீனன் - மூன்ன ரொருவிடயத்திற் சான்றினனாயிருந்த வொருவன் மீதசாத்தஞ் செல்லுபோதேனும், மரணசமயமுற்ற போதேனும், இதை நீ யுரைத்திருவென்று அவனைக் கேட்பிக்கப்பட்டவன்.

இவ்வவ்வகையினரும் கடன்முதலான வெல்லா விடயங்களி லுஞ் சான்றினராவார்.

நாரதர்.

பண்ணப்படாதசான்றினர் - கிராமத்தார் - பிரார்ட்டிவிவாகன் - அரசன் - செயவிடையுற்றவன் - குல்லியன் - உபயாறு மதனென்னும் அறுவகையினர்.

அவருள்,

பிரகற்பதி.

கிராமத்தார் - கிராமத்தெல்லைக்கு ளுண்டான கொலை திருட்டி வ்விடயங்களிற் சான்றினராவார்.

பிரார்ட்டிவிவாகன் - தனக்கு மேலானவிடத்து மறுவிசாரணையிற் சான்றினனுவான்.

அரசன் - தன்னிடத்தி லுபயவாதிகள் சொன்னசொல்லைக் கேட்ட விடயத்திற் சான்றினனுவான்.

செயவிடையுற்றவன் - காரியங்கழும்பொழுது பயவாதிகளா லவர் களுடையகாரியங்களை நம்புதலினு லநிவிக்கப்பட்டவிடயத்திற் சான் றினனுவான்.

குல்லியன் - இருவர்க்கு மொத்தவனும், நன்மையனும், சுற்றத் தானுமாயிருப்னன். அவன் - கடன் - தாயபாகமிவற்றிற் சான்றினனு வான்.

உபயாறுமதன் உபயவாதிகளுக்குச் சம்பந்தனும் தருமத் தெரிக் கப்பட்டவனுமாயிருப்னன் அவனெருவனுமே கடன்முதலான விடயங்களிற் சான்றினனுவான்.

யாஞ்ஞவற்கியர்.

மேற்காட்டிய விலக்கணமுடையவர் மிடையாவிடத்திற் கடன் முதலான விடயங்களிலும், வன்செய்கை - சொற்செய்கை - தண்

வாதியானவன் தன்னைச்சார்ந்தசான்றினர் தள்ளப்பட்டபோது வேறு பிரமாணங்களையேனும், திவ்வியத்தையேனும் விரும்பாவிடில் அவன் வெல்லப்பட்டவனுவான் தண்டத்தையுமடைவான்.

பிரகற்பதி.

விவகாரவிசாரணை நடக்குமளவிற் பிரமாணங்களைக் குறித்துக் குற்றங்காட்டினால், அதனை முன்னர்ச்சோதித்துப்பின்னர் விவகாரத்தை முடிக்க.

சான்றினர்சோதனை.

பலமுனிவர்.

அரசனுனவன் சான்றினரிடத்தில் துட்டகுணங்களாகிய குற்றமில்லாதவன்போலக் காணப்படுதல், காரணமின்றி மிகவும் கூப்பிடல், அடித்தடித்து மிகவும் பெருமூச்செறிதல், கால்களாலே நிலத்தை கீறுதல், கைகளையும் ஆடையினையு முதறுதல், கின்றவிடம்விட்டுப் பெயர்த்து திரிதல், கடைவாயைக்குதல், உதடுகளைமெல்லுதல், முக நிற மாறுபடல், நெற்றிவெயர்த்தல், வாய்தடுமாற லிவைமுதலாகக் காணப்படுகிற குணங்களையும், விலக்குதற் கேதுவான காணப்படாத சொன்னிலைமையின்மை முதலானவற்றையுஞ் சோதித்தறிந்து அவ் வகைக் குணமுடைய துட்டரைச் சான்றுரைத்தலினின்று நீக்குக.

சான்றினருண்மைசொல்லும்படி சொல்லுதல்.

பலமுனிவர்.

அரசனுனவன், சபையிலுபயவாதிகளுக் கெதிரே சான்றினரை நோக்கியினிய சொற்களினாலே நீயிரிவ் விருவரிடத்தி னிகழ்ந்தகாரிய ங்களையறிந்தபடி யுண்மையாகச் சொல்லுவீராக - உண்மைசொல்ப வன். இம்மையிற் பொருளையும் - மறுமையிற் புண்ணியவுலகத்தையு மடைவான் - சத்தியமே மேலானதானமும், தவமும் - தருமமுமாம் - தேவர்கள் சத்தியவடிவினர்-மானுடர் சத்தியவடிவினர் - எவனுடைய புத்தி சத்தியத்தினிற்குமோ அவனிகத்திலே தெய்வத்தன்மையைய டைவான், சத்தியத்தின் மேலானதருமமும்-அசத்தியத்தின் மேலான பாவமுமில்லை - பாவிகள் காஞ்செய்யுங்காரியத்தைப் பிறரறியாரென வெண்ணுகின்றூர்கள், தேவர்களும் - இந்திரன் முதலானவெண்மரும் ஐம்பூதங்களும்- இரவியும்- மதியும் மனமும்-அறக்கடவுளும்-உலகத்தி லுள்ளாரெல்லாரையும் பார்க்கின்றூர்கள், ஆகையால் ஒருவன் செய்த வஞ்சனை வெளிப்படும் - பொய்ச்சான்றுரைத்தவன், தன்னுடைய

டன்பொருளை - ஈதலற்பத்தை - திருட்டிலுற்றிலும் எளியோ செல்
குதி சான்றினாரர்.

சான்றினரிடத்துக் குற்றங்காட்டல்.

பிரகற்பதி.

வாதியருடைய சான்றினரிடத்திற் பகைமுதலானமறைவா
குற்றமிருப்பின் தன்னை யப்பொழு தெதிரி வெளிப்படுத்துக.

காத்தியாயனர்.

வெளிப்பட்ட குற்றங்களைச் சபையினரே சொல்லுக.

பிரகற்பதி.

சான்றினரிடத்திற் காணப்பட்ட குற்றங்கள் பரிசோதிக்கப்பட்
தற்குமேல் விவகாரநிச்சய மாரம்பிக்கப்படுகையிற் சான்றினருடை
ஏற்றக்கினைக் குறித்து வாதியர் விவாதப்பட்டால் அரசனதனை
தள்ளிவிட்டு நிச்சயத்திற் குத்தாவுசெய்க.

காத்தியாயனர்.

குற்றமுடையரல்லாத சான்றினரை யிகழ்ந்தாலும், சொன்
குற்றத்திற்குக் காரணங்காட்டாவிடினு மவனுக்குப் பூருவ சாகசதண்
டம் விதிக்கப்படும்.

இவ்வற மின்மைமுதலான குணமின்மையைக் குற்றமாகச்
சொல்லற்க,

சான்றினருகைக்கு விரோதமாகிய அடிமைமுதலான சம்பந்
தத்தைக் குற்றமாகச் சொல்லுக.

வியாசர்.

சான்றினரிடத்திலே சான்றினர் தள்ளப்பட்டால் வாழி வேறுசா
சான்றிலே சாதிக்க.

வாதியானவன் சான்றினரைக் குறித்துச்சொன்ன குற்ற
தற்காக வேறு சான்றினரைக் காட்டல்கூடாது. அப்படி
வம்புகூடாதுபோம்.

சான்றான் வேறுரிடத்துப் பொய்ச்சான் றுரைத்தவனை
லவனுக்குத் தள்ளப்படுதலும்

வேழுமரபிலுள்ளாரையுங் கீழான ராகத்தில் வீழ்த்துவான் ஏழுபிறப் பிலிட்டிய வெல்லாப்புண்ணியங்களையுங் கெடுத்தவனுவான் - பிரமவ தையும் - கிசுவதையும் - தந்தைவதையுஞ் செய்தவனுவான் - மிகவுங் கொடிய ரௌரவமுதலான ராகங்களையு மடைவான் - இன்னும்-உள ர்ப்பனரி - கழுதை - நாய் - சீக்காச்சை - பழு - இப்பிறப்பிற்பிறந்த பின்பு - மானுடப்பிறப்பிலே - பிறவிக்குருடன் - செவிடன் - ரூட்ட நோயினன் - உளமை யிவர்களாகியும், மிகுந்த பகைகமுடையவனு கித் தனது பகைவன் வீட்டிற்றன் மனையாளோடும் பிசைபோய்பவ னுகியும் பிறப்பானென்றிப்படிப்பொய்ச்சான்றுரைத்தவனுக்குண்டா குங் கொடுமையான பயங்களைத்தெரிவித் துண்மை சொல்லும்படி செய்க.

சான்றினாவினவல்.

பலமுனிவர்.

அரசனுனவன், சபையிலிருந்து சான்றினையழைப்பித்து முற் பகற் பொழுதிற்கிழக்கு முகமாகவேனும் வடக்குமுகமாகவேனு நிறு த்தி அப்படி நிறுத்தப்பட்டவனத்தணனுனல் அவனை நீ பொய்சொல் லுவையா யிலுன்னுடைய சத்தியத்தாலுண்டாகின்ற புண்ணியங்க ளெல்லாங் கெடுமெனவும், சத்திரியனுனல் அவனை நீ பொய்சொல்லு வையா யிலுன்னுடைய வாயுதவாகனங்களு தவாதொழியுமெனவும், வைசியனுனல் அவனை நீ பொய்சொல்லுவையா யிலுன்னுடையபச வும் - வித்தையும் - பொன்னும் பலியாதழியுமெனவும், சூத்திரனுனல் அவனை நீ பொய்சொல்லுவையாயில் மனைபாலை - பெண்ணை - மக வைக்கொன்றவன் - மித்திரத் துரோகம்பண்ணினவன், செய்கன்றி மறந்தவனிவர்களடையுமுலகத்தை யடைவாய் நீ பிறந்தகாலமுதலி லுவையுஞ்செய்த புண்ணியம் வீணுகுமெனவும், நீ முன்னடைக்குறி த்துச்சொன்ன பொய்யுனது சுற்றத்தா நிலேவனையும், ஒரு பசுவைக் குறித்துச்சொன்ன பொய்பதின்மனையும், ஒரு குதிரையைக் குறித்து ச்சொன்னபொய் யிரைம்பதின்மனையும், ஒரு மானுடனைக்குறித்துச் சொன்ன பொய்யோரா யிரவனையும், பின்னும் பூமி தடாகமுதலான நீர்நிலைகள் பெண் - போகம் - புணர்ச்சி - முத்துமுதலிய மணிவகை கள் - கல்வின்பேதங்களித்தவிடயத்திற்சொன்ன பொய்யுனது சுற்ற த்தாரெல்லாரையுங் கொல்லுமெனவுஞ்சொல்லி யுணமைசொலலும் படி விளுவுக.

அப்படியே பசு - வாணிகம் - வட்டிப்பொருள் பிறபத்தொழில் வற்ரு லுய்பவனும் - சேவிப்பவனும் - பாடுவோனும்-தனது தருமத்

தை விட்டவனும்-அன்னியனன் னத்தாலுய்பவனுமாகிய பார்ப்பானை ச் சூத்திரனைப்போலவும் - அப்படியே அம்பட்டன்முதலானவர்களை யும் விளுவுக.

சான்றுரைத்தல்.

காத்தியாயனர்.

சான்றுரைத்தல் இராசசபை - அத்தணச்சபை - தேவசன்னிதி யிவ்விடங்களிற் செய்யத்தக்கது.

தனம்- தாவரம்- ஈற்காலுயிர்-இருகாலுயிரிவ்விடயத்தில் இரா சசபையிலும் - உயிர்க்கொலைவிடயத்திற் சிவசன்னிதி அத்தணச்சபை யிவற்றிலும் - சான்றுரைத்தல் செய்யத்தக்கது.

பிரகற்பதி.

சான்றினன் - தலைச்சாத்தையும் - கழற்காப்பையுங் கழற்றிவை த்து - உத்தரீயத்தை யுபவீதம்போலத் தரித்து கிழக்கு முகமாகவே னும் - வடக்குமுகமாகவேனு நின்று - பொன் கோமயத்தருப்பை ற்றைக் கையிலெடுத்துக்கொண்டு மேற்சொல்லிய சான்றின் சபதா ளைக் கேட்டவனுகி யுண்மையைச் சொல்லுக.

உண்மைசொல்லாதவன் - பாவப்பயன்களை யடைவான்.

கௌதமர்.

சான்றினர் - தனித்தனியே கேட்கத்தக்கவர்கள்.

காத்தியாயனர்.

அரசனுனவன் - குற்றமில்லதும் - இயல்பினுற் சொல்லப்பட்ட தமரகிய சான்றினர் மொழிகளைக் கேட்டறிக.

கடன்முதலான விடயங்களிற் பிரதிக்கினை பண்ணப்பட்ட பொ ருளுக் கதிகமாகவேனுங் குறைவாகவேனுஞ் சொன்னலும் தேசம் - காலம்-சாதி - வயசு உருவம்-திரவியம் - அளவுவிவற்றை மாறுபாடா கச்சொன்னலும் அச்சான்றினுடைய மொழிகள்ளப்படும்.

வாதியேனும் எதிர்வாதியேனுங்காட்டியே சான்றினர் விடயத்திற் கொப்பாகச்சொன்ன லத்தச்சத்தியஞ் செத்தியடையும்.

பெண்கவர்ச்சி திருட்டி - வன்செய்கை யிவ்விடயங்களிலே யே கதேசஞ் சொல்லப்பட்டாலும் முழுவதுஞ் சொல்லப்பட்டதாகும்.

மனு.

ஒரு விடயத்திற் சான்றினருடைய மொழிக ளிருவிதப்படி லவ ர்களிலுயர்ந்த தொகையினர் மொழிகளைக் கொள்க அவர்களுடைய

மொழிகளிருவிதப்படி லவர்களிற் குணமுடையோர் மொழிகளைக் கொள்க குணமுடையோர் மொழிகளிருவிதப்படிற் குணத்திற்சிறந்தோர் மொழிகளைக்கொள்க.

நாரதர்.

குணத்திற் றெக்தோருடைய மொழிகள் மாறுபாடையத் தீர்விடத்துச் சான்றினரை விலக்குக.

பிரகற்பதி.

மேற்சொல்லிய இலேக்கியத்திலும் சான்றினர் மொழிகளிலுமையப் தோற்றுமிடத்தி லனுமானத்தினாலும், அவ்வனுமானமும் பொருந்தாவிடத் திற்றிவ்வியத்தினாலு நிச்சயஞ்செய்க.

பலமுனிவர்.

ஒருவன் பிணிமுதலிய பிடையில்லாதவனுக்குத் தான் சான்றினை குன மதையலார்க் கறிவித்துச் சான்றாரைத்தல் செய்பாவிலும் அழைப்பிக்கப்படுகையில் வாராதிருப்பினு மவன் பொய்ச்சான்றினை ஞான் அவன் காவல் முதலானவைசெய்யப்பட்டு மூன்று பக்கத்தி க்கு ரூண்டென் றேனுமில்லை யென்றேனுஞ் சொல்லாவிடிற் கடன் பொருளையுடையவனுக்கும், கடனிற் பத்திலொருபங்கை யாசனுக்கு த்தண்டமாகவுங் கொடுக்கத் தக்கவனுவான்.

வசிட்டர்.

ஒருவனுலே நியமிக்கப்படாதவனும் - அழைப்பிக்கப்படாதவ னும் ஏவப்படாதவனுமாயினுன் பொய்யென்றேனு மெய்யென்றே னுலே தண்டிக்கத் தக்கவனுவான்.

காத்தியாயனர்.

ஒருவன் கடன்முதலான விடையங்களி லிப்படிச்சொன்னுல் தகு தியான தண்டமுங் கடன்பொருளும் - சொற்கொடுமையினும் அப்ப வழக்கினு மிப்படிச்சொன்னுல் அரசன்பொருட்டு முத்தாயிரபணத்தண் டமுங் கொடுப்பிக்கப்படுவான்.

அரசன் சான்றினரிடத்தி லுண்மையையறிதற்காகத் தக்ககால வளவு கொடுக்கலாம்.

ஐயமில்லாதபோது சான்றினரை யப்பொழுதே விசாரணைசெ ய்க அப்படிச் செய்யாமற் காலவிளம்பஞ்செய்தால் தருமத்தைக் கெ டுக்கின்ற மிகுதியான பாவமுண்டாம்.

அத்தனன்முதலிய நான்கு வருணத்துச் சான்றினன் பொருளா சையினுலே பொய்ச்சான்றுரைப் பிலாயிரம் பணமும் மயக்கத்தாலு ரைப்பிற் பூருவசாக சதண்டமும் அச்சத்தாலுரைப்பி லிரண்டமெத்தி மசாகசதண்டமும் கட்பாலுரைப்பி னுன்கு பூருவசாகசதண்டமும், காமத்தாலுரைப் பிற்பதின் மடங்கு பூருவசாகசதண்டமும் கோபத் தாலுரைப்பின் மும்மடங்கு பூருவசாகசதண்டமும், அறியாமையாலு ரைப்பி லிருநூறுபணந் தண்டமும், இளமையாலுரைப்பின் மூன்நூறு பணத்தண்டமு மவனுக்கு விதிக்கப்படும்.

யாஞ்ஞவற்கியர்.

இவையுமன்றி மறையவனுக்கு ஆடையுரிதலும் வீட்டையிடித் தலும் தேசத்தி னின்றோட்டுதல் முதலானவையுந் தண்டமாம்.

மற்றை வருணத்தார்க்குப் பல்லியுடைத்தல் நாக்கையறுத்தல் உதட்டையறுத்தல் முதலானவற்றைப் பொய்ச்சான்றுரைத்த விடய ங்களைத்தழுவி விதிக்க.

பலர்கூடிப் பொய்ச்சான்றுரைத்தால் மேற்கூறிய தண்டங்களை யவர்களுக்குத் தனித்தனி விதிக்க.

மனு.

குணமில்லாத சான்றின னொருவனுயிருந்தவிடயத்தில் சான்று சைத்த வேழுகாளுக்குட் பிணிமுதலான தன்பங்காணப்படி லச்சா ன்றினனுடைய மொழிபிரமாணமன்று.

சான்றினைக்குறித்த தண்டங்களை - சான்றினருடைய குற்ற ங்களையுங் குணங்களையுந் தண்டத்தை விதிக்கின்ற வசனங்களையு ருக வாராய்ந்து தகுதிப்படி விதிக்க.

நாரதர்.

ஒருவனுடைய சான்றினை மற்றொருவ னுண்மையினின்று மா றுபடுத்த நினைத்து அச்சான்றின னிடத்தின் மறைவிற்சென்றலும் - அவனைப் பேதித்தாலும் அவனினைப்போலத் தண்டிக்கத் தக்கவனு வான்.

காத்தியாயனர்.

வாதியானவன் முதலிலே சொல்லுவித்த சமீபத்துச் சான்றின ராலே தனக்குத் தோல்வியுற்றுப்பின்னர் தூரத்திலிருந்த குணவிசே டமுடைய சான்றினர் சொல்லுதலினுலே அவனுக்கு வெற்றியுற்று லக்தழுதற் சான்றினர் பொய்ச்சான்றினராவார்.

நாரதர்.

ஆயுதங்கையி லிருப்பதாலிவன் கொலைசெய்தவனென்றும் கள்ளக்கோல் கையிலிருப்பதாலிவன்றிருடனென்றும் மண்வெட்டி கையிலிருப்பதாலிவன் களையுடைத்தவனென்றும், கொள்ளிகையிலிருப்பதாலிவனெருப்பிட்டவனென்றும், பெண்ணினுடைய பாவாடையிருத்தலாலிவனே அயலவளை விரும்பினவனென்றும், சான்றில்லாமலே நிச்சயிக்கலாம், ஆனலுடலிற் காணப்படுகின்ற புதுப்புண் முதலியவற்று லிவனடிக்கப்பட்டவனென்று நிச்சயிப்பதை மிகவுமாலோசித்துச் செய்க.

திவ்வியப்பிரமாணம்.

யாஞ்ஞவற்கியர்.

கடன்முதலான விடயங்களிலே யிலிகிதமுதலான மானுடர்பிரமாணங்க ளில்லாமையினுலேனும், யுத்திபண்ணக் கூடாமையினுலேனும், விவகாரநிச்சயத் திலேயமுற்றபோது வாதி வழக்குத்தோலவித்தண்டங்கொடுக்க வொப்பினு லெதிர்வாதிக்குத் திவ்வியம் விதிக்கப்படும்.

விட்ணு.

இராசத்துரோகஞ் செய்தவரோனும், வன்செய்கைசெய்தவரோனும், பாதகஞ்செய்தவரோனும், திருடர் கூட்டுறவினுற் றிருடனென்றும், அபியோகம்பண்ணப்பட்டவர்களுக்கு வாதிவழக்குத்தோல்வித்தண்டத்தை யொப்புதல் வேண்டாமலே திவ்வியம் விதிக்கப்படும்.

நாரதர்.

அற்பவிடயங்களிலோவெனிற் சத்தியமுதலான சபதங்கள் விதிக்கப்படும்.

திவ்வியமானது - துலாம் - அக்கினி - சலம் - விடம் - கோசம் - தண்டுலம் - தந்தமாடம் - பால் - தருமசமென வொன்பது வகைப்படும்.

பிரகற்பதி.

சபதமானது - சத்தியம் புண்ணியமிலைவகள் கெடுமென்பதும், வாகனம் - ஆயுதம் - பசு - விதை - பொன் - தெய்வத்தின்பாதம் - தைபாதம் - மைந்தன்றலை - மனைவிதலை யிவற்றைத் தொடுதலும், இன்னுந் தடாகப்பிரதிட்டை முதலியவற்று லுண்டாகின்ற புண்ணியங் கெடுமென்பது முதலான வுலக வழக்குமானவைகளுமெனப் பல வகைப்படும்.

மேற்சொல்லிய வொன்பதுவகைத் திவ்வியங்களுள் துலாமுதலான வைத்துதிவ்வியங்களும், பெரிதான வயியோகங்களும், மற்றை காண்குதிவ்வியங்களு மற்பவியோகங்களிலும் விதிக்கப்படும்.

பொருளைச்சார்ந்த கடன்கோடன் விடயங்களில் அபியோகத்தின் பெருமையுஞ் சிறுமையும் திரவியத்தொகையா லறியத்தக்கனவாம்.

பொன் வெள்ளி செம்பிவற்றி னிறையளவைப்பெயர்.

அவற்றுள்.

பொன்னிறைப் பெயர்.

மனு

சிறுபுழை வழிவருஞ் சூரியகிரணத்திலே துண்ணிதாகக்காணப்படுகின்றதுகளுக்குத் திரிசரேணுவென்று பெயர்.

திரிசரேணுவெட்டுகொண்டது - ஈர்
ஈர் மூன்றுகொண்டது - மன்கடுகு
மன்கடுகு மூன்றுகொண்டது - வெண்கடுகு
வெண்கடு காறுகொண்டது - நடுத்தரயவம்
நடுத்தரயவ மூன்றுகொண்டது - குன்றி
குன்றி யைந்துகொண்டது - மாடம் அதற்குக்கருஷமென்றும், அகூடமென்றும்பெயர்.
மாடமாறுகொண்டது - பொன்
பொன்னுலுகொண்டது - பலம் அதற்குநிட்கமென்று பெயர்.
பலம் பத்துகொண்டது - தரணம்

வெள்ளிநிறைப்பெயர்.

மேற்சொல்லிய குன்றியிரண்டுகொண்டது. } வெள்ளிமாடம்.
வெள்ளிமாடம் பதினறு கொண்டது. } வெள்ளித்தரணம் அதற்குப்புராணமென்றுபெயர்.
வெள்ளித்தரணம் பத்துக்கொண்டது. } பலம் அதற்குச்சதமானமென்றுபெயர்.

செம்பினிறைப்பெயர்.

பொன்னிறையிற்காட்டிய பலத்தி னுலிலொருபங்கான தாம்பிரத்திற்குக் காருடிகமென்றும் - காருடாபணமென்றும் - பணமென்றும் பெயராம்.

நிரவியத்தொகைப்படி நிவ்வியத்தேற்பாடு.

காத்தியாயனர்.

மானுடப் பிரமாணமில்லாமற் நிவ்வியப் பிரமாணத்தினுலே நிச்சயிக்கவேண்டியவிடத்தில், எல்லாப்பொருளையும்பொன்னிருனிலொருபங்காகிய வுலகவழக்க நிட்கமாக்கியந்த நிட்கத்தொகைப்படி நிவ்வியங்கொடுக்க.

நிட்கமாவது இருபத்துகுன்றியெடை கொண்டபொன்.

இப்படிப்பட்ட நிட்கம்.

காணூற்றுக்கு மேற்பட்டதற்கு	விடநிவ்வியம்.
மூந்நூற்றிருபதுக்கு மேற்பட்டதற்கு	அக்கினிநிவ்வியம்.
இருநூற்றுநாற்பதுக்கு மேற்பட்டதற்கு	சலநிவ்வியம்.
நூற்றறுபதுக்கு மேற்பட்டதற்கு	தூலாநிவ்வியம்.
இருபத்துகாலுக்கு மேற்பட்டதற்கு	விசேட கோசநிவ்வியம்.
ஆறுக்கு மேற்பட்டதற்கு	தண்டுல நிவ்வியம்.

உத்தமனுக்கு.

ஐந்துக்கு மேற்பட்டதற்கு	
மூன்றுக்கு மேற்பட்டதற்கு	தருமசநிவ்வியம்.
சான்றுக்குறைவான மூன்றுக்கு மேற்பட்டதற்கு	அற்பகோசநிவ்வியம். புட்பநிவ்வியம்.

மத்திமனுக்கு.

இரண்டரைக்கு மேற்பட்டதற்கு	தருமசநிவ்வியம்.
இரண்டுக்கு மேற்பட்டதற்கு.	தெய்வத்தின் பாதத்தையும் கர்த்தபாதத்தையும் தொடுதல்.
ஒன்றரைக்கு மேற்பட்டதற்கு	மைத்தன் மனைவிமுதலாயினோர் தலைகளைத் தொடுதல்.

அதமனுக்கு.

ஒன்றேகாலுக்கு மேற்பட்டதற்கு தருமசநிவ்வியம்.

ஒன்றுக்கு மேற்பட்டதற்கு { யாக முதலான புண்ணியத்தையேனும் தடாகப்பிரதிட்டைமுதலான புண்ணியத்தையேனு மிழத்தலாகிய நிவ்வியம்.

நிட்கத்தைப்பார்த்துச்சொல்ல அவற்றுள் காலுபங்குக்கு மேற்பட்டதற்கு மூலதனத்தான தருவங்களும் அந்த காலுபங்குக்குக் கீழ்ப்பட்டதற்கு முன்சொன்னதருவங்களுங் கொடுக்க.

சாதிசபதங்கள்.

மனு.

சூத்திரன் - அறுந் - என்ஞ - வெள்ளி- பொன்-கலப்பையாற் போக்கப்பட்ட வேலி இற்று னொன்றையேற்றி யெல்லாப்பாதங்களு மென்னிடத்தனவென்று சொல்லுக.

வைசியன் - பசு - விதை - பொன் னிவையெனக்குப் பலியாது கெடுகவென்று சொல்லுக.

சத்திரியன் - வாகனமும், ஆயுதமும், பலியா தொழிகவென்று சொல்லுக.

அந்தணன் - உண்மைசொல்லுதலிலு முண்டாகிய புண்ணியம் பயன்படாமற் போகுகவென்று சொல்லுக.

பொருட் கவர்ச்சிவிடயத்தில்

பிரகற்பதி.

உத்தமனுக்கு.

ஐம்பதுநிட்கத்துக்குமேற்பட்டதற்கு	விடநிவ்வியம்.
முப்பத்தெழுனாத்துமேற்பட்டதற்கு	அக்கினிநிவ்வியம்.
முப்பத்துமூன்றுக்குமேற்பட்டதற்கு	சலநிவ்வியம்.
இருபத்தைந்துக்குமேற்பட்டதற்கு	தூலாநிவ்வியம்.
இருபதுக்குமேற்பட்டதற்கு	தத்தமாடநிவ்வியம்.
பதினோர்துக்குமேற்பட்டதற்கு	தண்டுலநிவ்வியம்.
ஏழுனாக்குமேற்பட்டதற்கு	கோசநிவ்வியம்.
ஐந்துக்குமேற்பட்டதற்கு	தருமசநிவ்வியம்.
காலுபசுவுக்குமேற்பட்டதற்கு	பால்நிவ்வியம்.

மத்திமனுக்கு.

இருபத்தைந்துக்குமேற்பட்டதற்கு — விடதிவ்வியம்.

பத்தொன்பதேமுக்காலுக்குமேற்பட்டதற்கு / பதினெட்டுக்குமும் பதின்மூன்றுகுன்றியும், ஒருயவமுங்கூடிய வளவிற்கு மேற்பட்டதற்கு — அக்கினிதிவ்வியம். / சலதிவ்வியம்.

பன்னிரண்டரைக்குமேற்பட்டதற்கு — துலாதிவ்வியம்.

பத்துக்குமேற்பட்டதற்கு — கத்தமாடதிவ்வியம்.

ஏழரைக்குமேற்பட்டதற்கு — கன்னிலதிவ்வியம்.

மூன்றேமுக்காலுக்குமேற்பட்டதற்கு — கோசதிவ்வியம்.

இரண்டரைக்குமேற்பட்டதற்கு — தருமதிவ்வியம்.

இரண்டுபசுவுக்குமேற்பட்டதற்கு — பால்திவ்வியம்.

பன்னிரண்டரைக்குமேற்பட்டதற்கு — விடதிவ்வியம்.

ஒன்பதேகாலே யரைக்காலுக்கு மேற்பட்டதற்கு / எட்டுநிட்கழஞ்சுருயவங்குறைந்த குன்றியுங் கூடியவளவிற்கு மேற்பட்டதற்கு — அக்கினிதிவ்வியம். / சலதிவ்வியம்

ஆறேகாலுக்குமேற்பட்டதற்கு — துலாதிவ்வியம்.

ஐந்துக்குமேற்பட்டதற்கு — கத்தமாடதிவ்வியம்.

மூன்றேமுக்காலுக்கு மேற்பட்டதற்கு — கன்னிலதிவ்வியம்

ஒன்றேமுக்காலேயரைக்காலுக்குமேற்பட்டதற்கு — கோசதிவ்வியம்.

ஒன்றேகாலுக்கு மேற்பட்டதற்கு — தருமதிவ்வியம்.

ஒருபசுவுக்கு மேற்பட்டதற்கு — பால்திவ்வியம்.

முன்புசெய்ததாகிய குற்றங் காணப்பட்டவழுக்கும், இராசதுரோகம்-வன்செய்கை யிவற்றைச் செய்தவர்களுக்கும், பாவியென்று சொல்லப்பட்டவர்களுக்கும், மேற்சொல்லிய தொகைகளுக்குக் குறைந்த தொகைகளிலும், அவ்வவ் திவ்வியங்கொடுக்க.

வாதியர்சாதிப்படி- திவ்வியம்.

காரதர்.

அத்தணனுக்குத் துலாமும், சத்திரியனுக்கு அக்கினியும், வைசியனுக்குச் சலமும், சூத்திரனுக்கு விடமுங்கொடுக்கப்படும். கோசமான மெல்லாருக்குங் கொடுக்கப்படும்.

காத்தியாயனர்.

அல்லது - எல்லாச்சாதியோருக்கு மெல்லாத்திவ்வியமுங் கொடுக்கப்படும். ஆனாலக்கணனுக்கு விடமாத்திரங் கொடுத்தல்கூடாது.

பலமுனிவர்.

பேடன் - பிணியன் - வலியிலன் - செவிடன் - குருடன் - சிறுவன் - அழுக்காப்பட்டவன்- விருத்தன்-பெண்ணிவர்களுக்கு அக்கினி-சலமில்லாமிம்மூன்று திவ்வியங்களுந் கொடுத்தல்கூடாது.

கருமானுக்கும், குட்டரோகிக்கும், அக்கினி திவ்வியங் கொடுத்தல் கூடாது.

நீர்ச்சஞ்சரிப்பவர்களுக்கும், சுவாசகாசப் பிணியுடையவர்களுக்கும், சலதிவ்வியங் கொடுத்தல் கூடாது.

மந்திரத்தெரிந்தவன் யோகமுணர்ந்தவனிவர்களுக்கும், பித்தரோகிக்கும், சிலோட்டுமரோகிக்கும், விடதிவ்வியங்கொடுத்தல்கூடாது.

மகாபாதகஞ்செய்தவனுக்கும், பாலோகமில்லையென்பவன் கன்னிமாற்கவனிவர்முதலான பாவிகட்கும், கோசதிவ்வியங் கொடுத்தல் கூடாது.

தாய் - தந்தை - அத்தனர் - குரு - சிறுவர் - மாதர் - அரசனிவர்களைக் கொன்றவர்கள்-சங்கராசாதிமுதலாயினேரிவர்களுக்காசன் திவ்வியங்களைத் தனது மனுடனைக்கொண்டு செய்விக்க.

இருதுவின்படி- திவ்வியம்.

பலமுனிவர்.

குளிர்காலத்திற் சலதிவ்வியமும், வேனிற்காலத்தி லக்கினிதிவ்வியமும், மழைகாலத்தில் விடதிவ்வியமும், மிகுந்தகாற்றடிக்கும்வேளையி லேதுலாதிவ்வியமுஞ் செய்வித்தல்கூடாது.

திவ்வியஞ்செய்யுமிடம்.

பலமுனிவர்.

மகாபாதகஞ்செய்தவன் தேவாலயத்தெதிரிலும், இராசத்துரோகஞ்செய்தவன் அரசனுடைய அரண்மனைக்கெதிரிலும், பிரதிலோமசாதியன் - காற்சத்தியிலுந் திவ்வியம்பண்ணும்படி செய்க.

மேற்சொல்லிய மகாபாதகமுதலியவற்றிற்கு வேறுனகாரியங்களுஞ் செய்தவர்கள், துலாமுதலான திவ்வியங்களி லெல்லாருமதிவிராச சபையிற்பண்ணும்படி செய்க.

தலாதிவ்வியம்.

பலமுனிவர்.

தலாத்தினுடைய சொரூபமும், அளவும், [illegible] பே
படிசெய்து முன்னர்ச் சோத்திபனைத் [illegible] ம்
கட்டி யொப்புகொக்கி அதனையிறக்கி [illegible] ரு
முதலான விடங்களிலே தருமதேவதையை [illegible]
வாகனம்பண்ணிப் பூசித்தல், சோத்திபத்தை [illegible] ய்
கட்டுதல், தருமதேவதையை வேண்டுதல், [illegible]
சொல்லுவிக்க வேண்டியவைகளைச் [illegible]
பொதுவிதிக்காரியஞ்செய்து பின்னர் அவனை [illegible]
ட்டிலேற்றி நிறைபார்க்கையில் முன்பு [illegible]
மாகவேனும், உயர்வாகவேனுமிருந்தால் [illegible]
களை விதித்தலும், தாழ்ந்தாற் சோத்தியபலத்துக்குத் [illegible]
வைகளை விதித்தலுஞ் செய்க.

அக்கினிதிவ்வியம்.

பலமுனிவர்.

பிராட்டு விவாகனைவன் - மகிழைமரத்தி [illegible] தெவ
சன்னிதியிலே பூமி சுத்திபண்ணி யப்பால் [illegible]
கிழக்கே முடிவாகப் பதினறங்குல வளவு [illegible]
களையும், அவ்வளவினையுடைய இலை [illegible]
லே செய்க.

அம்மண்டலங்களோறுங் கிழக்கே [illegible]
பரப்பி முதலாவது மண்டலமுதல் [illegible]
முறையே அக்கினி - வருணன் - [illegible]
ரன் - சோமன் - சூரியனிவர்களையும், [illegible]
மற்றைச் சகலதேவதைகளையும் [illegible]

முதலாவது மண்டலத்திற்குத் [illegible]
க்கினிபைப் பிரதிட்டைசெய்து சாத்தி [illegible]
லெட்டங்குலவளவும், ஐம்பதுபலக்கலு [illegible]
தை யிரண்டுதிங்காய்ச்சி மூன்றுங்காய்ச்சல் [illegible]
தேவதையை ஆவாகனம்பண்ணிப் பூசித்து [illegible]
காரியஞ்செய்து சோத்தியனை முதலாவதுமண்டலத்தி [illegible]
மாக நிறுத்தி, அவன்கைகளினுலே நெல்லைத்தெய்க்கச்செய்து கை

னிலே மறுக்களிருத்தால் அம்மறுக்களிலே செம்பஞ்சுக்குழம்பு முத
லானவைகளாற் குறியிட்டிரண்டுகைகளையுங்கூட்டி விரிக்கச்செய்து,
அக்கைகளிலேயே முதலிலைகளைவைத்து வெள்ளைநூலா லேழுசுற்று
சுற்றி யாழுவன்னிலிலைகளையும், ஏழறுகுகளையும், ஏழுமலர்களையும்,
தனிதனி கலந்தபட்ட அக்ஷதைகளையும்வைத்து அக்கினியைப்
பிரார்த்தித்து, சோத்தியனுடைய வாக்கினுலே சொல்லவேண்டுவன
வற்றையுமவனைச் சொல்லுவித்து, அவ்விருப்புப்பிண்டத்தைப் பற்
றுக்குறட்டினுலெடுத்து அவனுடைய கையிலேவைக்க அவனதைப்
பிணத்தினுடைய கையிலெடுத்து யிடைவெளியிலே காலினவையாம விரண்
டாவது முதலான மண்டலங்களின் மேலாக மெல்லவடக்கு நோன்ப
தாவது மண்டலத்திலே வைக்க.

அதற்குமேல் முன்போல நெல்லைத் தெய்க்கச்செய்தபின்பு சா
யங்காலவளவையும் கைகளிற் கொப்புளமுதலானவைகள் காணப்படா
விடில் அவனை யனுப்புவான்.

காத்தியாயனர்.

அரிசியைத் தவறிவீழ்த்தாலும், கைகள் சுடப்பட்டதோ வில்
லையோவென்று மையற்தெளிவுறினும், மீட்டும் பரிணடத்தை யேற்
றுவிப்பு செய்க.

சலதிவ்வியம்.

பலமுனிவர்.

முதலை - மீன் - அட்டை - பாசி - புல்லு - சேறு- அலை யிவை
யெல்லாம் நிரம்பியிருக்கின்ற கடாக முதலானவைகளின் கரை
யிற் சாணவளவினை யொருதோரணமும் மத்தத்தோரணத்திற்கு மூற்
றடியளவுதனை யொருதோரணமுமாக நிறுத்தி, அந்த கடாகமுத
லானவைகளின் அளவுக்கு சலத்தி லொருதோரண நிறுத்தி யதனடியிற்
சோத்தியனை நிறுத்தி வருணபூசைமுதலான பொதுவிதிக்காரியஞ்
செய்விக்க.

பின்னர் வலியும் விளைவுமுடைய'வொருவனைக் கரைத்தோர
ணத்தடியிலும், அத்தன்மையுடைய மற்றொருவனை மூற்றைப்பதமுழத்
தோரணத்தடியினு நிற்கும்படி செய்க.

கடைதோரணத் தடியினின்றவன் மூன்றுபாணங்களை விடும்படி
செய்க.

அப்படிவிடப்பட்ட பாணங்களிலே மத்திம வேகபாணத்தைத் தார்த்துச் தோணத்தடியி னிற்கிறவ னெடுத்துக்கொண் டோய்ந் நன்னியெ னிற்கும்படி செய்க.

இப்படியிருக்கையில் பிராட்டிவிவாகன் கையைத் தப்பினவு- தே சோத்தியன் சலத்திலே முழுகுக. கணத்தானைத் தடியி னிற்கிறவனெடுப் பாணத்தையெடுத்துத் தாவத்து நிற்கின்றவனிடத் தைச் சேர்த்து அங்கே நின்றவனெடுத்துவந்து கணத்தானைத்தடியை ச் சேர்த்து பார்க்குமளவும் அப்படி முழுகியிருக்கின்ற சோத்தியனு டைய நாசமுதலான அவயவங்கள் காணப்படாம லெழுந்திருந்தா லவன் சுத்தனுவான்.

விடதிவ்வியம்.

பலமுனிவர்.

தேவசன்னிதியிலே உபவாசமும், சுகிபுருஷடையபிராப்தி விவா கத்தின் விதிப்படி தருமதேவதையின் பூசைமுதலானவைகளைச் செய்வி த்துச் சுகியுடைய சோத்தியனைத் தெற்குமுகமாக நிறுத்தி பிரதக் ஷிணப்பதிரத்தை யவன் சிரத்தில்வைத்து இமயமலையிலுமிருந்தெ டுத்த கொம்புகளிலும் பிறந்தவிடத்திலையேனும், வற்சகாயிலாயினு மிருந்தெ டுத்தையேனும், எழுயவப் பிரமாணமெடுத்து அவை யாதற்கு முப்பது பலமான நெய்யிற்கலக்கு மந்திரித்துச் சோத்தியன் பானம்பண்ணும் படி செய்விக்க.

சோத்தியன் விடபானம்பண்ணின கண்முத லுரந்நாறுதரங் கையைத்தட்டுகிற காலமளவும், மயிர்ப்புளகம் - வெயர்வை முகவிக் கம் - நிறமாறல் - நடுக்கம் - கண்சொருகுதல் - நெஞ்சை பிடி-மேல் மூர்ச்ச - மரண மிக்குணங்களி லொன்றேனுந் தோன்றுவிடி லவன் பரிசுத்தனுவான். பின்னர் - அக்கணமே வைத்தியன் மருந்துகொடு த்த விடத்தைமுறித் தைந்தாளளவு மவ்விடத்திலிருந்து அவனைக் காப்பாற்றும்படி செய்விக்க.

கோசதிவ்வியம்.

பலமுனிவர்.

சோத்தியன்-தெய்வவுபசனனை லவனுடைய இட்ட தேவதைக் கபிடேகமுதலான பூசைசெய்வித்தவ்விடேகசலத்தையும், சகலதே வதைகளையுஞ் சமமாக நினைப்பவனுமாகிய சோத்தியனை யும், சோதனையும், ஆயுதத்திலே சிவனம்பண்ணுகிறவ னுமா

லும், துர்க்கைமுதலான வுக்கிரதேவதையி னபிடேகசலத்தையும், இராசசபையிற் கொண்டுவந்துவைத்து மேற்சொல்லியபடி நாலுதே வதை யாவாகனமுதலான பொதுவிதிக்காரியஞ் செய்து அத்தச் சல த்தை மூன்றுதினங்கை பானம்பண்ணும்படி செய்விக்க.

அப்படிச் செய்வித்தபின்னர் அன்றுமுத லிருபத்தொருநாள் வ ரையி லிராசிகளதவிகத் துன்பங்கள் சோத்தியனுக்கேனும், அவனு டைய மைந்தர் முதலாயினோர்க்கேனு முண்டாகும். இத்தப்பிரமா ணம் அப்படி பொருள்விடயத்திலும், மிகுந்த பொருள்விடயத்திலுஞ் செய்வதுண்டு அற்பகோசமான லேழுநாள்வரையிலும், மகாகோச மான லிருபத்தொருநாள்வரையிலும், மேற்சொல்லிய துன்பந்தோன் றுமிடி லவன் சுத்தனுவான்.

தண்டலதிவ்வியம்.

பலமுனிவர்.

சூர்யபிம்ப வபிடேகசலத்தை மட்பாத்திரத்தில் வார்த்து அதி லே சம்பாகெல்லரிசியை முதனாளுறவைத்து, தருமதேவதை யாவா கனமுதலான பொதுவிதிக் காரியஞ்செய்து மறுநாள் சுகியுடையசோ த்தியனுக்கு அந்தத் தண்டலத்தில் மூன்றுபிடிகொடுக்க, சோத்திய னதனமென்று மரவரிமரத்திலையிலேனும், அரசிலையிலேனு மும்மும் படி செய்க.

அப்படி மென்றுமிழ்ந்த அரிசியோத்தத்தோடு கலந்திருப்பினும், கன்னம் கீழ்வாய்ப்புற மிவை விரியினு மவன் சுத்தனுவான்.

தத்தமாடதிவ்வியம்.

பலமுனிவர்.

பிரோட்டிவிவாகனனவன் இராசசபையிலே பதினறங்குல வகல மும், காலங்குலவாழமும், வட்டவடிவமுடையதாக இரும்பு - தாம்பி ரம் - மண்ணிவற்று ளெதனுலேனுஞ் செய்யப்பட்ட பாத்திரத்திலிரு பதுபல நெய்யைவார்த்து அது நெருப்பிற்காயும்பொழுது பொன்முத லானவைகளி லெதனுலேனு முத்திரையுடையதாகச் செய்யப்பட்ட வொரு மாடப்பிரமாண முடையதையதிலே போட்டுத்தருமதேவ தையாவாகனமுதலான பொதுவிதிக்காரியஞ் செய்து, பச்சிலையிடப் பொங்கும்படி காய்ந்திருக்குஞ்சமயத்தில் அந்தத் தத்தமாடத்தைச் சோத்தியன்கையா லெடுக்கும்படி செய்க.

அச்சோத்தியனுடையகையிற் கொப்புளமுதலான குற்றங் காணப்பட்டால் அவன் குற்றமுடையவனுவான்.

பால்திவ்வியம்.

பலமுனிவர்.

எட்டங்குலநீளமும், காலங்குலவகலமும், பதினாறங்குலக் கனமுமுடைய இருப்புப்பாளத்தை யக்கினிசிகை [illegible] யாவாகனமுதலான பொதுமிதிக்காரியஞ்செய்பவர் [illegible] காய்ந்திருக்குஞ் சமயத்தில் அப்பாளகதை [illegible] கக்கும்படி செய்க.

அந்தாக்கிலே வேகுதல் முதலிய குற்றந்தோன்றுவிடில் [illegible] சுத்தனுவான்.

கருமசந்திவ்வியம்.

பிதாமகன்.

கருப்பிரதிமையை வெள்ளியினாலும், அகருப்பிரதிமையை [illegible] மிரும்பினாலுஞ் செய்க.

அல்லது கருப்பிரதிமையை வெண்மையாகவும், அகருப்பிரதிமைகளிரண்டையுங் கோமயத்தாலெனை [illegible] பட்டவருண்டைகளுக்குள்ளே வைத்து [illegible] மறைவாகவைத்து, கருமதேவதை யாவாகனமுதலான பொதுமிதிக்காரியஞ்செய்து அப்பிரதிமைகளைப் பூமித்தினால் [illegible] விரண்டி லொன்றையெடுக்கும்படி செய்க.

சோத்தியனெடுத்தது கருமப்பிரதிமையானுலவனுக்குத்தோல்வியும்.

விவகாரநிச்சயத்திற்குப்பின்பு செய்யுங்கரியம்.

சங்கிரக்காரர்.

அரசனுனவன் விவகாரத்திலே [illegible] க்கிலேக்கியத்திற்காட்டிய இலக்கணமுறை [illegible] கொடுத்து அவனுக்குத் தக்கபடி யுபசாரஞ்செய்க.

வியாசர்.

தோல்வியடைந்தவனுக்குத் தண்டத்தை விதிக்க.

காரதர்.

விவகாரஆரம்பத்தில் பொதுக்கட்டிவைத்த பொருளை ஜெயித்தவனுக்கு வட்டியோடு கொடுப்பிக்க.

யாஞ்ஞவல்கியர்.

பல பொருளைக்குறித்து வாதிஎதிர்த்துபோவதில் பிரதிவாதி காவிந்தவிஷயத்தி லொன்றுங் கொடுக்கவேண்டுவதில்லை, ஆனுலிப் பல பொருள்களில் ஒன்றுவது கான்கொடுக்கும்படி யிவ்வாதி சூபித்தாலெல்லாப்பொருளையுங் கொடுப்பேனென்று உறுதியாகச் சொன்னலப்பொழுது வாதியினுலே ஒருபொருளாவது பலபொருளாவதிலுப் படுத்தினுல் எல்லாப்பொருளையுங்கொடுப்பிக்கப்படுவான்.

விட்ணு.

ஜெயித்தவன் அரசனுக்கு [illegible] ற்றவன் நூற்றுக்குப் பத்துத்தண்டமாகவும் [illegible]

மறுவிசாரணை.

காரதர்.

சபைகளிடத்திலும், இரவிலும், ஊர்வெளியிலும், விட்டிலும், பலரிடத்திலும், இரகசியத்திலும், தீர்ப்புசெய்தவழக்கிலும், பலவர்த்தம் பொருளாசை - பகை விலைமுதலியவைகளால் தீர்மானித்த வழக்கிலும், புத்தியீனமாவது, பக்ஷபாதமாவது, உண்டாகும், ஆனையாலும், புத்தியீனமாவது, பக்ஷபாதமாவது, உண்டாகும், ஆனையாலவைகள் மறுபடியும் விசாரிக்கத்தக்கனவாம்.

பிரகற்பதி.

ஜாதிகூட்டத்தார் முதலான நேர்ப்படியாயல்லதராசாவுதீர்ப்புசெய்தது லோபகாரணத்தோன்றுதபோது அவ்விஷயத்தைத்திரித்த அரசன் மறுவிசாரணைசெய்க.

யாஞ்ஞவல்கியர்.

மறுவிசாரணைசெய்யும்பொழுது நேர்ப்படி நிச்சயன்தானதாகத் தீர்ப்புச் செய்ததாகக் காணப்பட்டால் அச்சபையினருக்கு தோற்றவழக்கி லுண்டான கஷ்டப்பொருளுந் திரட்டிப்பானபாதகம் விதிக்கப்படும்.

பிரகற்பதி.

அப்படி யதியாயமாக தீர்மானித்தது ஜெயாடை ந்த வழக்கா
ளியின் முயற்சியினலேயானல் அவனுக்கும், அந்தச் சபையினருக்கும்
அபராதம் விதிக்கப்படும்.

சாகூஷிகளாலேயானல் சாகூஷி பிரகரணத்தில் விதித்த அபராதம்
அச்சாகூஷிகளுக்குமாத்திரம் விதிக்கப்படும்.

நாரதர்.

நியாயமாக தீர்ப்புசெய்ததை ஒருவன் அங்காரத்தினலே அதி
யாயமென்றெண்ணி மறுவிசாரணையிற் கொண்டுவந்தால் அவன்தோ
ல்வியுடனே தண்டத்தையடைவன்.

இராசசபையிலே தீர்ப்பானது நியாயமாகத் தோன்றினல் அந்
ந்கு மேலான இராசசபையிருந்தா லத்தானத்தில் அதை மறுவிசா
[illegible]
[illegible]து.

மனு.

ஒருவன் அன்னியன்பொருளை யிவன்முதலானவைகளாற்கைப்
பற்றி அப்படிக் கைப்பற்றிய பலத்தால் அப்பொருளை யிடாகவைத்
தல், விற்றல், தானமாகக்கொடுத்தல், இச்சைப்படி செலவழித்தல்,
அப்படிப்பட்டதை யவனிடத்தில் மற்றொருவன்வாங்குதலிவைகளை
குறித்த வழக்குகளை யாசனிக்குக.

யமன்.

பலபக்தமாய் கொடுக்கப்பட்டதற்கும், அழைபோகிக்கப்பட்ட
தற்கும், எழுதப்பட்டதற்கும், சிறுபிள்ளை - சுதந்தரமில்லாதவன் இவ
களாற் செய்யப்பட்டவைகளுக்கும் பலமில்லை.

பலமுனிவர்.

சிறுபிள்ளை - பதினறுவயசுக்குட்பட்டவன்.

சுதந்தரமில்லாதவர் தந்தை தாய் தமையனிவர்களை யுடை
யவரும், மாதரும், அடிமைகளும், அடுத்துப்பிழைப்போரும், மாண
க்கர்முதலியோரு மாவர்.

காத்தியாயனர்.

மைத்தன்முதலான வுரிமையில்லாதவர்களாலே செய்யப்பட்ட
காரியங்க ளிவர்களுடைய தந்தைமுதலான தலிவர்களாலே நீக்கப்
படலாம்.

நாரதர்.

ஆனல் உரிமையில்லாதவரான உன்மத்தன் அச்சமூற்றவனிவர்
களாற் செய்யப்பட்டகாரிய மரசனுலே நீக்கப்படும்.

காத்தியாயனர்.

மேற்கூறிய மைத்தன்முதலிய வுரிமையில்லாதவராற் செய்யப்ப
ட்டகாரியம், அவர்களுடைய தந்தைமுதலான தலிவர்களாலொப்பப்
பட்டால் அரசனதனை நீக்காமற்கொள்ளலாம்.

பிரசாபதி.

உரிமையின்மையன், பொருளின்வரவு, செலவு, பொருளைக்காப்
பாத்தல், கொடுத்தல், வாங்கல் இவைகளிலும், உழவு வியாபார மிவற்
றிலுக் முதலாளியாக நியமிக்கப்பட்டால் அவனுற்செய்தது தலிவ
னுற் செய்யப்பட்டதேயாம்.

எஜமான னெந்நத்தேசத்திருப்பினும், அவனேற்படுத்திய மனி
தன்செய்ததை யந்த எஜமானன் மறுத்தல்கூடாது.

காத்தியாயனர்.

ஆபத்தைப்போக்குதற்பொருட்டும், குடும்பங்காத்தற் பொருட்
டும், மனைவிமுதலிய தற்சுதந்தரமில்லாதவராற் செய்யப்பட்டகாரிய
த்தை யவர்களுடைய குடும்பத்தலைவர்கள் தள்ளாமற்கொள்க.

நாரதர்.

அவர்கள் வீடுமுதலான வசையாப்பொருள்களைத்தானமுதலா
னவைகளாகச் செய்தாலவைகளுக்குச் சித்தியில்லை.

பால்யன் முதலினேர் பொருள்விடயம்.

மனு.

அரசனுனவன் தங்கள்பொருளைகாக்குந்திறமில்லாதவர்களாகிய
சிறுவன் - மலடி - மைத்தரில்லாதவர்கள் - திக்கில்லாதவர்கள் - சுத்
புடையவள் - குலத்தாரில்லாதவள் - இவர்களுடைய பொருளைச்
ஜாக்கிரதையாய்காக்க.

இவருள் பால்யன்பொருளை யவனுடைய விளமைப்பருவ நீங்கு
மளவுங் காக்க.

இவர்களுடைய பொருளை அபகரித்த சுற்றத்தாருக்குச் சோர
தண்டம் விதிக்கப்படும்.

கௌதமர்.

காப்பாற்றத்திறமுடையவ னனைதும், பொருள்விழுத்தலிடத்தே சமமற்போய் அப்பொருள் அன்னியனுலெடுக்கப்பட்டு அரசனுக்கறி விக்கப்படின் அரசனதனைப் பலர்க்கு மறிவித்துத் தன்பொருளோடு சோமல் வைத்து ஒருவருகும் வகைக்கும் காக்க.

மனு.

பொருளுடையவன் சமீபத்திலிருந்து ஒருவருகத்திற்குள் வாரா மற்போனதும், தூரத்திலிருந்து மூன்றாண்டி னுள்வாராமற்போனதும், அப்பொரு ளரசனைச்சேரும்.

பலமுனிவர்.

பொருளுடையவன், மேற்சொல்லிய காலத்துக்குள்வந்து அப் பொருள் தன்னுடையதென்று இடம் - காலம் - நிறம்-தன்மை-குறி-எண்ணிக்கை - அளவு - இவைகளோ ரைந்தை அரசனுடைய வதிகாரி களுக்கு ரூபித்தானுல் அப்பொருளை யவனுக்குக்கொடுக்க.

மனு.

உரிமையில்லாதவன் அப்பொருளைத் தான் பெறுதற்கு முயற்சிசெய்துவந்து பொய்சொன்னுல் அப்பொருளுக் கொத்தபொருள் அவனுக்குத் தண்டமாக விதிக்கப்படும்.

மேற்கண்ட சமீபத்திலிருக்கிற வுடையவ னொருவருடத்துக்குள்ளும், தூரத்திலிருக்கிற வுடையவன் மூன்றுவரு டத்துக்குள்ளும், குறித்தகாலத்தில் விசாவில்வந்தால் அப்பொருளிற் பன்னிரண்டி லொன்றும், வெளள்ழித்துவந்தாற் பத்திலொன்றும், பலாள் கழித் துவந்தா லாயிலொன்றுமெடுத்துக்கொண்டு மிகுதியையுடையவனுக் குக் கொடுக்க.

கௌதமர்,

அப்படி யரசன் பாகங்கொள்ளும்போது தவறிப்போன பொரு ளைக்கண்டெடுத்துக்கொண்டுவந்து தன்னிடத்திற் கொடுத்தவனுக் குத் தனது பாகத்திலே காலிலொருபங்கு கொடுக்க.

உடையவ னிறந்தநிலுலே வாராமற்போனபோது அவனிழந்த பொருளில் காலிலொருபங்கு கொடுக்க.

யாஞ்ஞவல்கியர்.

தப்பிப்போன குதிரைமுதலான வொருகுளம்புடையதை தல் த்துக் கூலத்தார் முதலானவர்களிலே கண்டுகொண்டுவந்தவனுக்கு

நாலுபணமும், மனுடனைக்கண்டுகொண்டு வந்தவனுக்கு ஐம்பதுபண மும், கடா - பசு - ஒட்டகம் - இவற்றிலொன்றைக்கண்டுகொண்டு வந்தவனுக்குத் தனித்தனி யிரண்டிரண்டுபணமும், ஆட்டைக்கண்டுகொண்டு வந்தவனுக்குக் காற்பணமும், அரசன்கொடுக்க.

மனு.

நிதியை யொருவன் கண்டெடுத்தபோது அந்தநிதியி லாறிலொ ருபங்கு வரசனைச் சேரும்.

நிதியையெடுத்தவன் - உத்தம குணமுடையவனுனுல் பன்னிர ண்டிலொன்று அரசனைச்சேரும்.

யாஞ்ஞவல்கியர்.

பிராம்மணனுலை அதனி லரசனென்றும் எடுக்கப்படாது.

நிதியைக்கண்டெடுத்தவன்- அதனை யரசனுக்கறியப்படுத்தாமற் கொண்டுபோன லவனிடத்தி லந்தநிதியையும், அவனது சத்திக்குத் தக்கபடி தண்டத்தையும் வாங்குக.

மனு.

அரசன் தான்கண்டெடுத்த நிதி தன்னுடையதான லது முழு வதுந் தானேகொள்க. அந்தநிதி யின்னனென்று வழக்கமாகச்சொ ல்லப்பட்டா லதனிற்பாதி தருமத்துக்காகவைத்துப் பாதியைத் தன துபொக்கிஷத்திற் சேர்த்துக்கொள்க.

உடையவன் குணவினனுலை லந்தப்பொருளிலே பாதி யரசனை யும் பாதி யவ்வுடையவனையுஞ் சேரும்.

கௌதமர்.

அரசன் நிருடனற்வாப்பட்ட பொருளைக் கண்டுபிடித்துப் பொ ருளுடையவனுக்குக் கொடுப்பியாவிடில் அப்பொருளுக்குச் சமமான பொருளைத் தனது பொக்கிஷப்பொருளி லெடுத்துக்கொடுக்க.

விவகாரசாரசங்கிரகத்திற் பொதுவிதிப்படலம்

முற்றிற்று.

—

விவகாரசாரசங்கிரகம்

சிறப்புவிதிப் படலம்.

பொருட்குறிப்பு.	பக்கம்.	வரி.
கடன்கோடல் அல்லது கடன்கொடுத்தல்.	...	உ
கடனளவு கொடுக்கத்தக்கது முதலான எழுவகை விசேஷணங்களை யுடையது.	க	ச
அந்தக் கடனிப்படிக் கொடுக்கப்படவேண்டும்.	...	அ
ஈடு காண்குவகைப்படும்.	...	கக
அடைப்பிட்டி லிலக்ஷணம்.	...	கச
காப்பிட்டி லிலக்ஷணம்	...	கஞ
காலவரையிட்டி லிலக்ஷணம்.	...	கஎ
காலவரையிலிட்டி லிலக்ஷணம்.	...	கஅ
ஜாமீனும் - சாக்ஷியும் - பத்திரமும் இன்னப்படி யிருக்கவேண்டும்.	...	உக
வட்டியிலக்ஷணம் வட்டிப்பிரகரணத்திற் காண்க.	உ	கூ
ஈடுமுதலானவை யின்னதினித்த மிருக்கவேண்டும்.	...	ஈ
ஈடுமுதலானவை யில்லாவிடிற் கடனெளிதிற் சித்தியாது.	...	ஈ
உரிமை யில்லாதவர்களுக்குக் கடன் கொடுத்தல் கூடாது.	...	கஉ
ஈட்டின்விதி.	...	கச
தனிகனீட்டை யிப்படிக்காக்க.	...	கசு
தீக்கோள் முதலியவற்றால் ஈடு கெடுதியடைந்தபோது கடனுடையவனது செய்கை.	...	உ0
ஈடாகவைத்த நிலம் அரசனாலேனும் வெள்ளத்தாலேனும் கெடுதியடைந்தபோது கடனுடையான் செய்கை.	...	உஎ

பொருட்குறிப்பு.	பக்கம்.	வரி.
ஈடு திலஞாளை வட்டிக்குச் சமமானபோது கடனு டையவன் செய்கை.	...	ஙக
காப்பிட்டையுந் துய்ப்பிட்டையும் ஏற்பாட்டின் படி செய்க.	...	ச
ஈட்டைக்குறித்த செய்கை மாறுபட்டால் வட்டி யில்லை.	...	சு
காப்பிட்டை நியமவிரோதமாக அனுபோகித்தவ னுக் குண்டாகுங் கேடு.	...	ஏ0
கடனுடையவனுடைய குற்றத்தால் துய்ப்பிட்டனு போகிக்கப்படாவிடில்.	...	ஏச
காப்பிட்டைக் கடனுடையவன் சம்மதியில்லாமல் கடன்கார னனுபோகித்தால்.	...	ஏஅ
துய்ப்பிடான வேலியாட்டி முதலானவர்களை கட னன்கொடுத்தவன் பிடித்தா லவனுக்குத் தண்டம்.	...	உச
எவ்வளவேனு மனுபோகித்தல் கூடாதென்றும் துய் ப்பிட்டை யனுபோகித்தால் தண்டமுதலானவை யுண் டாகும்.	...	ஒ எ
ஈடாகவைத்தபொருள் கடன் கொடுத்தவனுடை ய அஜாக்கிரதையினலே விகாரமடைந்தால்.	...	ஙஉ
ஈட்டை முன்னிருந்தபடி கொடுத்தால் வட்டியுமு தலுங் கெடாது.	...	க
கடன்காரர் வேறுபட்ட சாதியாயிருந்தால் அத்தனர்மூலமாகச் சாதிக்கிரமப்படி அவர்களுடைய கடனைத்தீர்க்க.

காத்தியாயனர்.

கடனுடையவன் ஒருவினத்திலே பலரிடத்திற் கடன்வாங்கி விஷயத்தில் அவர்க ளெல்லாருக்கும் ஒருவினத்திலே கடன்கொடுக்கும்படி கேரிட்டபொழுது அத்தக்கடனெல்லாவற்றையுங் கொடுக்கத்தக்கபொருள் கடனுடையவனிடத்திலிருந்தால் அவன் எல்லாக்கடனையும் அப்பொழுதே தீர்க்க.

பொருள் அற்பமாயிருந்தால் கடன்காரர்கொடுத்தகடனின் பொருளின் தொகைப்படி பிரித்துக்கொடுக்க.

யாஞ்ஞவற்கியர்.

அற்பமான பொருளுடைய கடனுடையவன் பலரிடத்திற்கடன் வாங்கி மேற்சொல்லிய கிரமப்படி கடனைத்தீர்த்து வருகாலில் எழுபாலும் அப்பொழுது நிலுவையாகின்ற கடன்காரருடைய கடனுக்கு அவன்செய்யும் வேலையையன்றி வேறுகதியில்லை.

காத்தியாயனர்.

[redacted] பலருக்குப் பத்திரமெழுதிக்கொடுத்துக் கடன்வாங்கினவிஷயத்தில் கடனுடையவனுலேனவைக்கப்பட்ட சட்டைக் கைப்பற்றிக்கொள்ளுதலையும், அதைக்காப்பாற்றுதலையும், அந்தக் கடன்காரர்களும் பலத்தையும், அத்தக்கடன்காரர்கள் சமமாகச் செய்துகொள்க.

பலரிடத்திற் பொருளைவாங்கி வாணிகஞ்செய்யுங் கடனுடையவன் ஒருவனிடத்தில் வாங்கினபொருளைக் கொண்டசக்கினுலே தீர்வடையுண்டானுல் அதை யத்தப்பொருள் கொடுத்தகடன்காரனுக்கே கொடுக்க. மற்றதை கடன்காரனுக்குக் கொடுக்கவேண்டுவதில்லை.

கடன்தீர்க்கத்தக்கவர்களின்றவர்.

பலமுனிவர்.

கடனுடையவனுடைய பிதா தாய்பிணியினலு மிருப்பதினலே கடனைத்தீர்க்கத் திறமையில்லாதவனு மிருந்தாலும், அவன் தேசாந்தரம்போயிருக்குமிட மின்னதென்றுதெரியாம லிருப்பதினலும், இறந்துபோனலும், அந்தப் பிதாவாங்கினகடன் பெயரின்தொகை முதலியவற்றைக்குறித்து சந்தேகமில்லாதிருப்பினும், அந்தக்கடனைப் பிறவிக்குருடுமுதலிய குற்றமில்லாதவனுகியும், பதினாலு வயதிற்கு மேற்பட்டவனுகியு மிருக்கின்ற புத்திரன்தீர்க்க.

தேசாந்தரம்போன பிதா விருக்குமிடந்தெரிந்தா லத்தப்பிதாவின் கடனைப் புத்திரன்கொடுக்க வேண்டுவதில்லை.

பிதா பிறவிக்குருடனையேனும், பதிதனையேனும், பயித்தியம் - சயரோகம் - குட்ட ரோகம் - இவைமுதலிய நோயுடையவனையேனு மிருக்கும்போது அத்தப்பிதாவின்கடனைப் புத்திரர்கள் தீர்க்க.

தந்தையானவன் சமீபத்திலிருந்தாலும், புத்திரர்மேற்சொல்லிய தன்மையுமுடையவராயிருந்தாலும், பிதாவின்கடனை அந்தப்புத்திரர் கொடுக்க வேண்டுவதில்லை.

காத்தியாயனர்.

பிதாவிருக்கையில் சிலபுத்திரர்கள் பாகம்பிரித்துக்கொண்டவர்களாகியும், சிலபுத்திரர்கள் பாகம்பிரித்துக்கொள்ளாமற் பிதாவுடனே சேர்ந்தவர்களாகியு மிருக்கும்பொழுது அத்தப்பிதா கடனுடையவனுயிருந்து இறந்துபோனல் அத்தக்கடனைப் பிதாவோடுகூடியிருந்த புத்திரர்மாத்திரமே தீர்க்க.

நாரதர்.

அவிபத்தர்களாகிய புத்திரர்களெல்லாரும் தலைமையுடையவர்களாயிருந்தால் அவர்களெல்லாருஞ் சம்மதித்துப் பொதுப்பொருளிலே பிதாவின்கடனைத் தீர்க்க.

பிரகற்பதி.

புத்திரன் தன்னுடைய பிதாவாங்கினகடனையும், தான்வாங்கின கடனையும், கொடுக்க வேண்டும்பொழுது பிதாவின்கடனை முன்பு கொடுத்துப்பின்பு தன்னுடையகடனைத் தீர்க்க.

கொடுக்கத்தகாததாகிய பிதாவின் கடன்விஷயம்-

பலமுனிவர்.

பிதாவானவன் கள்குடித்தல் சூதாட லிவற்று ளுண்டாகிய கடனையும், தூர்த்தன் - சூதாடுவோன் - பூசுழ்பவன் - கூத்தாடி - மல்லன் - னைவைத்தியன் - காருவித்தைக்காரன் - கழைக்கூத்தர் - இழிவானவேலை செய்பவர் - திருடன் - இவர்கள் முதலானவர்களுக்குக் கொடுக்கிறேனென் றெழுப்பிக்கொண்ட வீண்கொடைப் பொருளையும், காமத்திலை [illegible] வேலைமைதப்பினவளுக்கு எழுத்திலுலேனும், சொல்லிலேனும், கொடுக்கிறேனென்றெழுப்புக்கொண்டபொருளையும், கோபத்திலுலே உயிரையேனும், பொருளையேனும், அழித்தற்காகக் கொ

டுக்கிறேனென்ற பொருளையும், இன்னுமிவைபோன்ற கடன்களையும் புத்திரன் கொடுக்கவேண்டுவதில்லை.

பௌத்திரனுலே கடன்கொடுத்தக்க கடன்விஷயம்.

காத்தியாயனர்.

பிதாவைப்பெற்ற பாட்டனுடைய கடனுக்கு திராப்பினிமுதலான குற்றமுடைய பிதாவினுலே தீர்க்கப்படாததும், குற்றமில்லாதுமாயிருந்த லக்ஷக்கடனைப் பௌத்திரன் வாழ்நிலையால் தீர்க்க.

பிதாவினுலே கொடுக்கப்பட்டதுபோய் மீண்டுவாங்கின்ற கடனிலுவையைப் பௌத்திரன் தீர்க்க.

பிதாவினுலே யறியப்படாத கடனையும், அவனுலேதள்ளப்பட்ட கடனையும், கடன்காரன் மெய்ப்படுத்தின வதனையும் அத்தப்பௌத்திரன் தீர்க்க.

பாட்டனுலவன் கள்குடித்தல் முதலானவைகளாலுண்டாக்கிய கடனைப் பௌத்திரன் கொடுக்கவேண்டுவதில்லை.

விஷ்ணு.

பாட்டன் கடனுடையவனுகிச் சென்னிபாசத்தையடைந்தாலும், மரித்தாலும், தேசாந்திரம்போயிருபதுவருஷஞ் சென்றாலும், அவனுடைய கடனைப் பௌத்திரன் தீர்க்க.

பௌத்திரன் பாட்டனுடைய பொருளையடைந்தால் அவனுடைய கடனை வட்டியுடனும், பொருளையடையாவிடில் வட்டியில்லாமலும் கொடுக்க.

நாரதர்.

அத்தப் பௌத்திரனுடைய புத்திரன் தனது தக்கைதாயின் பாட்டனுடையபொருளையடையாவிடில் கடனைத்தீர்க்கவேண்டுவதில்லை.

பிரகற்பதி.

பாட்டனும் பிதாவும் தானும் கடன்வாங்கினவிஷயத்தில் பாட்டனுடைய கடன்முதல் ரோமதத்திலே தீர்க்க.

புத்திரனாக்குறித்துப் பதினறுவயதுடையவன் [illegible] லாகக்கூறிய [illegible] கொள்க.

கடனுடையவனது பொருளையடைந்தவன் முதலானவர்களின் விஷயம்.

யாஞ்ஞவல்கியர்.

கடனுடையவன் புத்திரரும் பௌத்திரரு மில்லாதவனுகியும், பொருளுடையவனுகியு மிருந்து இறந்துபோனல் அவனுடையபொருளை யெடுத்துக்கொண்டவனும், அவனில்லாதபோது அவனுடைய மனைவியை வைப்பாட்டியாக வைத்துக்கொண்டவனும், அவனில்லாதபோது பிறவிக்குருடுமுதலான தன்மையுடையவராகிய அவனுடைய புத்திரரு முறையே அவனுடையகடனைத் தீர்க்க.

காத்தியாயனர்.

பொருளுடையவளாகியும், சிறுகுழந்தையுடையவளாகியு மிருக்கின்ற மனைவி கடனுடையவனுகியிருந்த கணவனிறந்துபோனபின்பு தன்னுடைய தன்மாமன்முதலான அன்னியனைத் தன்னைக்காத்தற் பொருட்டு வைத்திருந்தால் அந்த மாமன்முதலானவர்களைக்கடனைத் தீர்க்க.

அவர்களைக்கடனைத் தீராவிடில் அவளைவிடுக.

குடும்பவிஷயம்.

பிரகற்பதி.

குடும்பத்தலைவன் குடும்பங்காத்தற்பொருட்டு தனதுதக்கையுடன் பிறந்தவன் - தன்னுடன்பிறந்தவன் - தனதுமைத்தன் மனைவி தாய் - லோலக்காரன் - மாணாக்கன் - தன்னையடுத்திருப்பவனிவர்கள் வாங்கினகடனைத் தீர்க்க.

நாரதர்.

புத்திரனையுடையவளும் பொருளில்லாதவளுமாகிய வொருத்தி கடனுடையவளாயிருந்து தனது புத்திரனைவிட்டுநீங்கிப்போய் தனது மாமன்முதலான அன்னியனையடுத்திருந்தாலவளுடையகடனை யவளுடைய புத்திரனே தீர்க்க.

விட்டுணு.

குடும்பத்தலைவனுடையசம்மதியினுலே குடும்பங்காத்தலல்லாத பிறந்தக் காரியத்தைக் குறித்தானலும், மனைவிமுதலான குடும்பராமல வாங்கப்பட்ட கடனை அந்த குடும்பத்தலைவன் தீர்க்க.

காத்தியாயனர்.

ஆபத்தக்காலத்தில் குடும்பத்தலைவன் ருடும்பங்காத்தலிலே நிலையில்லாதவனாயினும், பிணியுடையவனாயினும், வறுமைத்தன்மற்றவனாயினும், கன்னிகையின் கற்பழிப்பினும், பிறருரியப்பொருட்டேனும், புத்திரன்முதலானவர்களாலே வாங்கப்பட்டகடன் அத்தக் குடும்பத்தலைவனாலே தீர்க்கத்தக்கதாகும்.

நாரதர்.

ஒருவன் தனதமைச்சன் மனைவிபிள்ளைகளாலே தனது குடும்பப் பொருட்டன்றிச் செய்யப்பட்ட கடனைத்தன்னிலே நிச்சயமுடையவனாயினும் அத்தக்கடனைத்தீர்க்க. இச்சையில்லாதவனாயினும் அதனைத் தீர்க்கவேண்டுவதில்லை.

ஆபத்து நிமித்தம் புத்திரன்முதலானவர்களாலே செய்யப்பட்ட கடனைத் தீர்த்தலிலே நிச்சையில்லாதிருப்பினும், அத்தக்கடனைக் குடும்பத்தலைவன் தீர்க்கவேண்டும்.

வண்ணான் - செக்கான் - இடையன் - வேடன் - கள்விற்கிறவன் - சூதாடியிவர்கள் தங்களுடைய மனைவியர் - குடும்பம் பொருட்டேனும், மற்றெந்த நிமித்தத்தினாலேனும் முன்னாலாகிய கடனைத்தீர்த்தலிலே நிச்சையிருப்பினும் இல்லாவிடினும் தீர்க்கவேண்டும்.

வாஞ்ஞவல்கியர்.

அவிபத்தர்கள் குடும்பத்தின்பொருட்டுக் கடன்வாங்கினபோதும், அத்தக்கடனைத்தீர்க்கத்தக்க குடும்பத்தலைவன் - பிதாத்தாதம்போனபோதும், இறந்துபோனாலும், அத்தக்கடனை யந்தக்குடும்பத்திலே பாகத்தக்குரியவர்களாயிருக்கிறவர்கள் தீர்க்க.

கணவன் மைத்தனிவர்களாற் வாங்கப்பட்டகடனை மனைவியும், புத்திரனாலே வாங்கப்பட்ட கடனைப் பிதாவும், மனைவியாலே வாங்கப்பட்ட கடனை கணவனும் கொடுக்கவேண்டுவதில்லை.

பாகினமாதர் விஷயம்.

காத்தியாயனர்.

மனைவியும் - கணவனும் - புதல்வனு மொன்றாயிருந்துக் கடன்வாங்கினவிஷயத்தில் அவருள் கணவனும், புதல்வனு மிறந்துபோனாலுந் தக்கடனை அம்மனைவிதீர்க்க.

இப்படியல்லாத கடனை [illegible]

மனைவியானவள் தான் கொடுப்பதாக ஒப்புக்கொண்டால் அத்தக்கடனை அவளே தீர்க்கவேண்டும்.

மனைவியானவள் தான்நனித்துவாங்கினகடனைத் தானேதீர்க்க.

காத்தியாயனர்.

மாணவகமத்திலே கணவன் இத்தக்கடனை தீர்க்கவேண்டுமென்று சொல்லியபோது மனைவி தானேறுப்புக்கொள்ளாவிடினும், கணவனுடைய பொருளையடைந்தால் அவளே யத்தக் கடனைத்தீர்க்க.

கடன்காரனிறந்துபோனபோது கடனைச் செலுத்து முறைமை.

நாரதர்.

வேறியனுகிய கடன்காரனிறந்தபோது அவனுக்குச் செலுத்தவேண்டியகடன்பொருளை அவனுடையபுத்திரன் பௌத்திரன் முதலான மனிதர்களிலும், அவர்களில்லாவிடில் சமானகுலத்தினரிடத்திலும், அவர்களில்லாவிடில் மாமன்முதலான அணித்தினராகியவர்களிலும், அவர்களில்லாவிடில் அன்னியனனவுத்தமவேசுற்றத்தாரிடத்திலும், அவர்களில்லாவிடில் புனலிற்பதிக்க, அல்லியனிடத்திலுங் கொடுக்க, அவனுமில்லாவிடில் புனலிற்பதிக்கவது அக்கினியிலோமஞ்செய்க, இவ்விரண்டு செய்கையும் பரலோகசாதனமாம். நிக்ஷேபத்தை வைத்தவனில்லாதபோது மிம்முறையேயாதிக.

கடன்கொடுத்தல் முற்றிற்று.

உபநிதி.

பலமுனிவர்.

உபநிதியானது உபநிதியெனவும் - நிக்ஷேபமெனவும் - நியாசமெனவு மூன்றுவகைப்படும்.

அவற்றுள்.

உபநிதியாவது ஒருவன் - தனமுதலான தனதுபொருள் தன்னிடத்திருத்தல - அரசன் - பங்காளி - திருடனிவர்கள் முதலானவர்களா லபாயப்படுமென்றெண்ணி யச்சமுற்றுப் பொருளைச் சேமப்படுத்தலும் - பொருட்டு - நற்குலப்பிறப்பும் - கண்ணடையும் - அறந்தெரிதலும் - மையுணர்த்தலும் - பல்கிளையுடைமையும் - பொருளுடைமையுடையவனுகியும் - நம் பத்தக்கவனுகியு மிருப்பவனிடத்தி லின்னதை

காத்தியாயனர்.

பொருளை வைப்பவன் இதனை யிவ்விடத்தில்வைத்தா லபாயப் படுமென்றறிந்தும் தனதுபொருளை வைத்தபோது அத்தப்பொருளை ந்த வேதுவினுலே யாதனலும் காசமடைந்தா லதனைவைத்துக்கொண் டவன் கொடுக்கவேண்டுவதில்லை.

துட்டனுனை பொருள்வைத்துக் கொண்டவன் விஷயம்.

பிரகற்பதி.

இராஜிக தைவிகக்குற்றங்களினுலன்றி மேற்சொல்லப்பட்டபொ. ருளை வைத்துக்கொண்டவனுடைய குற்றத்தினுலே பொருள் காசம டைந்தால் அவனத்தப்பொருளின் விலையையும் - அகப்பட்டால் அத ற்குள்ள வட்டியோடு பொருளையும் - உடையவனுக்குக் கொடுக்க - கவரப்பட்டால் பொருளுடையவனுக்கும் - தகுதியான தண்டப்பொ ருளை யாசனுக்குங் கொடுக்க.

பொருளை வைத்துக்கொண்டவனுடைய சோர்வினுலே - வைக் கப்பட்டபொருள் அவனுடைய பொருளோடு காசமடைந்தால் - அவ னத்தப் பொருளுக்குச்சமமான பொருளைமாத்திரங்கொடுக்க வட்டி யில்லை.

வைக்கப்பட்ட பொருளைவைத்தவன் கேட்டபொழுது - கொ டாவிடில் - அரசனதனை நூற்றுக்கைந்தாகிய வட்டியோடு கொடுப் பிக்க.

பொருளைவைத்தவன் கேட்டுங்கொடாம லிருந்தபோது இராஜிக தைவிகக்குற்றங்களினுலே பொருள்காசமடைந்தால் அத்தப்பொருளி ன்விலையைமாத்திரம்உடையவனுக்கும்தகுதியானதண்டப்பொருளை யாசனுக்கும் பொருளைவைத்துக்கொண்டவன் கொடுக்க.

வியாசர்.

பொருளை வைத்தவனுடையவனு மதியில்லாமல் அனுபோகப் பொருட்டுச் செலவழித்தாலும் - இலாபப்பொருட்டுக் கொடுக்கல் வா ங்கல்செய்தாலும் பொருளைவைத்துக்கொண்டவன் அத்தப்பொருளை வட்டியோடு உடையவனுக்கும் - தகுதியான தண்டப்பொருளை யா சனுக்குங் கொடுக்க.

பிரகற்பதி.

பொருளைவைத்துக்கொண்டவன் தன்னிடத்தில் வைத்தபொரு ளைத் தின்றழித்தால் வட்டியோடும் - சோர்வினுலேயழித்தால் சமமா

ன்று சொல்லாமலும் - காட்டாமலும் - எதிரே யெண்ணுமலும் ட்டி முதலானவைகளில் மறைத்து முத்திரையிட்டு வைப்பதாம்.

விசேஷமாவது, ஒருவன் மேற்சொல்லிய விசேஷணங்களெல்ல முடைய வொருவனிடத்தில்-தனதுபொருளை யவனெதிரே யெண்ண க்கொடுப்பதாம்.

பிரகற்பதி.

பொதுமாவதுஒருவன் மேற்சொல்லிய அத்தாதல் தன்னுடைய ருதமூதலிய காலிகள் வெண்கலப்பாத்திரமுதலானவைகளை மேற்சொல்லிய விசேடணங்களை யுடையவன் - அவனுக்குப்போ ருக்குபோது - அவன்வந்த பின்னர் அவனிடத்தி லொப்புவிக்கவே ண்டுமென்றுசொல்லி - அவனுடைய வீட்டாரிடத்திற் கொடுப்பதாம்.

மேற்சொல்லப்பட்டபொருள் - வாயிதாவைப் கொடுக்கப்ப வதாக - நின்றவாகக் கொடுக்கப்படுவதுமான விருவகைப்படும்.

இப்படி வைக்கப்பட்டபொருளை வைத்துக்கொண்டவன்-தனத பூர்வத்திலிருந்தபோலக்காத்து பொருளைவைத்தவன் கேட்கும்போழுதே கொடுக்க.

இப்படிப் பொருளைக்காத்துக்கொடுத்தால், அவன் - இரணியமு தண்டபொருள்களைத் தானமாகக்கொடுத்தவனுக்கு கொத்த பலனை டத்தில் அத்தப்பலத்தையும் - அடைக்கலம் புகுந்தவனைக் காத்த வதனாலேற்படுபல னுண்டாகுமோ அத்தப்பலத்தையு மடைவான்.

அத்தப்பொருளைக் கவர்ந்தவன் - தனது புதல்வனையும் - கண்பி கண்டிருக்கையிலவர்களையுங்கொன்ற பாவபலத்தை யடைவான்.

நல்லவனுனை பொருள்வைத்துக் கொண்டவன் விஷயம்.

பிரகற்பதி.

மேற்சொல்லப்பட்டபொருளை வைத்துக்கொண்டவன் -அதைத் தான்வாங்கிய வைத்தபடியே பொருளை வைத்தவனிடத்திற்கொடுக்க மற்றெவனுக்குமத்தி கொடுத்தல் கூடாது.

மேற்சொல்லப்பட்டபொருளானது, வைத்துக்கொண்டவனுடை வருகின்ற பரியந்தமும் - இராஜிக தைவிகக்குற்றங்களினுலே னுடைய தெய்வாதீனமும் - காசமடைந்தால் - அத்தப்பொருளை வை க்கொண்டவன் கொடுக்கவேண்டுவதில்லை.

கும் - அறியாமையினாலேயழித்தால் காலிலொருபங்கு குறைவா
பொருளைவைத்தவனுக்குக் கொடுக்க.

பொருளை வைத்துக்கொண்டு வஞ்சகத்தாலாவது வலிமை
லே பொருளை யில்லையென்றுசொல்லிவிட்டால் - சாக்ஷியாலேனு
நியத்தினாலேனு முண்டென்று நிரூபிக்கப்பட்டால் அவனுக்கு
பொருளையுடையவனுக்கும் - அதற்குச் சமமான தண்டப்பொரு
யாசனுக்கும் கொடுக்க.

மது.

சாக்ஷிகளெதிரி லெவ்வளவுபொருள் வைக்கப்பட்டதோ அ
னவுபொருளை அந்த சான்றினாதில் வாங்கிக்கொள்ளத்தக்கது

பொருளைவைத்தவன் சாக்ஷிகள் முன்னிலும் பொருளி வை
து மேம்பாடாகச்சொன்ன லவன் தண்டிக்கப்படுவான்.

வைத்தபொருளை யில்லையென்பவனும் - பொருளைவையாதி
கேட்டவனும் திருடனைப்போலத் தண்டிக்கப்படுவார்கள்.

பொருளைவைத்தவ னிறந்துபோனால் அவனுக்குச்சமமான
னிடையவனிடத்தில் அந்தப்பொருளை வைத்துக்கொண்டவன்
கொடுத்தபோது, அதைக்குறித்து - அந்த லென்னும் - பொருளைவை
தனையுடைய சுற்றத்தாரேனும் வழக்கிடலாகாது.

பொருளுக்குரியவர்கள் பலரிருப்பின் அவர்களெல்லாருக்கு மெ
நிறமே அது கொடுக்கத்தக்கது

பொருளைவைத்துக்கொண்டவ னிறந்தபோதுபொழுது - அவனிட
த்திலே தனதுபொருளை வாங்கிக்கொள்க.

இவ்விடத்தி லபஜிதக்குக் காட்டியவிதியெல்லாம் நிக்ஷேபத்திற்
குமென்பதிற்கும் - இரவல் முதலியவைபற்றிநடந்துகொள்க.

உபநிதி முற்றிற்று.

கூடிமேம்படல்.

பலருணிவர்.

கூடிமேம்படல் இலாபத்தின்பொருட்டு - சுற்குலப்பிழைப்பி
வடைமை - நிறமை - நேர்மையின்மை - காண்யமறிதல் - வரவுசெலவு
தெரிதல் - சௌரியம் - பொருளுடைமை யிவற்றையுடையவர்களா

கியும் - வலியின்மை சோம்புடைமை - மிகுத்த செல்வமுடைமை - நோய் - வருத்தம் - அதிஷ்டமின்மை - முதற்பொருளின்மை - யிக்கும் றமுடைய ரல்லாதவர்களும், தம்மிலொத்தவர்களுமாகி யிருக்கின்ற வணிகர் முதலானவர்கள் பலர்கூடி தத்தமக்குரிய - வாணிகம்-உழவு-நிற்பம் - வேள்வி - கூத்து - திருட்டு - என்னுமிவ்வறுவகைத் தொழில் களோ செய்தலாம்.

அவற்றுள்.

வாணிகச்செய்கை :—நாணயத்தெரிந்த வணிகர் பலர்கூடி முத றபொருள்வைத்துப் பங்கேற்படுத்தியேனும் - செய்துகொண்ட கட் டுப்பாட்டின்படியேனும் - வாணிகத்தொழில் செய்வதாம்.

அவர்கள், எதிரிலேனும் - மறைவிலேனும் - வஞ்சனையில்லாமல் தனம் - தானியம் - பலவகைப்புண்ணியங்கள்-இவைகளைக்கொடுக்கல்-வாங்கல்-கொள்ளல் - விற்றல்-இவை முதலானகாரியங்களைச் செய்க.

வரவு - செலவு - குறைவு - வட்டி - நஷ்டம் - இவைகளைத் தா ங்கள் - வைத்தமுதற்பொருளின் தொகைப்படியேனும் - ஏற்றம் - குறைவு - சமம் - இவ்வகையி னேற்படுத்திக்கொண்ட பாகப்படியே னும் அடைக.

மேற்சொல்லிய முதற்பொருளின் தொகைப்படியேனும் - ஏற் பாட்டின் படியேனும் - செய்யத்தக்க காரியங்களைச்செய்க.

யாஞ்ஞவல்கியர்.

அந்தந்தச் செய்கைகளிலே - காரியஞ்செய்யத் திறமையில்லாத வன் - தனது பங்குக்குள்ளதை மற்றொருவனாலே செய்விக்க.

பிரகற்பதி.

கூடினவெல்லோருஞ் சம்மதித் தேற்படுத்திய வொருவனாலே பத்திர முதலானவை செய்யப்பட்டு கொடுக்கல் - வாங்கல் - முத லான காரியஞ்செய்யப்படின் - அந்தக்காரியம் - அந்தக்கூட்டத்தாலெ ல்லா ராலுஞ்செய்யப்பட்டதாம்.

கூட்டத்தொழிலாளருள் எத்தவிஷயத்தினாலும் வழக்குநேரிட்ட பொழுது அவர்கள் - பிகையினை ரல்லாதவர்களாயிருந்தால் - அதனை விசாரிக்கதீர்க்கவரும் - அதற்குச் சாக்ஷிகளும் - அக்கூட்டத்தாரே யாவர்கள்.

யாஞ்ஞவல்கியர்.

கூட்டுத்தொழிலானருளொருவன்கொள்ளல்-விற்றல்-முதலான
காரியங்களிலே வஞ்சனைசெய்து - அது மெய்ப்பட்டால் லக்ஷத்துக்
குச் சூதுடைய இலாபத்தையெடுத்துக்கொண்டு - அந்தக்கூட்
டத்தினின்றும்-அவனை வெளிப்படுத்துக.

வியாசர்.

கண்ணுக்கொடாமல்-தப்புவித்துச் சாக்கைக் கொண்டுபோனவன்
கொடுத்துவேண்டிய தங்கப்பொருளுக்கு - இரட்டிப்புக் கொடுக்க.

பிரகற்பதி.

இரண்டு கூறவிகத்தன்பங்களாலே பொருள் கஷ்டமானால்-அதி
கஷ்டத்தைக்கூட்டத்தார் செல்லாரும்-தங்கள் தங்கள்பாகப்படி
பங்கிடுக.

கூட்டத்தாருள் ஒருவன் அவர்களுடையவறு மதிபெறுதலை
யென்று நிக்கேபப்பட்டவனுயேனுந் தனதிச்சைப்படி காரியத்தை
நடத்தி - தனது புத்திசாதுர்யம் - காமம்-குரோதம் - இவைமுதலான
வெல்லாவினாலே பொருளைக்கொடுத்தால் - அவனுக்குக் கெடுதிப்பொ
ருளையும் - அந்தக்கூட்டத்தாருக்குங் கொடுக்க.

காத்தியாயனர்.

கூட்டத்தாருள் ஒருவன் தனது வலித்திறமையினாலே - நிலு
வையாகச் சேர்ந்தாலேனும் - அக்கினியினாலேனும்-கவரப்பட்டாலே
னும் - அந்தப்பொருளிலே பத்திலொருபாகம் - அவனுக்
கூட்டத்தார் கொடுக்க.

இறந்துபோன சோதரனுடைய பொருளைகாக்கின்றவனுக்கு

கூட்டத்தாரிலே கொடுக்கப்பட்ட கடன்முதலியவற்றைத் தே
ட்டுகொடுத்தும் நிலுவைகாரியங்களை யொருவன் தனது பாகப்ப
செம்பாடுக்கு நிற்கும்பொழுது - அந்தக்கூட்டத்தாருக்கப்பொருளிலுள்ள இலாபங்களிலடையா

பிரகற்பதி.

உழுதுபயிரிடுகை—தெரிந்த வுழவனனவன், நிலமும் - ம
ழை - மாடுகளும் முதலானவைகளும் பயிர்ச்சாதனங்களைச் சமமாகவுடை
ரோடு கூடியிருந்து முன்னாள்காரியங்களைச் செய்தலாம்.

நன்றாகத்தெரிந்த வுழவனனவன், இளைத்ததும் மூப்படைந்த
தும் - மிக்கநோயுள்ளதும் - நோயுடையதும் - விரைந்தோடிப்போவதும் -
ஒற்றைக்கண்ணுடையதும்-ஓடிந்த காலுடையதுமாகிய, எருதையும் -
கடாவையும் - உழவின்பொருட்டுக்கொள்ளாதொழிக்க.

மலைக்கும் - பட்டணத்திற்கும் - இராசமார்க்கத்துக்கும் - சமீப
த்திலிருக்கிற நிலத்தையும் - களர்நிலத்தையும் - எலிகள் மிகுதியாயி
ருக்கிறநிலத்தையும் - ஒழிக்க.

மேற்சொல்லப்பட்ட வாணிகச்செய்கையில் இலாபம்-நஷ்டம் -
முதலானவைகளைக் குறித்துக்காட்டின - விதியெல்லாம் - உழவுச்செ
ய்கையிலு மறிக.

பிரகற்பதி.

சிற்பச்செய்கை தட்டான்முதலான சிற்பத்தொழிலினர் பலர்
கூடி பொன் - வெள்ளி - மற்றையுலோகவகைகள் நூல்-மரம் - கல்-
தோல் - இவற்றால் ஆபரணமுதலானவைகளையும், தேவாலயமுத
லானவைகளையும் செய்யும்பொழுது அந்தச் சிற்பத்தொழிலாளருள்
திருத்தஞ்செய்பவனுருபாகமும், நன்குணர்ந்தவனிரண்டுபாகமும்
திறமையுடையவன் மூன்றுபாகமும், ஆசாரியனனுருபாகமுங்கொள்க.

மேல் வாணிகச்செய்கைக்குக் காட்டின விதிகளையே தழுவிப்
படியிச்சிற்பச்செய்கையிலுங் கொள்க.

மனு.

வேள்விச்செய்கை வேள்வித்தினை யந்தணர் பலர்கூடிச்செய்
யுங் காரியமாம்.

வேள்வியின்பொருட்டு எசமானனுலே வரிக்கப்பட்டவர்களாகி
நியமிக்கப்பட்டபடி அத்துவரியுமுதலான நால்வகைக்கணத்தாரும்
தங்கள்தங்கள் காரியங்களைச் செய்க.

அந்த நால்வகைக்கணத்தார்க்கும் எசமானனுலே சமுதாயத
க்ஷுணையன்றி விசேஷதக்ஷுணையாகக் கொடுக்கப்பட்ட தேரினை அத்
துவரியும், வேள்வேப பரியினைப்பிரமாவும், வேள்வாவாற்பரியினை
ஓதாவும், பண்டியை உத்காதாவும் முறையேகொள்க.

சமுதாயதக்ஷுணையை நாலுபங்காக்கி அவற்றுள் காற்பத்தெட்டு
பங்கை முதற்கணத்தினர் கால்வருஞ் சமமாகக்கொள்க. மிகுந்த ஐம்

பத்திரண்டுபங்கினு ளிருபத்தினலுபங்கை மிரண்டாங்கணத்தினர் கால்வருஞ் சமமாகக்கொள்க. மிகுத்தவிருபத்தெட்டுபங்கினுள் பதினைபங்கை மூன்றாங்கணத்தினர் கால்வருஞ் சமமாகக்கொள்க. மிகுத்தபன்னிரண்டுபங்கை காலாங்கணத்தினர்கால்வருஞ் சமமாகக்கொள்க.

வேள்விக்காரியஞ் செய்யும்பொழுது ஒருவன் தனது காரியத்தைவிட்டு நீங்க விரும்பினால் அவன் தன்னுடையகாரியத்தை யன்னியனலேனும்,தானிருந்த கணத்தாரு ளொருவனலேனு முடிப்பித்துத் தனக்குள்ள தக்ஷிணையை யடைக.

அவருளொருவ னிறந்துபோனால் அவனெடுப்புக்கொண்ட காரியத்தை யவனுடைய கோத்திரத்தானேனும், மாணாக்கனேனும், முடித்து அவனுடைய பாகத்தை யடைக.

சம்பந்தமுடையவ ரில்லாவிடில் வேள்விக்கு ரு எசமானன் வேறொருவனை நியமித்து அந்தக்காரியத்தை முடிப்பித்து அந்தப்பாகத்திலே யவனுக்குச் சிறிதுகொடுத்து மிகுத்ததை மூன்று காரியத்தையோப்புக்கொண்டவனுக்கே கொடுக்க.

பிரகற்பதி.

கூத்துச்செய்கை - கட்டுவன் முதலானவர்கள் பலர்கூடிச்செய்யுங் காரியமாம்.

கூடனத் தொழிற்கூட்டத்தாருள் தலைவனிரண்டுபாகமும், தானக்காரன் ஒன்றரைப்பாகமும், ஏனை யோர்சமபாகமுங் கொள்க.

திருட்டுச்செய்கை - திருடர் பலர்கூடிச் செய்யுங்காரியமாம்.

சோரக்கூட்டத்தார் தலைவனுடையவனு மிருபெற்று வலியவனை பகைவனுடைய தேசத்திற்சென்று கவர்ந்துகொண்டுவந்த பொருளில் அரசனுக் காதிலொருபங்கும், தலைவனுக்கு காலிலொருபங்கும், சூரனுக்கு மூன்றிலொருபங்கும், திறமுடையவனுக் கரண்டிலொருபங்குங்கொடுத்து மிகுதியைச் சமமாகக்கொள்க.

காத்தியாயனர்.

எளியவனை பகைவனுடைய தேசத்திற்சென்று கவர்ந்துகொண்டுவந்த பொருளிலோவெனில் அரசனுக்குப் பத்திலொருபங்கு ஏனையோருக்குப் பாகமும்படியே.

அத்தக் கூட்டத்தாரு ளொருவன் பகைவனிடத்தகப்படின் அவனை மீட்பதற்காகக் கொடுத்தபொருளை அத்தக் கூட்டத்தாரெல்லாருஞ் சமமாக வொப்புக்கொள்க.

பங்கேற்பாடு செய்யாமற் கூடித் தொழில்செய்கின்ற வாணிகர் - உழவர் - சிற்பர் - திருடரிவர்களுக்கு மிவ்விதியேகொள்க.

நல்கியதை நல்காமை.

பிரகற்பதி.

நல்கியதைநல்காமை - கொடுக்கத்தகாதபொருளும், கொடுக்கத்தக்கபொருளும், கொடுக்கப்பட்டபொருளும் கொடுக்கப்படாதபொருளுமென நால்வகைப்படும்.

அவற்றுள்,

கொடுக்கத்தகாதபொருள் பலருக்கும்பொதுவாகியவழி நிலமுதலான பொருளும் - புதல்வரும் - மனைவியரும்- ஈடாகவைத்தபொருளும், அயலவனுக்குக்கொடுக்கப் பிரதிக்ஞைபண்ணப்பட்டானுஞ் சுற்றத்தியுடையவனது எல்லாப்பொருளும், நியாசப்பொருளும், இரவற்பொருளும், வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட பொருளும், நிக்ஷேபப்பொருளும், சீதனப்பொருளுமாம்.

இப்படிச்சொல்லப்பட்ட கொடுக்கத்தகாதபொருளைக் கொடுத்தவனும், வாங்கினவனுந் தண்டிக்கப்படுவார்கள்.

கொடுக்கத்தகாதபொருள் கொடுக்கப்பட்டால் அரசனந்தப்பொருளைவாங்கிப் பொருளுடையவனுக்குக் கொடுக்க.

நாரதர்.

கொடுக்கத்தக்கபொருள் குடும்பங்காத்தற்கு வேண்டியபொருளுக் கதிகமாயிருக்கிற தனதானியமுதலான பொருள்களாம்.

இந்தப்பொருள் பாகஞ்செய்துக்கொள்ளாதவர்களாயேனும், பாகஞ் செய்துகொண்டவர்களாகியேனு மிருக்கிறவர்களாலே கொடுக்கப்படலாம்.

பிரகற்பதி.

தலைவருடைய அனுமதியிருந்தால் விவாகத்தில்வந்த பொருளையும், பாட்டன்முதல் முறைமைப் புருஷரிடத்தினின்றுவந்த பொருளும், சௌரியத்தாலடைந்த பொருளையுங் கொடுக்கலாம்.

தானே சம்பாதித்தபொருளைத் தலைவருடைய அனுமதி வேண்டாமே கொடுக்கலாம்.

...ட்டுப்பொருளைத் தன்னுடையதானபோது கொடுக்கலாம்.

...விட்டார்.

...னுக்குப்பின்பு மனைவியானவள் கொடுத்தலும் வாங்கு...
...ல் செய்யக்கூடாது.

...ரமாகப் புத்திரனிவாங்கிக்கொள்ளவன் வாங்கிக்கொ...
...ராஜனுக்கறிவித்து கற்றத்தாருதோ விட்டினதில்...
...திப்படி வாங்கிக்கொள்க.

யாஞ்ஞவல்கியர்.

...கொடுக்கத்தக்கனவாகிய அசையும் பொருளையும்...
...யும் கொடுக்கும்போது சாக்ஷிகள்முதலானவர்...
...கொடுக்க.

...த்தம்பண்ணின பொருளைக் கொடாமற் போ...
...பட்டதை மீட்டுக்கொள்ளவிரும்பினாலும், அவ...
...டத்தையுமடையவான்.

நாரதர்.

...த்தம்பண்ணின பொருளைக் கொடாவிடில் அ...
...பொருளைப்போல் அவனை யிகத்திலும் பரத்திலும்...
...லவகையான ரோகங்களை யடைத்து காய்ப்பிறப்பு...
...பிறப்பையு மடைவான்.

கௌதமர்,

...டக்கின்ற அத்தனன்பொருட்டு வாக்குத்தத்தம்...
...கொடாதவன் குற்றமுடையவனாலவன்.

...பொருள் சாக்ஷியிலையாகக் கொடுக்கப்பட்ட...
...தும், ...தெரிந்துகொள்வதற்காகக் கொடுக்கப்...
...பட்டதை ...புகழ்வோன்முதலானவர்களுக்குக் கொடுத்...
...க்கப்பட்டதை ...புதல்வர் முதலானவர்களுக்குக்கொடு...
...காரியவதியை ...பருவத்துக்காலத்தில் லாபத்தைக்குறித்தேனும்,
...ணப்பொருட்டு ...குறித்தேனும் கொடுக்கப்பட்டதும், கலியா...
...க்கப்பட்டதும், ...யர் முதலானவர்களுக்குக் கொ...

...தாய் - தந்தை - குரு-மித்ரோ...

வணக்கமுடையவன் - எல்லாருக்கு முபகாரஞ்செய்தவன் - எளியவன் - அனுதன் - நல்லொழுக்கமுடையவனிவர்களுக்குக் கொடுக்கப்பட்டதும், சிரத்தையினுலே புண்ணியத்தின்பொருட்டுக் கொடுக்கப்பட்டதுமென எண்வகைப்படும்.

காத்தியாயனர்.

பிராணபத்தையடைந்தவன் தன்னைக் காத்தவனுக்கு எல்லாப் பொருளுங் கொடுக்கிறேனென்று வாக்குத்தத்தம்பண்ணினாலும், அது சொன்னபடி சித்தியாது.

நாரதர்.

கொடுக்கப்படாதபொருள் பயத்தினுலே காவலாளருக்குக் கொடுக்கப்பட்டதும், பிரிக்கப்படாதபொருளைத் தாயாதிகளுக்குக் கொடுக்க வொப்பாமற் கோபத்தினுலே அன்னியருக்குக் கொடுக்கப்பட்டதும், ஒருவன் மிகுந்த துக்கத்தினுலே இந்தப்பொருளாலே நமக்கென்னபயனென்று சலிப்புற்றபோது அந்தச் சலிப்பினுலே கொடுக்கப்பட்டதும், திருட்டு - வன்செய்கை- பொல்லாதகாரியம் - அயலவன் மனைவியைப்பற்றுத லிவற்றைச் சொல்லுகிறவனுக்கும், மறைத்தோடிப்போனவனை வெளிப்படுத்துகிறவனுக்கும், காரியஞ்செய்யாதவனை இவனன்றுகக் காரியஞ்செய்கிறவனென்று எசமானனிடத்திற் சொல்லுதற்காக ஒருவனுக்குங் கொடுக்கப்பட்டதுமாகிய கைகூலிப்பொருளும், பரியாசத்தினுலே கொடுக்கப்பட்டதும், ஒருவன் தான்மீட்டும் வாங்கிக்கொள்ளுகிற பொருளை அயலவர்கொண்டாடும்படி சபையிலொருவனுக்குக் கொடுத்ததும், இளமையனுலே கொடுக்கப்பட்டதும், இன்னனுக்கிதுவென்கிற நிச்சயமில்லாமல் வேறொருவனுக்குக் கொடுக்கப்பட்டதும், உரிமையின்மையாகிய அடிமைமுதலானவர்களாலே கொடுக்கப்பட்டதும், நோயால் வருத்தமுற்றவனுலே கொடுக்கப்பட்டதும், அதருமத்தைக்குறித்துக் கொடுக்கப்பட்டதும், ஊமைத்தங்காய் முதலானவைகளைத் தின்று மயக்கமுற்றபோது கொடுக்கப்பட்டதும், வேலையை யொப்புக்கொள்ளும்பொருட்டு வேலையாளனுக் குபகாரம்போலக் கொடுத்ததும், ஒருவனிந்தப்பொருளை யிவனுக்குக்கொடுத்தால் நமக் கிலாபங்கிடைக்குமென்றெண்ணி யிலாபத்தை யுண்டாக்காதவனுக்குக் கொடுத்ததும், தகுதியில்லாதவனைத் தகுதியுடையவனென்று சொன்னதினுலே அவனுடையசொல்லை நம்பிக்கொடுத்ததும், அதருமமாகச் செலவழிக்கின்றவனைத் தருமமாக

செலவழிக்கின்றவனென்று சொன்னதைக்கேட்டுக் கொடுத்ததும், புஞ்சகன் - மிகவும் விருத்தன் - அவதூதன் - சன்னியாசி - இவர்களாலே கொடுக்கப்பட்டதுமாம் - இந்தப்பொருள்கள் மீட்டும் வாங்கிக்கொள்ளத் தக்கனவாம்.

காத்தியாயனர்.

ஒருவன் தனக்குக் காரியஞ்சித்திக்கிற்பதற்கு மிகுத்தும் கைக்கூலிகொடுக்க வாக்குத்தத்தம்பண்ணினனும், அது கொடுக்கத்தக்கதன்று முன்னுக்கொடுத்திருந்தாலதனை யாசன்வாங்கிப் பொருளுடையவனுக்குக் கொடுக்கும்படி செய்க.

கைக்கூலியை வாங்கினவனுக்கு அந்தக் கைக்கூலிப் பொருளுக்குப் பதினுமடங்கான பொருளைத் தண்டமாகவிதிக்க.

கைக்கூலிகொடுத்தவனுக்குத் தண்டமில்லை கொடுப்பித்தவனுக்கு நருபியானதண்டம் விதிக்கப்படும்.

சோபம் பிடிக்கப்பட்டவன் தருமகாரியப்பொருட்டு வாக்குத்தத்தம்பண்ணின பொருளைக்கொடாமலிறந்துபோனலத்தப்பொருளை யவனுடைய புத்திரன் கொடுக்கவேண்டும்.

மனு.

வென்றிமுதலான தருமகாரியத்தைச் செய்வதற்காகப் பொருளைவாங்கினவனத்தகாரியத்தைச் செய்யாமல் மதத்தினலேனும் பொருளாசையாலேனுங்காரியஞ்செய்தேனென்று பொய்சொன்னல் அரசன் அவன்யாசித்துவாங்கின பொருளையும், அத்தக் குற்றத்திற்குத் தண்டமாக வொருபொன்னையு மவனிடத்தில் வாங்குக.

காதர்.

கொடுக்கப்பட்டதனவாகிய பொருள்களைக் கொடுத்தவனும், வாங்கினவனுந் தண்டிக்கப்படுவர்கள்.

கல்லியல்த கல்காமை முற்றிற்று.

ஓப்பிப்பணிசெய்யாமை.

காத்தர்.

பணிசெய்பவர்:—உயர்வான பணிசெய்பவரும். இழிவானபணிசெய்பவருமென விருவகையர்.

அவருள்,

உயர்வானபணிசெய்பவர்:—மாணக்கரும், அணித்துறைவோரும், வேலையாளரும், வேலைத்தலைவருமென நால்வகையர்.

இழிவானபணிசெய்பவர்:—வீட்டடிமைமுதலான பதினேவர்.

இவ் விருவகையாருக்கு முரிமையில்லை.

மேற்கூறியநால்வகையாருள்,

மாணக்கனென்பவர்:—இருபிறப்பாளரும், வசந்தகாலத்திற்செய்யப்பட்ட வுபநயன முதலானவைகளை யுடையவருமாகி யிருப்பவர்.

அவர் குருவினிடத்திலே பிச்சை யன்னத்தைப் புசித்துக்கொண்டும், குருவுக்கும், அவருடைய பத்தினிக்கும், புத்திரனுக்கும் இழிவல்லாத பணிவிடைசெய்துகொண்டும், இருக்குவேதமுதலான வேதங்களைக் கற்றுசமாவர்த்தனஞ் செய்தவுடனே குருதக்ஷிணைகொடுத்து வணங்கி அவருடைய விடைபெற்று நீங்கித் தமதுவீட்டை யடைக.

அணுத்துறைவோனென்பவர்:—ஏற்பசாஸ்திர ஞானமுண்டாகும்பொருட்டும், பொன் - மணி இவைமுதலியவற்றைச்சேர்ந்த வேலைகளிலும், தாம்பிர முதலான வுலோகவகைகளைச் சேர்ந்த வேலைகளிலும், காட்டியம் - கீதம் - இவைமுதலியவற்றைச் சேர்ந்த வேலைகளிலுங் கைவல்லமை யுண்டாகும் பொருட்டும், ஆசாரியனிடத்தில் அவனேற்படுத்தியகாலஅளவுவரையில்அவனுடையவீட்டில் அன்னம் புசித்துக்கொண்டு - அவன் சொன்னபடி கங்கணம் கடகஞ் செய்தல் முதலான வேலைகளைச் செய்துகொண்டிருப்பவர்.

ஆசாரியன் அவ்வணித்துறைவோருக்கு வேலை கற்பித்து அவரைச் சிஷ்டித்துத் தனது புத்திரனைப்போல நடப்பிக்க. ஆசாரியன் அவர்களுக்குச் ஏற்பவேலையிடாமல் வேறுகாரியங்களைக் கற்பித்தால் அவ்வாசாரியனுக்குப் பூருவசாகசதண்டம் விதிக்கப்படும்.

அவ்வணித்துறைவோர் கிரமந்தப்பி நடக்கிற ஆசாரியனைவிட்டு நீங்கலாம்.

அவ்வணித்துறைவோரோடிப்போனல் ஆசாரியனவ்வைப்பற்றியிழுத்தடித்துக் கட்டிவைத்துத் தன்னிடத்திலிருக்கும்படி செய்க.

அவ்வணித்துறைவோர் ஆசாரிய னேற்படுத்தியகாலத்துட் சில காலத்தில்வேலைகற்றுமுடிந்தால் குறைக்காலஞ்செல்லுமளவும் ஆசாரியனிடத்தில் இருந்து அந்த வேலையாற்கிடைத்தபொருளை யவனுக்கு

விவகாரசாரசங்கிரகம்.

க் கொடுத்த அத்தக் காலமுழுதுஞ் சென்றவுடனே தனதுசத்திற்குரி
தக்கபடி சுசரியனைப் பூசித்தவணங்கி யவனுடைய விடைபெற்
நிருக.

பிரகற்பதி.

வேலையாளர்—பெண்கூலிக்காரர் - பொருள்கூலிக்காரர் - போக
க்கூலிக்காரனெ மூவகையர்.

அவருள்,

பெண்கூலிக்காரனென்பவர்—எசமானனுடையவீட் டடியாளைக்
கலியாணம்பண்ணிக்கொண்டு அவளையே கூலியாகக்கொண்டு அவ்
வெசமானனிடத்தில் வேலைசெய்பவர்.

பொருட்கூலிக்காரனென்பவர்—எசமானன் கொடுக்கும் பொரு
ளையே கூலியாகக் கொண்டு அவ்வெசமானனிடத்தில் வேலைசெய்
பவர்.

போகக்கூலிக்காரனென்பவர்—பயிரின் பலத்தையும் பசுவின்பா
லையும் கூலியாகக்கொண்டு எசமானனிடத்தில் வேலைசெய்பவர்.

அவருள்,

ஆயுதச்சேவகர்உத்தமர் - உழுவுச்சேவகர் மத்திமர் - சுமைசுமத்
தல் - சோறட்டல் - இவைமுதலான வீட்டுவேலைசெய்பவர் அதமர்.

வேலைத்தலைவனென்பவர்—வேலைக்காரரை நியமித்து அவர்களா
லே வீட்டு வேலைகளையும் வெளிவேலைகளையுஞ் செய்வித்துக்கொள்
பவர்.

அடிமையர் விளக்கம்.

நாரதர்.

அடிமையர்—வீட்டடிமை முதலிய பதினேவர்.

அவருள்,

வீட்டடிமையென்பவன்-வீட்டியாளிடத்திற்பிறந்தவனும்.

விலையடிமையென்பவன்-விலையாற் கொள்ளப்பட்டவனும்.

அடையடிமை யென்பவன்-தானம்வாங்குதல் முதலியவற்றால
டையப்பட்டவனும்.

தாயவடிமையென்பவன்-விபாகத்திலே பாகப்படி வ

அனுகாலபிருதனென்பவன் கொடுமையானகாலத்திற்காக்கப்ப
ட்டவனும்.

ஈட்டடிமை யென்பவன் - கடன்காரனிடத்தி லீடாவைக்கப்பட்
டவனும்.

கடன்மீளடிமையென்பவன் தனது கடனே தீர்த்தற்பொருட்ட
டிமையானவனும்.

போரிற்கிடைத்தவனென்பவன்-போரிலே வென்றதனாற் கொள்
ளப்பட்டவனும்.

பணசிதனென்பவன் - அடிமையாகுகையைத்தானே ஒட்டமா
கச்செய்யப்பட்ட சூதுமுதலியவற்றால் வெல்லப்பட்டவனும்.

தானமடிமையென்பவன் - தானனக்கடிமையானேனென்று வ
ந்தவனும்.

துறவுகெட்டவடிமையென்பவன்-துறவினிலே தவறி யடிமையா
னவனும்.

செய்யப்பட்டவடிமையென்பவன் - நீ இவ்வளவுகால மெனக்க
டிமையாயிருவென் றடிமையாகப்பண்ணப்பட்டவனும்.

சோற்றடிமை யென்பவன் - தானுண்ட சோற்றின் விலைக்காகக்
காலவளவை யேற்படுத்தி வேலைசெய்பவனும்.

வடவாபிருதனென்பவன் - ஒருவன்வீட்டடியாளைக் கலியாண
ம்பண்ணிக்கொண்டு அவளுடைய எசமானனுக் கடிமையானவனும்.

காத்தியாயனர்.

அந்தணனை அந்தணனு மடிமையாகக் கொள்ளுதல்கூடாது.

மனு.

க்ஷத்திரியனும் வைசியனும் வேறுகதி யில்லாதகாலத்தில் அடி
மையாகலாம்.

காத்தியாயனர்.

அனுலோமக்கிரமத்திலே யடிமையாகலாம்

கில் மவனை

அடிமையர் செய்கை.

வீட்டுவாசலு[illegible]ரு - அசுசியானவிடம் இவற்றைத் துடைப்ப
த்திலுலே விளக்[illegible]சத்தில் மறைக்கத்தக்கவிடத்தைச் சொ
றிதலும், எச்சில்-ம[illegible]னை வாரிக் கொட்டுதலும், சவச
மூலிய விழிவானக[illegible]லுமாம்.

விவகாரசாரசங்கிரகம்.

நாரதர்.

மேற்சொல்லப்பட்ட அடிமையர் பதினேவருள் தாயை கொ
அடிமையொழித்த மற்றை யடிமையரெல்லாரும் தங்களெயடிமை
ன்சொன்ன எசமானனுடைய தலையிலேல அடிமைத்தன்மையி
ன்றும் விடப்படுவோர்கள்.

மேலும் புனிமுதலியவற்றால் எசமானனுக்கு உபகாரம் செய்தபடி
படி கேட்ட ஆபத்தக்காலத்தில் அவ்வெசமானனைக் காத்தால் அ
ர்களிலேலே அடிமைத்தன்மையினின்று நீங்கிப் புத்திரபாகத்தை
படைவார்கள்.

இறந்துபோகேட்ட அடிமை சாகுமளவும் அரசனுக்குமாத்திரமே
யவனாவான், அவனுக்கு மீட்டியில்லை. அவனைத்தவறுல் அரசனை
டையது பெற்றிலேல காய்க்காற்குறியிட்டும் தேசத்துலின்று மவனைத்
ரத்திலிடல்.

தன்னடிமை—தன்னுடைய கடனுக்காக எசமானன் கொடு
த்தபொருளை வட்டியுடனெயவனுக்குக்கொடுத்தால் மீள்வான்.

தானடிமை-போரிற்பிடித்தவன்-பணத்தால் இம்மூவரும் தன்
னைவிட்டு வேறுமனிதனைக் கொடுத்தேனும் தங்களாண்மையைச் செய்
ற்றே மீளுவார்கள்.

தெரிக்கப்பட்ட அடிமை—ஏற்படுத்திய காலமுடிவிலே விடப்
வோன்.

அடிக்கலிருநூறும் சொற்றடிமையும் தாங்களுண்ட சோற்றின்
லேலாயினும் கொடுத்தால் விடப்படுவோர்கள்.

ஜன்மம் தன்னே மீடாகவைத்து வாங்கப்பட்ட பொருளைக்
டுத்தால் விடப்படுவோன்.

ஒருவனென்பவன் எசமானனுடைய வீட்டடியாளை விடு
தலிருசெய்யப்படுவோன்.

வாஞ்ஞவல்கியர்.

ஒருவன் வழிமுறையா வழிமையாகக்கொள்ளப்பட்டா
ாடலே வேரப்பட்டு அடிமையாகும்படி விற்கப்பட்டாலும் மீடுதலும் திருட
க்கப்பட்டாலும் சாவுபண்ணப்பட்டாலும் அவனுக் கடிமைத்தன்
மையில்லை.

அவனை மேற்சொன்னபடி
விக்க.

யோலல் அரசன் விடு

காத்தியாயனர்.

வீட்டடியாளை எசமானன் விரும்பியவளுக்குக் கருப்பமுண்டா
ஞல் அத்தப்பிள்ளையோடும் அவளடிமைத்தன்மையினின்று நீக்கத்தக்
கவளாவாள்.

எஜமானன் அடிமையை அடிமைத்தன்மையினின்றும் ஒழித்து
விட நினைத்தால் அடிமையினுடைய தோளிலிருக்கிற நீர் நிறைந்த
குடத்தை வாங்கியுடைத்து, தான் நிழக்குமுகமாகநின்று - அகூதை
மலமோடு கூடியசலத்தை யவ்வடிமையின் தலையிலிறைத்து - அடிமை
யல்லனென்று முக்காற்சொல்லி அவ்வடிமையை விடுக.

அப்படி விடப்பட்டவடிமை பிணைப்படுதல் முதலான வெல்லா
க்காரியங்களிலுந் தகுதியுடையவனுவான்.

மேற்கூறிய விதியெல்லாம் பெண்ணடிமைக்குங் கொள்க.

கான்கு வருணத்தாருள் அனுலோமக்கிரமத்தில் அடிமையாக
லாம்.

ஒப்பிப் பணிசெய்யாமை முற்றிற்று.

கூலிகொடாமை.

நாரதர்.

வேலைக்குக் கூலியேற்படுத்திக் கூலிகொடுப்பதற்குக் காலமேற்ப
டுத்தாதவிஷயத்தில், கூலியை மூன்றுபங்காக்கி வேலைத்தொடக்கத்தி
லொருபங்கும்நடுவிலொருபங்கும் முடிவிலொருபங்குமாகக்கொடுக்க.

கூலியில்லையென் றேற்பாடுசெய்யாதவிஷயத்தில் - வாணிகத்
தொழிலில் வேலைசெய்தவனுக் கிலாபத்திலும், பசுக்காக்குந் தொழி
லில் மேய்ப்பவனுக்கு அந்தப் பசுவின்பால் முதலியவற்றிலும் பயிர்த்
தொழிலில் அற்பமான வருத்தத்திலுலே பயிர்செய்தவனுக்குஅந்தப்
பயிரின்பலத்திலும் பத்திலொருபாகங் கொடுக்க.

பிரகற்பதி.

உழவன் எசமானனுலே உணவு - ஆடை - கொடுக்கப்பட்ட
வனுகி மிகுந்த வருத்தப்பட்டு பயிர்செய்தால் அந்தப் பயிரின்பலத்
தில் அவனுக்கு அஞ்சிலொருபங்கும் உணவு ஆடைகொடுக்கப்படாத
வனுகி மிகுந்தவருத்தப்பட்டுப்பயிர்செய்தால் அவனுக்கு மூன்றிலொ
ருபங்குங் கொடுக்க.

மனு.

கூலியேற்படுத்தப்படாமல் கப்பல் வியாபாரஞ்செய்கிற கூலிக்
காருக்குக்கடலிலே தஞ்சரிக்கத்தக்கதிறத்தினாயும் அத்தத்தே

சங்களிலே அந்தக்காலங்களில் நடக்கும் வழக்குத்தீர்க்கிறோராயு மிருக்கின்றவர்களை வேற்படுத்தப்பட்டதே கூலியாம்.

யாஞ்ஞவற்கியர்.

வாணிகத்தில், எஜமானனுடைய அனுமதியில்லாமல் வேலையா ளன் இலாபத்தைக் குறைவாகப்பண்ணினால் அவனுடைய கூலியிலே எஜமானனிச்சைப்படி யவனுக்குச் சிலகொடுக்கப்படும்.

அந்தவேலைக்காரன் அதிக லாபமுண்டாகும்படி செய்தால் அவ னுடைய கூலிக்குமேலாகச் சிலபொருள் அவனுக்குக் கொடுக்கப்படும்.

கூலிக்காரர் பலர்கூடிக் கிணறுகல்லுதல் முதலியவற்றைச் செய் யுமிடத்து அந்தவேலை முடியாதபோது அவரவர் வேலைக்குத் தகுதி யாக நடுவர்சம்மதிப்படி கூலிகொடுக்கத்தக்கது.

அவர்களால் அந்தவேலை முடிக்கப்பட்டால் பேசினபடி கூலிகொ டுக்கத்தக்கது.

நாரதர்.

வேலையாளர் தங்கள் வசப்படுத்தின காரியசாதனங்களாகிய கல ப்பை முதலியவற்றை உடையவனைப்போலச் சோர்வுறாமற் காக்க வேண்டும்.

பிரகற்பதி.

அவர்கள் சோர்வுசெய்தாற் கூலியிழப்பர்.

வேலைசெய்ய ஒப்புக்கொண்டு முன் கூலிவாங்கினவன் அந்த வேலைசெய்யாவிடில் எசமானனுக்கு அந்தக்கூலிக் கிட்டிப்புப்பொரு ளையும், தன்னுடைய சத்திக்குத்தக்கபடி அரசனுக்கும் தண்டத்தை யுங்கொடுக்க.

யாஞ்ஞவற்கியர்.

முன் கூலிவாங்காதவன் தானெடுப்புக்கொண்ட வேலையைச்செ ய்யாவிடில் எசமானனுக்குமாத்திரம் - தனக்குச் சொன்னகூலிக்குச் சமமான பொருளைக்கொடுக்க.

நாரதர்.

அல்லது எசமானன் - கூலியைக்கொடுத்து வலுமையினாலே வே லையைச் செய்வித்துக்கொள்க.

பிரகற்பதி.

வலிமைசெய்தஞ் செய்யாவிடில், அவனுக்கு இருநூறுகாருடா பணம் தண்டமாக விதிக்கப்படும்.

மனு.

வேலையாளன் ஒப்புக்கொண்ட வேலையிலே சிறிது குறைவாயி ருப்பினும் அப்பொழுது அவனுக்குக் கூலிகொடுக்கத் தக்கதன்று.

அந்த வேலையாளன் பிணிமுதலிய துன்பத்தால் வேலைசெய் யாமற் காலதாமசமானாலும் அந்தவேலையைமுடித்துக்கூலியை யடை வான்.

நாரதர்.

காலவளவை யேற்படுத்தி வேலைசெய்ய வொப்புக்கொண்டவன் அந்தக் காலமுடிவாகு முன்னமே செய்யாவிட்டால் அவன் கூலியி லைந்து அரசனுக்கு நூறுபணக் தண்டமாகக்கொடுக்கக்கடவன்.

விட்டுணு.

வேலைசெய்கின்றவனே - எஜமானன் வைதல் முதலியவற்றால் வேலையை விட்டுப்போகும்படிசெய்தால் அரசன் அவன்செய்த வே லைக்குள்ளகூலியைக் கொடுப்பிக்க.

பலமுனிவர்.

எஜமானனுடைய எருதுமுதலானவைகள் இராகிக தைவிக ங்களினாலும், திருடர்களினாலும் மல்லாமல் வேலையாளனுடைய சோர் புமுதலான குற்றத்தினாலே கெடுதியடைந்தால் அவற்றின் விலைக்குச் சமமாகவும் கொடுங்கிதையினாலே கொடுமையான அடித்தல் முத லிய செய்கையாற் கெடுதியடைந்தால் இரட்டிப்பாகவும் அந்தவே லையாளன் கொடுக்க.

நாரதர்.

பாக்குச்சுமை முதலானவை சுமைகாரனுடைய சோர்வினாலே கெடுதியடைந்தால் அந்தச்சரக்கின் விலைக்குச் சமமான பொருளும் அவனுடைய கெடுபுத்தியினாலே கெடுதி யடைந்தால் இரட்டிப்புப் பெருளுங்கொடுக்க.

காத்தியாயனர்.

சுமைகாரன் - ஆயுதச்சேவகன் - இவர்கள் முதலானவர்கள் வே றுகூலிக்காரர் முதலானவர்கள் கிடையாத விடத்திலே - பயணவிகா தம்பண்ணினால் அவர்கள் எசமானனுக்குத் தங்களுடைய கூலிக் கிர ட்டிப்புப் பொருள்கொடுக்க.

யாஞ்ஞவல்கியர்.

சுமைசுமைக்க வொப்புக்கொண்ட கூலிக்காரன் பயணத்தொ டக்கிலே ஒப்புக்கொண்டபடி செய்யாவிடில் அவன் தனக்குச்சொ

...ன்ன கூலியிலொருபங்கையும் பாதிவழிக்குட்பட்ட விடத்திலே ...ும் - கூலியிலொருபங்கையும் கடைவழியிலாளை கூலி முழுதையும் ...எமானனுக்குத்தண்டமாகக்கொடுக்க.

பிரகற்பதி.

...ராஜாவானவனுடைய அனுமதியினாலே வேலைக்காரன் எல்லையைவிட்டு நீங்குதலையுமுதல் முதலானவைகளைச் செய்தால் குற்றம் எட்டாயிரங்கபணமும் - அந்தவேலைக்காரனுக்குத் தண்டமுமாம்.

காத்தியாயனர்.

...னத்தேனும் கோயில்வருத்தமுற்றிருக்கிறபோது வேலைக்காரனையோரிடத்தில் வைத்து மூன்றுகாலமளவுக்கு மாற்றுதல் எஜமானனுக்குப் பூருவசாகசதண்டம் விதிக்கப்படும்.

பிரகற்பதி.

...ராஜாவான் வேலையைச்செய்வித்துக்கொண்டு கூலிகொடாதிருந்தால் அரசன் கூலியைக்கொடுப்பித்துக் குற்றத்திற்குத் தக்கபடி தண்டத்தைவிதிக்க.

விட்டுணு.

...ஒருவனாலவனவேற்படுத்தி வைத்துக்கொண்ட கூலிக்காரனை அவனுக்குள்ளே தள்ளிவிட்டால் அவன்கூலிக்காரனுக்குக் கூலி முழுவதுங்கொடுத்து அரசனுக்கு நூறுபணம் தண்டமாகக்கொடுக்க.

யாஞ்ஞவற்கியர்.

...ராகுப்பொறி முதலானசுமை சுமக்குங்கூலியை யொப்புக்கொண்டவனைப் பயணம் ஆயத்தமாயிருக்கையில் எஜமான் - தள்ளிவிட்டாலும் அவன் - ஏற்படுத்தின கூலியிலொழி கொலையும் - பாதிவழியிலுட்பட்ட விடத்திலே தள்ளிவிட்டால் - கூலிமுழுதும் கொடுக்க.

விருத்தமனு.

...பாதிவழிக்குட்பட்ட விடத்திலே சரக்குவிற்கப்பட்டால் எஜமான் பேரிலேகூலியிற் பாதிகொடுக்க.

காத்தியாயனர்.

...சரக்குச்சமம் - கங்கைகாரணமாலே தடுக்கப்பட்டாலும் - அரசன் முதலானவர்களாலே வரப்பட்டாலும் - அல்லதிரி வளவுக்குத்தக்க கூலியைக் கூலிக்காரனுடையவன்.

நாரதர்.

...ஒருவன் சரக்கைக்கொண்டுபோவதற்காக எருதுமுதலானவை...னை வாடகைக்கு வாங்கிச் சரக்கைக் கொண்டுபோகாவிட்டால்...

...வன் தான்சொன்ன வாடகையில் காலிலொருபங்கும் கொண்டுபோய்ப் பாதிவழியில்விட்டால் வாடகை முழுதும் பாதிக்குட்பட்டவிடத்தில்விட்டால் அதற்குத்தக்கவாடகையுங் கொடுக்க.

காத்தியாயனர்.

ஒருவன் தனது காரியப்பொருட்டு பண்டி-யானை-குதிரை-கழுதைமுதலான்வைகளையும், வீடு-கடை-சலபாத்திரம்- நெய்ப்பாண்ட முதலானவைகளையும் வாடகைக்கு வாங்கிக்கொண்டு அவைகளினுலே பயனையடையாவிடினும் அவன் அவைகளை உடையவன்வசம் ஒப்புவிக்குமளவும் உள்ள வாடகையைக் கொடுக்க.

நாரதர்.

வாடகைக்கு வாங்கின நெய்ப்பாண்ட முதலானவைகள் கெடிக்தேனும், உடைக்தேனும்போனால் வாங்கினவன் வேறு பாண்டமுதலானவைகளையேனும், அவைகளுக்கு விலையையேனு முடையவனுக்குக் கொடுக்க.

அன்னியனுடையநிலத்தில் வீடுகட்டி வாடகைகொடுத்துக் குடியிருந்தவன் அவ்விடம்விட்டுப் போம்பொழுது அவன் மரம்-செங்கல் முதலானவைகளைக் கொண்டுபோகுக.

வாடகையேற்படுத்தாமல் வீடுகட்டிக் குடியிருந்தவன் போம் பொழுது அந்தவீட்டின் மாமுதலானவை நிலத்திற் குடையவனைச் சேரும்.

விலைமாதர்விஷயம்.

நாரதர்.

வேசையானவள் ஒருவன்கொடுத்தபணத்தை வாங்கிக்கொண்டு அவனை யிச்சியாமற்போனால் அவள்வாங்கினபணத்திற் கிரட்டிப்பான பொருளை யவனுக்குக்கொடுக்க.

பணங்கொடுத்தவன் அவளை யிச்சியாமற்போனால் அவன் அந்தப்பணத்தை யிழப்பான்.

கோயினள் மிகவு முக்கியமான காரியத்திற் பதைப்புற்றிருப்பவள் - இராசகாரியத்தி லிச்சையுடையவள் - ஒருவனுலே வரிக்கப பட்டவள் - இவர்கள் தாங்களுடன்பட்ட புருஷனைச் சேராவிடில் அபராதமில்லை.

ஒருவன் வேசையை யனுபோகித்துப் பணங்கொடாவிடினும், பல முகம் முதலானவைகள் மிகவுமழுத்த வனுபோகித்தாலும், உபகாரமல்லாத விடங்களிற்புணர்ச்சிசெய்தாலும், பலரைப் புணருமபடி செய்தாலும், அவன் பணத்திற் கெண்மடங்குபொருளை யவளுக்கும், அதற்குச்சமமான தண்டப்பொருளை யரசனுக்கும் கொடுக்கத்தக்கவனாவான்.

புராணம்.

வேசையானவள் ஒருவனிடத்திற் பணம்வாங்கிக்கொண்டு பொருளாசையால் மற்றொருவனை யனுபோகித்தால் அவள் முன்வாங்கின பணத்தை பணங்கொடுத்தவனுக்கும், தண்டத்தை அரசனுக்கும் கொடுக்கத்தக்கவள்.

வேசையிடத்திலுண்டாகிற விவாதம் அவர்களுடைய வீட்டிலே யிருப்பவரும். அவர்களையே கொண்டாடியிருப்பாரும், காமுகருமாகிய இவர்களாலே நிச்சயிக்கத்தக்கது.

சாமிபால்விவாதம்.

பலமுனிவர்.

பசுவுடையவனுலே கூலியேற்படுத்தப்படாத விஷயத்தில் நூறு பசுமேய்க்கப்பட்டால் வருஷமொன்றிற்கு நாலுபசுவொன்றும், இருநூறுபசு மேய்க்கப்பட்டால் ஈன்றபசு வொன்றும் மேல் எட்டுவரை கொடுப்பான் கறவைப்பசுக்களில் பத்துக்கு ஒன்றுக அதிகமாகக் கறக்கின்ற பசுவின்பாலும், மேய்ப்பவனுக்குக் கூலியாம். எல்லாத்தொகையிலும் கூலியிப்படியே யறியத்தக்கது.

எருமை முதலான காலிகளை மேய்ப்பவனுக்கு மிப்படியே கூலியேற்படுத்துக.

பாலில்லாவிடில் மேற்சொல்லியபாலின் விலைப்பொருளை கூலியாகக்கொடுக்க.

யாஞ்ஞவற்கியர்.

மேய்ப்பவன் தன்வசமொப்புவித்த காலிகளை காடோறுங் காலிப்பொழுதிற் கொண்டுபோய்ப் புல்லுமேய்ப்பித்து நீர்குடிப்பித்து மாலைப்பொழுதி லொன்றுங்குறையாம லொப்புவிக்க.

மனு.

மேய்க்குமிடத்தில் திருடர் - கொம்பு- காளம் வேய்குழல்முதலானவைகளா லொலிசெய்து காலிகளைக் கவர்க்துபோல் மேய்ப்பவன் குற்றமுடையவனல்லன்.

வியாசர்.

காலிகளிருக்கும் உளர் - காடு - வீடு - இவற்றிற் கிடையூறுவந்த பொழுது காலிகஷ்டமாயேனும், கவரப்பட்டேனும்போனால் அதைக் குறித்து மேய்ப்பவனுக்குக் குற்றமில்லை.

பலமுனிவர்.

புழு - புலி - திருடர் - செங்காய் - மலைமுழை பள்ளமுதலான மீண்டுவரக் கூடாதவிடங்கள் இவற்றுற் காலிக்கு அபாயநேரிட்டால் மேய்ப்பவன் கூக்குரலிடுதல் எசமானன் சமீபத்திலிருந்தாலவனுக்கறிவித்தல் இவைமுதலிய தன்னலாகிய புருஷமுயற்சி செய்யாமற்போர்வுமுதலான குற்றமுடையவனுயின் அவன் கெடுதியடைந்தகாலியின்விலையை யெசமானனுக்கும், பன்னிரண்டாப்பணந்தண்டத்தை அரசனுக்குங் கொடுக்க.

காலவசத்தாற் காட்டிலே காலியிறந்துபோனலக்தக்காலியின் காது தோல் - வால் - இவைமுதலான அடையாளங்களை மேய்ப்பவன் எசமானனுக்குக் காண்பிக்க.

காத்தியாயனர்.

வீளிகிலம் - கோட்டம் - புல்லிருக்குமிடம்- வீறகுக்காடு-வீடு-தொழுவம் - இவ்விடங்களிலே காலிபுகுமளவில் அவ்விடமுடையவன்புகுந்த காலி கன்றுனலதின்காதுமுதலியவற்றைப் பிடித்தலும், பெரிய வெருதுமுதலானவைகளாலுலடித்தலும், அவைகளைப் போக்குதற்குத் தக்கபடிசெய்க.

அடித்தலதிகமானுல் தண்டமுண்டாம்.

காடு - உளர் - வழி - பெருவழி - வழிச்செல்வோர்தங்குமிடம்- இவற்றிற்குச் சமீபமான பயிர் நிலங்களுக்கு மூட்டகமெட்டிப்பார்ப்பதற்கும், பசு - குதிரை தாண்டுதற்குங் கூடாததாகவும், பன்றி - கால்களாய் - இவற்றின் முகநுழைக்கத்தக்க புழைகளில்லாததாகவும வேலிகட்டுக.

வேலிகட்டின பயிரைக்காலிகள் மேய்ப்பவனுலே தடுக்கப்படாமலே மேய்ந்தழித்தபோது மேய்ப்பவன் தகுதியானதண்டத்தையும், காலியுடையவன் - நிலமுடையவனுக்குப் பலசேதத்தையுங் கொடுக்கும்படிசெய்க.

யாஞ்ஞவற்கியர்.

வேலியில்லாதபயிரை மேய்ப்பவனறியாமற் காலி மேய்ந்தழித்தால் மேய்ப்பவனுக்குக் குற்றமில்லை.

விட்டது.

அவனறிந்தழிக்கப்பட்டால் தண்டம் விதிக்கப்படும்.

கௌதமர்.

வேலியிடத் தக்கவிடங்களிலே வேலியிடாமல் இறைக்கற்
ஆழிவுசெய்த நிலமுடையவன் தண்டிக்கப்படுவான்.

யாஞ்ஞவற்கியர்.

காலிகள்வேறும்படி பயிரைமேய்ந்தழித்தால் காலியுடையவ
நிலமுடையவனுக்குப் பலசேதத்தையும், அரசனுக்குத் தகுதியா
தண்டத்தையுங்கொடுக்க மேய்ப்பவனுக்குத் தடி முதலியவற்றை லடி
தல் தண்டமாகவிதிக்கப்படும்.

பயிரையழித்த காலி - இளமைப்பருவங்கடந்த கழுதை-ஒட்ட
ங்களுமன்றி வேலைகளாலுல் எட்டுமாடமும், பகலாலுல் சான்குமாட
மும், வேளாடு செம்மறியாகளாலு மிரண்டுமாடமும் தண்டமா
விதிக்கப்படும்.

காலிகள்மேய்ந்த விடத்திலே படுத்திருந்தால் மேற்சொல்லிய
தண்டத்திலரைவாசி விதிக்கப்படும்.

சங்கலிதர்.

நிலத்திலே யொரு பசுவேய்ப்பவனறியாமல் ஒரு முகூர்த்தத்தி
குட்பட்ட காலத்தில் மேய்ந்தால் தண்டமில்லை.

கன்றின்ற பத்தாளைக் குட்பட்ட பசு தேவாலயப்பசு பெரிய
வெருது-ஏவம்போட்டபசு-அரசனுடைய யானைகுதிரைகள்-இன்
றப்பிவிடுபசு - மீட்டு மினக்கேடிப்போம் பசு-ஏற்றைக்கண்ணுடை
யது-இறைச்சோம்புடையது-இடி-பாம்பு-புலி-கோய் இவற்றால் தின்
பப்பட்ட பசு இவற்றிற்குத் தண்டமில்லை.

கூலிகொடாமை முற்றிற்று.

உடையவனல்லான் விற்றல்.

பிரகற்பதி.

உடையவனல்லாதவனென்பவன். விக்ரயம்-அன்னுவாதம்-நி
யாசம்-கவரப்பட்டது-ஈடாகவைக்கப்பட்டது - தப்பிப்போனதாயி
அயலவனுடைய பொருள் இவையுமுதலானவைகளை வெளிப்படை
யாகவேனும் மறைவாகவேனும் விற்பவன்.

உடையவன் - உடையவனல்லாதவனுலே விற்கப்பட்ட தனது பொருளை யெவனிடத்திற் காண்கின்றானே அவனிடத்தினின் றதை யடைவான்.

நாரதர்.

உடையவன் தப்பிப்போனதும் கவரப்பட்டதுமாகிய தனது பொருளை அரசனுக்கறிவித்துத்தானடைக.

உடையவன் அரசனுக் கறிக்கைசெய்யாமற் பொருளைக் கொண்டுபோனால் அவன் தண்டிக்கப்படுவான்.

உடையவன் தனது பொருளைக் கவர்ந்தவனிடத்திலேனும் தப்பிப்போ யெடுத்தவனிடத்திலேனுங் கண்டபோது அவர்களை யிராசமனுஷனைக் கொண்டு பிடிப்பிப்பதற்குக் காலதேசங்களை யொவ்வாவிடமனுல் தானேயவரைப்பிடித்து அரசனிடத்திலேனும் அரசனுடைய மனுஷரிடத்திலேனும் ஒப்புவிக்க.

அரசனவர்களைத் தண்டித்து உடையவனுக்குப் பொருளைக் கொடுப்பிக்க.

யாஞ்ஞவற்கியர்.

உடையவனல்லாதவனிடத்தில் அறியாமையினுலே வாங்கப்பட்ட பொருளை வாங்கினவனிடத்தில் உடையவன் கண்டு அரசனுக்கறிவித்தபோது, அரசன் அப்பொருளின்விலையை விற்றவனுலேகொடுப்பித்து விலைப்பட்டபொருளை யுடையவனுக்குச் சேரும்படி செய்து விற்றவனைத் தண்டிக்க.

அகாலத்தில் வாங்குதல்முதலான குற்றங்கள் காணப்படில் விற்றவனும் வாங்கினவனுஞ் சோரனைப்போலத் தண்டிக்கப்படுவார்கள்.

வீட்டினுள்ளேனும் கிராமத்திற்கு வெளியிலேனும் அகாலத்திலேனும் தகுதியுடையரல்லாத ஜனரிடத்திலேனும் இரகசியமாகவேனும் தாழ்ந்தவிலையாலேனும் உடையவனுமதியில்லாமலேனும் அடிமை முதலிய வறிமையின்மையரிடத்திலேனுங் கொள்ளப்பட்டது குற்றமுடையதாகும்.

காத்தியாயனர்.

பொருட்கெடுதியடைத்தவன் தன்னுடைய பொருளை அயலவனிடத்திற் கண்டபோது ஆகமாதிகளினுலும் சாக்ஷிக்காராகிய ஜனங்களினுலும் அப்பொருள் தன்னுடையதென்பதைச் சாதிக்க.

பிரகற்பதி.

அப்படிச் சாதித்தபின்பு அத்தப்பொருளை விலைக்கு வாங்கினவன் தனக்கு விற்றவனைக் காண்பிக்க.

வாங்கினவன் விற்றவனைக் காண்பித்தால் அவனுக்குக் குற்றமில்லை.

அலலவனுடைய பொருளைவிற்றவன் வாங்கினவனுக்கு விலைப் பொருளையும், அரசனுக்குத் தண்டத்தையும் உடையவனுக் கத்தப் பொருளையுங் கொடுக்க.

காத்தியாயனர்.

விற்றவன் தாதேசத்திலிருந்தால் அவனையழைப்பிப்பதற்காக அத்தத் தாத்துக்குத் தக்க காலவளவைக் கொடுக்க.

அப்படிக் காலவளவு கொடுத்தும் வாங்கினவன் விற்றவனை யழைப்பியாமற்போனபோது தான் விலைக்குவாங்கினதைச் சாக்ஷிகளாலே மெய்ப்படுத்தினால் அவனுக்குத் தண்டமில்லை.

அப்படி யழைப்பியாமலேனும் மெய்ப்படுத்தாமலேனும் போனால் அவன் பொருளுடையவனுக்குப் பொருளையும் அரசனுக்குத் தண்டத்தையுங் கொடுக்கத்தக்கவனுவான்.

விலைக்கு வாங்கினதை நிச்சயித்தவிலே ஞாதியாகிய சாக்ஷிய மே பிரமாணம். மிகுந்த பொருள்விஷயத்திலே திவ்வியமுண்டாம்.

வியாசர்.

பொருட்கெடுதி யடைந்தவன் பொருளைத் தன்னுடையதென்று சொல்லி மெய்ப்படுத்தாவிடில் அவனுக்குச் சோரதண்டம் விதிக்கப்படும்.

பிரகற்பதி.

பொருட்கெடுதியடைந்தவன் பொருள் தன்னுடைய தாகுதையைச் சாதிப்பதற்கும், கொண்டவன் வாங்கினவதைச் சாதிப்பதற்கும் மேற்சொல்லிய சாக்ஷிகளில்லாதபோது அரசன் அவ்விருவருடைய தகுதியைப் பார்த்து விவாதவிஷயமான பொருளின் விலையை அவ்விருவருக்கும் நியாயப்படி பிரித்துக்கொடுக்க.

காத்தியாயனர்.

உடையவனுலேயும் நிரூபமனுஷ்யாலேயும் கடைவிதியிற் காணப்பட்ட பொருளை விற்றவன் இறந்தேனும் இருக்குமிடந் தெரியாமலேனும் போனால் அத்தப் பொருள் விளக்கமாக விற்கப்பட்டதாலும் அதின் விலையிற் பாதியை வாங்கினவனுக்குக் கொடுப்பித்து அப்பொருள் உடையவனைச் சேரும்படி செய்க.

எசமானனுடைய வனுமதியில்லாமல் வீட்டடியாளை யொருவனுபோகித்தா லிரண்டுபணத்தையும், பசுவை யனுபோகித்தால் எட்டுப்பணத்தையும், எருதை யனுபோகித்தால் பதின்மூன்றுபணத்தையும், பூமியை யனுபோகித்தால் பதினறுபணத்தையும், உரல்-முறம் இவற்றை யனுபோகித்தால் அரையரைப்பணத்தையும், உலக்கையை யனுபோகித்தால் இரண்டுபணத்தையுங் கொடுக்க.

ஓடம்-குதிரை-கலப்பை-பசு இவற்றை வலிமையாலனுபோகித்தவன் இவற்றிற் கொருநாளைக்குள்ள வாடகைக்கு எண்மடங்கு பொருளைக் கொடுக்க.

உடையவனல்லான்விற்றல் முற்றிற்று.

விற்றுக்கொடாமை.

நாரதர்.

இருப்பிடத்தில் வாணிகஞ்செய்யு மொருவனுக்கு ஒருவன் சரக்கை விற்று வாங்கினவன் கேட்டுக்கொண்டிருக்கையிலே கொடாமலிருந்தபோது அந்தச் சரக்கு மலிந்தால் முன்பு சரக்கைக் கொண்டவன் கொடுத்தபணத்துக்கு அந்த மலிவினுலே யெவ்வளவுசரக்கு கிடைக்குமோ அவ்வளவுசரக்கை அவன் கொடுக்க.

யாஞ்ஞவல்கியர்.

சரக்குமலியாமற் கொண்டபோதிருந்தபடியே யிருந்தால் வட்டிப்பிரகாணத்திற் காட்டிய வட்டியுடனே அந்தச்சரக்கைக்கொடுக்க.

நாரதர்.

சரக்கைக்கொண்டவன் தேசாந்தரத்தில் வாணிகஞ் செய்பவனுல் அவனுக்குச் சரக்கை விற்றுக்கொடாதவன் - அந்தத் தேசவிலாபத்தையும் கொடாமலிருந்ததற்காக அரசனுக்கு நூறுபணத் தண்டத்தையுங் கொடுக்க.

காத்தியாயனர்.

சரக்கைக்கொண்டதையும் விற்றதையுங் குறித்துச் சங்கேதமில்லாதபோது பத்துநாளைக்குமேல் மூன்று சரக்கைக்கொண்டவன் அந்தச்சரக்கை மீளவுங் கொடுக்க நினைத்தால் தான் கொடுத்த விலைப்

மத்தன் - உன்மத்தன் முதலானவர்களாலேனும், குணக்கே
லியினாலேனும், விற்கப்பட்டது கொண்டவனுக்குத் தித்தியாதி

நாரதர்.

ஒருவன் சரக்கைக்கொள்வதற்காக கொள்கிரயம் எவ்வளவும் கொடாமல் வார்த்தையினாலேமாத்திரம் உடன்படிக்கை செய்திருந்த போது உடையவனந்தச்சரக்கை மற்றொருவனுக்கு விற்றால் அவனுக்குக் குற்றமில்லை.

யாஞ்ஞவற்கியர்.

முன்னுடிச் சரக்கின்விலை பேசிக்கொடுத்த வுண்மைசெய்பொருளை அல்லது அச்சாரத்தை வாங்கிக்கொண்டவன் மற்றொருவனுக்கந்தச்சரக்கைவிற்றால் அவன்முன்புபேசினவனுக்குத் தான்வாங்கின வுண்மைசெய்பொருளுக் கிரட்டிப்பைக் கொடுக்க.

வியாசர்.

விலைபேசி யுண்மை செய்பொருள் கொடுத்தவன் சரக்கை வாங்கிக்கொள்ளாவிடில் அவன் தான்கொடுத்தவுண்மை செய்பொருளை யிழப்பான்.

உண்மைசெய்பொருள் கொடுத்தவன் ஏற்படுத்திய காலத்தில் வராவிடில் உடையவனந்தச்சரக்கை மற்றொருவனுக்கு விற்கலாம்.

விற்றுக்கொடாமை முற்றிற்று.

கொண்டுள்ளமொப்பாமை.

நாரதர்.

சரக்கைக்கொள்பவன் கொள்ளுமுன்னே சரக்கின்வாவு, விலையின்குறைவு, மஷிவு, இவற்றினையறிந்தும் தானேபார்த்தும் சரக்கின் குணங் குற்றந்தெரிந்த மற்றொருவருக்குக் காண்பித்துங் கொள்க.

வியாசர்.

சருமம் - விறகு - செங்கல் - நூல் - தானியம் - கள்முதலான மயக்கந் தருபொருள் - உப்புமுதலான சுவைப்பொருள் - பொன் - வெள்ளி - செம்பு - தரா - ஈயமுதலானவைகள் இவைகளை யுடனே பரிசோதிக்க.

பலமுனிவர்.

கறக்கத்தக்கதை மூன்றுகாள்வரையும், சுமக்கத்தக்கதை ஐந்து காள்வரையும், வச்சிரம் - பவளம் - இவற்றினை யேழுகாள்வரையும்,

பொருளின் பத்திலொருபங்குப்பொருளையும் கொண்டசரக்கை விற்றவனுக்குத் தொடுத்துக் குறைவிலாப் பொருளைத் தானடைந்து அப்படியே சரக்குவிற்றவன் சரக்கைக் கொடாமல் பத்துநாளைக்கு மேற் கொடுக்கவினைத்தால் அந்தச் சரக்கின் விலைப்பொருளின் பத்திலொருபங்குடனேயந்தச் சரக்கை கொண்டவனுக்குக் கொடுக்க.

குணக்குற்றங்கள் தெரிந்தவன் சரக்குகளைக் கொண்டு கொடுத்தவிட வினைத்தால் சரக்கின்விலையி லாறிலொரு பங்குபொருளைக் கொடுத்த அந்தச் சரக்குகளை விற்றவனிடத்தில் விடுக.

மனு.

கொளப்பட்ட குற்றமுடைய சரக்கைக்கொண்டு உள்ள மொப்பாமையினாலே தொடுத்துவிட்டால் அவனுக்கு கூறுநாறாயணத் தண்டமாக விதிக்கப்படும்.

நாரதர்.

சரக்கை வாங்கினவன் கேட்கும்பொழுது விற்றவன் கொடாமலிருந்த விற்கப்பட்ட சரக்கு இராகை தைவிகங்களாற் கெடுதியடைத்தால் விற்றவன் அந்த நஷ்டப்பொருளைக் கொடுக்க.

யாஞ்ஞவற்கியர்.

விற்றவன் கொடுக்கும்பொழுது கொண்டவன் வாங்காமற்போய் அந்தச் சரக்கு இராகை தைவிகங்களாற் கெடுதியடைத்தால் அந்த நஷ்டங்கொண்டவனதேயாம்.

சரக்கு விற்கப்பட்டபின்பு விற்றவன் சரக்கைக் கொடுப்பதற்கும், கொண்டவன் வாங்கிக்கொள்வதற்கும், ஒப்பியிருந்த சமையத்துக்குள் அதுசரக்கு இராகை தைவிகங்களாற் கெடுதியடைத்தால் அந்த நஷ்டம் அவ்விருவருக்குஞ் சமமாகும்.

விற்றவன் சரக்கைக்கொடுக்கும்போது கொண்டவன் வாங்காம ற்போனவந்தச்சரக்கை மற்றொருவனுக்கு விற்கலாம் கொண்டவன் தான்கொடுத்த விலைப்பொருளை யடைவான்.

நல்லசரக்கை முதலிலே காண்பித்துக்கொடுக்கும்பொழுதே கெட்டசரக்கை மனமறிந்து வஞ்சனையினாலே கொடுத்தால் அவனைத் சரக்கின்விலைக் கிரட்டிப்புப் பொருளைக்கொண்டவனுக்கும், அவ்வளவுபொருளைத் தண்டமாக வரசனுக்குங் கொடுக்க.

அப்படிக்கொடுத்தல் தெரியாமையினாலே செய்யப்பட கொள்கிரயத்தைமாத்திரங் கொடுக்க.

அடிமையைப் பதினேழ்வரையும், வேலைக்காரியை - ஒருவரை வரையும், எல்லாதவைகளையும் - பத்துவள்வரையும், இரும்புவெ நிரம் மிலைகளே பொருவள்வரையும் பரிசோதிக்கும்பொழுது குற்ற ங்காணப்பட்டதும், மனமொவ்வாமற்போனலு மிலைகளை விற்ற னிடத்திற்கொடுத்து கொண்டவன் தான்கொடுத்த விலைப்பொருளை வாங்கிக்கொள்க.

விலையாற்கொள்ளப்பட்ட ஆடையானது அணுபோகிக்கப் பட்டாலும், அழுக்கடைத்தாலும், குற்றமடைத்தாலும், அறிவுருவக்கெட்டாலும், அதுகொண்டவனதேயாம்.

கொள்ளுமொப்[illegible]மம் முற்றிற்று.

கட்டுப்பாடுகடத்தல்.

பலமுனிவர்.

அரசனுவன் வேத வேள்விமுதலியவற்றுற் றெத்த அத்தணர் பலரையழைப்பித்த அவர்கள் வாசம்பண்ணுதற்குந் தகுதியான இடங்களிலே பலர்களுக்கு விருந்திகற்பித்து இறைக்கூழிழித்து வீடு வீடுகளே முதலானவைகளைக் கொடுத்து அப்படிக்கொடுத்தற்குரு நிறை பத்திரலேகனத்திற் காட்டியபடி இராசசாசனமெழுதிக்கொடுத்த அவர்கள் தங்களுடைய தருமத்திலிருக்கும்படி செய்க.

அவர்கள் நித்தியகைமித்திய கருமமுதலானவைகளையும், தங்களுக்கும், பட்டணத்தாருக்கும், சந்தேகப்பட்ட பொருளை நிச்சயிப்பதற்கு செய்யத்தக்கவர்கள்.

அவ்வாறே சோமத்தார் - ரோணியர் - குலக்கூட்டத்தார்- பிரசண்டர்களுக்கும் முதலானவர்க்கும், மற்றவர்களுக்கும் அவரவருக்குத்தக்க விருத்திகற்பித்து நியமத்திலிருக்கும்படி செய்க.

மிருகம் - சோரன் - அரசன் - இவர்களாலுண்டாகின்ற துன்பத்தை நீக்குதலும், தருமத்தியும், அத்தணர்முதலிய வெல்லாருக்கும் பொதுவானதையால் அவர்களெல்லாரு மிவ்விடத்திற் காட்டுகின்றபடி கட்டுப்பாடுகளைச் செய்துகொள்க.

அவையாவன:—தண்ணீர்ப்பந்தல் - குளம் - தேவாலய மிலை முதலான தருமஞ்செய்வதற்காகக் கிராமத்தில விட்டுத்தொகைப்படியேனும், நிலத்தொகைப்படியேனும் வரியேற்படுத்திக்கொள்ளுதலும் சோரர்களுடைய துன்பத்தில் வீடுதோறுந் திறமையுடைய வொரு

வொருவன் ஆயுதபாணியாகி குறித்த வோரிடத்தில்வந்து[illegible] இராசவுபத்திரவத்தை நீக்கும்பொருட்டு வீடுதோறும் பெரியவனு வொவ்வொருவன்வந்து கூடுதலும் மற்றவைகளுமாம்.

அத்தக்கட்டுப்பாடுகளையும்- அரசனுவன் தமது பகைவர்க்கிடங்கொடுத்தல் முதலானவை செய்யற்கவென்பது முதலாகவேற்படுத்திய கட்டுப்பாடுகளையும், அவரவர்கள்பத்திரத்திலெழுதிக்கொண்டேனும், பிணைவாங்கிக்கொண்டேனு மழிவுறுமல் நடத்தலையும் கட்டுப்பித்தலையுஞ் செய்க.

பொதுவிலே நியமிக்கப்பட்டவன் போர்முதலான காரியத்தைக்குறித்துக் கடனுகவாங்கப்[illegible] பொதுப்பொருளை யழித்தாலும், குறித்தகாரியத்தைச் செலுத்தாமல் தான்றின்றழித்தாலும், அத்தப் பொருளை அவனேகொடுக்க.

வழிச்செலவுக்காகக் கடன்வாங்கப்பட்டால் அந்தக்கடனைக் கூட்டத்தார் பொதுவிலொத்துக்கொள்க.

யாஞ்ஞவற்கியர்.

கூட்டத்தாருளொருவன் பொதுப்பொருளைக்கவர்ந்தாலும், கட்டுப்பாட்டைக்கடந்தாலும், அந்தக்கூட்டத்தார் அவனுடைய பொருளெல்லாவற்றையுங் கவர்ந்துகொண்டு அவனைத் தேசத்தினின்று துரத்திவிடுக.

அந்தக்கூட்டத்தார் தங்களுடைய காரியத்தைக்குறித்து வேண்டும்பொழுது அரசன் தாமசம்பண்ணுமலதனை யுடனே விசாரிக்க.

அத்தக்கூட்டத்தாராலே நியமிக்கப்பட்டவனுக்கு அரசன்கொடுத்த வெகுமானப்பொருளை அவன் கூட்டத்தாருக்கொடாமல் தானெடுத்துக் கொண்டால் அந்தப்பொருளுக்குப் பதினெருமடங்குப் பொருள் கொடுப்பிக்கத் தக்கவனுவான்.

கட்டுப்பாடுகடத்தல் முற்றிற்று.

நிலவழக்கு.

பிரகற்பதி.

கிராமங்களுக்கு நாலுபக்கங்களிலும் ஏற்படுத்திய வெல்லைக்கடைசியில்வெளிப்பட்டவைகளாகவும், மறைக்கப்பட்டவைகளாகவும், அந்த எல்லைக்கடைசியினடையாளங்களை நிறுவுக.

அவற்றுள்,

பலமுனிவர்.

வெளிப்பட்ட வடையாளங்களாவன:—திரண்டுபோர்த்தகல் - தாவு - குளம் - கிணறு - கல்லாற்கட்டப்பட்ட திண்ணை - உயர்ந்தபூமி - தோட்டம் - கோயில் - அகழ் - வெள்ளப்போக்கோடை - காணல் - இறுபுதர் - ஆல் - அரசு - முருக்கு - முள்ளிலவு - ஆச்சா - பனை - பலாமரம் - மூங்கில் - புற்று - வழிக்கரை - பள்ளம் இவைகளாம்.

இவற்றினை யடையாளங்களாக வேற்படுத்தி யழியாமலிருக்கும் படி செய்க.

மறைக்கப்பட்ட அடையாளங்[illegible]வன:—காட்டுமுட்டை - எலும்பு - உமி - கரி - சுக்காங்கல் - பாசிவோடு - மணல் - செங்கல் - பகவின்வால் - பருத்திவிதை - சாம்பல் - பெப்பி - சங்கு - கருங்காலிப் பிசின் இவைகளாம்.

இவற்றினை யடையாளங்களாகப் பாசியிலிட்டுப் பூமிக்குட்புதைக்க.

இவ்விருவகை யெல்லை யடையாளங்களைக் கிராமத்திலிருக்கும் விருத்தரான எல்லைதெரிதற்பொருட்டுச் சிறுவர்க்குந் தெரிவிக்க.

பிரகற்பதி.

எல்லைவழக்கில் வாதியினாலே காண்பிக்கப்பட்ட அடையாளம் வாதியினாலே காண்பிக்கப்பட்ட அடையாளங்களைக் குறித்துச் சாக்ஷிமுண்டானபோது ஆகமம் - அளவு - அநுபோகம் - பெயர் - இவற்றையும் இதரப்பிரிவுகளையுந் தெரிந்த சாக்ஷிகளாலே நிச்சயஞ் செய்க.

பலமுனிவர்.

சாக்ஷிகளில்லாதபோது கிராமத்தினும் பாலெல்லைக் கடைபிலிருக்கிற கிராமத்தாரான சாமந்தாலே நிச்சயஞ்செய்க.

அவர்கள் பகை - பொருளாசை - பொருண்மிகுதி - இவற்றினாலேதுஷ்டராயினபோது அவர்களுக்கு அடுத்தசாமந்தாலேநிச்சயஞ் செய்க.

அவர்களும் அப்படிப்பட்டவர்களேயானால் அவர்களுக்கடுத்த சாமந்தகாலே நிச்சயஞ்செய்க.

அவர்களுந் துஷ்டரானால் அவர்களைத்தள்ளி அரசனுனன் ஆதிகாலத்திற் சாமந்தராயிருந்து தேசாந்தரம்போய் நெடுங்காலஞ்சென்று வந்திருக்கிறவர்களாகிய பழமையோரையும், பட்டணத்தாரையும், கிராமத்தாரையும், கணத்தாரையும், எல்லாராலுங் காணப்படுகின்ற நற்செய்கையுடையவராகிய மூப்பினரையும், கேள்வி - அனுபவம் - காரியஞ்சொல்லுதல் இவற்றுற் குறிக்கப்பட்டவர்களான நிலை நிறுத்துவோரையும், காட்டிலிருக்கிறவர்களாகிய வேடரையும், பறவை பிடித்துஜீவனஞ்செய்வோரையும், நெற்பொறுக்கிகளையும், விறகுவெட்டிகளையும் அழைப்பித்து சாக்ஷிக்கேள்விப் பிரகாணத்தில் அவ்வவ் சாதியோர்க்குக்காட்டிய விதி[illegible]சபதங்களைச் சொல்லுவித்து எல்லை அடையாளங்களைக் கே[illegible]போது அவர்களால் உண்மையாற் காட்டப்பட்ட வெல்லையை அரசனிறுவுக.

சாக்ஷிகள் முதலானவர்கள் எல்லையடையாளங்களைக் காட்டாமல் எல்லையைமாத்திரஞ் சோன்னுல் அரசனெல்லையோடும்படி செய்து நிச்சயிக்க.

யாஞ்ஞவற்கியர்.

எல்லையோடுகிறவர்கள் சாமந்தர் முதலானவர்கள் அவர்கள் கால்வர்முதலாக இரட்டித்ததொகையினராகியும் சிவந்த ஆடை-சிவந்த மாலையணிந்தவராகியும் - ஓட்டிலே மண்ணையெடுத்து அதை தலையின்மேல்வைத்துக் கொண்டெல்லையோடுக.

பிரகற்பதி.

மேற்சொல்லிய எல்லையோடுகிறவர்க ளில்லாதபோது உபயவாதிகளுக்குஞ் சம்மதனான ஒருவன் குணமுடையவனுனல் எல்லையோடலாம்.

எல்லையோடின நாற்பத்தஞ்சு நாளைக்குமேல் நிச்சயம் அறியத் தக்கது.

காத்தியாயனர்.

அதிகம் - குறைவு - பங்குண்மை - பங்கின்மை - அநுபோகத்தினுண்மை யின்மை எல்லை - இவ்வாறும் பூமிவாதத்திற் கேதுக்கள்.

பூமிவாதத்தில் திவ்வியப் பிரமாணங்கூடாது.

மனு.

எல்லை யடையாளமுதலானவை யில்லாமையால் நிச்சயஞ் செய்தல்கூடாத பூமியை அரசன்மிகவு முதவியாகத் தக்கிராமத்திற் சேர்க்க.

இரண்டு ராமத்திற்கு எல்லையைக்குறித்து விவாதம்வந்தபோது
பெரியோர்களாலங்களில் அனுமுதலிய அடையாளங்களைப்பார்த்து
நிச்சயஞ்செய்க.

பிரகற்பதி.

ஏரி - கரம் - ராமம் - நிலம் - வீடு - கழனி - தோட்டம் -
குளம் - தேவாலயம் - கிணறு - தடாகம் - மழைநீர்ப் போக்கி
டம் இவைமுதலானவைகளின் எல்லை விவாதத்தில் அவ்வவற்றின்
சாக்ஷிகளாலே நிச்சயஞ்செய்க.

காத்தியாயனர்.

ஏதேனுஞ்சாக்ஷிகள் பயத்தினாலும் - பேதத்தினாலும் - சா
ஷியுரைக்கும்போதும்-மாறுபாடாகச்சொன்னாலும்-அவர்களுக்கு
உத்தம சாக்ஷிகளுடன் விதிக்கப்படும்.

விஷ்ணு.

பொய்ச்சாக்ஷி சொல்பவனுக்கு எல்லாப்பொருளையும் கவர்ந்து
கொண்டமாத விதிக்கப்படும்.

நாரதர்.

சாக்ஷிகள் பொய்யுரைத்தால் அவர்களுக்குத் தனித்தனி மத்
தியதண்டம் விதிக்கப்படும்.

நாரதர்.

அரசன் அநியாயமினுலேவேறுபாடாகச்சொன்னால் அப்படி
யெனக்கருதி அவனைத் தண்டித்து மீட்டும் அவர்களாலே யெ
ல்லை செய்விக்கவேண்டியது.

கோத்திரஜனான இருவர்கள் பொய்சொன்னால் அவர்களுக்
குத் தனித்தனி மருவளாசதண்டம் விதிக்கப்படும்.

எல்லையோடுபிறவன் மாறுபாடாகவோடினால் அவனுக்கிருநூறு
வராகத் தண்டமாகவிதிக்கப்படும்.

சாக்ஷிகளெல்லாம் சம்மதித்துச் சொன்னால் பத்தி
ரத்தினும் - பத்திரம் விரோதப்பட்டால் ராமத்தாராலும் ரா
மத்தார் விரோதப்பட்டால் கோத்தாராலும் - கோத்தார் விரோதப்ப
ட்டால் - விருத்தாராலும் - விருத்தர் - விரோதப்பட்டால் - சிரேணிய
ராலும் - சிரேணியர் விரோதப்பட்டால் - பத்துவருடத்து அனுபோ
கத்தினும் நிச்சயிக்கத்தக்கது.

பிரகற்பதி.

ஆற்றைத்தானே எல்லையடையாளமாக எற்படுத்தப்பட்ட இரு
பக்கத்துக் கிராமங்களுக்கு அந்த ஆற்றினல் உண்டாகின்ற கஷ்டமும்
இலாபமும் - அந்தந்தக் கிராமங்களுக்கேயாம்—எப்படியெனில் ஒரு
நதியினுடைய வடகரை ஒருருக்கும் - தென்கரையோருருக்கும்-எல்
லையாக நியமிக்கப்பட்டன அப்படியிருக்கையில் ஒருகாலம் அந்த நதி
யானது வெள்ளத்தின் வேகத்தினலே கரையை யுடைத்துக்கொண்டு
தென்பக்கத்து கிராமத்தெல்லையில் விழுந்துபோயிற்று—அப்பொழுது
வடகரையிற் புதிதாகச்சேர்ந்த நிலமெல்லாம் வடகரையெல்லைக் கிரா
மத்தானுக்கேயாம்.

அரசனுலேனும் - ஆற்றினுலேனும் - எத்தப்பூமி யெவனுக்குக்
கொடுக்கப்பட்டதோ - அத்தப்பூமி அவனுடையதேயாம்.

அப்படி புதிதாகச்சேர்ந்தநிலம் பயிருடையதாயிருப்பின் அந்த
ப்பயிரின்பலத்தைமாத்திரம் பயிர்செய்தவனடைவன்.

அரசன் உண்மையல்லாத ஏதுக்களினுல் அநியாயமாக ஒருவனு
டைய பூமியைக்கவர்ந்து மற்றொருவனுக்குக் கொடுத்தால் அது சித்தி
அடையாது.

கிராமம் உண்டாக்கிய காலமுதற்கொண்டு பலகணி - சலபோ
க்கிடம் இளைப்பாறுமிடமான வீட்டின்முகப்புத்திண்ணை - காற்சந்தி
க்கிடம் வீட்டின்மேனின்று மழைநீர் விழுகின்ற தூம்பு வீடு-கடை-
இவைகளை வழக்கப்படி அனுபோகிக்க.

அவ்வனுபோகத்தை யொருவரும் தடுத்தல்கூடாது.

மலமூத்திரங் கழிக்குமிடம் நெருப்புக்குழி - எச்சிற்றண்ணீர்விடு
மிடம் இவற்றினை அயலவனுடைய சுவருக்கு இரண்டுமுழமிடம் விட்
டுச்செய்க.

நாரதர்.

பசுக்களும் மனுஷரும் தடுக்கப்படாதல் நடக்குமிடம் - தேவால
யம் - இராசமார்க்கம் - இவற்றினை யொருவரும் தடுத்தல்கூடாது.

பிரகற்பதி.

எவன் வழிமுதலானவிடங்களிலே பள்ளத்தையும் மாமுதலான
வைகளை வைப்பதையும் - மறைவையும் - மலங்கழித்தலையுஞ் செய்கி
ன்றனே அவனுக்கு ஒருமாடத்தண்டமாக விதிக்கப்படும்.

மனு.

இவற்றை பிராசமார்க்கத்திற் செய்தவனுக்கு இரண்டுபணத்தண்டமாக விதிக்கப்படும்.

விருத்தன் குலுடையான் - பிறவன் - ஆபத்தையடைத்தவனில்லாமை - ராஜமார்க்கமுதலான விடங்களில் மலங்கழித்தால் இவர்களுக்குத் தண்டமில்லை - வாக்குத்தண்டமாத்திரமுண்டாம் - அத்தலத்தைச் சுத்திபண்ணுக.

காத்தியாயனர்.

நீராகம் - பூந்தோட்டம் - தீர்த்தம் - இவற்றில் மலங்கழித்துக் கெடுத்தவன் இவற்றினைச் சுத்திசெ[illegible] அரசனுக்குப் பூருவசாகசத் தண்டனைசெய்க.

பலமுனிவர்.

தீர்த்தமுதலியவற்றை அழுக்காடையைத்து லவத்தல் முதலிய வற்றைச் செய்தவனுக்குப் பூருவசாக சதண்டம் விதிக்கப்படும்.

யாஞ்ஞவல்கியர்.

நிலத்திலே யெல்லையைப்பிரித்தவனுக்குப் பூருவசாக சதண்டமும் - எல்லையைக்கடத்தழிறவனுக்கு உத்தமசாகசதண்டமும்-அபகரித்தவனுக்கு மத்திமசாக சதண்டமும் விதிக்கப்படும்.

சங்கிலிதர்.

நீர்செய்கடிய தெப்பம்ர் நிலமுதலானவைகளை வலிமையாலபகரித்தால அவனுக்கு என்னூறுபணத் தண்டமாக விதிக்கப்படும்.

காத்தியாயனர்.

எல்லைப் பொதுநிலத்திலிருக்கின்ற மரத்தின்பலன் அவ்வெல்லையிலுள்ளவர்களுக்கும் பொதுவாம்.

கரையின் விஷயம்.

நாரதர்.

கரையானது - நீர்ப்போக்குக் கரையெனவும் - நீர்த்தடைக்கரையெனவு மிருவகைப்படும்.

அங்கிரர்,

நீர்ப்போக்குக் கரையாவது பயிருக்கதிகமாயிருக்கிற நீர்போகும் படிவெட்டி விடத்தக்கதாம்.

நீர்த்தடைக்கரையாவது வந்த வெள்ளநீரைத் தாங்குதற்காகக் கட்டப்படுவதாம்.

யாஞ்ஞவல்கியர்.

இவ்விருவகைக்கரையு நிலத்துக் குடையவனிடத்தில் அயலவன் செய்யும்போது அற்பாஷ்டமும் அதிகவிலாபமு முண்டாகுமேயானால் அத்தச்செய்கையைத் தடுத்தல்கூடாது.

ஒருவன் மற்றொருவனுடையநிலத்தில் தாவையேனும் - இணற்றையேனும் - வெட்டும்போது மேற்சொல்லியபடி அற்பாஷ்டமும் - அதிகவிலாபமு முண்டாகுமேயானால் அத்தச்செய்கையைத் தடுத்தல் கூடாது.

உடையவனைக்கேளாமல் அவனுடையநிலத்தில் அயலவன்கரை கட்டுதல் பயிரிடுதல் முதலானவை செய்தல்கூடாது.

நிலத்துக் குடையவனில்லாதபோது - மேற்சொல்லிய காரியங்களை அரசனுடைய அனுமதிபெற்றுச்செய்க அனுமதியின்றிச் செய்தவன் தண்டிக்கப்படுவான்.

அதிலுண்டானபலன் உடையவனில்லாதபோது அரசனையடையும்.

காத்தியாயனர்.

வீடு - தோட்டம் - தடாகம் - இவைகளை - உடையவன் அனுமதியின்றிப் புதுக்கினால் - அவற்றினைப்புதுக்க வித்தவனையான் உடையவனனுமதிபெற்றுச்செய்தால் செலவழித்தபொருளையடைவன்.

பயிர்ச்செய்கை.

பிரகற்பதி.

பயிர்செய்பவன் ஆனி-ஆடிமாசத்தில் - நிலமுடையானிடத்தில் நிலத்தை யடைகொண்டு உழுதல் - விதைத்தல் - காத்தல் பயன்கொள்ளுதல் முதலான காரியங்களைச்செய்க.

பயிர்செய்வதற்காக நிலத்தை யொப்புக்கொண்டவன் பயிர்செய்யுங்காலத்திற் பாதி சென்றபின்பு உழவுமுதலானவைகளைச் செய்தால்காலங்கடத்ததற்குத்தக்கபடி யவனுக்குத்தண்டம்விதிக்கப்படும்.

நிலத்தை யொப்புக்கொண்டவன் பயிரிடுகால்முழுதும் ஒருகாரியமுஞ் செய்தலியும், செய்வித்தலியுஞ் செய்யாவிடில் அவனிலமூ

டையனுக்கு நிலப்பலனையும், அரசனுக்குந் தண்டத்தையும் கொடுக்க.

பதிர்செய்பவன் வெகுகாட் பாழ்ப்பட்டகிலத்தை யொப்புக்கொண்டு பதிர்செய்யாவிடி லவன்பக்கலிலத்துப் பலதொலைவிற் றிரிதருபவனெயத்தை நிலமுடையவனுக்குக் கொடுக்க.

நிலைகுழப்படாதகிலமானல் நிலமுடையவனுக்கு எட்டிலொரு பங்கைக் கொடுக்க.

பயிர்செய்பவனல் மூன்றிலொருபங்கு கொடுக்க.

காரதர்.

நிலமுடையவர்கள் பதிர்செய்விக்க நினைவில்லாதவர்களும், நிலத்தைத்தேடிக்கொண்டுபோனவிடத் தெரியப்படாதவர்களுமாகிய நிலமுடையவனுடைய நிலத்தை யொருவராலுந் தடுக்கப்படாமலநுபவிக்கலாம் பயிரிடுபவனே பயிரிடுபவன்.

நிலமுடைய னிருக்கும்பொழுது அவனைக்கொண்டாவது அவனுக்கு முன்னான குற்றம் அவனுக்கில்லை.

பிறன்கொண்டு நிலத்திற் பதிர்க்கரியடக்கையில் நிலத்துக்கு வேண்டுவனவும், அவன்மைந்தனேனும் வந்தால் அவன் பாழ்ப்பட்டுக் கிடந்த தன்னுடைய நிலத்தைச் செம்மைசெய்ததற்காகச் செலவழித்த பொருளைக் கொடுத்து அந்நிலத்தை யடைக.

வத்தியாயனர்.

நிலமுடையவன் பாழ்ப்பட்டுக்கிடந்த தன்னுடைய நிலத்திற் பதிர்செய்பவனொரு விதியத்தி லத்நிலத்தைக்குறித்துச் செலவு செய்த பணத்தை நிலமுடையவன் கொடாதேபோனல் உழுதிறவனத் நிலப்பலனில் எட்டிலொருபங்கை எட்டிலருடம்வரையுங் கொடுத்து அந்நிலத்தை நிலமுடையவனுக்குக் கொடுக்க.

பிறனொரு நிலமுடையவனுடைய நிலத்தை மூன்றுவருடத்திற் முழுப்பாழாம் மூன்றுவருடத்தில் முழுப்பாழாம் இரண்டுவருடத்திற் காட்டுக்கொப்பாம்.

நிலவழக்கு முற்றிற்று.

மாதாடையர்தருமம்.

மனு.

மாதர் ஆடவரிடத்தில் அழகையும், பருவத்தையும் விரும்பாமலே ஆண்தன்மையமாத்திர முக்கியமாகவெண்ணியவர்களைப் புணர்

ச்சின்றார்கள். கற்புநிலையின்மையும், நிலையாமனமும், கண்புமியற்கையாக வுடையவராகையால்.

மாதர்கணவராற் காக்கப்பட்டிருப்பினுங் கணவரை விரோதிக்கின்றார்கள்.

படுக்கை - ஆசனம் - அலங்காரம் - காமம் - கோபம் - துரோகசிந்தை யிவற்றினே மாதர்பொருட்டே மனுவானவர் கற்பித்தாராகையால் ஆடவர்கள் மாதர்கேறும னடப்பதற்காக அவர்கனே யுரிமையுடையவ ரல்லாராகச் செய்க.

ஆரீதர்.

மனவி கற்புநிலைதவறினாளானல் குலங்கெடும் குலக்கேட்டினுற்சந்ததிகெடும் சந்ததிக்கேட்டினுல் தேவர்க்கும்பிதிர்க்களுக்குங்கேடுறும், வேள்வியுந் தருமமுங் கெடும், தருங்கேட்டினுல் தனக்குக்கேறும், தனது கேட்டினு லெல்லாப்பயனுங் கெடும் ஆகையால் முயற்றிகொண்டு இல்ல வனியதமுடையவளா யிருக்கும்படி காக்க.

யாஞ்ஞவற்கியர்.

மனவியானவள் பெருமையுடைய மாமியார் முதலானவர்களாலே யிரவினும் பகலினுஞ் சற்றேனும் அயலாரோடு பேசாதிருக்கும்படி காக்கத்தக்கவள்.

தக்ஷன்.

மனவியர் - ஆடை - ஆபரணம் - அன்னமிவற்றுற் காக்கப்படினுங் கணவரை யவமதிக்கின்றார்கள் அட்டைபோலுரிஞ்சுகிறார்கள் அட்டை யிரத்தத்தைமாத்திரங் குடிக்கும், மனவியரோவெனில் தனம் - மனம் - தசை - வலி இவையெல்லாங் கொள்ளுகின்றார்கள்.

மனவியர் கணவரிடத்தி லிளமைப்பருவத்தி னுணரும், பெனவனத்தி லூடலும், மூப்பில் மதிப்பின்மையு முடையாராவர்.

மனு.

மாதர் இளமைப்பருவத்திற் பிதாவினுலும், பெனவனத்திற் கணவனுலும், மூப்பில் மைந்தனுலுங் காக்கத்தக்கவராகையா லெக்காலமு மாதருரிமை யுடையவரல்லர்.

காரதர்.

கணவனும் புதல்வனுமில்லாத மனவியை அவளுடைய கணவன்பங்காளியாகிய கணவனுடைய பிதாமுதல் சபிண்டர்கள்வரையுமுள்ளவர்கள் காக்க அவர்களில்லாதபோது அவளுடைய தாய்பக்கத்தார் காக்க அவர்களுமில்லாதபோது அரசன்காக்க.

பஞ்சுனிவர்.

கணவனானவன் மனைவியிடத்தில் விட்டுக்குவேண்டிய பாத்
சூச்சாதிபோகத்தைக் கொடுத்தபொருளைச் சேர்த்தல்-செலவிட
டுவிளக்கல் - தேவபூசை முதலியவற்றிற்குதவியான காரியஞ்செ
தல் - அதிக்கிரக்காரியம்- விட்டுப்பாத்திர முதலானவைகளைப் பா
த்த விலைமுதலிய அவியமானகாரியங்களை மனைவிக்குக் கற்பித்தி
அவளுக்கிஷ்டமானவேறிடத்திற் செல்லாதபடி செய்க.

பிரகற்பதி.

மேற்சொல்லிய காரியங்களைச் செய்தலினாலே மனைவிக்குச் சந்
தியும் சந்தியினையுமுண்டாம்.

மனு.

[illegible] க்கவேண்டும் அதுவே யவர்
சூக்கு [illegible]ப்பாகும்.

[illegible] - தட்டர்கூட்டமுறவு - கணவனைவிட்டயலிரு
க்கும் பெண்ணும் - கணவனைவிட்டுத் தீர்த்தயாத்திரை முதலானவை
[illegible] விரும்பியவிடத்திலே தூங்குதல்-அயலகத்தமர்த்
[illegible]யும் மாதர்க்கு நிந்தையான செய்கையாம்.

நிகரான சாதியுடையவளாகிக் கணவன்சொற் கடவாமை
க்கு [illegible]னாலும் இகழ்ந்திற் பெரியோர்களாலே கல்லவனென்று
சொல்லப்பட்டவளாகிப் பாத்திற் பதியுனுடைய வுலகத்தை
[illegible]

[illegible], கடவாதவன் பாவப்பிணியால் வருத்தப்பட்
டு [illegible] நிற்பாள்.

[illegible], மனைவி பிராயச்சித்தகாண்டத்தில் விதித்த
பரிகாரத்தினாலேயேற்றுக்கொள்ளத் தகாதவளானு லத்தப்பரிகாரஞ்
செய்யுமளவும் அவளைத்தள்ளுக.

காதர்.

வெளிப்பட்ட சாதியிலும் கேடுடையவளாகிய மனைவியைக்கண
வனானவன் கருதிவிடுக் காரியத்திலும், விமிருதிவிடுக்காரியத்திலும்,
அவளுக்குள்ள வதிகாரத்தைக்குறித்துத் தலைமழித்தலும்,தரைப்படுக்கை
யும் கற்பித்த இரவான [illegible]டையவளுக்குக்கொடுத்து அசுயான விட
ங்களைக் கற்பிசெய்யும்படியாய் தனதுவிட்டிலோரிடத்தி விருத்தி
செய்க.

யாஞ்ஞவற்கியர்.

பரிகாரத்தினாற் சேர்த்துக்கொள்ளத் தகாத இழிந்தோளைப் பு
ணர்தல் முதலானவைகளைத் தனது மனப்படி செய்கின்றவன் விலத்
தத்தக்கவனேயாவன்.

மனு.

உத்தமமாதருக்குஞ் செல்வத்திற்கும் வேறுபாடில்லை.

பெண்ணானவள் கலியாணமுதலான வுற்சவகாலங்களிலே க
ணவன் - கணவனுடன்பிறந்தார் - தாய் - தந்தை - மாமி - மாமன் -
மற்றைச்சுற்றத்தார் - இவர்களாலே ஆடை - அணி- உணவு இவற்று
லுபசரிக்கத்தக்கவள்.

மாதர்க ளெந்தக்குலத்திலே தன்பப்படுகின்றார்களோ அத்தக்
குலம் நசிக்கும், எத்தக்குலத்தில் மகிழ்ச்சியை யடைகின்றார்களோ
அத்தக்குல மேன்மையடையும்.

கணவனானவன் காரியத்தைக்குறித்துத் தேசாந்தரம்போகும்
பொழுது தான் போய்வருமளவும் மனைவியினுடைய சீவனத்திற்கு
வேண்டிய பொருள் கொடுத்துப் போகுக. அப்படிச்செய்யாவிடில்
அவள் மேன்மையுடையவளாயினுஞ் சீவனத்தின்பொருட்டிழிவான
காரியஞ் செய்வாளாகையால்.

கணவனை மனைவி பகைத்தால் அவளெருவருஷம்வரையும் பார்
த்து அவள் வணங்காவிடில் அவளுக்குத் தான்கொடுத்த ஆடையா
பரண முதலியவற்றை வாங்கிக்கொண்டு அவளொடுபேசுதலும், அவ
ளைப் புணர்தலுமொழிக்க சீவனத்துக்காகக்கொடுத்தது கவரத்தக்க
தன்று.

உன்மத்தன் - பித்தன் , பதிதன் - மகிழ்ச்சியில்லாதவன் - பா
வப்பிணியினன் - இப்படிப்பட்ட கணவனைப் பகைக்கின்ற மனைவிய
ர்க்கு விலக்குதலும், ஆடையாபரண முதலானவைகளைக் கவர்தலு
மில்லை.

மூத்தமனைவிவிஷயம்.

மனு.

கள்குடிப்பவள், - தியடையுடையவள் - மாறுபாடு செய்ப
வள் - தீராப்பிணியினன் - மிருக்த கொடுமையுடையவள்- பொருளை
யழிப்பவள் - மூக்கறை-பெண்ணேபெறுபவள் - மலடி- இனிமையில்
லாததைச் சொல்பவள் - கணவனைப்பகைத்தவள்- இவ்வகைமனைவி

மணவிலக்கு இரண்டாவது கலியாணஞ்செய்க. அப்படிச்செய்
பின்னவன் மூத்தமனைவிக்குச் சீவனத்துக்குப்பொருள்கொடுத்
மீளஞ் செய்துவைக்க.

நாரதர்.

மனைவிருக்கையில் காமமிகுதியினாலே மற்றொருத்தியைக்
ரணஞ்செய்துகொள்ள விரும்பினவன் இருக்கிறமனைவியைப் பொ
ரதியே மிழலித்து வேறுவிவாகஞ் செய்துகொள்க.

மனு.

[illegible] ன்மையை விரும்பினவனும், கல்லொழுக்
டையனுமிருந்த மனைவி பிணியினளாயிருந்தபோது வேறு
செய்துகொள்ளுவிரும்பினவன் அந்த மனைவியினுடைய அனுமதிபெற்
[illegible] யெப்பொழுதும் அவமதித்தல் செய்யற்க.

நாரதர்.

[illegible]யான மனைவியை யெட்டுவருஷத்திற்குமேலும், சாப்பி
[illegible]- குலஹீனையுடையவள்- பிள்ளையுடையவள்- இவர்களை
[illegible]மேலும் பெண்ணேபெறுபவளைப் பதினைந்து
[illegible]க் கிருசொல்பவளையும், கணவனுக்குமுன்னே புண
பெ பொழுதையும் நீத்து அந்தமனைவியர்க்கு மனமிழ்
[illegible] கொடாமலே கலியாணஞ்செய்துகொள்க. அ
[illegible] மூத்தமனைவிக்குப் புணர்ச்சியொன்று
[illegible] முண்டு.

மனு.

[illegible] கோபத்தினாலே வீட்டினின்று வெளிப்
[illegible] கணவன் தடுத்துக் காக்க அல்லது அவனாலே
[illegible]வர்களிடத்தி லொப்புவித்தாயினுங்காக்க.

நாரதர்.

மனைவியானவள் கணவனுடைய தெரியாமையினாலே வெளிப்
பட்டு அயலானிடத்திற் சோமையிருந்தால அவள் கற்றத்தாராலே
கணவனுடையவிடத்திற் சேர்த்தற்பாலள்.

யாஞ்ஞவல்கியர்.

இரண்டாங்கலியாணஞ் செய்துகொள்பவன் மூத்தமனைவிக்கு
அந்தக் கலியாணத்தினாற் பொருள்கொடுத்தபொருளைக் கொடுக்க.
கணவனுடையவன் சீவனமான மூத்தமனைவி தன்னுற்கொடுக்கப்
பட்ட தனமுடையவளாலும் அந்தத் தனப்பொருளைச் சேர்த்தல்

கலியாணச்செலவுப் பொருளுக்குச் சமமானபொருளை யவளுக்குக் கொடுக்க.

விலக்கத்தகாத மனைவிவிஷயம்.

பலமுனிவர்.

ஒத்திருத்தல் - கடுஞ்சொலின்மை - திறமை - கற்பு - சத்தியுடைமை - வீரரைப்பெறுதல்- கண்வனுணைப்படி டத்தல்- இன்சொலுரைத்தல் - இவைமுதலான விலக்குதற் கேதுவல்லாத கற்குணமுடைய மனைவியை விலக்குதல்கூடாது. விலக்கினு லவனுக்கந்தப்பாவத்தை நீக்கத்தக்க பரிகாரமில்லை அவனுக்குச் சோரதண்டம் விதிக்கப்படும்.

யாஞ்ஞவல்கியர்.

மேற்சொல்லிய கற்குணமுடைய மனைவியை நீக்கின கணவன் தன்னுடைய பொருளில் மூன்றிலொருபங் கவளுக்குக் கொடுக்கும் படி யாசன் செய்விக்க.

விலக்கத்தக்க மனைவிவிஷயம்.

நாரதர்.

கலியாணஞ் செய்யப்படாதவளாகிய தாழ்ந்தசாதி ஸ்திரீயைப் புருஷன் விரோதத்தினாலே விலக்கினுங் குற்றமில்லை.

ஸ்திரீகளுக்கு அங்கச்சேதமுங் கொலையுமில்லை விலக்குதலே கொலையாம்.

பலமுனிவர்.

தனது கணவனுடைய மாணுக்கன்-பிதா - பதிதன் - தாழ்ந்த வருணத்தான் - மைத்தனிவர்களைக் கூடுகின்றவளையும், பிள்ளையைக் கொன்றவளையும்,மருந்துமுதலியவற்றாற் கருவையழிக்கின்றவளையும், தனதானிபங்களை யழிக்கின்றவளையும்,அயலாரை வருந்துகின்றவளையும், திக்குசொல்கிறவளையும், கணவனுக்குப் பணிவிடைசெய்யாதவளையும், கணவர்விலக்கி அவர்களுடனே பேசுதல் புணர்தலொழிந்து அவர்களுடைய வதிகாரத்தையு மொழித்து அவர்களுக்கு வேறிடத்திலேனும், தமது வீட்டுக்கடுத்தவிடத்திலேனும், ஓரிடங்கற்பித்து ஆடையும் உணவுங் கொடுக்க.

மனு.

மனைவியுங் கணவனும் ஒருமைப்பட்டு மகிழ்ந்திருந்தால் குலமுழுதும் மகிழ்ச்சியடையும்.

விவகாரசாரசங்கிரகம்.

அம்பொரு ளின்பமென்று மூன்று பயனுமுண்டாம்.

மனைவி யொழுக்கம்.

மது.

தலைமுழுகுதல் - தலைக்கடையினிற்றல் - பல கலி
பார்த்தல் - திருஷ்டிசெய்தல் - பாணம்பண்ணுதல் - பகலிற்றூங்
காரியஞ்செய்யாமை - ஆண்மைவிஷ்டி வெளிப்போதல் - அயலா
பேசுதல் - மனைக்காரன் தனமுந்தெரிய வாடையுடுத்தல் - குரு
ஞானம்-புத்தி விவர்த்தல்லாதவர்களாகிய வயலாருடையவரத்
ஆபரணம் - கட்டித்தட்புன்னகைசெய்தல் - வேசை-தாரத்தை
மோழுக்கமெற்றற் கேதுவாம்.

அவயவருடைய் வாடையணி முதலியவற்றை சுத்திசெய்யாமற்
சோறுண் முதலியசெய்கையை மனத்தாலு நினைத்தல்கூடாது.

தேவகாரியங்களிலும் பிதிருகாரியங்களிலும் கள்குடிப்பவன் சற்
பதிவிரதையான பூர்வஸ்திரீயர்கள் விட்டைத்தொட்டால் அத்தருண
மரிப்பதே நிச்சயமாகும்.

உள்ளி - வெள்ளுள்ளி - கள் - கஞ்சா - புலால் - இவை மூ
வாணலை - புலித்தக்காவல்லை.

மனைவியிறந்தால் அவளுக்குமவள் வயிற்றுக் கருவுக்
குமாகிய மனைவியுடைய கணவனுடலிற்பாதி வீணும்.

மனைவியின் செய்கை.

மது.

வீட்டுப் பாத்திரமுதலானவைகளை விளக்குஞ்செய்தலும் கண
வன்கொடுத்தவெளிய பிறருக்குச்செலவழியாமையும் - மங்கலச்செய்
கையும் - மந்திர முதலியவற்றும் கணவனை வசப்படுத்தாமையும்-ன்
மனையாள் செய்கையாம்.

வைகறை துயிலெழல் - வீடு விளக்குஞ்செய்தல் - தயிர் - மலர் -
தளிர்முதலிய பூசைத்திரவியங்களை யமைத்தல் - ஒளபாசன முதலான
வக்கினிப்பணிவிடை செய்தல் - மாமன் மாமியாரை வந்தித்தல் - புதி

யின் பணிவிடைசெய்த லிவைமுதலியவெல்லா மங்கலவாழ்க்கையை
யுஞ் செல்வத்தையும் விரும்பிய நன்மனைவியின் செய்கையாம்.

மனைவியானவள் கணவன் துஷ்டனாயேனும், குணமில்லாதவ
னாயேனும், பிணியினனாயேனும் இருப்பினும் அவனைத் தெய்வமென்
றெண்ணிப் பணிவிடைசெய்க; அவளுக்கதுவே யெல்லாப்புண்ணியப்
பலங்களையுங் கொடுக்கும்.

மனைவிக்குத் தனது கணவனுடைய பணிவிடையின் மேலான
விரதமொன்று மில்லை; பணிவிடைக்கு வேறானவிரதத்தை மேலான
தென்றெண்ணிச் செய்பவள் கணவனுடைய வயதைக் கவர்ந்துகொ
ண்டு நாகத்தை யடைவாள்.

கணவன் தேசாந்தரம்போயிருந்தபோது அவன்கொடுத்தபொரு
ளில்லாவிடில் அவன் வருமளவும் மேற்சொல்லிய கல்லொழுக்க மு
டையாள் இழிவல்லாத கோலமிடுதல் முதலிய தகுதிச்செய்கையாற்
கற்புநிலைகெடாமல் சீவனஞ் செய்துகொண்டிருக்க.

மாதராடவர் தருமமுற்றிற்று.

தாயபாகம்.

தாரேசுவரர்.

தாயமாவது:—தந்தை வழியாகவேனும் தாய் வழியாகவேனும்
தாயினுடைய தந்தைமுதலானவர்களின் வழியாகவேனும் வந்தபொ
ருளாம்; அப்பொருளின்பிரிவே தாயபாகமாம்.

கௌதமர்.

உடைமையானது தொன்றுதொட் டுலகவிளக்கமாகக் காணப்ப
டுகின்ற பிறப்பினாலும் - தானத்தினாலும் - கிரயத்தினாலும் அடை
யப்பட்டபொருளும், காட்டிலுள்ள நீர் - புல் - விறகு - இவைகளைத்
தானே கொண்டுவருதலினாலும் - புதையலெடுத்தலினாலு மடையப்
பட்டபொருளும், இன்னும் உலகவழக்கமான யாசகம் - வெற்றி - வா
ணிகம் - உழவு - சேவித்த லிவைமுதலானவைகளா லடையப்பட்ட
பொருளுமாம்.

இப்படி யடையப்பட்டபொருளை அடைந்தவன் தனதிச்சைப்
படி தானமுதலானவைகளைச் செய்யலாம்.

இன்னானுக்குடைமை இப்படியாருமென்கின்ற நிச்சயம் அனுபி
யான உலகத்தாருடைய புத்தி யனுபவத்தாற் பண்ணப்பட்டது.

விவகாரசாரசங்கிரகம்.

யாஞ்ஞவல்கியர்.

தகப்பனானவன் தனதிச்சையினாலே மைத்தருடன் விபாகஞ் செய்துகொள்ளலாம்.

மனு.

தகப்பன் தாயுமிறந்தபின்பு மைத்தர்விபாகம் பண்ணிக்கொள்க.

பலமுனிவர்.

தகப்பனானவன் பொருட்கெடுதிக் கேதுவாகிய ஆரோ முடையவனுமாயும், சில மைத்தரிடத்திலும் - மகனிடத்திலு க்த விருப்பமுடையவனுமாயும் - தீராப்பிணியினனுமாயும் - தருமவிரோ தமாக விபாகஞ்செய்பவனுமாயும் - பொருளாசை விட்டவனுமாயும் - சன்னியாசியுமாயும்-பதிதனுமாயும் - காமவிருப்பில்லாதவனுமாயும்-தாய் பூப்பொழிந்தவளாயு மிருந்தபோது தகப்பன் விபாகஞ் செய்வதிலே விருப்பமில்லாதவனு மிருப்பினும் மைத்தர் தங்களுக்கிச்சையானவாற்றில் விபாகஞ் செய்துகொள்ளலாம்.

சங்கிரககாரர்.

தகப்பனிருக்கும்பொழுது தாயிறந்தால் அவளுடைய பொருளையும், தாயிருக்கும்பொழுது தகப்பனிறந்தால் அவனுடையபொருளையும் மைத்தர் பிரித்துக்கொள்க.

ஆதித்.

தகப்பனானவன் மேற்சொல்லிய ஆறுசினமுதலிய குற்றமில்லாதவனு மிருக்குங்காலத்தில் மைத்தனனவன் பொருளையாளுதல்-செலவழித்தல் - அடிமையானவர்கள் வேலைசெய்தபோ தவர்களைத் தண்டித்தல்-தடாகப்பிரதிஷ்டைமுதலான புண்ணியகாரியஞ்செய்தி வைத்தி லதிகாரமுடையவனல்லன்.

சங்கிதர்.

தகப்பனானவன் தன்னுடைய குடும்பத்தைக் காத்தற்குச் சக்தியில்லாதவனுமி யிருக்குங்காலத்தில் அவனுடைய மூத்தமைத்தனுக்கு அந்தக் குடும்பங்காக்கு மதிகாரமுண்டாகும்.

இளையமைத்தர்கள் மூத்தமைத்தன் சொற்படி கேட்டுநடக்க.

மூத்தவன் திறமில்லாதவனுமி யிருந்தபோது அவனுடைய சம்மதியினுமேல யிளையவர்களிலே திறமுடைய வெவனுக்காவது மல்வதிகாரமுண்டாம்.

பிரகற்பதி.

அவிபக்தராயிருக்கிற வுடன்பிறந்தார்க்குத் தேவபூசை - பிதிர் பூசை - பிராமணபூசை முதலானவைக ளொன்றுயிருக்கும்.

சங்கிரககாரர்.

விபத்தரா யிருப்பவர்க்குத் தேவபூசை முதலானகாரியம் வேறு வேறுகும்.

கௌதமர்.

ஆகையால் விபத்தருக்கும் புண்ணியமிருதியாம்.

பிதாவிருக்கையிற் பங்கிடும் வகை.

பலமுனிவர்.

பிதாவிருக்கையில் தான் விபாகம் பண்ணநினைத்தால்- மறைவரகவேனும் - சுற்றத்தார் முன்பாகவேனும் - தன்னிச்சைப்படி அதிகமாகவேனும் - குறைவாகவேனும் - சமமாகவேனும் - சாஸ்திரவிரோதப்படாமல் மைத்தர்க்குத் திரவியத்தைப் பங்கிடுக.

நாரதர்.

பிதாவிருக்கையில் அவன் சமபாகம்பண்ணநினைத்தாலப்போது புத்திரரைப்போலவே தனது பத்தினிகளுக்குஞ் சமபாகங்கொடுக்க; அத்தப்பத்தினிகள் சீதனமில்லாதவர்களாயிருந்தால் அவளுக்கு மைத்தரோடு சமபாகமும் சீதனமுடையவர்களாயிருந்தாலந்தச்சீதனப் பொருளுடனே சமபாகமு முண்டாம்.

பிரகற்பதி.

இப்படி தந்தையினால் சாஸ்திரவிரோதமில்லாமல் சமமாகவேனும் ஏற்றங்குறைவாகவேனும் பண்ணப்பட்ட விபாகத்தைக்குறித்து மைத்தர்கள் விவாதப்படில் அவர்கள் தண்டிக்கப்படுவார்கள்.

ஆதித்.

மிகவு மூப்படைத்தவனுகிய பிதாவானவன் தன்னுவிட்டப்பட்ட பொருளை விபாகஞ்செய்யும்போது தன்னிச்சைப்படி மைத்தர்க்கு அற்பமான பாகங்கொடுத்து மிகுந்த பொருளெல்லாவறையு மெடுத்துக்கொள்ளலாம்.

இப்படிப் பாகம்பண்ணிக்கொண்ட பின்பு தந்தை ஆடையுமுணவுமில்லாமல் மேலிருந்தவனுலல் அவன் மிகுந்த பொருளுடையவராயிருக்கிற மைத்தரிடத்தில் தனது குடும்பத்திற்கு வேண்டிய பொருள் வாங்கிக்கொள்க.

விவகாரசாரசங்கிரகம்.

மைத்தருன் எவரேனும் ஆடையணிவில்லாமல் மெலிவுற்றுள்ள தன் தாயானவன் முன்போல அவர்கட்குத் தன்னுடைய பொருளிற் பாகஞ்செய்து கொடுத்த.

யாஞ்ஞவற்கியர்.

மைத்தருன், பொருள்சம்பாதிக்கத்தக்க நிறமிருப்பதால் விவாகப் பொருளை விரும்பாதவனுக்குச் சிலபொருள்கொடுத்து விபாகபத்திரம் பிறப்பிக்க.

காத்தியாயனர்.

தந்தையிருக்கையில் மைத்தர்களே பாகஞ்செய்யும்பொழுது அவர்களெல்லாருஞ் சமபாகமாகப் பிரித்துக்கொள்க.

பிதாவுக்குப்பின்பு மைத்தர் பங்கிடும்வகை.

ஆதர்.

தந்தைக்குப்பின்புமைத்தர்கள்சமமாகப்பாகப்பண்ணிக்கொள்க.

யாஞ்ஞவற்கியர்.

புத்திரர் பாகம்பண்ணிக்கொள்ளும்பொழுது அவர்கள் தங்களிலே பிராமணனுக்குத் தனது சாதி மனைவியிடத்திற் பிறந்த மைத்தனுக்கு நாலுபங்கும், க்ஷத்திரியசாதி மனைவியிடத்திற்பிறந்த மைத்தனுக்கு மூன்றுபங்கும், வைசியசாதி மனைவியிடத்திற்பிறந்த மைத்தனுக்கு இரண்டுபங்கும், சூத்திரசாதி மனைவியிடத்திற்பிறந்த மைத்தனுக்கொருபங்குமாகப் பிரித்துக்கொள்க.

க்ஷத்திரியனுக்கு தனது சாதிமுதலான மூன்றுசாதி மனைவியரிடத்திற்பிறந்த மைத்தர்கள் - பாகம் - மூன்றும், இரண்டும், ஒன்றுமாகப் பிரித்துக்கொள்க.

வைசியனுக்கு தனது சாதிமுதலான இரண்டுசாதி மனைவியரிடத்திற்பிறந்த மைத்தர்கள் பாகம் இரண்டும் ஒன்றுமாகப் பிரித்துக்கொள்க.

சூத்திரனுக்கு தனது சாதி மனைவியிடத்திற்பிறந்த மைத்தனுக்குப் பாகமொன்றேயாம்.

பிராமணனுக்குப்பின்பு மைத்தர் பாகஞ் செய்துகொள்ளும்பொழுதி, தனக்கு மேலே சாதகருமமுதலான சடங்குகள் செய்விக்கப்படாதவர் தனக்கு மேலே சடங்கு செய்விக்கப்பட்டவர்கள் சாத உடனே சடங்குசெய்விக்கப்படாத கன்னிகைகளுக்கு க்ஷத்திரியனுக்குவந்த பாகப்பொருளிலே காலாவது

பங்குப்பொருளெவ்வளவோ அவ்வளவு தொகைப்பொருளையெல்லாக்கன்னிகைகளுக்குந் தனித்தனி கலியாணத்திற்காகக் கொடுக்க.

உதாரணம்.

பிராமணசாதி மனைவி புத்திரனிருவன், அவனுடன்பிறந்த கன்னிகையொருத்தி, வந்த பாகப்பொருள் ஐஞ்ஞூறுபொன் : அதில் புத்திரனுக்குப் பாகம் ஈஞூறுபொன்னும் கன்னிகைக்குப்பாகம் நூறு பொன்னுமாம்.

புத்திரனிருவர், அவருடன்பிறந்த கன்னியரைவர், வந்தபாகப்பொருள் ஆயிரத்துமுந்நூறுபொன்: அதில் புத்திரனிருவர்க்குப்பாகம் எஞூறு எஞூறுபொன்னும், கன்னியரைவருக்கும் பாகந்தனித்தனி நூறு நூறு பொன்னுமாம்.

க்ஷத்திரியசாதிமனைவி புத்திரனொருவன், அவனுடன்பிறந்த கன்னிகையொருத்தி, வந்த பாகப்பொருள் முந்நூற்றெழுபதைந்து பொன்: அதில் புத்திரனுக்குப்பாகம் முந்நூறுபொன்னும், கன்னிகைக்குப்பாகம் எழுபதைந்து பொன்னுமாம்.

வைசியசாதி மனைவி புத்திரனொருவன், அவனுடன்பிறந்த கன்னியொருத்தி, வந்த பாகப்பொருள் இருநூற்றைம்பதுபொன்: அதில் புத்திரனுக்குப்பாகம் இருநூறுபொன்னும், கன்னிகைக்குப்பாகம் ஐம்பதுபொன்னுமாம்.

சூத்திரசாதி மனைவியின் புத்திரனொருவன், அவனுடன்பிறந்த கன்னிகையொருத்தி, வந்தபாகப்பொருள் நூற்றிருபத்தைந்துபொன்: அதில் புத்திரனுக்குப் பாகம் நூறுபொன்னும், கன்னிகைக்குப் பாகம் இருபத்தைந்து பொன்னுமாம்.

பிராமணசாதி மனைவியின் புத்திரனொருவனும், க்ஷத்திரியசாதி மனைவியின் புத்திரியொருத்தியுமிருந்தபோது, இருந்தபொருளை காலே முக்காற்பாகம்பண்ணி அதிலே காலுபங்கு அந்த புத்திரனெடுத்துக் கொண்டு மிகுந்த மூக்காற்பங்கை அந்தப்புத்திரிக்குக் கொடுக்க.

பிராமணசாதி மனைவியின் புத்திரனொருவனும், வைசியசாதிமனைவியின் புத்திரியொருத்தியும் இருந்தபோது, இருந்தபொருளை காலைப்பங்கு பண்ணி அதிலே யந்தப்புத்திரன் காலுபங்கும் புத்திரி அரைப்பங்குங் கொள்க.

பிராமணசாதிமனைவி புத்திர னெருவனும், சூத்திரசாதிமனைவி யின்புத்திரியொருத்தியுமிருந்தபோது, இருந்தபொருளோ காலேகாற்பங் காக்கி அத்தப்புத்திரன் காலுபங்கும் புத்திரி காற்பங்குங்கொள்க.

புத்திரருடையதொகையும் புதல்வியருடைய தொகையும் ஏற் றங்குறைவாக விருக்குமிடத்திலும் இம்முறையே பாகமறிக.

பிராமணனுக்கு மூத்திரிய சாதிமனைவி முதலானவர்களிடத்திற் பிறந்த மைந்தர்க்கு தானத்தினுல்வந்த பூமியிலே பாகமிலை.

நான்குவருணத்தாராகிய புத்திரர்கள் பாகம்பண்ணிக்கொள்ளும் பொழுது அவருள் கலியாணம் பண்ணிக்கொள்ளப்படாத சூத்திர வருணத்தாருடைய மைந்தனுக்குப் பாகமிலை.

யாஞ்ஞவற்கியர்.

சூத்திரன் தனக்குத் தன்னுடைய வீட்டடியாளிடத்திற் பிறந்த மைந்தனுக்குத் தன்னிச்சைப்படி பாகங்கொடுக்கலாம்; அவனிறந்த பின்பு அவருடைய புத்திரர்கள் தங்களி லொருவனுக்குவந்த பாகப் பொருளிற் பாதியவனுக்குக்கொடுக்க; அத்தச்சூத்திரனுக்குபுத்திரன், மூதல் - மகளுடையமகன்வரையு முள்ளவர்க ளில்லாதபோது அத்த வீட்டடியாளுடைய மைந்தனே தன்னுடையபிதாவின் பொருளெல் லாவற்றையு மெடுத்துக்கொள்ளலாம்.

சங்கரகாரர்.

உடன்பிறந்தாருள் எத்தனேனுலேனும்-ஒர் பாகத்திற்குரி யார்களாதவர்களாயிருக்கும்பொழுது அவருள் பாகத்திற்கதிகாரியான றமுடையவெவனேனும் தாய்ப்பொருளெல்லாவற்றையுங் கொள்க.

காதர்.

உடன்பிறந்தாருள் இளமைப்பருவங் கடந்தவர்கள் திறமில்லாத ர்களாலுல் திறமுடையவெவனேனுல் தன்னுடைய சத்திக்குத்தக்க படியவர்களைக் காக்க.

பலமுனிவர்.

தந்தையிறந்தபின்பு மைந்தர்கள் தந்தைக்கு உத்தரக்கிரியைசெய் தற்குமேல் அந்தக்கருமத்திற்குச்செலவாகியிருந்ததில் குடும்பங்காத் தற்பொருட்டு உடன்பிறந்தவராலேனும், தந்தையாலேனும், தாய் னுலேனும் வாங்கப்பட்ட கடனையும், தந்தைகொடுக்கவேண்டிய கட னையுங் கொடுத்து மிருந்ததை எல்லாரும் பிரித்துக்கொள்க.

காத்தியாயனர்.

தந்தையினுலே தருமத்தின்பொருட்டு நியமிக்கப்பட்டதும், பிரி தியினுலே வாக்குதத்தம்பண்ணப்பட்டதும், கொடுக்கத்தக்க இத்தன் கடனை நீங்களே தீர்க்கவேண்டுமென் றெழுப்புவிக்கப்பட்டதுமாகிய விம் மூவகைக்கடனையும் மைந்தர்கள் பாகப்படி பிரித்துக்கொள்க; அத்தக்கடனை யப்பொழுதே கொடுக்கவேண்டுமென்னு நியமமில்லை.

நாரதர்.

உடன்பிறந்தவர்கள் தங்களுக்குள் எவனதிகமுயற்சியினுலே கு டும்பங்காத்தற்பொருட்டுக் காரியத்தைச் செய்கிறவனே அவனுக்குச் சமபாகங் கொடுத்து அவனை ஆடையுணவு வாகனமுதலானவைகளா லுபசரிக்க.

எடுகூறு.

பலமுனிவர்.

பொருள் மிகுதியாயிருந்தாலுடன்பிறந்தவர்களில் [illegible] முத லிய கிரியை செய்யத்தக்கவனுக்கு எடுகூறு கொடுக்க.

மூத்தவனுக் கேதேனும் உத்தமமான வொரு [illegible] மேன் மையின்பொருட்டுக் கொடுக்க.

எல்லாரும் வேள்விமுதலிய கிரியை செய் [illegible] ர்களானுல் எடுகூறில்லை.

பொருள் சிவனத்திற்குமாத்திர மிருக்கின்ற விஷயத்தி [illegible] கூறில்லை

வித்தையினுலுங் குணங்களினுலு [illegible] ர்கள் பிறப்பிலே தாழ்ந்தவர்களா யிருப்பினு மவர்களில் மூத்தவர்களினர்க்குப் பாக மிருபதிலொன்றும், மூத்தசாத்தினர்க்குப் பாகம் [illegible] லொன்றும், கடைத்தாத்தினர்க்குப் பாக [illegible] லொன்று [illegible] ருகக்கொடு த்து மிருந்தபொருளை யவர்களெல்லோருஞ் சமமாகப் பிரித் [illegible] க; அல்லது மூத்தவனிடத்தி [illegible] மும், இளையவனென்ற [illegible] மற்றையெல்லாரு மொவ்வொரு பாகமுமாகப் பிரித்த [illegible]

இந்த எடுகூறு கலியுகத்தி லில்லையென்று [illegible] முதலானவர்களாலே தள்ளப்பட்டது.

பின் னும்,

வசிஷ்டர்.

தந்தையிறந்தபின்பு மைந்தர் தம்முடைய வர்ச்சையாற் பங்கிட்டுக்கொள்ள முயற்சிசெய்யும்பொழுது, தந்தையின்மனைவிகள் கருப்பமுண்டாயிருந்தால் அவர்களுடைய மகப்பேறுகண்டு பாகம்பண்ணிக் கொள்க.

தந்தைக்கு உத்தரக்கிரியை செய்தவுடனே பாகம்பண்ணத்தக்கதென்னு மியம மில்லிடத்திலில்லை.

பலமுனிவர்.

தாயாரிடைய பொருளிலே புத்திரரிருக்கிற யுரிமையைப்போலத் தந்தையுடைய மனைவிகளுக் குரிமையில்லை; ஆனால், அந்தமனைவியர்கள் மைந்தர்க்கொப்பான தலைமையுடையவராகையால், புத்திரர்களே பிரிக்கத்தக்க திரவியத்திற் நங்களுடைய விரதமுதலானவை[illegible]

யாஞ்ஞவல்கியர்.

[illegible]யர்கள் தனமுடையவரானால் சமமான பாகத்தி[illegible]
[illegible]யாகவே யுதவிக்குவேண்டியதை யமைத்துக்கவர்
[illegible]
[illegible]ருவனுகவும் பொருள் விருத்தியாகவு மிருந்
[illegible]தக்கபடி உடன்பிறந்த மாதர்க்குக் கலியாண
[illegible]
பாகம்பண்ணாம விருக்கும்பொழுதும் செல்வத்துக்
தக்கபடி [illegible] செய்க.

தக்ஷர்.

[illegible]யர்.

[illegible]ப்படாத பெண்களுக்கு அவ
[illegible]யுமுள்ள சடங்குகளையும்,
மைந்தர்க்கு உபயனம்வரையுமுள்ள சடங்குகளையும், தந்தையாற்
சடங்கு செய்விக்கப்பட்டிருக்கின்ற மூத்தவன் தந்தையிறுடையபொ
ருளைத் தொடக்க; தந்தையிறுடையபொருளில்லாவிடில் தன்னு
டையபொருளைச் செய்விக்க.

சங்கன்.

உடன்பிறந்தவர்கள் பாகம்பண்ணிக்கொள்ளும்பொழுது - கலியாணத்திற்கு முன்பு கன்னிப்பருவத்திலணியத்தக்கனவாகவணிந்திருந்த வாபரணங்களையும், அவர்களுக்குத் தந்தைமுதலானவராற்கொடுக்கப்பட்ட சீதனத்தையும், தாயானவளுக் கவளுடைய தாயின்வழிமுறையாகவந்தஅலங்காரத்தையும் பெண்களே யடைவர்கள்; அவை பிரிக்கத்தக்கனவல்ல.

தாயபாகத்திற்குரிய ரல்லாதவர்கள்.

பலமுனிவர்.

தந்தையானவ னிருந்தபோதேனு மிறந்தபோதேனும் பண்ணப்படுகிற தாயபாகத்தில் நபுஞ்சகன்- குஷ்டரோகி- பயித்தியம்பிடித்தவன் - மூடன் - பிறவிக்குருடன் - பிறவிச்செவிடன் ஊமை-பதிதன் அத்தப் பதிதனுடைய மைந்தன்- தூறவி - தூறவுகிலே கெட்டவன்-கேஷ்டிகப்பிரமசாரி - வானப்பிரஸ்தனிவர்கள் முதலானவர்கள், சமணனவன் - பாசுபதனவன் - இவர்கள் முதலானவர்கள் தோஷமுற்கலவைப்புலன் கெட்ட காக்குமுதலான விந்திரியமுடையவர்கள், தந்தையைப் பகைத்தவன்- பெரும்பிழை செய்ததனாற் சுற்றத்தாராலே புறம்புபண்ணப்பட்டவன் - தீராப்பிணியினன் - வருணமுறையுஞ் சனனமுறையுங் கடந்தவனாகி மணஞ்செய்யப்பட்டவளுடைய மைந்தன்-சமானகோத்திரத்தாளைக் கலியாணஞ்செய்தவனுக் கவனிடத்திற்பிறந்தவன் - கலியாணஞ்செய்தவனுக்குப் பெற்ற பிள்ளையுடையவளிடத்திலவளுடைய மைத்தனனுலே பிறந்தவன் - இவர்களெல்லாருந் தாயபாகத்திற் குரியாலல்லாதவர்கள்.

பிரகற்பதி.

சமானவருணத்தாளிடத்திற் பிறந்தவனையும் தந்தைக் கிசபாசாதகமான காரியஞ்செய்யாத குணமுடையவனையல் அவன் பாகத்திற் குரியனல்லன்.

யாஞ்ஞவல்கியர்.

தருமத்தின் பொருட்டேனுஞ் சீவனத்தின்பொருட்டேனு மொருகாரியமுஞ்செய்யத் திறமில்லாத பிறவிக்குருடன் - மூடன் - நபுஞ்சகன் - இவர்கள்முதலான பாகத்திற்குரிய ரல்லாதவர்களே தாயபாகத்தை யடைந்திருக்கிறவர்கள் உணவாடைகொடுத் தளிருள்ளவரும் காக்க.

காத்தியாயனர்.

அவர்களில்லாதபோது அவர்களுடைய தந்தையின் பொருளைப் பெற்றுக்கொண்ட மாமன்முதலான சுற்றத்தார் அவர்களுக்காக்க.

அத்தச் சுற்றத்தாருமில்லாதபோது அத்தப்பிறவிக்குருடன் மூத்த மனைவர்களே தங்களுடைய பொருளைக்கொள்க.

போதாயனர்.

பதிதனும்- அவனுடைய மைத்தனும்- குறவகிலே கெட்டவனும்- மாமன் முதலானவர்களாலே காக்கத்தக்கவர்க ளல்லர்.

தேவலர்.

குருமுதலான குற்றத்தினாலே பங்குக்குரிய ரல்லாதவர்களாகி காத்தற்குமாத்திர மூரியவர்களாயிருந்த குருடன் முதலானவர்களுடைய குற்றமில்லாத மைத்தர்கள் தங்கள் தங்களுடைய தந்தையர் தங்குன தாயபாகத்தை யடைவர்கள்.

வஸிஷ்டர்.

பதிதனுடைய மைத்தனும்-பிரதிலோமையினுடைய மைத்தனும் தாயபாகத்தை யடையார்கள்; அவருன் பதிதனுடைய மைத்தனும் பிறவிக் குருடனும்.

மேற்சொல்லிய பங்குக்குரிய ரல்லாத பிறவிக்குருடன் முதலானவர்களுடைய மைத்தரும் அத்தக் குற்றமுடையவர்களானால் அவர்கள் தங்களுடைய தந்தையைப்போலக் காக்கத்தக்கவர்கள்.

யாஜ்ஞவல்கியர்.

பிறவிக்குருடன் முதலானவர்களுடைய புதல்விகள் கன்னடையாயினால் கன்னியானவளையும் காக்கத்தக்கவர்கள்.

பிறவிக்குருடன் முதலானவருடைய மனைவிகள் கல்லொழுக்கமும் மைத்தரின்மையு முடையவரானும் காக்கத்தக்கவர்கள்.

அத்தமனைவியர் கற்புநிலை கெட்டவராயேனும் மாறுபாடு செய்பவராயேனு மிருந்தால் அரசனிடத் தக்கவர்கள்.

பிரிக்கத்தக்கபொருள்.

காத்தியாயனர்.

விளக்கமாகக் காணப்படுகிற பாட்டனுடையதாகவும் பிதாவினுடையதாகவும் தனது தந்தைமுதலானவர்களுடையதாகவு மிருக்

கிற பொதுப்பொருளதவிகொண்டு, தன்னு லிட்டப்பட்டனவாயெ ழிலும் - பாத்திரமுதலான உபகரணமும் - பசுமுதலிய காலிகளும் - ஆபாணங்களும் - பெட்டிமுதலானவைகளும்-அடிமைமுதலானபொ ருள்களும் பிரிக்கத்தக்க பொருளாம். இவைகளை பிதாவினுலே வாங்க ப்பட்ட கடனிருந்து அந்தக்கடன் ஐயமின்றிச் சுற்றத்தாராலேயுள்ள தென்று தெரிவிக்கப்பட்டா லதைத்தீர்த்து உடன்பிறந்தார் பிரித்துக் கொள்க.

பிரித்துக்கொள்ளத்தக்க பொருளைக்குறித்து வஞ்சனையேனும் - திருட்டேனும் - பண்ணப்பட்டதாகத் தோற்றினால் அந்தச்சந்தேகத் தை சோசப்பிரமாணத்தினுலே தீர்க்க.

பிரிக்கத்தகாதபொருள்.

பலமுனிவர்.

பங்குக் குரியவனல்லாத அயலவனிடத்தில் தந்தையினுடைய பொருளதவியின்றிக் கற்றகல்வியினுலும் - சிற்பத்தினுலும் - சௌரி யத்தினுலும் - வேள்விக்காரியஞ் செய்வித்தலினுலும் - பாவஞ்செய்த வர்க்குப் பரிகாரஞ் செய்வித்தலினுலும் - வாதி யெதிர்வாதிகளுடைய சந்தேகத்தைத் தீர்த்தலினுலும் - அவையகத்து நன்கு மதித்தற்பொ ருட்டுத் தனது கல்வியறிவை விளக்குதலினுலும் - ஓட்டத்தை மூன் னிட்டு கல்வியா லயலவனை வெல்லுதலினுலும் - மாணாக்கன் செய்த குருசுசையினுலும் - உபதேசஞ்செய்தல் முதலானவைகளாலு மடை யப்பட்டபொருள் பிரிக்கத்தகாத பொருளாம்; இவைபிரிக்கத்தக்கன வல்ல.

வேதனமேற்றுக்கொண்டு வித்தை கற்பித்தலில் அந்த வேதனத் தையன்றி யடையப்பட்டதும் - பெரியோரைப்பூசிக்குமிட முதலா னவைகளில் வித்தையா லடையப்பட்டதும் - உபயனமுதலான - வைதிககாரியஞ் செய்வித்தலிலே மாணாக்கனிடத்தில் உபகாரமாக வடையப்பட்டதுங் கல்விப்பொருளாம்; இத்தப்பொருள் தாயத்தாரா லே பிரிக்கத்தக்கதன்று.

காத்தியாயனர்.

பொதுப்பொரு ளதவிகொண்டு கல்வியினுலும்-சௌரியத்தினு லும் - சிற்பத்தினுல் மடையப்பட்ட பொருள் பிரிக்கத்தக்கதாம்.

கைப்பொருளேனும் பொதுப்பொருட் செலவினும் கொடுத்தவனிடத்து அது பிரிக்கத்தக்கதாம்.

யாஞ்ஞவல்கியர்.

தொன்றுதொட்டுவந்த பூமி முதலியபொருள்க ளெல்லவருக்கும் சம்பட்டிருந்தபோது பங்குக்குரியாரு ளொருவன் அவர்களனுமதி பெற்றுச்சாதித்தா லப்பொருள் பிரிக்கத்தக்கதன்று.

சங்கன்.

அனுமதி யில்லாவிடில் சாதித்தவன் பிரயாசத்துக்குத்தக்கபடி இரண்டுபங்கையேனும் காலிலொருபங்கையேனு மடைவன்.

பலமுனிவர்.

தருதிப்படி யெப்போதும் வழக்கமாகத்தரிக்கின்ற ஆடையாபரணம் - பக்குவான்னம் - பத்திரத்திலெழுதப்பட்ட கடன்பொருள் - ஆண்டிமை பெண்ணடிமை - சதுக்கம் - அங்கணம்-மாசெஞ்சரிக்குமிடம் - வீடு - நிலம் வாகனம் - காலிகள் - புரோஹிதகாரியம் - கடவுளருளாற்பெற்றபேறு - இவையெல்லாம் பிரிக்கத்தக்கனவல்ல. ஆனால் பிரிவுசெய்யாதிருலே யொருவருக்கும் பயன்படாமையும்- பகையும் பிரிவு முண்டானபோது ஆடை முதலானவைகளை விற்றயும் - அழுக்காறுமுண்டானபோது ஆடை முதலானவைகளை- பெண்ணடிமைல் - இணைமுதலானவைகளை முறைப்படியாளுதல்- பெண்ணடிமை முதலினோரை வீடுதோறும் பிரிவின்படி விளக்குதல்முதலிய வேலை செய்வித்துக்கொள்ளுதல் இவைமுதலாக உத்திகளினுலே அவ்வப் பொருள்களை யெப்படிப் பங்கிட்டால் விரோதமின்றி யுபயோகப்படுமோ வப்படிப் பாகஞ்செய்துகொள்க.

காத்தியாயனர்.

தாயுத்தகதையும் மைத்தர்க்குக்கொடுத்த வாடையாபரணங்களவரவர்க்கேயாம்.

புத்திரர் பௌத்திரர்முதலினோர் பங்கேற்பாடு.

யாஞ்ஞவல்கியர்.

அவிபத்தர்களாயிருந் திறந்துபோனவர்களுடைய புத்திரர்கள் - பாட்டன் - மூற்பாட்டனிவர்களுடைய பொருளைப் பிரித்துக்கொள்ளும்பொழுது தங்கள் தங்களுடைய தகப்பனார்க்குள்ள பாகத்தைத் தாங்களெடுத்துச் சமமாகப் பிரித்துக்கொள்க. எப்படியெனில், உடன்பிறந்தார் மூவர்- அவருளொருவனுக் கோர்மைத்தனும் மற்றொருவ

சாரத்.

உடன்பிறந்தாருள் கல்விகற்றின்றவனுடைய குடும்பத்தைத் தானே கல்வியில்லாதவனுடைய பாகத்தையுமட

காத்தியாயனர்.

பொதுப்பொரு ளுதவிகொண்டு அப்பன் - பெற்றப்பன் - பெரியப்பன்- இவர்களாற் கற்பிக்கப்பட்ட வித்தையினுலே யடையப்பட்டபொருள் பிரிக்கத்தக்கதாம்.

வசிஷ்டர்.

பிரிக்கத்தக்க கல்விப்பொருளிலே சம்பாதித்த வித்துவானுக்கே மேலாமுண்டு.

கௌதமர்.

பிரிக்கத்தகாத கல்விப்பொருளிலே சம்பாதித்த வித்துவானுடைய தனத்தையுடையாரிய தன்னுடன் பிறந்தார்க்குப் பாகங்கொடுத்தபிறகும் பாகமெடுக்கலாம்.

காத்தியாயனர்.

தாயுத்தகதையும் ஆயுதம் இவைமுதலானவைகளை மைத்தர்க்குக்கொடுத்தபோதிலேசெய்த வலிய செயலையும் வலியிழந்தபொருட்பொறிலே பகைவனை வலியசெயலால் அடைந்த பிரிக்கத்தக்கன்று.

விஷ்ணு.

பொதுப்பொருளுதவியாற் சம்பாதித்த சௌரியப்பொருள் பிரிக்கதாம், அப்பொருளில் சம்பாதித்தவனிரண்டுபாகத்தையடைவன்.

பராசரமுனிவர்.

கன்னிகாதானத்திலே தனக்குக்கொடுக்கப்பட்டதும் மனையியினே தனக்குவந்ததும், பாட்டனுனேற்றையாலேனு மன்பினும் கொடுக்கப்பட்டதும் தாயிற வன்பொருளி லன்பினுலே கொடுக்கப்பட்டதும் - உழவுமுதலிய தன்னுழைப்பினுலே சம்பாதிக்கப்பட்டதும், - கண்டினுலே கொடுக்கப்பட்டதும், விவாகத்தில் வாழுசையிலடையப்பட்டதும் பிரிக்கத் தக்கனவல்ல; ஆனல் இவற்று ளெல்ல

தந்தை குற்றமின்றி பிழைத்திருக்கையில் அவனுற்சம்பாதிக்கப் பட்டபொருளிலே மைந்தனுக்குப் பாட்டன்பொருளி லுண்டாயிருக் கிற வரிமையைப்போல வரிமையில்லை.

ஒருவன் தன்னுடைய புத்திர னனுமதியில்லாமற் றனது தக்தை யினுடைய பொருளில் தானமுதலானலவ செய்தல்கூடாது.

பிரகற்பதி.

ஒருவன் தன்னுடைய கல்வி சௌரியமுதலானவைகளாற்சம்பா திக்தபொருளிற் புத்திரனுடைய வனுமதியில்லாமல் தானமுதல வை செய்யலாம்.

சீ த னம்.

பலமுனிவர்.

சீதனமாவது:—அங்கி யெதிர்க்கொடைப்பொருள் முதலாகப் பலவகைப்படும்.

அவற்றுள்,

காத்தியாயனர்.

அங்கி யெதிர்க்கொடைப்பொருளாவது:—கலியாண சமயத்தி லக்கினிக்கெதிரில் பெண்ணின்பொருட்டுத் தக்தைமுதலானவர்களா லே கொடுக்கப்படும் பூமிமுதலான பொருளாம்.

அழைக்கொடைப்பொருளாவது:—பிறக்தகத்தினின்று கலய னகத்திற்குப் போம்பொழுது கொடுக்கப்படும் பொருளாம்.

அன்புகொடைப்பொருளாவது:—சிவனத்தின்பொருட்டு மாமி மாமனிவர்களாற் கொடுக்கப்படுவதும், வக்தனம் பண்ணும்பொழுது தக்தை - தாய் - கணவனிவர்களாற் கொடுக்கப்படுவதும், சமையன் தம்பி - மைக்தர் - சுற்றத்தாரிவர்களாற் கொடுக்கப்படுவதுமாம்.

மூத்தமனைவி யொப்புக் கொடைப் பொருளாவது:—வேறொரு பெண்ணைக் கலியாணம்பண்ணும்போது கணவனுலே மூத்தமனைவி யொப்பின்பொருட்டு அவளுக்குக் கொடுக்கப்படுவதாம்.

மணப்பின் கொடைப்பொருளாவது:—பெண்ணுக்குக் கலியா ணஞ்செய்தபின்பு பெண்ணின்கணவன் கண்வன் குலத்தினர்-தாய், தக்தை - இவர்களாற் கொடுக்கப்படுவதாம்.

தனபாகமுள்ளவனும் மற்றொருவனுக்குமைத்தர் மூவருமிருந்தால் பாட்டனுடையதனமிருந்த பொதுப்பொருள் தொண்ணூறையும் அந்தப்பொருளை மூன்றுபங்காகவி முறையே யொருவன் முப்பதும், இரண்டு பதினைந்தும் பதினைந்தும், மூவர் பத்துமபத்துமாக வெடுத்துக் கொள்க.

காத்தியாயனர்.

பொருளைச் சம்பாதித்தவனுடைய மூலபுருடனொருவன் அவனுக் கீழ்மைத்தரிருவர் - அம்மைத்தரிருவருக்கும் புத்திரசொல்வொருவரு மிருந்தபோது, மூலபுருடனுடைய மைத்தரிலொருவனிறந்துபோனால் அவனுடைய மைத்தன் தனது பிதாவினுடைய பாகத்தையே தனது தக்தையுடன்பிறந்தவனிடத்திலேனும், அவனுடைய மைத்தரிடத்தி லேனும் ஒப்புவித்துக்கொள்க.

மூலபுருடனொருவன் அவனுக்குப் புத்திரரிருவர் அவருள் மூத் தபுத்திரனுக்குப் புத்திரனும், பௌத்திரனுக்குப் பௌத்திரனுடைய புத் திரனுமிருக்கையில் இளையபுத்திரனுக்குப் புத்திரனும், பௌத்தி ரனுமிருக்க அந்தப்பௌத்திரன் தவிர அவ்விருவரு மிறந்துபோனால் அவர்களிருவரிலே மூலபுருடன் பாகஞ்செய்ய விரும்பினால் அவன் மூத்தபுத்திரனுடைய பௌத்திரனுக்கு வந்தபாகத்திற்குச் சம மாகவே இளையபுத்திரனுடைய பௌத்திரனுக்கு வந்தபாகத்தை யவனிட மிருந்தாவது அவனுக்குப் பௌத்திரனும் தனக்குப் பௌத்திரனுடைய புத்திரனுமிருக்கையில் அவனுக்குக் கொடுக்க.

தேவர்.

மூலபுருடனுடைய பௌத்திரனுடைய பௌத்திரனுக்குப்பின் னோகரும் மற்றப்போரும், ஆகையா லத்தமூலபுருடனுடைய தனபா கமு மற்றவர்களே.

யாஜ்ஞவல்கியர்.

பாட்டனுஞ்சம்பாதித்துவிட்டதாயசங்கமப் பொருள்களை அவ னுக்குப்பின்பு பிதாவும் புத்திரனு சமமாகப்பிரித்தக்கொள்க.

பாட்டனுடைய தனமெல்லாவற்றிலே புத்திமை பிதாவுக்கும் புத் திரனுக்குஞ் சமமாயிருக்கும்.

அந்தச் சௌதாயிகம் கணவனும் கொடுக்கப்பட்டதானால் அவனிருக்கும்பொழுது அதை அவனுக்கினிப்படி செய்த.

கணவனிறந்தபின்பு முன்புஅவனுங்கொடுக்கப்பட்டதை மனைவி தன்னிச்சைப்படி யனுபோகித்தலும், தாவாமொழிந்த பொருளைக் கொடுத்தலுஞ் செய்யலாம்.

மற்றைச் சீதனப்பொருளிலே மனைவிக்குரிமையில்லை.

காத்தியாயனர்.

கனவனேனும் - தந்தையேனும் : உடன்பிறந்தாரேனும் - சீதனப்பொருளைக் கொள்ளுவதற்குங் கொடுத்தற்கு முரியவரல்லர்.

இவருள் எவனேனுஞ்சீதனப்பொருளை வலிமையாலனுபோகித்தால் அவனவளுக்கு வட்டியுட னந்தப்பொருளையும், அரசனுக்குத் தண்டத்தையுங் கொடுக்க.

அந்த மனைவியினுடைய வனுமதிபெற்று அந்தப்பொருளை யனுபோகிப்பவன் பொருளுடையவனைல் அவன் முதற்பொருளை மாத்திரம் கொடுப்பிக்கத் தக்கவன்.

பொருளில்லாதவனைனும் கொடுப்பிக்கத்தக்கவ னல்லன்.

கலியாணம்பண்ணப்பட்ட மனைவியானவள் கணவனுடைய இரவியத்திற் குடையவளாயினும் கணவனுடையவனுமதியின்றி தானமுதலானவைகளொன்றுஞ் செய்தல்கூடாது.

தேவலர்.

கணவனவன் தனக்கு ஆபத்துகேட்டகாலத்தில் மனைவியினுடைய சீதனப்பொருளை யவளுடைய சம்மதியில்லாமலு மெடுத்துக் கொள்ளலாம்.

கொடுப்பட்ட கொடி ஆபத்திலுங் கணவனுக்கு வேறுனவர்களாயிய வுடன்பிறந்தவர்கள் சீதனப்பொருளைக் கொள்ளுதற் குரியவரல்லர்.

யாஞ்ஞவற்கியர்.

வறட்காலம் - பிணி - கடன்காரர்செய்யும் வருத்தம் - துயரம் - இவைகளைப் போக்குதற்கும், தருமகாரியத்தைச்செய்தற்கும், வேறு கதியில்லாதபோது கணவன் மனைவியினுடைய சீதனப்பொருளை யெடுத்துக்கொண்டால் அதனை யவன்மீட்டுங்கொடுக்கத்தக்கவனல்லன்.

விரசர்.

கன்னியாதானமாவது:—பெண்ணைக் கொள்ளுகிறவன் பெண்ணின்தன்னதனிடத்தி லற்பப்பெண்ணுக்காகக் கொடுப்பதாம்.

காத்தியாயனர்.

மூன்றாவது:—தந்தைமுதலானவர்களால் இல்லிற்குவேண்டிய பாத்திரமுதலானவைகளின் விலைக்காகக் கொடுக்கப்படுவதாம்.

இனைக்கொடைப்பொருளாவது:—மணவாளனும் மணவாட்டியாகிய இருவரு மோரிடத்திற் கலியாணமுதலான சுபகாரியங்களிற் கூடியிருக்கும்பொழுது அவர்களுக் கெவர்களாலேனுங் கொடுக்கப்படுவதாம்.

சௌதாயிகப்பொருளாவது:—வருடமொன்றிற்றொண்டாயிரம் பணம் வரையுஞ் சத்திக்குத்தக்கபடி கொடுக்கப்படுவதாம்.

பலமுனிவர்.

சௌதாயிகமாவது:—வாக்குத்தத்தம்பண்ணின காலமுதல் கலியாணம்பண்ணுமளவும் பெண்ணின் தந்தை - தாய் - அண்ணன் - தம்பி - சூரியரிவர்கள் முதலானவர்களாற் கொடுக்கப்படுவதும், தந்தை மரணத்தினும் கணவனகத்தினும் அண்ணன் - தம்பி - தாய் தந்தை யிவர்களாற் மேற்சொல்லப்பட்ட அங்கி யெதிர்முதலான நிமித்தங்களைக்கொண்டு கொடுக்கப்படுவதும், விரதங்களிலே பார்வதிதேவி முதலானோர்க்குத்த வர்களாலேனுஞ் சமஸ்கிருதசையிற் கொடுக்கப்படுவதாம்.

இவை முதலானவைகளெல்லாஞ் சீதனமெனப்படும்.

காத்தியாயனர்.

உத்தமவருத்திவிவாகத்திற் தரிக்கத்தக்கதென்பது முதலிய நியதத்திலே பெண்ணுக்குக் கொடுக்கப்படும் -ஆபரணமுதலான வைகளும் பின்னிடமே யனுபோகித்தற்பொருட்டு பெண்ணுக்கென்று கொடுக்கப்பட்டவைகளும் சீதனப்பொருளல்ல.

சீதனஞ்செய்கை.

விரசர்.

மற்றப்படி பலவைகளுஞ் சீதனப்பொருளையும் மனைவி யெப்பொழுது மனுபோகிக்கலாம்.

கணவனுக்கு வெளியவர்களாற் கொடுக்கப்பட்ட சௌதாயிகமாகிய பூமிமுதலியபொருளை மனைவி யெப்பொழுதுந் தன்னிச்சைப்படி ஒற்றி - தானம் - விக்கிரயமுதலானவை செய்யலாம்.

மேற்கூறப்பட்ட மூவகைப்பொருளுக்கு வேறான அங்கியெதிர்க்கொடைப் பொருள்முதலான சீதனப்பொருள்களிருந்தால் தாயினுலே வாங்கப்பட்ட கடனைத்தீர்த்து மிகுந்துள்ளதைக் கன்னிப்பெண்மைத்தனில்லாதவள் - பொருளில்லாதவள் - அழகில்லாதவள் - விதவை இவர்களெல்லாருஞ் சமமாகப் பிரித்துக்கொள்க.

கௌதமர்.

இத்தப்பொருளை மேற்சொல்லிய பெண்களே யடைவார்கள்.

பலமுனிவர்.

மேற்சொல்லப்பட்ட பெண்களில்லாவிடில் அத்தப்பொருளை அத்தப்பெண்களுடைய புத்திரிகளும், அத்தப்புத்திரிகளில்லாவிடிற் புத்திரரும், அத்தப் புத்திரரில்லாவிடிற் சீதனமுடைய புத்திரரும், அவர்களில்லாவிடிற் பௌத்திரரு முறையே யடைவார்கள்.

பிராமியம் - தைவம் - ஆருஷம் - பிராசாபத்தியம் - காந்தருவமென்னும் ஐவகை விவாகங்களினுலேவத்த மனைவியர்களினிறத்தபின்பு அவர்களுடைய சீதனப்பொருளை அவர்களுக்குப் புத்திரிமுதல் பௌத்திரர்வரையுமான சந்ததியில்லாவிடில் அவர்களுடைய கணவராடைவார் தாய்மார் முதலானவர்களடையார்கள்.

காத்தியாயனர்.

ஆசுரம் - இராக்ஷதம் - பைசாசமென்னு மூவகை விவாகங்களினுலே வத்த மனைவியர்கள் மேற்சொல்லியபடி புத்திரிமுதல் பௌத்திரர்வரையுமான சந்ததியில்லாதவர்களா யிறத்தபின்பு மூன்று அத்த மனைவியர்களுக்குத் தாய் - தந்தை - பெரியப்பன் - சிற்றப்பன் - உடன்பிறந்தவன் - அம்மானிவர்கள் முதலானவர்களாலே கொடுக்கப்பட்ட சீதனப்பொருள் கொடுத்தவர்களையே யடையும் அவர்களில்லாதபோது கணவனையு மடையும்.

கௌதமர்.

கன்னியர் சுற்கமென்னும் பொருளானது கன்னியிறத்தபோனுல் அந்தக் கன்னியினுடைய அண்ணன் தம்பியரை யடையும்.

அவர்களில்லாதபோது தாயை யடையும்.

யாஞ்ஞவற்கியர்.

கலியாணப்பொருட்டுச் சுற்கமென்னும் பொருள் கொடுக்கப்பட்டுக் கலியாணமுடிவதற்கு முன்னமே கன்னிகையிறத்தபோனுல் அந்

காத்தியாயனர்.

மனைவி கணவனையடையுமுன்னமே யென்னிற் தனது சீதனப்பொருளை அன்பிறற்கொடுத்தால் அவளப்பொருளை மீட்டுக்கொள்க விரும்பிறற்கொடுக்கலாம்.

காத்தியாயனர்.

கணவனுவன் மேற்சொல்லிய வேதக்களினுலே வருத்தப்பட்டலும், பின்பு வேறொரு மனைவியையுடையவனுமாயி முன்பு தனக்குப் பொருளுதவிசெய்த மூத்தமனைவியைச் சேராமலும், அவளுக்கு உடையவுகொடாமலும், அவளைத்தள்ளினுல் அத்தமனைவி முன்பு தான் அன்பிறலே கொடுத்ததானுலும், அரசனுக்கறிவித்து வேண்டிய வத்தப்பொருளை வாங்கிக்கொள்க.

மனைவியானவள் கணவனுக்கு அபகாரமினைப்பவளும், தருதியுடையவளல்லாதவளும், பொருளை மிகவுமழிப்பவளும், விபசாரு செய்யுமிருப்புள்ளவளுமானுல் அவள் தனது சீதனப்பொருளைக் கொடுத்தற் குரியவளல்லள்.

கணவனுவன் தனது மனைவிக்குக் கொடுத்திறேனென்று சொல்லாயினுமனைப் புத்திரனேனும் பௌத்திரனேனும் கொடுக்கலாம்.

மனைவிவழிவரு பொருட்பங்கீடு.

மனு.

கலியாணத்திலும் - அன்பிறலும் கொடுக்கப்பட்ட திருவளைப் பெறுபொருளும், கணவனிருக்கையில் மனைவிபிறத்துபோனுலோ யடையும்.

பிரகற்பதி.

மேற்சொல்லிய திருவகைச் சீதனப்பொருளையும், [illegible] கன்னிப்பெண்களும் பிரித்துக்கொள்ளும்பொழுது சீதனப்பொருளுடையவளுடைய புத்திரிகளுக்கும், கலங்கலிகளான பெண்களுக்கும் அற்புடனே யெப்பொருளுங் கொடுத்தற்பின் சமமாகப் பிரித்துக்கொள்க.

மனு.

[illegible] கொள்க.

இத்தப் புத்திரருட் சமர்த்தி மனைவியிடத்திற்பிறத்த ஒளரசன் முக்கியபுத்திரன்.

கேத்திரச்ன் முதலான் பதினொருவரும் கௌணபுத்திரர்கள்.

இவருள் ஒளரசன் - தத்தன் - இவர்களல்லாத புத்திரர் பதின் மரையும் கலியுகத்திலே கௌணபுத்திரராகவும் கொள்ளுதலில்லை.

தத்தன்மாதிரன் கௌணபுத்திரனுக்குக்கொள்ளப்பட்டான் ஒள ரசபுத்திரனில்லாதபோது தத்தபுத்திரனுக்குப் பிதாவினுடைய தன் த்தைக்கொள்ளுதல் முதலானவ்வகளிலே ஒளரசனுக்குள்ள அதிகா முண்டு.

தத்தபுத்திரனனவன் தன்னைத் தான்மாக் வேற்றுக்கொண்டவ னுடைய கோத்திரத்தையுந் தனத்தையும் அடைவன். தன்னைப்பெ ற்றவனுடைய கோத்திரத்தையுந் தனத்தையும்விட்டு நீங்குவான்.

தருமவசனம்.

தனது சாதி மனைவியிடத்தில் தருமமாகச் சடங்குசெய்யப்பட் பே பிறந்த புத்திரனே ஒளரசனுவான்.

இருபிறப்பாளராகிய மூன்றுவருணத்தாரும் இத்தக்கியுத்தில் வேறுசாதி ஸ்திரீகளை விவாகஞ்செய்தல் தள்ளப்பட்டது.

வசிஷ்டர்.

தத்தபுத்திரனை யேற்றுக்கொண்ட வொருவனுக்கு ஒளரசன் பி றந்தால் அத்தத் தத்தபுத்திரன் கொண்டபிதாவினுடையபொருளிலே காலிலொருபாகத்தை யடைவன்.

புத்திரரில்லாதவன் பொருட்பங்கீடு

பிரகற்பதி.

ஒளரசபுத்திரனேனும் தத்தபுத்திரனேனு மில்லாதவனும், விப த்தனுமாயிருந்து இறந்துபோனவனுடைய பொருளை அவனுடைய தந்தைமுதலானவர்க ளிருப்பினும், அவனுடைய தரும்பத்தினி யெ ன்னுங் கற்புடையமனைவியே யடைவள் - எதனலெனில் மனைவியா னவள் கணவனுடைய சரீரத்திற் பாதியும், அவனுடையப் பாவபுண் ணியபலத்திற் பாதியுமுடையவளென்று வேதங்களிலும், தருமசாத் திரமுதலியநூல்களிலும், உலகனடையிலும் வழங்கிவருகிறபடியால்.

தந்தைதாயரென்னும் பெயர்களையுடைய பிதாவும் மாதாவும் தங்களுக்குப் பிறந்த புத்திரர்களுக்கு முதலில் அவருடைய அண்ணன்தம்பிமார்களும், அவர்களுக்குமேல் தாயும், பாலருக்குமேல் தந்தையு முறையேயடைவார்கள்.

பிரகற்பதி.

தாயுடன் தந்தையுடன் பிறந்தவருக்கேனும், தாய்மாமன்மனை வியேனும், தந்தையுடன் பிறந்தவருடைய மனையிக்கேனும், அத் தந்தை - புத்திரியுடையபுத்திரன் - அவனுடைய மைத்தனிமக னிலையாகி வைத்தவருடைய பொருளையடைவன். இப்படியே மாற்று தாய்க்குச்சந்ததியில்லாதபோது அவருடையபொருளையும் அடை வன் - மேற்சொல்லப்பட்ட தாயுடன்பிறந்தவள் முதலானவர்களெல் லாருந் தாய்க்கேற்பானவர்க ளென்று சொல்லப் பட்டார்களாதலால்.

ஒருவருடைய அத்தனைச்சாதி முதலான பலசாதிமனைவியருள் சந்ததியில்லாமற் பிறந்தவருக்கு அவருடைய தந்தைமுதலானவர்க ளாலே கொடுக்கப்பட்ட தனப்பொருள் அவருடையகணவன் சாதி மனைவியேனும், அவருடைய புதல்வி முதலானவர்களேயே யடைவர்.

அத்தத் தனப்பொருளைப் புத்திரி முதலானவர்களுக்குக் கொ டுக்குமுன்னர் கணவனுக்கே யுண்டு.

கௌணபுத்திரர்களின் வழிவரு பொருட்பங்கீடு

புத்திரரிலக்கணம்.

மது.

சம்பாதித்தவனுடைய பொருளை அவனுடைய புத்திரரே ய டைவர்.

ஒளரசன் - கேத்திரசன் - தத்தன் - திருத்திரிமன் - கூடோற்ப ன்னன் - அபவித்தன் - சுவேதன் - சகோடசன் - திதன் - பௌர்ப்ப வன் - சுவயம்தத்தன் - பராசரன் எனப் புத்திரர் பன்னிருவர்.

பதினெட்டாவர்.

கணவனிறந்தபின்பு தருமபத்தினியானவள் கணவனுடைய ஸ்ரீ னையும் பொருள் - அசையாப்பொரு ளிவை யெல்லாவற்றையும் அடைந்து தனது கணவனுக்குத் தன்னுலே பொருளுதவி தொ ண்டு செய்விற்கக் காரணம் - மாமனாகெ முதலான சொர்த்தங்க ளையும், நட்சத்திரந்தொட முதலானவைகளையுஞ் செய்யும்போது தொடர்ந்தும் பொருள்களிலுவேயும், கணவனுடைய ன்மை மேன்மை வினைக்குறித்துத் தானமாகக்கொடுக்கும் பொருள்களிலுவேயும், தன் வினைவிலுவேயும், கணவனுடைய பெரியப்பன் - சிற்றப்பன் - குரு புத்திரனுடைய புத்திரர்-கணவனுடன்பிறந்தவனுடைய மைத்துன- ன்மாமனிவர்களையும், ஸ்ருத்தர்களையும், அதிதிகளையும் போற்றல் செய்க. கணவனுடைய ன்மை மேன்மைக் கேதுவல்லாத காரியங்க ளைக்குறித்து அவன் மீளுகக்கொடுத்தல் கூடாது.

காத்தியாயனர்.

அபிபத்தருடனிருந் திறந்துபோனவனுடைய கற்புடையமனைவி னை அவனுடைய மாமன்முதலானவர்கள் தமது சுபமபத்தோடுவை- த்துக் காப்பதற் கெவ்வாறபோது அவளுடைய சீவனத்திற்கும்,நித் ய நைமித்தியமான கிரகு முதலியவற்றிற்குல் கொடுத்தபொருள்க ளை அவள் நடுவன்னாவுக் தன்னிச்சைப்படி செய்யலாம்.

காதர்.

வைப்பாட்டியானவள் நிலைமையுடையவளானுல் மேற்சொல்லி ய மாமன்முதலானவர்கள் அவளுக்கு உணவு ஆடையின்பொருட்டு வருஷமொன்றிற்கு நாற்றுத் தொண்ணூற்றிரண்டுபடிகொண்ட மரக் காலால் தானியமிருவேலும், அத்தத்தேசவழக்கமான பணம் காற்ப துங்கொடுக்க, அவளது அத்தத் தானியமும் பணமும் கிடைக்கத்தக்க பூமியையேனுங் கொடுக்க.

வைப்பாட்டிக்கும் மனையாட்டிக்குஞ் சீவனப்பொருட்டுக் கொ டுத்த பொருளை அப்பொருள்கொடுத்த மாமன்முதலானவர்களிறந்த பின்பு எவரேனுங் கவர்தல் கூடாது.

பலமுனிவர்.

மேற்சொல்லிய மனையாட்டியும் சீவனப்பாகமுடைய வைப்பா ட்டியும் - கணவனுடைய பிதாவாகிய மாமன்முதலான பெரியோர்க் குப் பணிவிடை செய்யாதவர்களாயேனும், ஒழுக்கங்கெட்டவர்களா

யேனும், காணமில்லாதவர்களாயேனும், மிகவும் போருளையுடை களாயேனும், பரபுருஷரை யிச்சிப்பவர்களாயேனு மிருந்தாலும், இவ மைப்பருவம்-கொடியவஞ்சகச்செய்கை - விபசாரசங்கை-இவைகளை யுடையவர்களா யிருந்தாலும், அவர்களுடைய சீவனப்பொருளையுஞ் சீவனப் பாகப்பொருளையுங் கவர்ந்துகொண்டு அவர்களுடைய ஜீவ னத்திற்காக அவர்களுக்கு உணவு ஆடைமாத்திரங் கொடுக்க.

யாஞ்ஞவல்கியர்.

விபத்தனும்புத்திரனில்லாதவனுமாகியிருந்து இறந்துபோனவனு டைய பொருளை முதலிலே மேற்சொல்லிய குலம் - குணம் - கற்பு நிலை இவற்றால் மேம்பட்டவளாகிய அவனுடைய தருமபத்தினியடை வாள்.

பத்தினிகள் பலரிருந்தால் அவர்களெல்லாரும் கணவனுடைய பொருளைச் சமமாகப் பிரித்துக்கொள்க.

பத்தினிகளில்லாவிடில் மேற்சொல்லிய தருமபத்தினியினுடைய புதல்வியருள் கன்னிப்பெண் ணடைவள்.

அத்தக் கன்னிப்பெண் ணில்லாவிடில் கலியாணஞ்செய்யப்பட் டவளும், வழுமையுடையவளுமாகிய பெண்ணடைவள்.

மேற்சொல்லிய விருவகை புதல்விகளு மில்லாவிடில் புத்தி னுடைய புத்திரனடைவன்.

அவனில்லாவிடில் மேற்சொல்லிய புத்திரனில்லாம விறந்துபோ னவனுடைய பிதாவடைவன்.

அவனில்லாவிடில் மாதாவடைவள்.

அவளில்லாவிடில் சகோதராடைவர்.

அவரில்லாவிடில் பின்னேதாராடைவர்.

அவரில்லாவிடில் சகோதரருடைய புத்திராடைவர்.

அவரில்லாவிடில் பின்னேதரருடைய புத்திராடைவர்.

அவரில்லாவிடில் மாதாவினுடைய தாயாகிய பாட்டியடைவள்.

அவளில்லாவிடில் தந்தையினுடைய தந்தையாகிய பாட்டன டைவன்.

அவனில்லாவிடில் பாட்டனுடைய புத்திரனடைவன்.

முதல் சாமானியப்பிராமணன்வரையுமுள்ளா ரொருவருமில்லாவிடில் அரசன் சேர்த்துக்கொள்க.

சந்ததியில்லாம விறந்துபோனவனுடைய பொருளை யடையத்தக்கவர்க ளில்லாவிடில் அர்த்தப்பொருளைக் கொள்ளுந் தகுதியினரல்லாத மனைவியருடைய சீவனத்திற்குவேண்டிய பொருள்கொடுத்து மற்றைப் பொருளை யரசன் சேர்த்துக்கொண்டு அவர்களைக்காக்க.

யாஞ்ஞவற்கியர்.

கைஷ்டிகப் பிரமசாரியினுடைய பொருளை அவனுடைய ஆசாரிய னடைவன்.

சன்னியாசியினுடைய பொருளை அவனுடைய சன்மாணாக்கனடைவன்.

வானப்பிரஸ்தனுடைய பொருளை ஏகாச்சிரமியடைவான்.

பிரிந்துகூடிய வுடன்பிறந்தவர் முதலாயினோர் விஷயம்.

பிரகற்பதி.

பாகம்பிரித்துக்கொண்டவன் இஷ்டத்தினுலே தன்னுடைய தந்தையுடனேனும், சிற்றப்பன் - பெரியப்ப னிவர்களுடனேனும், உடன்பிறந்தவர்களுடனேனுங் கூடித் தனதுபொருளை அவர்களுடைய பொருளோடு சேர்த்து அவர்களுட னொன்றுய்ச் சீவனஞ்செய்பவன் பிரிந்து கூடினவனுவான்.

அப்படிக்கூடுதலை மேற்சொல்லிய தந்தை முதலானவர்களுடன் மாத்திரஞ் செய்க.

மனு.

அப்படிக்கூடினவர்கள் மீளவு முன்போலப்பிரிந்திருக்க விரும்பினல் அவர்களெல்லாருஞ் சமமாகப் பிரித்துக்கொள்க.

அவர்கள் கூடும்பொழுது தங்களுடைய பொருளிவ்வளவென்று தொகையேற்படுத்தி யொன்றுகச் சேர்த்துவைத்திருந்தால் அத்தத் தொகைப்படி பாகம்பிரித்துக்கொள்க.

பிரகற்பதி.

ஒன்றுகச்சேர்த்துசம்பாதித்த பொருளுதவியில்லாமலே தானே வித்தை - சௌரியம் - இவைமுதலானவைகளால் எவனேனும் பொருளை

ருஞ மிருந்தால் அவற்றுள் தாவரப்பொருளை அவனுடைய சகோதரும், சங்கமப்பொருளைப் பின்னேதாரு மெடுத்துக்கொள்க. இவ்விருவகையாருந் தங்களுடன்பிறந்த மாதர்க்குப் பங்குகொடுக்க.

பிரிவுக்குமேற்பிறந்த மைந்தர்முதலாயினோர் விபாகம்.

விஷ்ணு.

மைந்தர் தந்தையொடு பாகம் பண்ணிக்கொள்ளுங் காலத்தில் தாய் கருப்பமுற்றிருப்பது தெரியப்படாதிருந்து பாகத்திற்குப் பின்பு பிறந்த புத்திரனுக்கு அவர்கள் தங்களுடையபாகத்திற்குச் சமமான பாகம் தங்களுடைய பாகப்பொருளிலெடுத்துச் சேர்த்துக்கொடுக்க. பிதாவானவன் அந்தப் புத்திரனுக்குத் தன்னுடையபாகத்திலே பாகங்கொடுக்கவேண்டுவதில்லை. அந்தப்புத்திரனுடைய பிதாவானவன் மூதலாவதுபாகம் பண்ணிக்கொள்ளும்பொழுது பிரித்து பின்புகூடினவனேயானுல் அவனுடன் கூடியிருந்த புத்திரர்கள்மாத்திரமே அந்தப் புத்திரனுக்குப் பாகங்கொடுக்க.

தந்தையானவன் மைந்தாற்கொடுக்கப்பட்ட அந்தப்புத்திரனுடைய பாகத்தை வாங்கிக்கொண்டு அவனைக்காக்க.

கௌதமர்.

மேற்சொல்லியபடி பிறந்த புத்திரனுக்கு மேற்சொல்லியபடி பாகங் கொடுப்பதற்கு முன்னமே பிதாவிறந்துபோனுல் அந்தப் பிதாவினுடைய பாகத்தையே அந்தப் புத்திரனடைவன்.

பிரகற்பதி.

சகோதார்களும் பின்னேதார்களும் பிதாவுடன் பாகம்பண்ணிக்கொண்ட பின்பு கருவுற்றுப்பிறந்த புத்திரர்கள் தங்களுடைய பிதாவின் பொருளில்மாத்திரம் பாகத்தை அடைவர்கள்.

மைந்தர்க்குந் தந்தைக்கும் விபாகமானபின்பு பிதாசம்பாதித்த பொருள் விபாகத்திற்குப் பின்பு பிறந்தவனதேயாம். முன்பு பிறந்தவர்களுக் கில்லை.

யாஞ்ஞவற்கியர்.

பிதாவிறந்தபின்பு புத்திரர் விபாகம்பண்ணிக்கொள்ளும்பொழு
து தாய்கருப்பமுற்றிருப்பது தெரியப்படாதிருந்து விபாகத்திற்கு
பின்பு பிறந்தபுத்திரனுக்கு அந்தப் புத்திரரெல்லாருந் தங்களு
பாகப்பொருளி லெடுத்துப் பாகங்கொடுக்க. அல்லது காணப்

கிடை - பாத்திரம் - வீணைமுதலானவர்கள் - எருது - பசு - ஆபரணம் - அடிமைமுதலானவைகள் இவற்றி லாதாயத்தைக்கூட்டிச் செலவைத்தள்ளி விபாகத்திற்குப் பின்பு பிறந்த பத்திரத்துக்குப்பாகத்தை யேற்படுத்துக.

அப்படிப் பண்ணப்பட்ட விபாகமானது முன்பிரித்துக்கொண்டவர்களுக் கேற்பட்டிருக்கிற பாகப்பொருளுக்கு குறைவாகிருந்தாலும் அதுவே யவனுக்குப் பாகமாம்.

விபாகம் பண்ணிக்கொண்டவர்களிலே விபாகத்திற்குப் பின்பு உடையவனெயன்றி மற்றொருவனுக்கு தனத்திலும் - கடனிலும் - தானத்திலும் - ஒற்றிவைத்தலிலும் - விற்பனையிலும் அதிகாரமில்லை. ஆனால் அவனுக்குச் சூதகம் கருப்பணம் இவற்றிலேமாத்திரம் தொடர்புண்டு.

• பிரகற்பதி.

தாயபாகத்திற்குரிய வொருவன் தன்னுடைய குலத்தினரிருக்கும் பிடத்தைவிட்டு வேறிடம்போய் தெய்வ்காலத் தூரதேசத்தை யடைந்திருந்த விபாகாலத்திற்குப் பின்புவந்தால் அவனுக்குப் பங்காளிகள் தங்களுடைய பாகப்பொருளி லெடுத்துத் தங்களி லொருவனுக்குவந்த பொருளின்பாதிக் கொப்பான பொருள் கொடுத்துக்கொடுக்க.

மேற்சொல்லியபடி. தேசாந்தரம்போயிருந்து விபாகாலத்திற்குப் பின்பு வந்தவன் பெண்டிரைவிலை அவனுக்கு அவனுடைய பாட்டன்பொருளாகிய கடன்பத்திரம் - வீடு - விளைநில முதலிய வெல்லாவற்றிலும் முன்புகாட்டிய பாதிப் பாகமுண்டு.

தேசாந்தரம்போயிருந்த தெய்வ்காலஞ் சென்று விபாகாலத்திலேனும், அதற்குப் பின்னேனும் வந்தவன் தன்னுடைய பாட்டன் முதலான வேழு தலைமுறைப் புருஷாரிலே சம்பாதிக்கப்பட்டபொருளிலே தனக்குப் பாகமுண்டென்று தானுடையவனென்பதைப் பிரமாணங்களினாலே சாதித்தால் அவனுக்குக் குலமுறையில்வந்தபொருளிலே பூமியில்மாத்திரம் தகுதியான பாகம் கொடுக்க.

மற்றத்தபொருளின்விபாகம்.

மநு.

லாப் பொருள்களையும் பிரித்துக்கொள்ளும்பொழுது லெருள் அயலவ னிடமையென்று வஞ்சனையினாலே மறைக்கப்டனவாயேனும் கவரப்பட்டனவாயேனு மிருந்து காலாந்தரத்தில் வெளிப்பட்டாலும், விபாகக்காலத்தில் தெரியாமலிருந்து பின்பு தெ

ரியப்பட்டாலும், சாஸ்திரத்துக்கு விரோதமாக விபாகம் பண்ணப்பட்டாலும் அந்தப் பொருள்களை யெல்லாரு மீளவுஞ் சமபாகமாகப் பிரித்துக்கொள்க.

காத்தியாயனர்.

விபாகத்திற்குப் பின்பு அவனவன் சம்பாதித்த பொருள் அவனவனதேயாம்.

இவ்விடத்திற் காட்டிய ஏதுக்களினாலே யிரண்டாவது விபாகம் பண்ணப்பட்டாலும் முதலாவது விபாகத்தினாலேதானே விபத்தராயினர்.

பிரிந்தோர்செய்கை.

நாரதர்.

விபாகஞ்செய்தவுடனே விபத்தரானவர்கள் தேவபூசை முதலான வைதிக கருமங்களையும், உழவு முதலான லௌகிக காரியங்களையும் அடுக்களைப்பாகமுதலானவைகளையும் ஒருவனுக்கொருவனுடைய அனுமதி வேண்டாமலே வேறுவேறுகத் தங்களிச்சைப்படி செய்யலாம்.

தங்களுடைய பாகப்பொருள்களிலே தானம்-விக்கிரயம்-போக்கிய மிவற்றைத் தங்களிச்சைப்படியே செய்யலாம்.

பிரகற்பதி.

விபாகம் பண்ணிக்கொள்ளும்பொழுது ஒருவன் தன்னுடைய சம்மதத்தினாலே குறைவான பாகத்தை வாங்கிக்கொண்டு பின்பு விவாதப்பட்டால் அரசனவனைக் காவலில் வைத்துத் தண்டித்து முன்பு அவன் சம்மதித்த பாகத்தையே அவனுக்குக் கொடுப்பிக்க.

யாஞ்ஞவல்கியர்.

விபாகஞ்செய்தது பொய்யென்றுசொல்லுமிடத்து பங்காளிகள் சுற்றத்தார்-சான்றினரிவர்களாலும் பிரிக்கப்பட்டவீடு-நிலம் விபாகபதிரமுதலான சாசனங்கள் தனித்தனி காரியஞ்செய்தல் கடன் கொடுத்தல்-வாங்கல் பிணைப்படுதல் - வாணிக முதலானகாரியஞ்செய்த விவை முதலாகக்காணப்படுகின்ற பலவகை யேதுக்களினாலும் விபாகம் பண்ணப்பட்டதென்று நிச்சயஞ்செய்க.

தாயபாக முற்றிற்று.

வன்செய்கை.

பிரகரணம்.

வன்செய்கையானது மானுடக்கொலை-திருட்டு-அயலவன் மனை வியைத் தீண்டல் இவைமுதலாகப் பலவகைப்படும். அது மீட்டும் மூதல் வன்செய்கையெனவும், மே வன்செய்கையெனவும்-உயர் வன் செய்கை யெனவும் மூன்றவகைப்படும்.

அவற்றுள்,

மூதல் வன்செய்கையாவது:—கனி-மிளகு - கலப்பை-நீர் - நி லமுதலியவற்றிற்குக் கேடு செய்தலாம்.

மே வன்செய்கையாவது:—ஆடை-அன்னம் பானம்-பசு-வீட்டு உரை-இவற்றிற்குக் கேடுசெய்தலாம்.

உயர் வன்செய்கையாவது:—விஷம்-ஆயுதம்-வைமுதலியவற்று னாற் பிறனைத் தண்டஞ்செய்தலும், உயிர்க்கொலை செய்தலுமாம்.

கொலையெனும் திருட்டெனுஞ் செய்தல னின்னனென்று தெரி யப்படாதபோது அவனை மூன்றுண்டான பகை இரத்த முடைய வனாயினும் கொலைக் குதவியான கருவி - துஷ்டர் கூட்டுறவு - இவற்றா லறிக.

தூரமான எதிரில் காணப்படாதபோது ஐயர் தோற்றப்பட்டவிடத்து அவ் வெற்சரியா லறிதலும் பிமாணஞ்செய்வித்தறிக.

கொலைசெய்தலென்ற நிச்சயமானால் அவனுக்கும், யானை - குதிரைகளைக் வர்த்தவர்களுக்கும் மூலத்தி லேற்றதலாயே தெரிந்து கொலைப்பட்டவன் அத்தனையால் கொன்றவனுக்கு எல்லாப் பொருள்களையும் கவர்தல் நண்டமாக விதிக்கப்படும்.

மனைவி பொருளைக் கொன்றபோது, அவருள் உயிர்கிலேயி லுதவிசெய்தவனுக்கும் அவளோடுஞ்சேர்ந்து கூடிய வனுக்கும், காரியத்தொடக்கஞ்செய்தவனுக்கும் - இடங்கொடுத்தவனுக்கும் அவைக்கொலையும், வழிகாட்டினவனுக்கும் - விற்றவனுக்கும்- உளவளித்தவனுக்கும்-காரியஞ் சொல்லு யவனுயிருந்த நண்டஞ்செய்யாதவனுக்கும் மறைந்தவனுக்கும்-திறமுடை யவனுக்கும் அவரவர் குற்றத்திற்குத் தக்க தண்டமும் விதிக்கப்படும்.

கொலையல்லாத வன்செய்கை செய்த குற்ற முடையவனுக்குத் தகுதியாக விதிக்கப்படுந் தண்டத்திற் றிருமடங்கு தண்டமும், இத

னைச்செய்தாற் பொருள்கொடுப்பே னென்றவனுக்கு அதற்கு ரண்டு மடங்கான தண்டமும் விதிக்கப்படும்.

தன்னைக் காத்தற்பொருட்டும் - பசுக்கவர்ச்சி கேரிட்டபோதும் மாதர்க்கும் மறையவர்க்குந் துன்பமுற்றபோதும் - சாதிசங்கரப்படும் போதும்-தடாகம் - தோட்ட மிவை முதலியவற்றிற்குக் கேடுறும் போதும்-திறமில்லாதவனை வருத்தும்போதும்-திறமுடைய அத்தண ரும்-வைசியரும் ஆயுத மெடுக்கலாம்.

அத்தணரும் வைசியரும் ஆயுத மெடுத்தல் மேற்சொல்லிய விட ங்களிலன்றி மற்றொன்றிற் கூடாது.

ஆயுதம் பிடித்துக் கொல்லவருகின்றவன்-நெருப்பையும்-விஷத் தையும் இடுகின்றவன் - பொருளைகவர்கின்றவன் நிலத்தையும்- மனை வியையுங்கவர்கின்றவன்-சாபஞ்செய்யவெடுத்த கரத்தினன்-மந்திரத் தால் மரணஞ் செய்கின்றவன்-அரசனிடத்திற் கோட்சொல்லுகின்ற வன்-இவர் முதலாயினோர் ஆத்தாயிகளாவார்கள்; இவர்களைக் கொல் பவர்க்குக் குற்றமில்லை.

மனைவி முதலானவர்களுக்கு ஆத்தாயினுலே தன்பகேரிட்ட போது அவனைக் கொல்லுக.

தன்னைக் கொல்லவந்த பசுவையேனும்-பார்ப்பானையேனுங்கொ ன்றால் அவன் அத்தப் பாவந்தீங்கும்பொருட்டுப் பரிகாரஞ் செய்க.

தன்னுயிரைக் காத்தலின் வேறுகிய புண்ணிய மொன்றுமில்லை.

யானைமுதலான மிருகங்களேனும், கழுகுமுதலான பறவைக ளேனுந் தன்னைக் கொல்லவந்தபோது அவைகள் கொல்லப்பட்டால் கொன்றவனுக்குக் குற்றமுந் தண்டமுமில்லை.

வன் திருட்டு.

மனு.

பலாற் காக்கப்படுகின்ற பொதுப்பொருளை வலிமையாற் கவர் தல் வன்திருட்டெனப்படும்.

யாஞ்ஞவல்கியர்.

சோர்பாயிருக்கிற வேளையிற் கவர்தலும், எதிரிலே கவர்ந்தில்லை யெனலுந் திருட்டெனப்படும்.

பிரகரணம்.

விளைநிலத்தினுபகாணம்:—கரை-கிழங்கு-மலர்-பூ-பழமிவற்றை வலிமையாற் கவர்ந்தவனுக்கு நூறுபணத்திற்கு மேற்படத் தண்டம் விதிக்கப்படும்.

விவகாரசாரசங்கிரகம்.

ஆடை-அன்னம்-பான மிவை முதலானவைகளையும் விட்டுகரணங்களையும் கவர்ந்தவனுக்கு இருநூறு பணத்திற்கு மேற்பட்டத் தண்டம் விதிக்கப்படும்.

பெண்-புருடன்-பொன்-வெள்ளி-செப்பு-அத்தனைனுடைய பொருள்-பட்டு-இவை முதலிய வுத்தமப்பொருளைக் கவர்ந்தவன் அத்தனைனுல் அவனுக்கு அப்பொருளின் விலைக்குச் சமமான தண்டம் விதிக்கப்படும்.

சாதர்.

வன்செய்கையோடு திருடினவன் அத்தனைனுக்கு வேறனவனுல் அவனுக் கிருமடங்கு முதலான தண்டம் விதிக்கப்படும்.

இயமன்.

திருடினவன் அத்தனைனுக் தண்டங்கொடுக்கச் சத்தியிலலாதவனுமானுல் அவன்செய்தகுற்றத்திற்குத் தக்கபடியாதமேனும் ஒன்றரைமாதமேனும் பகுமேற்பத்தல் வாசற்காத்த னிவைமுதலிய இவானகாரியஞ் செய்யும்படியேனும், அன்வங்கொடுத்து அவனைச் சிறைக்கூட்டத்தில்வைத் தலேயேனுஞ் செய்க.

தனித்திருட்டு.

மனு.

திருடர் வெளிப்பட்டதிருடரும் வெளிப்படாத திருடருமென வகையர்.

வெளிப்பட்டதிருடர் தேசத்திலிருக்கின்ற கல்லவர்கள்போலவும், தகுதியுடையவர்கள்போலவும், வேஷஞ்சொண்டு மாதாடவரை மயக்கி வஞ்சனையாற்பொருள்கவர்ச்சிசெய்பவராகிய கைகமரும்-வைத்தியனும் - தூர்த்தனும் - வலிமையாற் கைகூலிவாங்கிக்கொண்டு வஞ்சகஞ்செய்பவனும், தெய்வத்தை யிகழ்வோனும், பிறர்தெரிந்தவனும், ஒன்றுபோலொன்றைச் செய்பவனும், வேறுபாடான படி. தாசுகளையுடையவர்களும் விலைமாதருமாவார்.

யீயாசர்.

அவர்கள் செய்தகுற்றத்திற்குத் தக்கபடியாகவும், அவர்களடங்கும்படியாகவுந் தண்டம்விதிக்க.

வெளிப்படாத திருடர் கன்னக்கோல்முதலான கருவிகளோடு கூடினவரும், இரவிற் சஞ்சரிப்பவரும், வெளிப்படாத விருப்பிடத்தையுடையவரும் இன்னுனென்றறியப்படாதவரு மாவார்.

விவகாரசாரசங்கிரகம்.

அவர்கள் சோர்வித் கவர்வோன் சுவர்க்கட்டிஇடிப்பவன்-வழியிற்பறிப்பவன்-முடிப்பு அவிழ்ப்பவன் - பெண்திருடன்-ஆண்திருடன்-பசுத்திருடன் - ஆட்டுத்திருடன்- குதிரைத்திருடனென்னு மிவ்வெட்டுவகையினர் முதலான பலவகையினர்.

பிரகற்பதி.

மேற்சொல்லப்பட்ட திருடர்களை தண்டர்கூட்டுறவு - கன்னக்கோல்முதலிய வடையாளம் - திருடப்பட்டபொருள் இவை முதலியவற்றால் இராசமனுஷர் கண்டுபிடித்து திருட்டுப்பொருளை யுடையவர்களுக்குக் கொடுப்பித்துத் தண்டிக்கும்படி செய்க.

சோர்வுத்திருடனுக்கு அங்குஷ்டச் சர்ச்சனியென்னும் விரலைச் சேதித்தல் தண்டமாம்.

சுவர்க்கட்டி இடிப்பவனுக்கு இரண்டுகைகளையு மறுத்துக்கூரிய சூலத்தேற்றுதல் தண்டமாம்.

பிரகற்பதி.

வழியிற் பறிப்பவனுக்கு கழுத்திற்சுருக்கிட்டு மரத்திலே தூக்குதல் தண்டமாம்.

மனு.

முடிப்புஅவிழ்ப்பவனுக்கு முதலாவது செய்கையில் சர்ச்சனியங்குஷ்ட மென்னும் விரல்களையறுத்தலும், இரண்டாவது செய்கையில் கைகாலிரண்டையுஞ் சேதித்தலும், மூன்றுவதுசெய்கையில் வைத்தலுந் தண்டமாம்.

யாசர்.

பெண்திருடனுக்கு நெருப்பைப்போலக் காய்ச்சப்பட்ட இருப்புக்கட்டிலிற் படுக்கச்செய்து சுடுதல் தண்டமாம்.

ஆண்திருடனுக்கு காலகைகளை யறுத்து அவனை காற்சக்கினி றுத்துதல் தண்டமாம்.

பிரகற்பதி.

பசுத்திருடனுக்கு மூக்கையறுத்துக்கட்டி நிரில்அமிழ்த்துதல் தண்டமாம்.

யாசர்.

ஆட்டுத்திருடனுக்கு பாதிக்காலை யறுத்தல் தண்டமாம்.

குதிரைத்திருடனுக்கு காலையு மிடுப்பையு மறுத்து வைத்தல் தண்டமாம்.

திருடப்பட்ட ஆடுமுதலிய காலிகளின் உயர்வு - தாழ்வு - கடை
வியற்றைக்கோக்கி முறையே யுத்தம - மத்திம- பிரதமமாகிய தண்ட
னை விதிக்க.

மனு.

பொன் - வெள்ளி - இரத்தினம்- உயர்ந்த ஆடை இவைமுதலி
ன யுத்தமப்பொருள்களைத் திருடினவனுக்கு அத்தப்பொருள்களின
டைய மதிப்பு அவ்வவ்தேசத்தில் வழக்கமாக மதிக்கிற கிட்டமுதல
ாதியத்தொகையில் நூற்றுக்குமேற்படில்வதைத்தல் தண்டமாம்.

ஐம்பதிற்குமேற்படில் கையையறுத்தல் தண்டமாம்.

ஐம்பதிற்குக் கீழ்படில் திருட்டுப்பொருளின் விலைக்குப்பதினெ
ாமடங்குப் பொருள் தண்டமாக விதிக்கப்படும்.

தானியந்திருடப்பட்டு அது பத்துமிடாவுக்கு மேற்பட்டதானால்
திருடனவனுக்கு வதைத்தல் தண்டமாம்.

மூன்றுவிரல்களி னளியாலெடுக்கப்பட்ட நெல்லுக்குச் சான
மென்றபெயர்.

அது காலுகொண்டது கைத்தலமென்றும், அது காலுகொண்ட
து மூட்டியென்றும், அது காலுகொண்டது நெங்கையென்றும், அது
காலுகொண்டது கூட்டுக்கையென்றும், அது காலுகொண்டது குட
பமென்றும், அது காலுகொண்டது படியென்றும், அது காலுகொண்
டது மாக்காலென்றும், அது காலுகொண்டது துரோணியென்றும்,
அது காலுகொண்டதாரியென்றும், அது காலுகொண்டது மிடாவெ
ன்றுசொல்லப்படும்.

புத்தி - நிமை - மாயம் இம்மூன்றினாலே திருடர் பலவகைப்
படுவார்கள். அவர்களாலே திருடப்பட்டபொருளை வாங்கிக்கொண்ட
வர்களுக்குத் தகுதியான தண்டம் விதிக்கப்படும்.

பிரகற்பதி.

பலருக்குத் தீங்குசெய்பவனைக் கொல்லுதலினாலே புண்ணிய
மல்லாமற் பாவமில்லை.

வன்மைத்தையறபற்று.

பழமொழி.

அயலினாயெனினும் தன்னை விரும்பாதவனும் கற்புநிலைதவ
றாதவனும், ஒழுக்கமுடையனுமாகிய பிராமணஸ்திரீயை வலிமை

யால் அவளுடைய கற்புநிலைகெடும்படி செய்தபோது அவளழித்த கூ
ந்தலுங்குலைத்த ஆடையணியும் - கலங்கினகண்களும் - அழுந்தியகே
ாக்குமிகளும்-பற்குறிகளுமுடையவளாகியென்னையின்னனிப்படிசெய்
தானென்று பலருமறியக் கூக்குரலிட்டழுதபொழுது அவளை அரசன்
சபையிலழைப்பித்துச் சாக்ஷியையுந் திவ்வியத்தையும் விரும்பாமல்
அவளுடைய சரீரத்திற் காணப்படுகின்ற நகக்குறிமுதலான அடை
யாளங்களினாலே அவளுக்கு கேடிட்ட துன்பச்செய்கையை நிச்சயித்
து அப்படி அவளைக்கெடுத்தவன் அத்தணனனை லவனுக்காயிரம்பணத்
தண்டமாக விதிக்க.

பிரகற்பதி.

க்ஷத்திரியன் முதலானவர்கள் கற்புநிலை தவறுதவளுங் காமவி
ருப்பில்லாதவளுமாகிய சமசாதி ஸ்திரீயினிடத்தில் மேற்சொல்லிய
படி வன்செய்கையைச் செய்தால் அப்பொழுதவர்களுடைய பொரு
ள்களெல்லாவற்றையுங் கவர்ந்துகொண்டு குறியையறுத்து அவர்களை
க்கழுதையின்மேலேற்றி யூராய்சுற்றுவித் தோடும்படி செய்க.

ஸ்திரீயானவள் தாழ்ந்தசாதியாளானால் அவளைக் கெடுத்தவனு
க்கு மேற்சொல்லப்பட்ட தண்டங்களிற் பாதிதண்டம் விதிக்க.

இந்தவிஷயத்தில் ஸ்திரீயானவள் தனதுவருணத்தானிலேயானா
லும், உயர்ந்த வருணத்தாலேயானாலும், மேற்சொல்லியபடி கெடுக்க
ப்பட்டால் தள்ளத்தக்கவளல்லள். தாழ்ந்தசாதியானாலே அப்படிக்
கெடுக்கப்பட்டால் தள்ளத்தக்கவள்.

வஞ்சனைச்செய்கையினாலே மேற்சொல்லியபடி கற்பழித்தவனு
க்கு எல்லாப் பொருட்களவர்ச்சியும் அவனுடைய நெற்றியிற் யோனிமுத்
திரையிடுதலும் தண்டமாக விதிக்கப்படும்.

தாழ்ந்தசாதியாளானால் அவளைக் கெடுத்தவனுக்கு அதிற் பாதி
தண்டம் விதிக்க.

உத்தமசாதியாளானால் அவளைக் கெடுத்தவனுக்கு கொலைதண்
டம் விதிக்க.

ஸ்திரீயும் புருஷனு மொப்பினவிஷயத்தில் கற்பழித்தவன் சம
சாதியானாலும் அவனுக்கு உத்தமசாகசதண்டமும், ஸ்திரீ தாழ்ந்த
சாதியாளானால் அவனுக்கு மத்திமசாகசதண்டமும், ஸ்திரீ உயர்ந்த
சாதியாளானால் அவனுக்கு கொலைத்தண்டமும் விதிக்கப்படும்.

விவகாரசாரசங்கிரகம்.

ஸ்திரீக்கு புருஷனுக்குக்காட்டிய தண்டங்களிற் பாதியும், கொலைக்குப் பாதியான காது - மூக்கு முதலானவைகளைச் சேதித்தலுக்குத் தண்டமாக விதிக்கப்படும்.

யமன்.

பிராமணஸ்திரீயானவள் மதங்கொண்டு சூத்திரனைப் புணர்ந்தால் அரசனவளைக் கொன்று காய்க் கொயாகச் செய்க.

அவள் கூத்திரியனையேனும் வைசியனையேனும் புணர்ந்தால் அவளை கோவின் மூத்திரத்தையேனுங் கழுதையின் மூத்திரத்தையேனும் வார்த்துத் தலையை மூண்டனம்பண்ணித் துரத்தும்படி செய்க.

ஒருத்தி தானே யொருவனைத் தொடுதல் முதலியவற்று லாசையுண்டாக்கிப் புணர்ந்தால் அவளுக்கு மேற்சொல்லிய வஞ்சனைச் செய்கையில் புருஷனுக்கு விதித்த தண்டமும் அந்தப் புருஷனுக்கு அதிற் பாதிதண்டமும் விதிக்கப்படும்.

உயர்ந்தசாதி கன்னிகையினுடைய குறியை முருவல் விரல்முதலிபவற்றல் வடுப்படுத்தினால் அவனுக்கு அவ்வாலியறுத்தலும், அறுநூறு பணம் வாங்குதலும் தண்டமாகவிதிக்கப்படும்.

வன்செய்கை முற்றிற்று.

சொற்கொடுமை.

நாரதர்.

சொற்கொடுமையாவது:—தேசம் - சாதி - குலம் இவை முதலானவைகளைக் குறித்தும் வித்தை முதலானவைகளைக் குறித்தும் நிந்தித்தலாம்.

தேசநிந்தையாவது:—கலகவிருப்பினரென்றே கௌடர்களென்பதாம்.

சாதிநிந்தையாவது:—மிலேச்ச வித்தையுடையனென்றே வேதியனென்பதாம்.

குலநிந்தையாவது:—கொடிய கடையினரென்றே விசுவாமித்திரகோத்திரத்தா னென்பதாம்.

வித்தைநிந்தையாவது:—மூற்றக்கற்றவனென்றே வெம்பதாம்.

சிற்பநிந்தையாவது:—கல்ல வேலையானனென்றே வெம்பதாம்.

குருடனைக் குருடனென்றும் கண்ணுடையவனைக் கண்ணில்லானென்றும் குணமில்லாதவனேனும் அவனை நற்குணமுடையவனென்றும் உயர்ந்தசாதியானை நிந்தித்தால் அவனுக்குப் பதின்மூன்றனாப்பணந் தண்டமாக விதிக்கப்படும்.

மேற்சொல்லிய தேச முதலியவற்றைக் குறித்த நிந்தை முதல் நிந்தை நடுநிந்தை உயர்நிந்தை யென மூவகைப்படும்.

அவற்றுள்,

மூர்க்கனே நீ போ வென்பது முதலானவை முதல்நிந்தையாம்.

உன்னுடன்பிறந்தாளொடு கான் போனேன் என்பதும், தாய்-தந்தை மாமன் முதலியோரைக் குறித்து இழிவு கூறுதல் முதலானவையும் நடுநிந்தையாம்.

நின்னைத் தகாததைத் தின்றாய், குடிக்கத்தகாததைக் குடித்தாய் என்பது முதலான மகாபாதகத்தால் நிந்தித்தலும் உயிரிலே நடுங்கவைதலும் உயர்நிந்தையாம்.

அவற்றுள்,

முதல் நிந்தைக்கு நூறுபணம் வரையும், நடுநிந்தைக்கு நானூறு பணம்வரையும், உயர்நிந்தைக்கு ஆயிரம்பணம்வரையுந் தண்டமாம்.

காத்தியாயனர்.

உங்காரத் தொனியாற் பயமுறுத்தல்; காட்டத் தகாத இழிவான ஆண்குறி முதலியவற்றைக் காண்பித்து அவற்றைச் சொல்லுதல் இவைமுதலிய இழிவானசொற்களால் நிந்தித்தலுஞ் சொற்கொடுமையாம். அவ்வவற்றிற்குத் தக்கபடி தண்டம் விதிக்கப்படும்.

பிரகற்பதி.

சொற்கொடுமையில் முன்னேவைதவனின்னனென்றுதெரியப்படாதபோது இருவர்க்குந்தனித்தனி பன்னிரண்டுபணந் தண்டமாக விதிக்கப்படும்.

நாரதர்.

முன்னேவைதவனுக் கிருமடங்கு தண்டமாம்.

உசனர்.

வைதவன் ஞானதிபாமையால் வைதேன் - வாய்தவறிச் சொன் னேன் - அல்லதுரிமையற்றிச் சொன்னேன் இனி யிப்படிச்சொல்லே னென்றல் அவனுக்கதனிலே கேரிடுத் தண்டத்திற் பாதியாம்.

சோற்கொடுமை முற்றிற்று.

தண்டக்கொடுமை.

பலமுனிவர்.

சராசரப்பொருள்களி னுடல்களிலே கையாலடித்தல் - இழுத் தல் - ரகத்தாற்றள்ளுதல் - காலாலுதைத்தல் - கல் - செங்கல்லிவற் றாலெறிதல் - சுகிவி - கயிறு இவற்றாற்கட்டல்- வாளாலவெட்டல்- தடியாலடித்தல் - துணியாற்சுற்றுத லிலை முதலியவற்றால் துன்பப் படுத்தலும், ரம்பல்முதலியவற்றால் துன்பப்படுத்தலுந்தண்டக்கொ டுமையாம்.

காதர்.

அந்தக்கொடுமை முதற்கொடுமையெனவும் - நடுக்கொடுமையெ னவும் - உயர்க்கொடுமையெனவு மூவகைப்படும். அவற்றுள் முதற் கொடுமையாவது அடிப்பதற்கோங்குதல் நடுக்கொடுமையாவது அடி த்தல் உயர்கொடுமையாவது இரத்தங்காண வடித்தல்.

பிரகற்பதி.

சாம்பல் - சேறு - புழுதி யிவற்றை யுடலின்மே லெறிந்தவனுக் கு ஒருமாடத் தண்டமாக விதிக்கப்படும்.

கோழை - மலம் - மூத்திரம் - எச்சி லிவைமுதலிபவற்றை யுட லின்மேலெறிதல் முதலானவை செய்தவனுக்கு இரண்டுமாடத் தண் டமாக விதிக்கப்படும்.

வாந்தி - சுக்கிலம் - இரத்தம் - கொழுப்பு - தசையிவற்றைக்கா லிலெறிந்தால் காற்பதுபணமும்,மற்றை யுடலிலெறிந்தா லறுபதுபண முஞ் சொத்திலெறிந்தா லெண்பதுபணமுந் தண்டமாக விதிக்கப்படும்.

யாஞ்ஞவற்கியர்.

கை - கால் - மயிர் - ஆடையிவற்றைப்பற்றி யிழுத்தல் ஆடை யைக் கையிற்சுற்றிக்கொள்ளுதல் இவற்றைச்செய்தவனுக்கு நூறுப ணந் தண்டமாக விதிக்கப்படும்.

பலமுனிவர்.

விறகுமுதலியவற்றால் இறத்தங்காணுதபடி யடித்தவனுக்கு மூ ப்பதுபணந் தண்டமாக விதிக்கப்படும்.

மனு.

இரத்தங்காண அடித்தவனுக்கும் - தோலறும்படி யடித்தவனுக் கும் நூறுபணந் தண்டமாக விதிக்கப்படும்.

தசைதெறிக்க வடித்தவனுக்கு ஆறுநிஷ்கந் தண்டமாகவிதிக்கப் படும்.

எலும்புமுறிய அடித்தவனுக்கு தேசத்தினின் றோட்டுதல் தண் டமாக விதிக்கப்படும்.

காத்தியாயனர்.

கை - கால் - கண் - காது - உதடு - நாக்கு - குறி யிவையறும் படி யடித்தவனுக்கு மத்திமசாகசதண்டமும், துண்டுபடும்படி யடித் தவனுக்கு உத்தமசாகச தண்டமும் விதிக்கப்படும்.

புண்பட அடித்தவன் அந்தப் புண்ணை யாற்றுதற்கும் பத்தியத் திற்குஞ் செலவழிந்த பொருளையும் விதித்த தண்டத்தையுங் கொடு க்க.

யாஞ்ஞவற்கியர்.

உலக்கை முதலானவைகளால் வீட்டுச் சுவரை யதிர அடித்தவ னுக்கு ஐந்துபணந் தண்டமாம்.

சுவரை விரிய அடித்தவனுக்குப் பத்துப்பணமும், அது இன்ன டாகப்பிளக்க அழித்தவனுக்கு இருபதுபணமும் தண்டமாக விதிக்க ப்படும்.

சுவர் விழும்படி செய்தவன் அந்தச் சுவரை வைத்தற்குச் செல் லுஞ் செலவை வீடுடையவனுக்கும் தகுதியான தண்டத்தை யரச னுக்குங் கொடுக்க.

வீட்டிலே கல்லையு முள்ளையும் போட்டவனுக்குப் பதினறுபண மும், விஷத்தையும் பாம்பையும் போட்டவனுக்கு மத்திம சாகசமும் தண்டமாக விதிக்கப்படும்.

பலமுனிவர்.

யானை-குதிரை-பசு இவைமுதலான பெரிய மிருகங்களின் கால் முதலான பெரிய உறுப்புக ளறும்படி யடித்தாலும், அவ்வுறுப்புகளி லிரத்தம் பெருக அடித்தாலும் மத்திமசாகசதண்டம் விதிக்கப்படும்.

விவகாரசாரசங்கிரகம்.

வெட்டப்பட்டால் மீட்டுத் தளிர்க்கத்தக்க மரங்களின் இனங்களை வெட்டினவனுக்கு இருபது பணமும், அடிமரத்தை வெட்டினவனுக்கு காற்பதுபணமும் வேறவெட்டினவனுக்கு யெண்பதுபணமும் தண்டமாக விதிக்கப்படும்.

வெட்டப்பட்டால் மீட்டுத் தளிர்க்கத்தகாததும் சிவனத்திற் சேர்வானதுமாயிருக்கின்ற மரமுதலானவைகளின் இலையை வெட்டினவனுக்கு காற்பதுபணமும்; அடிமரத்தை வெட்டினவனுக்கு எண்பதுபணமும் வேற வெட்டினவனுக்கு நூற்றுயிருபதுபணமும் தண்டமாக விதிக்கப்படும்.

தண்டக்கொடுமை முற்றிற்று.

சூது.

மனு.

சூதாடுதலிலே மிகுந்த திருட்டுக்குற்ற முண்டாகும். ஆகையால் அரசன் அந்தச் சூதாடுதல் தனது தேசத்தில் நடவாதபடிச் செய்க.

பிரகற்பதி.

சில முனிவர் சூதாடுதலும் உண்டென்று கொண்டனர்.

மனு.

மேற்சொல்லிய சூது - கருவிச்சூதெனவும், உயிர்ச்சூதெனவும் இருவகைப்படும்.

அவற்றுள்.

கருவிச்சூது - கவறு சதுரங்கமுதலியவற்றாலாடுதலாம்.

உயிர்ச்சூது - ஆடு - கோழி - கடா - மல்லன் முதலியவற்றாற் போர்பொருத்தலாம்.

பிரகற்பதி.

சூதச்சாலையதிகாரி இறைக்கூறுகொடுக்க வுடன்பட்டு அரசனுமதிபெற்று சூதாடுகருவிமுதலானவைகளை அமைத்துவைப்பதற்காக வொருசாலையை நியமிக்க.

சூதாடவிரும்பினோர் இறைகூறுகொடுத்துத் தாங்கள்வேண்டிய விஷயங்களிற் சூதாடலாம்.

காத்தியாயனர்.

அந்தச்சாலையில்வந்து பந்தயம்வைத்துச் சூதாடுகிறவர்களிலே சூதில் வென்றவனிடத்திலே நூற்றுக்கைந்தும், தோற்றவனிடத்திலே நூற்றுக்குப் பத்தும், சூதச்சாலையதிகாரி வாங்கிக்கொள்க.

அவ்வதிகாரி உடன்படிக்கைசெய்தபடி அரசனுக்குப் பொருளாக் கொடுக்க.

அரசன் அவ்வதிகாரிக்கு சூதாடுகிறவர்களாலே தன்பமடையாதபடி செய்க.

சூதாடுகிறவர்களிலே தோற்றவன் பணங்கொடாதபோது அரசனந்தப்பணத்தை யவன் கொடுக்கும்படி செய்க.

காரதர்.

விளையாட்டினிமித்தஞ் சூதாடினால் அரசனுக்குப் பகுதி கட்டவேண்டியதில்லை.

காத்தியாயனர்.

சூதச்சாலை யதிகாரியானவன் சூதிலேதோற்றவன் பந்தயப்பணங்கொடுப்பதற்காக அவனுடைய திறத்துக்குத்தக்கபடி ஒன்றாமாதத்திற்குட்பட வொரு காலவளவையேற்படுத்துக.

சூதிலே விவாதப்பட்டால் சூதச்சாலையதிகாரி அவரவருடைய ஏற்பாட்டின்படி வழக்குதீர்மானஞ் செய்க.

ஏற்படுத்திய காலவளவிற் பணங்கொடாவிடில் நூற்றுக்குப் பத்தவட்டி கூட்டிக்கொடுக்கும்படி செய்க.

வஞ்சனையான கவறுமுதலியவற்றாலும், மதிமயக்கஞ் செய்தலினாலும், சூதிலே புரட்டுப்பண்ணினவனைத் தலையை மழித்துச் சூதாகெருவியை மாலையாக அவன்கழுத்திலிட்டுத் தேசத்தினின்று துரத்தும்படி செய்க.

சூது முற்றிற்று.

பொதுவான சிலதண்டங்கள்.

மனு.

தண்டமானது உடல்தண்டம் பொருள்தண்டமென விருவகைப்படும்.

அவற்றுள்,

உடல்தண்டம் அடித்தல்முதல் கொலைவரையுமாம்.

விவகாரசாரசங்கிரகம்.

பொருள்தண்டம் பலகறைமுதல் எல்லாப்பொருள் அபகரித்தல்லனையுமாம்.

உடம்புதண்டத்துக்குரிய தானங்கள் கண் - காது - மூக்கு-கை - வயிறு - குறி - கால்முதலானவையாம். இந்தத் தானங்களில் எதனிலே செய்யத்தகாதகாரியஞ் செய்யப்பட்டதோ அந்தக்குற்றத்திற்குத் தக்கபடி காதையறுத்தல் முதலானவை சிட்சையாக விதிக்கப்படும்.

உயிர் வன்செய்கை-மெல்செய்கை - மூதல் வன்செய்கை யென்று மூவகைச்செய்கைகளிலே கான்குவருணத்தார்க்கும் மேற்கூறிய விருவகைத்தண்டங்களுள் அவரவர்செய்தகுற்றத்திற்குத் தக்கபடி திக்காரிட்சையும் - எல்லாப் பொருள்களவாங்கியும்-கட்டுதல்-அடித்தல் - நெற்சாகியிற் போடல் - வேலை செய்வித்தல் - நெற்றியிற் குறியிடுதலிவைமுதலாகிராசநீதியிற்காட்டிய தண்டங்களுமவிதிக்க.

மூலம் உத்தமனை அத்தனைக்குக் கொலைவிதிக்கும்படி சேர்ட்டவியத்தில் அவனுக்கு நிலமழித்தல் - கண்ணிமறைத்துக் கட்டல் - தேசத்தினின்று தூரத்திவிடுதல் - நெற்றியிற்குறியிடுதல் - கழுதையின்மே லேற்றிப்போருத விவைமுதலானவைகளையே சிட்சை யாக விதிக்க. வதையில்லை.

அரசனுவன் காலம் - தேசம் - குற்றம் - சாதி - வலி-வயது - பலம் - பொருள் இவைகளையாயத்து தண்டகனவிதிக்க. அஃதெப்படியென்னில் தரித்தாளுக்கு ஒருபணம் தண்டமாகவும் தக்கவிஷயத்தில் மிகுந்த செல்வமுடையவனுக்கு ஆயிரம்பணம் தண்டமாகவும்விதிக்க. சூத்திரனுக்கு ஒருபணம் தண்டமாகவிதிக்கும் விஷயத்தில் வைசியனுக்கு ரெண்டுபணமும், சூத்திரியனுக்கு நாலுபணமும், அத்தனைக்கு எட்டுபணமும் மிரட்டிப்பாக விதிக்க.

தண்டப்பொருளின் தொகையும் பெயரும்.

இருநூற்றைம்பது அல்லது இருநூற்றொழுபதுபணத் தொகைக்கு } பிரதம சாகசமென்று பெயர்.

ஐந்நூறு அல்லது ஐந்நூற்றுஞ்சொற்பதுபணத் தொகைக்கு } மத்திம சாகசமென்று பெயர்.

ஆயிரம் அல்லது ஆயிரத்தெண்பதுபணத் தொகைக்கு } உத்தம சாகசமென்று பெயர்.

மனு.

பொய்ப்பத்திரம் உண்டாக்குதல் அரசன்-அமைச்சன்-கண்பினனிவரையும் - அரண் - கோசம் - தண்டம் - இராச்சியம் - இவற்றையுமிகழ்தல் - ஸ்திரீயைச் சிறுவனைக்கொல்லுதல் - பிரமவதைமுதலிய மகாபாதகம் - பகைவரிடத்திற் சேவித்தலிவற்றை அத்தனனல்லாத வன் அறிந்துசெய்தால் அவன் கொல்லத்தக்கவனுவான். அறியாமையாற் செய்தவனுக்கு எல்லாப் பொருளையு மிழத்தல் சிட்சையாக விதிக்கப்படும்.

பிரகற்பதி.

அறிந்துசெய்தவன் அத்தனனை லவனுக்கு தேசத்தினின்று நீக்குதல் - காரியத்திற்குத்தக்க அடையாளஞ்செய்தல்-தலைமழித்தல் - பந்திபோசனம்-பேசுத விவற்றைநீக்குதல் - இடமில்லாமற்செய்தல் - வைதிகருமத்தினீக்குத விவைமுதலானவை செய்வித்து தேசமெங்குஞ் சுற்றும்படி தூரத்தல் சிட்சையாம்.

அறியாமையாற்செய்தவன் பரிகாரஞ்செய்துகொண்டால் அவனுக்கு மத்திமசாகசமேனும், பொருளொடு தேசத்தினின்று நீக்குதலேனுந் தண்டமாக விதிக்கப்படும்.

வாள் தடிமுதலிய ஆயுதம்பிடித்தவர்களாகி உங்காரம்பண்ணிக்கொண்டு மனிதரில்லாவிடத்திலே துன்பஞ்செய்பவர்கள் கொல்லத்தக்கவர்கள்.

மந்திரத்தினாலும்- மயக்கத்தினாலும்- மயக்கம் வசிகாமிவற்றைச்செய்பவனுக்கு தேசத்தினின்று தூரத்தல் தண்டமாம்.

யாஞ்ஞவற்கியர்.

வாணிகஞ்செய்பவ ரொன்றுய்ச்சேர்ந்து தேசாந்தரச் சரக்கைகளை குறைத்தவிலையிற்கொண்டு மிகவு மதிகவிலையில்விற்றால் அவர்களுக்கு உத்தமசாகச தண்டம் விதிக்கப்படும்.

ஐந்நூரானேனும் - ஐம்பதாயிரமேனும் - ஐந்மாதமேனுஞ்சென்றபின்பு அரசன் வாணிகஞ்செய்பவனை யழைப்பித்து அவர்கட்கெதிரே சரக்குகளின் விலையி னேற்பாடுசெய்க.

தனதுதேசத்துச் சரக்கைக்கொண்டு விற்கிறதில் நூற்றுக்கைக்கும் அன்னியதேசத்துச் சரக்கைக்கொண்டு விற்கிறதில் நூற்றுக்குப்பத்து இலாபமுண்டாகும்படி அரசன் விலையினேற்பாடு செய்க.

விவகாரசாராசங்கிரகம்.

மது.

வண்ணனொவன் தன்னிடத்தில் வெளுக்கக்கொடுத்த ஆடையையுமுருக்கம்பலகையிலே துவைத்துலர்த்தி மடித்துக்கொடுக்க.

அப்படி வெளுக்கப்பட்ட ஆடைகளை வண்ணுறுத்தினால் அவனுக்கு மூன்றுபணத்தண்டமாக விதிக்கப்படும்.

அத்தவண்ணன் அவ்வாடைகளை விற்றாலும் - ஈடாகவைத்தாலும் - வாடகைக்குக்கொடுத்தாலும் - அவனுக்குப் பத்துபணத் தண்டமாக விதிக்கப்படும்.

காரதர்.

வண்ணன் - ஒருதரம்வெளுக்கப்பட்ட ஆடையைக் கெடுத்தால் அவனதின்விலையி லெட்டிலொருபங்கு தண்டமாகவும், இரண்டுதரம்வெளுக்கப்பட்ட ஆடையைக்கெடுத்தா லதின்விலையி னாலிலொருபங்கு தண்டமாகவும் - மூன்றுதரம் வெளுக்கப்பட்ட ஆடையைக்கெடுத்தா லதின்விலையின் மூன்றிலொருபங்கு தண்டமாகவும், நாலுதரம் வெளுக்கப்பட்ட ஆடையைக்கெடுத்தா லதின்விலையிற் பாதி தண்டமாகவும் அதற்குமேற்பட்டதற்குத் தகுதியாகவும் கொடுக்க.

யாஞ்ஞவல்கியர்.

ஒருவன் அரசனுடைய ஆக்ஞையின்றி குற்றமில்லாதவனைக் கட்டினாலும், குற்றமுடையவனுக்கட்டப்பட்டிருந்தவனை விட்டாலும், அவனுக்கு உத்தமசாகசதண்டம் விதிக்கப்படும்.

ஒருவன் பிறனுடைய ஆக்ஞையை விலப்படுத்துதற்காக கல்லசரக்கோ டுத்தச் சரக்கைக்கவர்ந்தாலும் அவனுக்குப் பதினாறுபணத்தண்டமாக விதிக்கப்படும்.

ஒருவன் தாழ்ந்தவிலையுடைய மண்முதலானவைகளில் வாசமேற்றி கர்ப்பொடிபோலவும், பூவேர்த்தோலில் வண்ணமேற்றிப் புனிதோல்போலவும், படிக்கல்லில் வண்ணமேற்றி மாணிக்கம்போலவும், பருத்திநூலைப் பட்டுநூற்போலவும், இரும்பை வெள்ளிபோலவும், வில்வக்கட்டை முதலானவைகளைச் சந்தனக்கட்டைபோலவும், பருத்திநூலாடையைப் பட்டுநூலாடைபோலவும், இன்னுமிவைபோன்ற பொருள்களை வண்ணம் வாசமேற்றுதலினாலும், பூர்வசெய்கைகளினாலும், உயர்ந்த சரக்குகளோப்போலவுஞ் செய்துவிற்றால் அவனுக்கு அத்தச்சரக்கின் விலைப்பொருளுக்கு எண்மடங்குபொருள்தண்டமாக விதிக்கப்படும்.

ஒருவன் முத்துப்பட்டியையும் - கஸ்தூரிப்பட்டியையும்-காண்பித்து அவைகளை விற்கும்பொழுதேனும், ஈடாகவைக்கும் பொழுதேனும், கைவிரைவினுலே சரக்கை மாறுபடுத்தினாலும், பெயர்க்கத்தகாத பெட்டியின்முத்திரையைப் பெயர்த்தாலும், அவனுக்கு அத்தப்பெட்டியிலிருக்கின்றசரக்கு ஒருபணத்திற்குக் குறைத்தவிலையுடையதானாலதற்கைம்பது பணமும், ஒருபணவிலையுடையதானால் அவனுக்கு நூறுபணமும், இரண்டுபணவிலையுடையதானாலதற்கிருநூறு பணமும் தண்டமாகவிதிக்கப்படும். இப்படியே ஒன்றுக்கு நூறாக மூன்றுமுதலான தொகைகளிலு மறிந்துகொள்க.

பிணத்தின்மேலே சாத்த பூமாலை வஸ்திர மிவைமுதலானவைகளை விற்றவனுக்கும், அரசனுடைய சிங்காசனம் - யானை - குதிரையிவைகளிலேறினவனுக்கும், பிதா - குருமுதலானவர்களை யடித்தவனுக்கும் உத்தமசாகசதண்டம் விதிக்கப்படும்.

குருமுதலானவனல்லாதவன் அரசனுக்குத் தீங்குகளைச்சொன்னாலும், ஒருவன் கோபத்தினுலே மற்றொருவனுடைய கண்ணைப்பிடுங்கினாலும், குபவன்முதலானவன் உணவுக்காகப்பிராமணனைப்போல வுபவீதமுதலான அடையாளங்களைக் காட்டினாலும், அவர்களுக்குத் தனித்தனி யெண்ணூறுபணந் தண்டமாக விதிக்கப்படும்.

ஒருவன் தந்தைக்கும் மைத்தனுக்குமுண்டான விவகாரத்தையேனும், கணவனுக்கும் மனைவிக்குமுண்டான விவகாரத்தையேனும் பெருக்கினாலும், அதிலேஉடன்பட்டவனையும் அவனுக்கு இருபத்து நாலுபணந் தண்டமாக விதிக்கப்படும்.

வாக்குத்தத்தம்பண்ணின பொருளைக் கொடாதவனுக்கும், முத்திரையிட்ட வீடுமுதலானவைகளைத் திறந்தவனுக்கும், தனது குலத்தினர்முதலான வுரியவர்களுக்கு அபகாரஞ்செய்கிறவனுக்கும், தன்னுடன் பிறந்தவர்களுடைய மனைவியை யடித்தவனுக்கும் ஐம்பது பணத் தண்டமாக விதிக்கப்படும்.

திருடர் முதலானவர்களுக்கு அஞ்சிக்கூக்குரலிட்டழைத்தபோது வாராதவனுக்கும், ஏதுவில்லாமற் கூக்குரலிட்டவனுக்கும், பிராமணன்முதலானவர்களைத் தீண்டினசண்டாளனுக்கும், பெருங்காய முதலான மருந்துகளையிட்டு மரங்களின் மலர்களும் கனிகளும் உதிருபடிசெய்தவனுக்கும், வேலைக்காரியினுடைய கருவையழித்தவனுக்கு

ம், கல்லவர்களாயெ பிதாமுதலானவர்களைவிட்டுப் பிரித்த புத்திரன் முதலானவர்களுக்கும் தனித்தனி நூறபணம் தண்டமாக விதிக்கப் படும்.

தலாக்கோல் - படி இவைகளிலே தேசவழக்கத்திற்கு மாறுபா டாக ஏற்றங்குறைவை யுண்டாக்கினவனுக்கும், முத்திரைபதிக்கப்பட் ட பணமுதலான சாஸனங்களிலே தாம்பிரத்தையிடுதல் முதலான வைகளைச் செய்தவனுக்கும் உத்தமசாகசதண்டம் விதிக்கப்படும்.

வாகடசாஸ்திரம் தெரியாதவன் பசுமுதலானவைகளுக்குச் சிகி ற்சைபண்ணினால் அவனுக்குப் பூருவசாகசதண்டமும், மனிதருக்குச் சிகிற்சைபண்ணினால் மத்திமசாகசதண்டமும், அரசனுக்குச் சிகிற்சை பண்ணினால் உத்தமசாகசதண்டமும் விதிக்கப்படும்.

ஒழிபு.

சாரம்.

ஒழிபாவது:—மேற்சொல்லிய கடன்கோடன்முதலானபதினே ழுபதங்களினுஞ் சொல்லப்படாதனவற்றைக் கூறுதல்.

எழுதப்பட்ட இராசசாசனத்தை வேறுபாடாக வெழுதினவனை யேனும், அயலவனுடைய ஸ்திரீயைப் பற்றினவனையேனும், திருட னேயேனும் பிடித்து அரசனுக்கறியாமல் விட்டவனுக்கு உத்தமசா கசதண்டம் விதிக்கப்படும்.

இராசபண்டாரத்தைக் கவருகிறவனையும், இராசவிரோதிகளையு ம், பகைவர்க்கு ஆலோசனை சொல்லுகிறவர்களையும், எல்லாப்பொரு ளும் கவர்ந்துகொண்டு அக்கிரசங்செய்து கொல்லுக.

யாஞ்ஞவற்கியர்.

எல்லாப் பொருட்கவர்ச்சியிலே ஆயுதங்களா லுப்பவர்க்கு ஆயு தங்களையும், வாத்தியங்களா லுப்பவர்க்கு வாத்தியங்களையும், வேசை மாதர்க்கு அலங்காரங்களையும், தோதிகளையதிதோர்க்கு வினைமுத லானவாத்தியங்களையும் மற்றும் அவருடைய வேலைசாதனங்களையும் அரசன் கவராமற் கொடுத்துவிடுக.

பண்டியெருதின் மூக்காங்கயிறறுதலிலும், நுகத்தடி யொடிந் தலிலும், அச்சுத்தெறித்தலிலும், சக்காமுறிதலிலும், பண்டி பின்னிடைதலிலும், குறுக்காகத்திரும்புதலிலும், எதிராகவருத லிலும், விலிப்போ விலிப்போவென்று சொல்லியும், விலாமை

யால் மனுஷன்முதலான பிராணிகட்குச் சேதம்வந்தால் பண்டியை யுடையவனுக்குஞ் சாரதிக்குங் குற்றமில்லை.

பண்டிமுதலான வாகனங்களில் அகப்பட்டவன் நான்சாகிறே ன் சாகிறேனென்று கூப்பிடவும், திறமையுடையசாரதிமுதலானவன் விலக்காதேபோனால் அவனைக்நூறுபணந் தண்டங்கொடுக்கத் தக்க வன்.

அரசன் தன்னாலேநியமிக்கப்பட்டுந் தன்னுடையதேசத்தில் அ ங்கங்கேயிருக்கிற அதிகாரிகளின் செய்கைகளை சாரணரால்நிந்து கல் லவர்களை யுபசரித்து துஷ்டர்களைத் தண்டிக்க.

கைக்கூலிவாங்கினவன் அரசன்பொருளைக் கெடுத்தவனுகையா ல்அவனுக்கு எல்லாப் பொருட்கவர்ச்சியைத் தண்டமாகவிதித்துஅவ னைத் தேசத்தினின்றுந் தாத்திவிடுக.

இன்னும் இத்தூலுள் கடன்கோடன்முதலிய பதினெண்பதங்க ளிற் சொல்லப்படாதவையெல்லாம் மனுஸ்மிருதிமுதலிய பெருநூ லுட் கண்டு உணர்க.

ஒழிபு முற்றிற்று.

விவகாரசாரசங்கிரகம் முற்றிற்று.

விவகாரசாரசங்கிரகம்.

அரும்பதப்பொருள்.

அழுக்காறு = பொறாமை. [ன்.
அதிகிருதன் = அதிகாரம்பெற்றவ
அபியோகம் = எதிர்த்துப்போதல்
வியாஜ்ஜியம்தொடுத்தல்.
அப்பிரதிஷ்டிதை = ஸ்தாபனமி
ன்மை.
அருத்தாபத்தி = பொருள்குறிப்பு
ள்ளது.
அனுமானம் = ஐயம் சக்தேகம்.
அனுலோமன் = உயர்ந்தஜாதிபு
ருஷனுக்கும் தாழ்ந்தஜாதி ஸ்திரீ
க்கும் பிறந்தவன்.
அபூபம் = பணியாரம்.
அயர்ச்சி = மறதி.
அக்ஷதை = மஞ்சள்கலக்த அரிசி.
அவதூதன் = ஓர் சன்னியாசி.
ஆகமம் = உறுதிபத்திரம்.
அங்கணம் = ஆகாசம்.
அதிதி = பரதேசி.
அடுக்களை = மடைப்பள்ளி.
அங்குஷ்டம் = பெருவிரல்.
அரண் = கோட்டை.
அவிபத்தர் = பாகம்பிரித்துக்கொ
ள்ளாதவர்.
ஆசாரம் = ஒழுக்கம்.
ஆக்கினை = கட்டளை.
ஆச்சிரமம் = நிலை. [வன்.
ஆசாரவீனன் = ஒழுக்கங் கெட்ட
ஆவாகனம் - எழுந்தருளச்செய்தல்
ஆததாயிகள் = கொலைசெய்வோர்
இலிகிதம் = எழுதப்பட்டது.
இலேக்கியம் = பத்திரம்.
இலேக்கன் = எழுதுகிறவன்.
இருது = காலம்.
இல்லறம் = சமுசாரவாழ்க்கை.
இரணியம் = சுவர்ணம்.
இறைக்கூற்று = அரசனுக்குகொ
டுக்கும் பணம்.
உலோபம் = ஈயாமை. [ருவர்.
உபயவாதி = வாதிபிரதிவாதி யி
உன்மத்தன் = பையித்தியக்காரன்
உவக்கம் = மனே உற்சாகம்.
உன்மத்தசித்தின் = பைத்தியக்
காரன். [ம்
உத்தரம் = மறுமொழி, பிரதிவாத
உத்தரப்போலி = உத்தரத்தை
போன்ற.
உய்பவன் = ஜீவிப்பவன். [வோன்.
உத்தரன் = உத்தரவு சொல்லு
உபயானுமதன் = இரண்டு பக்ஷ
த்திற்கும் வேண்டியவன்.
உத்தரீயம் = வேஷ்டி.
உபவீதம் = பூணூல்,
உபவாசம் = ஆகாரமின்மை.
உத்தரக்கிரியை = அசுபக்கிரியை.
உபகரணம் = துணைக்கருவி.
ஊனமாசிகம் = மாசக்குறைவி
ல்இறந்தோர்க்குச்செய்யும்கிரியை
ஏகாச்சிரமி = ஒரே வகைப்பட்
ட நிலையிலுள்ளவர்.
ஒற்றி = கொதுவை.
ஒழிபு = மிச்சம்.
ஔபாசனம் = அக்கினிகாரியம்
ஓமம் முதலியவை செய்தல்.
காப்பீடு = பெட்டி முதலியவை
களில் வைத்து காப்பற்றத்தக்கது
கடல் வாணிகன் = கப்பல்வியா
பாரி.
கணகலேக்கர் = கணக்கு எழு
துவோர்.

அரும்பதப்பொருள்.

கறவைப்பசு = பால்கொடுக்கும் பசு.
கங்கணம் = காப்பு.
குலிகர் = மூங்கில்வேலைசெய்பவர்
கூட்டுறவு = சேர்க்கை.
கோத்திரம் = குலம்.
கோடல் = கொடுத்தல்.
கௌணபிதாக்கள் = ஒப்பாரிபிதாக்கள்.
சழக்கன் = பொய்சொல்பவன்.
சந்திரிகை = திரட்டு.
சங்கிரகம் = சுருக்கம்.
சவசம் = சுயாயிருக்கை.
சமாவர்த்தனம் = கலியாணத்திற்கு முன்பு செய்யும் சடங்கு.
சமூதாய தக்ஷிணை = பொதுதட்சணை.
சதுக்கம் = நான்கு தெருகூடுமிடம்.
சங்கம் = கூடுதல்.
சபிண்டர் = ஞாதியர்.
சதுரங்கம் = ரதம், கஜம், துரகம், பதாதிஎன நால்வகையுள்ளது
சண்டாளர் = பஞ்சமர்.
சாரணர் = வேவுக்காரர்.
சாரம் = சத்து.
சாசனம் = பத்திரம்.
சாத்திரவிருத்தம் = சாஸ்திரவிரோதம்.
சான்றினர் = சாட்சிகள்.
சிரோணியர் = இடையர்.
சினத்தன் = கோபி.
சிகிற்சை = பரிகாரம்.
சுற்கம் = பரியம் மூலதனம்.
சுரோத்திரன் = வேத மோதினவன்
சூதகம் = ஆரூசம், தீட்டு.
செக்கான் = எண்ணெய் வாணிபன்.
சேவிப்பவன் = பணிபவன்.
சொரூபம் = தன்மை.
சோஷ = சோம்பல்.
சோரன் = திருடன்.
சோம்பு = சோம்பல். [வன்.
சோத்தியன் = சோதிக்கப்பட்டவன்.
தலிகன் = கள்காரன்.
தருமநூல் = தருமசாஸ்திரம்.
தசாங்கம் = பத்தங்கம். [டவன்.
தலைப்பாரிட்டவன் = நீக்கப்பட்
தன்மேலன் = அறிஞி.
தடாகம் = பிரதிஷ்டை = குளம் வெட்டல்.
தாயாதன் = பங்காளி.
திக்காரிணக்ஷ = பெண்ணேசுதல்
திக்ஷோன் = குருமந்திரம்.
துர்க்கம் = மலை. [ன்.
தூர்த்தன் = வியாபாரம்செய்வோ-
தையல்பாலர் = ஸ்திரிகள். [மாய்.
தொண்டூதாட்டி = வெகுகால
தியிட்டிகன் = பிச்சைதவறாதவன்
[ர்.
தபஸ்விகள் = பிரமசாரி
காவுறப்பவர் = காட்டைகாப்பவ
நிருபன் = அரசன்.
நியமம் = விரதம்.
நிக்ஷேபம் = புதையல்.
நைஷ்டிகப் பிரமசாரி = ஸ்திரீ முகம் பாராதவன்.
பாபபுருஷர் = அன்னிய புருஷர்.
பக்ஷவாஸனம் = சமையலான அன்னம்.
பலாதிதன் = பக்ஷயத்தால்தோற்றவன்.
பதிதன் = பிரஷ்டன் கெட்டுப்போனவன்.
பாலம் = பாகம்.
பஞ்சாயத்தார் = மத்தியஸ்தர்.
பண்ணையங்கள் சமைசாக்குகள்.
பாசண்டர் = வேதவிரோதத்துக்கு புறம்பானவர்.
பாசனம் = பாத்திரம்.
பாசுபதன் = பாசுபதத்தை அனுசரித்தவன்.
பிரகரணம் = அத்தியாயம்.
பிணை = உடன்பாடு, ஜாமீன்.
பிறத்தகம் = தாய்வீடு.
பிறிதிவிதி = விதிவிலக்கு.
பின்னோதர் = மாற்றுத்தாய் பிள்ளைகள்.
பிணியாளன் = நோயாளி.
பிராட்டிவிவாகன் = கியாயாதிபதி
பிராயச்சித்தம் = சாந்திபரிஹாரம்
பிணையினர் = ஜாமீன்தார்.
பிரதிக்ஞை = உறுதிமொழி.
பிரதிட்டிலை = நிலையானது.
பிரதிலோமன் = உயர்ந்த ஜாதி மனைவிக்கும் தாழ்ந்தஜாதி புருஷனுக்கும் பிறந்தவன்.
பிடை = துன்பம்.
புறம்பு = வெளியே.
புலால் = மாம்ஸம்.
புளகம் = சந்தோஷம்.
புனல் = ஜலம்.
புனைந்து = சூடி. அலங்கரித்து.
பூருவபக்கம் = ஆக்ஷேபித்தல்.
பூக்தவள் = மாதருதுவானவள்.
பொதுவிதி - பொதுவானஏற்பாடு
பொருட்கவர்ச்சி = பொருளை யபகரித்தல்.
மலிவுறுமல் = சந்தேகம் அடையாமல்.
மத்தன் = மதம்பிடித்தவன்.
மறையவன் = பார்ப்பான்.
மாவுரி = மரப்படைகளால் செய்தவுடை.
மாபினர் = சுற்றத்தார்.
மிண்டர்கள் பல சாலிகள்.
மிருதி = தருமசாஸ்திரம்.
மூப்பிணி = நரை திரை மூப்பு.
மூண்டனம் = மழித்தல்.
மேம்பட்டவன் = மேலானவன்.
வருணம் = ஜாதி.
வனாந்தவன் = எழுதினவன்.
வரக்தகாலம் = கருப்புகாலம்.
வாகடசாஸ்திரம் = வைத்தியநூல்.
வானப்பிரத்தன் = மனைவியோடு வனத்தில் தவம் செய்வோன்.
வாணிகம் = வர்த்தகம்.
விபத்தர் = பாகம்பிரித்துக்கொண்டவர். [ம்.
விவகாரம் = நியாயம்.
வியாக்கியானம் = உரை, அருத்தம்.
வியத்து = புகழ்ந்து.
வெள்ளுள்ளி = வெள்ளைப்பூண்டு.
வேள்வி = பாகம். [கள்
வேதாங்கம் = வேதத்தின் பிரிவு
வேதனம் = சம்பளம்.
வைகறை = விடியற்காலம்.

அரும்பதப்பொருள் முற்றிற்று.

ஓளசன் முதலிய சில பதங்களுக்கு அருத்தம் விரிவாக எழுதியிருப்பதை பின் வருமாறு கண்டுகொள்க.

ஔரசன்—தன் ஜாதிஸ்திரீயைக் கன்னிகையாக விருத்தும்பி
து விவாகஞ்செய்து அவளிடத்தில் எத்தப்பிள்ளையைத் தானேபெ
றுகிறானே அவனே முக்கியமான ஔரைபுத்திரனென்று அறியவேண்
டியது.

க்ஷேத்திரசன்—பிள்ளை பிறப்பித்தற்குமுன் கிருபோனவன்
பேடி - பிள்ளைபிறக்க விரோதமான பிணிள்ளவன் இவர்களின்மனை
விகளிடத்தில் மைத்துனன் முதலானவர்களால் பிறப்பிக்கின்ற
ப்படி யுண்டுபண்ணப்பட்ட பிள்ளையை க்ஷேத்திரனென்று சொ
லுகிறார்கள்.

தத்தன்—தற்தைதாயும் சம்மதித்து இருவரும் கூடியேனும்
ஒருவராயேனும், தங்கள்வயிற்றிற் பிறந்த பிள்ளையை தன் ஜாதியை
ம், பிள்ளையில்லாமல் தன்பப்படுகிறவனுமாகிய ஒருவனுக்கு பி
ரீதியுடன் இத்தப்பிள்ளை புனர்த்தானமென்று சொல்லி ஜலத்தை
விட்டு தானஞ்செய்யப்பட்டவனே தத்தனென்று சொல்லுகிறார்கள்.

கிரத்திரிமன்—தன்ஜாதியாயும் பிதுர்க்களுக்குப் பிரீத்தஞ்செ
வதாலும், விடுவதாலும் வரும் குணதோஷங்களை யறிந்தவனுமாகி
தாய்தற்தைகளைப் பூசிக்கிறவனுமாகிய ஒருவன் பிள்ளையை தானே
பிள்ளையாக வைத்துக்கொள்ளுகிறானே அவனே கிருத்திரம புத்திர
னெச் சொல்லுகிறார்கள்.

கூடோற்பன்னன்—ஒருவன்மனைவியானவள் வீட்டிலிருக்கும்
போது அவனுக்குத் தெரியாமல் எதனாலும் புருஷனேனும், அவளிட
த்தில் ஒருபிள்ளையை யுண்டுபண்ணினால் அப்பிள்ளையை அற்தக்கண
வனுக்கு கூடோற்பன்ன புத்திரனென்று சொல்லுகிறார்கள்.

அபவித்தன்—தாய் - தற்தை யிருவராலாவது அல்லது ஒரு
வராலாவது எறிந்துவிடப்பட்ட பிள்ளையை எடுத்துக்கொள்ளுகிற
னுக்கு அபவித்த புத்திரனென்று சொல்லுகிறார்கள்.

காணீனன்—எற்தப்பெண் விவாகத்துக்குமுன் தகப்பன் வீட்டி
லிருக்கும்போது யாருக்குந் தெரியாமல் இரகசியமாக ஒருவனோடுபுண
ர்ந்து ஒருபிள்ளையைப் பெற்றுக்கொள்ளுகிறாளோ, அற்தப்பிள்ளையை
பின்பு அவளைக் கலியாணஞ்செய்து கொள்ளுகிறவனுக்கு காணீன
புத்திரனென்று சொல்லுகிறார்கள்.

ஸகோடரன்—எவன் ஒருபெண்ணை கருப்பமா யிருக்கிறபொ
ன்று அறிந்தவது - அறியாமலாவது விவாகஞ் செய்துகொள்ளுகி

னை அவனுக்கு அற்தக் கருப்பத்தினற் பிறந்தபிள்ளையை ஸகோடச
புத்திரனென்று சொல்லுகிறார்கள்.

கிரீதன்—எவன் தனக்கு பிள்ளையில்லாமையால்ஒருபிள்ளையை
அவன் தாய்தகப்பனிடத்து விலைக்கு வாங்கிக்கொள்ளுகிறானே, அ
வன் குணத்தினுல் தனக்குத் தக்கவனுயினும், தகாதவனுயினும் வாங்
கினவனுக்கு கிரீத புத்திரனென்று சொல்லப்படுகிறான்.

பௌநர்ப்பவன்—எற்த ஸ்திரீயாளவள் கணவனுல் நீக்கப்பட்
டாவது கணவனிறற்தபின்பாவது, மற்றொருவனே சுவேச்சையாகவே
புணர்ந்து எற்தப்பிள்ளையைப் பெறுகிறாளோ அற்தப்பிள்ளையை யு
ண்டுபண்ணினவனுக்குப் பௌநற் புத்திரனென்று சொல்லுகிறார்
கள்.

பிராமியம்—வேதமோதினவனையும், கல்லொழுக்க முள்ளவனையு
மிருக்கிற பிரமசாரியைத் தானுகவே அழைப்பித்து அவனே நூற
னவஸ்திரத்தா லலங்கரித்து கன்னிகையை வஸ்திராபரணங்களா ல
லங்கரித்து அவனுக்கு அக்கன்னிகையைத் தானஞ்செய்வது பிராம
விவாகம்.

தைவம்—சோதிஷ்டோமாதி எக்கியத்தில் தனக்குப் புரோகித
னுக விருப்பவனுக்குத் தன்பெண்ணை அலங்கரித்துக் கொடுப்பதை
தெய்வவிவாகமென்று சொல்லுகிறார்கள்.

ஆருஷம்—தான் செய்யவேண்டியயாகாதிதர்மத்துக்காக வரனி
டத்தில் நின்றும் ஒரு ரிஷபம் - ஒருபசு அல்லது இரண்டு ரிஷபம் -
இரண்டுபசு - இவைகளைவாங்கிக்கொண்டு கலியாணஞ்செய்துகொடு
ப்பதை ஆருஷவிவாகமென்று சொல்லுகிறார்கள்.

பிராசாபத்தியம்—ஒரு பிரமசாரியை யழைத்துப் பூசித்து தன்
பெண்ணைத் தானம்பண்ணும்போது நீங்களிருவருமாய் தருமங்களைச்
செய்யுங்கோளென்று சொல்லிக்கொடுப்பதை பிராஜாபத்தியமென்று
சொல்லுகிறார்கள்.

ஆசுரம்—பெண்ணின் தகப்பனுக்கு கேட்கும்பணத்தைக்கொடு
த்துப் பெண்ணுக்கும் பூஷணங்களைப்போட்டு பெண்ணை வாங்கிவிவா
கஞ்செய்து கொள்ளுவதை ஆசுரவிவாகமென்று சொல்லுகிறார்கள்.

விவகாரசாசங்கிரகம்.

காந்தர்வம்—ஸ்திரீயும் புருஷனும் ஒருவர்க்கொருவர் புணர்ச்சி
ன் ஆசையால் மனமொத்து தாங்களாகச்சேர்தலே காந்தருவமென்
சொல்லுகிறார்கள்.

இராக்ஷசம்—ஒருவன் பலத்தினாலே ஒருகன்னிகையை அழு
போது அவள்வீட்டில் கினறும், அவளது பந்துக்களையடித்தும், கொ
ன்றும், பிளந்தும், வலிமையாற்கொண்டுபோகிறதை இராக்ஷசவிவா
மென்று சொல்லுகிறார்கள்.

பைசாசம்—ஒருகன்னிகை தூங்கும்போதும், குடியினால் மய
ங்கியிருக்கும்போதும், பித்துக்கொண்டவளாயிருக்கும்போதும் தா
ருடனே புணர்ச்சிசெய்வது முன்சொன்ன எழுவிவாகங்களுக்குத்தா
ழ்ந்ததான பைசாசவிவாகமென்று சொல்லுகிறார்கள்.

இத்தருமநூலில் எவ்விதமாக வேணும் பிழைகளுளதாய் காண
படில் வாசிப்போர் அவைகளை நூல் வெளியிட்டவர்க்கு தயைசெய்தி
அறிவிப்பதுமன்றி அதனையுண்டாகுஞ் சுபமத்திற்கு மன்னிக்கத் தே
ருகின்றேன்.

ஓ. செ - ஓ.